# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2041 மார்கழி 18ஞாயிற்றுக்கிழமை (02.01.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 037


## யாழ்ப்பாணத்தில் பாதாள உலகக் குழுக்கள்?

யாழ்ப்பாணம்,ஜன.2

குடாநாட்டில் இடம்பெறும் கொலை, கொள்ளை, ஆள் கடத்தல் சம்பவங்களைத் தடுப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. பொலிஸாரின் விசாரணைகள் ஒருபுறம் நடந்து கொண்டிருக்கிறது.அதேவேளை பொதுமக்களைப் பாதுகாப்பதற்காகப் படையினரின் இரவு ரோந்து அதிகரிக்கப்பட்டுள்ளது.

யாழ்.படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க மேற்கண்டவாறு உதயனுக்குத் தெரிவித்தார்.

குடாநாட்டில் தொடரும் சம்பவம் குறித்துக் கேட்டபோது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

சங்கானையில் ஆலயக் குருக்கள் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக உடன் நடவடிக்கை எடுத்து சம்பந்தப்பட்டவர்கள் கைது செய்யப்பட்டு நீதியின் முன்நிறுத்தப்பட்டனர்.

கல்விப் பணிப்பாளர் கொலை தொடர்பாக பல்வேறு கோணங்களில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். கொலைக்கான காரணம் என்ன? எவ்வாறு கொலை நடந்தது? என்பன குறித்து விசாரணைகள் இடம் பெறுகின்றன.

விசாரணைகள் முடிவடையாத போதும் இந்தச் சம்பவங்கள் தனிப்பட்ட காரணங்களுக்காகப் பணத்துக்காக நடைபெறுவதாகவே ஊகிக்க முடிகிறது.

கொழும்பு பாதாள உலகக் குழுக்கள் பணத்துக்காகவும் சொந்த விடயங்களுக்காகவும் நடத்தும் சம்பவங்கள் போன்றவையாக இவை இருக்கலாம். எனினும் யாழ்ப்பாணத்தில் தொடரும் சம்பவங்களைக் கட்டுப்படுத்த முன்னேற்பாட்டு

(31ஆம் பக்கம் பார்க்க)

### பரவும் வதந்திகள்

யாழ்ப்பாணம்,ஜன.2

யாழ்.மாவட்டத்தில் கொலை மற்றும் ஆள் கடத்தல் சம்பவங்கள் தற்போது அதிகரித்துள்ளதை அடுத்து இவ்வாறான செய்திகள் வதந்திகளாகப் பரவுவது கடந்த சில நாள்களாக அதிகரித்துள்ளது.(31ஆம் பக்கம் பார்க்க)

# தீர்வு குறித்து கூட்டமைப்புடன் பேசுவதற்குத் தயாராகிறது அரசு

### இந்த மாதத்தில் சந்திப்பு

கொழும்பு,ஜனவரி 2

இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு ஒன்றைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேசி முன்வைப்பதற்கு அரசு முன்முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. விரைவில் அந்தப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படும் எனத் தெரிகிறது.

அதற்கான சமிக்ஞைகள் அரசிடம் இருந்து கிடைக்கப்பெற்றுள்ளன என்று நாடாளுமன்ற உறுப்பினரும் கூட்டமைப்பின் பேச்சாளருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் உறுதிப்படுத்தினார். இரு தரப்புக்களுக்கும் இடையிலான பேச்சுக்கள் இந்த மாதத்தில் நடக்கும் எனத் தாம் எதிர்பார்க்கிறார் என்றும் அவர் தெரிவித்தார்.

அரசமைப்பில் திருத்தத்தைக் கொண்டுவருவதன் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பாகவே அரசு கூட்டமைப்புடன் பேச முயற்சிக்கிறது. இது தொடர்பில் பூர்வாங்கப் பேச்சுக்கள் அரச அமைச்சர் ஒருவருக்கும் கூட்டமைப்பின் பிரதிநிதியான நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கும் இடையில் ஏற்கனவே நடைபெற்றுள்ளன. (31ஆம் பக்கம் பார்க்க)

### கிளிநொச்சி கனகபுரத்தில் நேற்றுக் காலை

## வெள்ளை வானில் கடத்தப்பட்ட மாணவன் வவுனியாவில் மாலை விடுவிக்கப்பட்டார்

கிளிநொச்சி,ஜன.2

கிளிநொச்சி, கனகபுரம் பகுதியில் வைத்து வெள்ளை வானில் மாணவனைக் கடத்திச் சென்ற குழுவினர் வவுனியாவில் விட்டு விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை நடைபெற்றுள்ளது.

சம்பவத்தில் கிளிநொச்சி, கனகபுரத்தைச் சேர்ந்த கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் கல்வி பயிலும் புவனேஸ்வரன் சஜீவன் (வயது 16) என்ற மாணவனே கடத்தப்பட்டுப் பின் விடுவிக்கப்பட்டவராவார்.

இந்தச் சம்பவம் குறித்து தெரியவருவதாவது:

நேற்று அதிகாலை 5 மணிக்குத் தனியார் கல்வி நிலையத்துக்குச் சென்று கொண்டிருந்த வேளை இந்த மாணவனை

(31ஆம் பக்கம் பார்க்க)

### நாடாளுமன்றில் உள்ளூராட்சி தேர்தல் திருத்தச் சட்டமூலம்

## கூட்டமைப்பு சமர்ப்பித்த திருத்தங்களுக்கு சாதகமான பதில் நாளை கிடைக்குமா?

கொழும்பு,ஜன.2

நாளைமறுதினம் செவ்வாய்க் கிழமை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவிருக்கும் உள்ளூராட்சிச் சபைத் தேர்தல்கள் திருத்தச் சட்டமூலத்துக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சமர்ப்பித்த மூன்று திருத்தங்களுக்கும் நாளை பதில் அளிப்பதாக அரசு அந்தக் கட்சிக்கு அறிவித்துள்ளது.

இச்சட்டத் திருத்தத்தில் சிறுபான்மை இனத்தவரைப் பாதிக்கும் சரத்துக்களை நீக்குவது தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மூன்று திருத்தங்களைச் சமர்ப்பித்திருந்தது.

இத்திருத்தங்களை ஏற்பதாக கட்சித் தலைவர்களின் கடந்த கூட்டத்தில் கூட்டமைப்புக்குத் தெரிவிக்கப்பட்டது.

(31ஆம் பக்கம் பார்க்க)

## அச்சுவேலி, காரைநகர் வாசிகளின் திடீர் மரணங்களில் மர்மங்கள்

### கொலை செய்யப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகம்

யாழ்ப்பாணம்,ஜன.2

அச்சுவேலி வடக்கு வல்லை மயானத்தில் மீட்கப்பட்ட சடலம் மற்றும் காரைநகரில் கிணற்றில் இருந்து மீட்கப்பட்ட சடலம் என்பவற்றின் மரணங்கள் குறித்து சந்தேகங்கள் கிளம்பியுள்ளன. ஆரம்ப கட்ட விசாரணைகளில் இருந்து இரு மரணங்களிலும் மர்மங்கள் புதைந்திருப்பது தெரியவந்துள்ளது.

அச்சுவேலி வடக்கு வல்லை மயானத்திலிருந்து கடந்த மாதம் 30ஆம் திகதி வியாழக்கிழமை சடலம் ஒன்று மீட்கப்பட்டது.

(31ஆம் பக்கம் பார்க்க)


வீட்டையோ வேலைத்தளத்தையோ எந்த நேரமும் எங்கிருந்தும் கண்காணிக்க

AT

Athavan Technology

Security camera, Door phone system, Finger print attandance, Burgler alarm



No. 111/2, Brown Road, Kokuvil East, Jaffna. Tel - 0750 421 776


## அனைத்து அரச ஊழியர்களும் நாளைய தினம் உறுதி எடுத்தே கடமையை ஏற்க வேண்டும்

### திணைக்கள தலைவர்களுக்கு சுற்று நிருபம்

யாழ்ப்பாணம்,ஜன.2

2011 மலர்ந்துள்ள நிலையில் தேசிய, மாகாண, மாவட்ட, பிரதேச மட்டத்தில் கடமையாற்றும் அனைத்து அரச அலுவலர்களும் நாளை திங்கட்கிழமை தமது கடமையை ஆற்ற முன்னர் திணைக்களத் தலைவர்கள் முன்னிலையில் பின்வரும் உறுதிமொழியை எடுத்த பின்னரே தமது கடமைகளை மேற்கொள்ள வேண்டும்.

இதுகுறித்து பொதுநிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு அனைத்து அரச திணைக்களங்களுக்கும் சுற்றுநிருபம் மூலம்

(31ஆம் பக்கம் பார்க்க)


மாணவர்களே! உங்களுக்கான நேரசூசிகை நாளைய உதயனுடன்! உங்கள் பிரதிக்கு முந்துங்கள்!



மலர்ந்துள்ள புதுவருடம் அனைவருக்கும் சுபீட்ஷம்மிக்க ஆண்டாக அமைய வாழ்த்துகின்றோம்






சிங்கர்




யாழ் மண்ணின் பரம்பரை தோழன்.

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் | ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் | கே.கே.எஸ் வீதி, சுன்னாகம் | ஆலடிச் சந்தி, மானிப்பாய் | பருத்தித்துறை வீதி, நெல்லியடி | கண்டி வீதி, சாவகச்சேரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# கொலையுதிர் காலம் ஆரம்பம்?



புத்தாண்டு விடியலின் பொழுதிலேயே தொலைபேசியின் முணுமுணுப்பு. வழமையாகப் புத்தாண்டு வாழ்த்தாக இருக்குமென்று அவசரமாகத் தொலைபேசியைக் காதில் பொருத்தினேன்.

என்ன ஒரே பயமாக் கிடக்கு. ஏன் சுடுறாங்கள்? ஏன் கடத்திறாங்கள்? வீட்டைவிட்டு வெளிக்கிடவே பயமாக் கிடக்கு. தனது மனக்கிலேசத்தை என்னிடம் கொட்டித்தீர்த்தான் நண்பன் ஒருவன். தொடர்ந்தும் தொலைபேசி அழைப்புகள் வந்தவண்ணமிருந்தன.

அநேகமாக அவை எல்லாவற்றிலும் ஒப்பாரிகள்தான். எல்லோரது குரல்களிலும் புத்தாண்டு மகிழ்வை விடவும், சாவு பற்றிய பயமே ஒட்டியிருந்தது. அதைக்கேட்கக் கேட்க எனக்குள்ளும் பயம் உயிர்பெற்றது. இப்போது நானே என்னைக் கேட்டுக் கொண்டேன் ஏன் சுடுறாங்கள்? ஏன் கடத்திறாங்கள்?

நேற்றைய புத்தாண்டு பலருக்கும் இவ்விதமாகவே கழிந்திருக்கும். வழக்கமான கலகலப்பை யாழ்ப்பாணத்தில் காணவே முடியவில்லை. எல்லோரும் வீட்டுக்குள் முடங்கியிருக்கவே விரும்பினர். வீதியில் இறங்கவே ஒருமுறைக்குப் பலமுறை யோசிக்க வேண்டியிருந்தது. யாழ்ப்பாணத்தின் நிலைமை அந்தளவுக்கு இருண்டதாக மாறிவிட்டது. எல்லோருக்கும் மகிழ்வானதாக விடிந்த புதுவருட விடியல் யாழ். மக்களுக்கு மட்டும் ஏன் அச்சத்தைப் பரிசளிக்கும் ஒன்றாக மாறிப்போனது என்பதற்கு எவரிடமும் விடையில்லை. விடை தேடுமளவுக்கு அவகாசமும் அவர்களுக்கு இல்லை.

அடுத்தது நாமாக இருக்குமோ? இந்த ஒரு கேள்வி மட்டுமே இப்போது குடாநாட்டு மக்களைச் சுற்றிவருகின்றது. ஏனெனில் பொது மக்கள் எதற்காக சுடப்படுகிறார்கள். எதற்காகக் கடத்தப்படுகிறார்கள் என்பதே தெரியாமல் இருக்கிறது. ஆனால் இப்போது யாழ்ப்பாணத்தில் நிகழ்கின்ற கோரங்களை ஒரே பார்வையில் நோக்கும் போது சில ஒற்றுமைகள் புலப்படும். அந்த ஒற்றுமைகளின் வழியே பின் தொடர்ந்தால், மேற்குறித்த கேள்விகளுக்கான விடைகள் கிடைக்கக் கூடும்.

சங்கானையில்தான் இப்போது நிகழும் தொடர் பயங்கரங்களின் பிள்ளையார் சுழிபோடப்பட்டது. சங்கானையில் இந்துக்குரு ஒருவர் மீது துப்பாக்கிகள் தோட்டாக்களை உமிழ்ந்தன. அடுத்து வந்த நாள்களில் வைத்தியசாலையில் குருக்கள் உயிரிழந்தார். ஆனால் இந்தப் படுகொலையை கொள்ளை முயற்சி என்றும், இராணுவத்தினருக்கு கஞ்சாவை லஞ்சமாகக் கொடுத்து விட்டு அவர்களின் துப்பாக்கிகளை இரவலாக வாங்கி வந்த முன்னாள் போராளிகள் இருவரே இந்தச் செயலில் ஈடுபட்டனர் என்றும யாழ். மாவட்ட இராணுவத்தளபதி ஹத்துரு சிங்க அறிவித்தார். குற்றத்தில் ஈடுபட்டவர்கள் கண்டுபிடிக்கப்பட்டு, கைது செய்யப்பட்டு விட்டதால் அப்பாடா! என்று நிம்மதிப் பெருமூச் சொன்றை யாழ். மக்கள் உதிர்க்க எத்தனிக்கையில் உரும்பிராயில் கேட்டது அடுத்த வேட்டுச் சத்தம்.

வலிகாமம் வலயப் பிரதிக்கல்விப் பணிப்பாளர் மா.சிவலிங்கம் அந்த வேட்டுக்கு இரையானார். இதையும் கொள்ளைச் சம்பவம் போலவே சோடிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் அது பலிக்கவில்லை. கல்விப் பணிப்பாளரின் மகளின் காதில் இருந்த ஒரு தோடு மாத்திரமே இதன் போது களவாடப்பட்டிருந்தது. ஒரு தோட்டுக்காக துப்பாக்கியைப் பயன்படுத்துமளவுக்கு வந்தவன் ஒன்றும் மனநோயாளியல்லவே. திட்டமிட்ட படுகொலையைத் திசைதிருப்பவே இந்தக் கொள்ளை நாடகம் அரங்கேற்றப்பட்டிருக்க வேண்டும் என்பதுதான் பலரினதும் கணிப்பு. உரும்பிராய்ச் சம்பவத்தோடு இந்தக் குற்றச் செயல்கள் மூன்றுகால் பாய்ச்சலில் வேகமெடுக்கத் தொடங்கின.

முதலிரண்டு சம்பவங்களும் இரவில் மற்றையவர்களின் கண்களில் எத்துப்படாமல் செய்து முடித்ததால், கொலையாளிகளுக்கு அல்லது அவர்களைப் பின்னால் இருந்து 'வைன்' கொடுத்து இயக்குபவர்களுக்குத் துணிச்சல் வந்திருக்க வேண்டும். எனவே மூன்றாவது வெறியாட்டத்தை ஒரு மாலை நேரத்தில் சரசாலையில் கடத்தலோடு தொடங்கினார்கள். கடத்தப்பட்டவர் வாகனங்களை வாங்கி, விற்பனை செய்து வரும் மகேந்திரசெல்வம் திருவருட்செல்வன். இவர் வன்னியில் போரின் பிடியிலிருந்து தப்பித்து நலன்புரி நிலையத்தில் இருந்து 1 வருடத்துக்கு முன்னர்தான் மீள்குடியேறியவர். ஒரு வாகனம் விற்பனைக்கு இருப்பதாகக் கூறி, மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் அவரைக் கூட்டிச் சென்றனர். இரு நாள்கள் கழிந்த பின்னர் உள்ளாடை யோடு, பிணமாகத்தான் செல்வனை மீட்க முடிந்தது.

அதன் பின்னர் மீண்டும் உரும்பிராயில் தமது கைவரிசையைக் காட்டினர் மர்மநபர்கள். இப்போது அவர்களின் துணிச்சல் இன்னும் அதிகரித்திருந்தது. அதனால் பட்டப்பகலில் - பலர் முன்னிலையில் - களத்தில் இறங்கினர். கதறக் கதற, சண்முகநாதன் விக்கினேஸ்வரன் என்ற 38 வயது நபர் நடு வீதியில் வைத்துக் கடத்தப்பட்டார். இதுநாள்வரையும் இரவைக் கண்டே பயம் கொண்ட மக்களுக்கு இதன் பின்னர் பகலும் பயங்கரமானதாக மாறிப்போனது. வீதியில் இறங்கினால்தானே பிரச்சினை? பேசாமல் வீடுகளுக்குள்ளேயே பகலில் தப்பித்திருப்போம் என்ற மக்களின் நினைப்பும் 24 மணிநேரத்துக்குள் பொய்யாகிப் போனது.

இதுவரையும் வலிகாமம், தென்மராட்சிப் பகுதிகளிலேயே மையம் கொண்டிருந்த குற்றக் குழுவினர் இப்போது வடமராட்சிக்கு உக்கிரத்துடன் நகரத் தொடங்கியது. அல்வாய் கிழக்குப் பகுதியில் உள்ள வீடொன்றின் முன்னால் வந்து நின்றது ஒரு வெள்ளை வான். திபுதிபுவென அதிலிருந்து குதித்தவர்கள் வீட்டினுள் நுழைந்தனர். வெளியே அவர்கள் வரும்போது, வீட்டில் இருந்த 48 வயதான யோகநாதன் புஷ்பாதேவி என்கிற விதவைத் தாயைத் தரதரவென இழுத்து வந்தார்கள். அவரின் பிள்ளைகளும், அயலவர்களும் தடுக்க முற்பட்டபோது, அவர்களை நோக்கி துப்பாக்கிமுனைகள் திரும்பின. துப்பாக்கிகளின் பயமுறுத்தலுக்கு முன்னால் சாதாரண மனிதர்கள் மௌனிப்பதை விடவும் வேறென்ன செய்யமுடியும்? வந்தவர்கள் எந்த எதிர்ப்புமின்றி அந்தப் பெண்மணியைக் கொண்டு சென்றுவிட்டனர். அத்தோடு ஓயவில்லை அவர்கள்.



குடத்தனையில் கொலை செய்யப்பட்ட கேதீஸ்வரன்?

வடமராட்சி கிழக்கில் குடத்தனைப் பகுதியில் உள்ள தவராசா கேதீஸ்வரன்(வயது 28) என்ற தபால்நிலைய ஊழியர் ஒருவரின் வீட்டுக்குச் சென்றனர். அவரை நோக்கிக் கோபாவேசமாகக் கத்தியபடி அவரைத் துப்பாக்கிமுனையில் உள்ளழைத்துச் சென்றனர். கணினியைத் தாம் பரிசோதிக்க வேண்டும் என்று அவர்கள் நிர்ப்பந்திக்க மறுபேச்சின்றி, கணினி இருக்குமிடத்துக்கு அவர்களோடு கேதீஸ்வரனும் சென்றார். சிலநொடிகளில் வந்தவர்கள் வாயால் பேசுவதை நிறுத்தி விட்டு, துப்பாக்கியால் பேசத்தொடங்கினர். கணவரது உடலைத் துப்பாக்கி ரவைகள் சல்லடையாக்குவதைக் கண்ணுற்ற அவரது மனைவி கொலையாளிகளின் முயற்சியை இயன்றவரை தடுக்க முயற்சித்தும் பலனில்லை. ரத்த வெள்ளத்தில் மிதந்த கேதீஸ்வரனை வைத்தியசாலைக்கு வேகமாகக் கொண்டு சென்றும் காப்பாற்ற முடியவில்லை.இங்கு விபரிக்கப் பட்ட சம்பவங்களில்- சரசாலைக் கடத்தல் சம்பவத்தைத் தவிர- ஏனைய எல்லாவற்றிலும் துப்பாக்கிகள் பயன் படுத்தப்பட்டிருக்கின்றன. சங்கானைச் சம்பவத்தில்தான் இராணுவத்தினருக்குக் கஞ்சாவைக் கொடுத்து துப்பாக்கிகள் இரவலாகப் பெறப்பட்டனவெனில், மற்றைய சம்பவங்களின் போதும் இராணுவத்தினருக்கு க்ஞ்சாவைக் கொடுத்துத்தான் அவற்றைப் பெற்றுக் கொண்டார்களா? இல்லையேல் கண் முன்னால் நிகழும் அட்டூழியங்களைப் பார்த்தும் பாராதது போன்று படைதரப்பு இருப்பதற்கான காரணம் என்ன?

உரும்பிராயில் பிரதிக் கல்விப் பணிப் பாளரினதும், குடத்தனையில் தபால் ஊழியரினதும் உயிர்களைப் பறித்த துப்பாக்கிரவைகள் நவீன ரக பிஸ்ரலுக் குரிய 9 மி.மீ ரகத்தைச் சேர்ந்தவை யெனத்தெரிய வந்துள்ளது. ஆகவே இவ்விரு கொலைகளுக்கும் ஒரே வகையான ஆயுதமே பயன் படுத்தப்பட்டிருக்கிறது. கொலை செய்யப்பட்டவர்கள் அல்லது கடத்தப்பட்டவர்களில் பெரும்பாலானோர் வன்னியில் வசித்து பின்னர் நலன்புரி நிலையங்களில் தங்கியிருந்துவிட்டு மீள்குடியேறியவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த ஒற்றுமை ஒரே குழுவே இந்தக் குற்றங்களின் நிகழ்த்துநர்களாக இருப்பதை உறுதி செய்கின்றது.

இத்தோடு இந்தக் கொலைகள், கடத்தல்களுக்கு முற்றுப்புள்ளி விழுந்து விடும் என்ற நம்பிக்கை மக்களுக்கு இல்லை. இன்னொரு தாண்டவத்தின் ஆரம்பமே இது என்றே எல்லோரும் அச்சம் கொள்கின்றனர். சமாதான காலத்தில் திறந்திருந்த ஏ-9 வீதி, மீளவும் மூடிக்கொண்டபோது , யாழ்ப்பாணத்தைக் கவ்விய கொலைகிரகணம் மீண்டும் வந்துவிட்டதாக அவர்கள் உணர்கிறார்கள். இரவு, பகல் என்ற பேதமில்லாமல், பகிரங்கமாகக் கொலையாளிகள் உலவமுடிகிறதென்றால் அவர்கள் அரசின் ஆசிர்வாதத்தோடே தமது திருவிளையாடல்களை நடத்திக் கொண்டிருக்கின்றனரோ என்றே அனுமானிக்க முடிகிறது. அந்த அனுமானம் பொய்யெனில் படைத்தரப்பு தன்மீது சுமத்தப்படுகின்ற பழிகளின் சொந்தக்காரர்களை எப்பாடுபட்டேனும் கூண்டோடு பிடிக்க வேண்டும். ஆனால் அப்படி நடக்கும் என்று எவருக்குமே நம்பிக்கையில்லை.

இந்த இடத்தில் இன்னொரு பிரச்சினை பற்றியும் சுட்டிக்காட்ட வேண்டும். தற்போதெல்லாம் சந்தேகத்துக்கிடமானவர்களின் நடமாட்டம் தெரிந்தாலே அது குறித்து அவதானத்துடன் - தம்மைக் காக்கும் நடவடிக்கைகளுடன் - பதுங்கிக் கொள்ளும் மக்கள், அது குறித்து பொலிஸாருக்குத் தகவல் கொடுக்கவும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். தமது பிரச்சினைகளைச் சிங்கள மொழியில் சொன்னால் மாத்திரமே பொலிஸார் அது குறித்த நடவடிக்கைகளை எடுப்பதாகவும், தமிழில் சொன்னால் அதனை விளங்கிக் கொள்ள (தமிழ் தெரியாததால்) பொலிஸார் தடுமாறுவதாகவும், அதனால் நடவடிக்கை எடுக்கத் தயங்குவதாகவும் மக்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது. எனவே மிகவும் இக்கட்டான இச்சூழலில் தமிழ் தெரிந்த பொலிஸாரை 24 மணிநேரமும் மக்கள் தொடர்பாடலுக்கு நியமிப்பது அவசியம். அப்போதுதான் ஆபத்தின் போது மக்கள், உதவிக்கு பொலிஸாரை நாடமுடியும்.

ஆனாலும் திருடனாகப் பார்த்து திருந்தா விட்டால் திருட்டை ஒழிக்க முடியாது என்பது போல, கொலையாளிகள் தாமாகவே இந்த ஊழிக்கூத்தை நிறுத்தும் வரையும் மக்கள் கொலையுதிர்காலத்தையே யாழ்ப்பாணத்தில் அனுபவிக்க வேண்டியிருக்கும். ★

**ஓடுகாலி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தற்காலிக இணைப்பில் இருந்த

## முல்லைத்தீவு ஆசிரியர்கள் 57 பேர் நேற்று முதற்கட்டமாக பொறுப்பேற்பு

முல்லைத்தீவு,ஜன.2

யாழ்ப்பாணம், வவுனியா மாவட்டங்களில் தற்காலிக இணைப்பில் கடமையாற்றிய முல்லைத்தீவு மாவட்ட ஆசிரியர்கள் 57 பேர் நேற்று முதல் தமது கடமைகளை முல்லைத்தீவு மாவட்டத்தில் பொறுப்பேற்றுக் கொண்டுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்ட கல்வி வலயத்தில் நேற்று இந்த நிகழ்வு இடம்பெற்றது. யாழ்ப்பாணம், வவுனியா மாவட்டங்களில் தற்காலிக இணைப்பில் கடமையாற்றி வந்த ஆசிரியர்களே இவ்வாறு தமது கடமைகளை மீளவும் முல்லைத்தீவு மாவட்டத்தில் பொறுப்பேற்றுள்ளனர்.

இவ்வாறு பொறுப்பேற்றுக் கொண்ட ஆசிரியர்களுடன் முல்லைத்தீவு மாவட்டத்தின் தற்போதைய கல்வி நிலைமை மற்றும் மாணவர்கள் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

அத்துடன் இந்த ஆசிரியர்கள் தற்போது முல்லைத்தீவு மாவட்டத்தில் இயங்கிவரும் பாடசாலைகளிலேயே இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஓ-15)

## கொழும்புத்துறையில் ஆயுததாரிகள் கைவரிசை; வீட்டில் புகுந்து நகைகள், உடைமைகள் சூறை

கொழும்புத்துறை,ஜன.2

புத்தாண்டு பிறக்கும் தறுவாயில் கொழும்புத்துறை கிழக்குப் பகுதியில் கொள்ளையர்கள் ஆயுதங்கள் சகிதம் தமது கைவரிசையைக் காட்டியுள்ளனர்.

மூன்றாம் குறுக்குத் தெரு வீதியில் உள்ள வீடு ஒன்றுக்குள் புகுந்த கொள்ளையர்கள் வீட்டாரை மிரட்டி, அச்சுறுத்தி தங்கநகைகள் உட்பட உடைமைகள் பலவற்றைச் சூறையாடியுள்ளனர்.

துப்பாக்கி மற்றும் கூரிய வாள்கள், கத்தி, பொல்லுகளுடன் வந்த கொள்ளையர்கள் வீட்டாரை மிரட்டி அவர்களின் வாய்களுக்குள் துணியை அடைந்து விட்டு அறைகளைச் சல்லடை போட்டுத் தேடியுள்ளனர்.

வீட்டில் இருந்த 17பவுண் நகைகள் மற்றும் தொலைக்காட்சி, கணினி உட்பட பெறுமதிமிக்க பொருள்கள் பல கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

கொள்ளையர்களில் ஒருவன் வீட்டில் இருந்த பெண் ஒருவரின் காதில் இருந்த தோட்டையும் விட்டு வைக்கவில்லை. அதையும் பலவந்தமாக கழற்றி எடுத்துக்கொண்டு அவர்கள் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

கொழும்புத்துறை பிரதேசத்தில் அடிக்கடி இடம்பெற்றுவரும் கொள்ளைகள் மற்றும் திருட்டுச் சம்பவங்களால் அங்குள்ள மக்கள் மத்தியில் பீதி, பதற்றம் நிலவுகின்றது. (ஒ-26-135)

## குடாநாட்டில் இன்புளூவென்சா காய்ச்சல் வேகமாகப் பரவிவரும் ஆபத்து நிலை

### இதுவரை ஐவர் உயிரிழப்பு எனத் தகவல்

யாழ்ப்பாணம்,ஜன.2

யாழ்ப்பாணத்தில் ஒன்றரை வயதுக் குழந்தை உட்பட ஐந்து பேர் பன்றிக் காய்ச்சல் எனப்படும் இன்புளூவென்சா நோயினால் பாதிக்கப்பட்டு மரணமடைந்திருக்கலாம் என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பன்றிக்காய்ச்சல் எனப்படும் இன்புளூவென்சா நோய் கால நிலை மாற்றத்தைத் தொடர்ந்து வேகமாகப் பரவி வருகின்றது.

குடத்தனையைச் சேர்ந்த விஜிதரன் அஜித்தா (வயது 1 1/2) என்ற குழந்தை கடந்த இரண்டு நாள்களாகக் காய்ச்சல் மற்றும் மூச்சுத் திணறலினால் அவதிப்பட்டு வந்தது. இந்த நிலையில் குழந்தை நேற்று மரணமாகியுள்ளது.

இந்தக் குழந்தையுடன் சேர்த்து ஐந்துபேர் இந்த வைரஸ் தாக்கத்தினால் மரணமாகியிருக்கலாமென அச்சம் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, இன்புளூவன்சா சிகிச்சைக்காக எச்-1 என்-1 தடுப்பு மருந்து ஏற்றியவர்கள் மீண்டும் இந்தத் தடுப்பு மருந்தை ஏற்ற வேண்டுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. தடுப்பு மருந்தினை ஏற்றும் போது முடிவுத் திகதியை அவதானித்து ஏற்றுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ஓ-15)

### புத்தாண்டு உவகை...



மக்கள் ஆர்வம் : யாழ்ப்பாணத்தில் நேற்று புத்தாண்டையொட்டி கிறிஸ்தவ தேவாலயங்களில் பூசை வழிபாடுகள் நடைபெற்றன. சுன்னாகம் அந்தோனியார் ஆலயத்தில் அருட்தந்தை சாள்ஸ் பூசை வழிபாடுகளை மேற்கொள்வதையும் அதில் கலந்துகொண்ட மக்களையும் படங்களில் காணலாம். (86)

## 49 சிசி மோட்டார் சைக்கிள்களை வீதிக்கு எடுத்து வர முடியாத நிலை

### பதிவுசெய்யச் சென்றால் சாக்குப்போக்கு

வலி.வடக்கு,ஜன.2

யாழ். குடாநாட்டின் பிரதான வீதிகளில் நேற்றைய தினம் 49 சிசி வகையான மோட்டார் சைக்கிள்கள் மிகவும் குறைந்தளவிலேயே காணக்கூடியதாக இருந்தது.

யாழ்ப்பாணத்தில் இந்த வகையான மோட்டார் சைக்கிள்கள் பல இனங்களிலும் பல ஆயிரக்கணக்கானவை காணப்படுகின்றன.

யாழ். செயலக மோட்டார் திணைக்களத்தில் நாளாந்தம் நூற்றுக்கணக்கானவர்கள் பதிவை மேற்கொள்ளச் சென்ற போதிலும் பலருடைய விண்ணப்பங்கள் ஏதோ ஒரு காரணம் காட்டி திருப்பி விடப்படுவதும் மீண்டும் செல்வது என்ற நிலையினால் பொதுமக்கள் அலைந்தும் பதிவை மேற்கொள்ள முடியவில்லை.

மறுபக்கம் குறிப்பிட்ட மோட்டார் சைக்கிள்களை விற்பனை செய்த நிறுவனங்கள் பதிவுக் கட்டணத்தில் மேலும் ஒரு மடங்கு பணமாக 3 ஆயிரத்து இருநூறு ரூபாவை பெற்றுக்கொண்டும் பதிவு செய்து உரிய ஆவணங்களைப் பெரும்பாலான பாவனையாளர்களுக்கு வழங்காமையினால் வாகனங்களை வீதியில் செலுத்த முடியாத நிலைமை காணப்படுகின்றது.

அனைத்து ஆவணங்களும் உள்ள மோட்டார் சைக்கிள்களையே மறித்து சோதனையிடும் பொலிஸார் உரிய இலக்கம் இல்லாது இருக்கும் இத்தகைய மோட்டார் சைக்கிள்களைக் கண்டால் சும்மா இருப்பார்களா எனக் கூறி நேற்றைய தினம் மட்டும் இந்த மோட்டார் சைக்கிள்களை வெளியில் எடுக்கவில்லை என்று தெரிவிக்கின்றார்கள்.

அரசாங்கம் புத்தாண்டை மனிதநேய ஆண்டாக பிரகடனப்படுத்தியுள்ள நிலையில் வர்த்தகர்களினாலும், ஏனைய அரச அலுவலர்களினாலும் ஏமாற்றப்பட்ட 49சிசி மோட்டார் சைக்கிள் கொள்வனவாளர்களுக்கு பதிவு செய்யும் வரை வீதிகளில் பயன்படுத்த காலக்கெடு வழங்குவார்களா என வாகன உரிமையாளர்கள் எதிர்பார்த்து நிற்கின்றனர். (ஒ-86)

## வலி.வடக்கில் மீள்குடியேற அனுமதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணங்கள் நிறுத்தம்

வலி.வடக்கு,ஜன.2

வலி.வடக்குப் பகுதியில் உயர் பாதுகாப்பு வலயமாகக் காணப்பட்ட பல இடங்கள் ஆண்டிறுதியில் மீளக்குடியேற அனுமதிக்கப்பட்டமையால் அத்தகைய பகுதிகளைச் சேர்ந்தவர்களுக்கு வழங்கப்படும் இடம் பெயர்ந்தவர்களுக்கான நிவாரணங்களை நிறுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

தெல்லிப்பழைப் பகுதியில் மீளக்குடியேற அனுமதிக்கப்பட்ட வித்தகபுரம் இளவாலை வடக்கு, இளவாலை வடமேற்கு கிராம அலுவலர் பிரிவுகள் உட்பட 15 கிராம அலுவலர் பிரிவுகளில் முழுமையாக குடியேற அனுமதிக்கப்பட்டுள்ளது.

தற்போது (ஜே/212), மல்லாகம் தெற்கு, (ஜே/213), மல்லாகம் மத்தி (ஜே/214), மல்லாகம் வடக்கு(ஜே/215), அளவெட்டி வடக்கு(ஜே/216), அளவெட்டி மத்தி(ஜே/217), அளவெட்டி கிழக்கு -

(ஜே/218) கணேஸ்வரம், (ஜே/219) அளவெட்டி தெற்கு, (ஜே/220) அளவெட்டி மேற்கு, (ஜே/221) இளவாலை வடக்கு, (ஜே/222) இளவாலை வட மேற்கு, (ஜே/223), வித்தகபுரம், (ஜே/224) பன்னாலை,(ஜே/227) தெல்லிப்பழை கிழக்கு, (ஜே/229)துர்க்காபுரம் முழுமையாக மக்கள் மீளக்குடியேற அனுமதிக்கப்பட்டுள்ளது.

பகுதியாக (ஜே/228) தெல்லிப்பழை, (ஜே/238) கட்டுவன், (ஜே/239)கட்டுவன் மேற்கு, (ஜே/242) குரும்பசிட்டி, (ஜே/243) குரும்பசிட்டி கிழக்கு, (ஜே/244) வயாவிளான் கிழக்கு, (ஜே/245)வயாவிளான் மேற்கு ஆகிய பகுதிகளில் குடியேற அனுமதிக்கப்பட்டுள்ளது.

இந்த ஏழு கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் தமது பகுதி கிராம அலுவலரிடம் உரிய கடிதத்தைப் பெற்று தாம் இடம்பெயர்ந்து வாழும் பிரிவு கிராம அலுவலர்களிடம் கையளித்துத் தொடர்ந்து நிவாரணத்தைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

இதேபோன்று மீளக்குடியேற அனுமதிப்பாடாத பகுதிகளான (ஜே/225) கொல்லங்கலட்டி, (ஜே/226) நகுலேஸ்வரம், (ஜே230) தந்தை செல்வாபுரம், (ஜே/231) மாவிட்டபுரம், (ஜே/232) மாவிட்டபுரம் தெற்கு, (ஜே/233) காங்கேசன்துறை மேற்கு, (ஜே/234) காங்கேசன் துறை மத்தி, (ஜே/235) காங்கேசன்துறை தெற்கு.

(ஜே/236) பளை வீமன் காமம் வடக்கு, (ஜே/237) பளை வீமன்காமம் தெற்கு, (ஜே/240) தென்மயிலை, (ஜே/241)வறுத்தலைவிளான், (ஜே/246), மயிலிட்டி வடக்கு, (ஜே/247) தையிட்டி கிழக்கு, (ஜே248) மயிலிட்டித்துறை தெற்கு.

(ஜே/249) தையிட்டி வடக்கு, (ஜே/250) தையிட்டி தெற்கு, (ஜே/251) மயிலிட்டித்துறை வடக்கு(ஜே252) பலாலிதெற்கு, (ஜே/253) பலாலி கிழக்கு, (ஜே/254)பலாலி வடக்கு, (ஜே/255) பலாலி வடகிழக்கு, (ஜே/256) பலாலி மேற்கு கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் தாம் இடம்பெயர்ந்து வாழும் கிராம அலுவலர்களிடம் தொடர்ந்தும் இடம்பெயர்ந்து வாழும் கிராம அலுவலர் பிரிவுகளில் இடம் பெயர்ந்தவர்களுக்கான நிவாரணத்தைப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் தெல்லிப்பழை பிரதேச செயலரினால் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-86)

## ஆசிரிய இடமாற்றம் குறித்த சர்ச்சை, மேன்முறையீடுகளுக்கு உரிய பதில்கள்

### நிராகரிக்கப்பட்டோர் மீண்டும் அதே இடங்களில்

யாழ்ப்பாணம்,ஜன.2

ஆசிரிய இடமாற்றம் குறித்து மேன்முறையீட்டுக்கு முறையாக விண்ணப்பித்த அனைவருக்கும் உரிய பதில்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என்று வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு

வடமாகாண ஆசிரியர்களின் இடமாற்றம் குறித்து எழுந்த சர்ச்சையை அடுத்து அது தொடர்பாக மேன்முறையீடுகளை மேற்கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டது.

இதனையடுத்து ஆசிரியர்கள் தமது மேன்முறையீடுகளைச் செய்திருந்தனர். இதன் பிரகாரம் சரியான முறையில் விண்ணப்பித்திருந்த ஆசிரியர்களின் விவரங்கள் மீள் பரிசீலனை செய்யப்பட்டு அவர்களுக்கான உரிய பதில்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

சரியான முறையில் மேன்முறையீட்டை மேற்கொள்ளாதவர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

எனவே விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்ட ஆசிரியர்கள் குறிப்பிட்ட பாடசாலைகளுக்குச் சென்று கடமையை மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.(ஒ-9)

## அந்தணர்களுக்கான கருத்தரங்கு நாளை

யாழ்ப்பாணம்,ஜன.2

சர்வதேச இந்துக் குருமார் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நல்லூர் பிரதேச அந்தணர்களுக்கான கருத்தரங்கு நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நல்லூர் சட்டநாதர் சிவன் கோயிலடி திவ்ய ஜீவன மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஒன்றியத் தலைவர் சிவஸ்ரீ சபா வாஸுதேவக்குருக்கள் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் பிரம்மஸ்ரீ ப.கோபாலகிருஷ்ண ஐயர் கருத்துரை வழங்குவார். நிகழ்வில் நல்லூர் பிரதேச அந்தணர்களைக் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஒ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மானிப்பாய் புதிய உதயம்

தைப்பொங்கலை முன்னிட்டு பிள்ளையார் களஞ்சியம், மதுபான்சி ஹவுஸ் இணைந்து நடத்தும் மாபெரும் மலிவு விற்பனை (பிளாஸ்ரிக் கதிரைகள், பிளாஸ்ரிக் வாளி, பேசன், பிளாஸ்ரிக் சம்பந்தமான பொருள்கள், பொங்கல் பானைகள், சட்டிகள், தாச்சி, அலுமினியம் சம்பந்தமான பொருள்கள், மாபிள் பீங்கான், கப் மற்றும் எவர் சில்வர் பாத்திரங்கள் மெத்தை, பாய், கால் மிதி, சூக்கேஸ், றவலிங் பாக், ஸ்கூல் பாக், பாடசாலை உபகரணங்கள்) அனைத்தும் மிகக் குறைந்த விலைக்கழிவில் பெற்றுக்கொள்ளலாம்.

தொ.பே.: 021 2255148, 0212229933

யாழ். வீதி,
மானிப்பாய்.


## புனித ஜோன் பொஸ்கோ தரம் 1 மாணவர் கவனத்துக்கு

யாழ்ப்பாணம், ஜன.2

யாழ்.புனித ஜோன் பொஸ்கோ பாடசாலையில் 2011ஆம் ஆண்டுக்கான தரம் ஒன்றுக்கான வகுப்புகள் எதிர்வரும் 10ஆம் திகதி ஆரம்பமாகவிருக்கின்றன என்று பாடசாலை அதிபர் அறிவித்துள்ளார். (ஐ)

## தமிழ்ப்பொலிஸார் 302 பேர் ஒரே தடவையில் வெளியேறுகின்றனர்

நீண்டகால இடைவெளியின் பின்னர் ஒரே தடவையில் அதிக எண்ணிக்கையான தமிழ்ப் பொலிஸார் தமது பயிற்சிகளை நிறைவு செய்து வெளியேறவுள்ளனர்.

எதிர்வரும் 7 ஆம் திகதி களுத்துறை பொலிஸ் பயிற்சிக் கல்லூரியில் தமது பயிற்சிகளை நிறைவு செய்து இவர்கள் வெளியேறவுள்ளனர்.

இந்தப் பிரிவில் தமிழ்ப் பொலிஸார் 302 பேர் ஒரே தடவையில் கடந்த இருபது வருடங்களுக்குப் பின்னர் வெளியேறவுள்ளனர்.

தற்போது வெளியேறும் பொலிஸார் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்தவர்களே முழுமையாகக் காணப்படுகின்றார்கள்.

பொலிஸ் பயிற்சிக் கல்லூரியில் இருந்து வெளியேறவுள்ள பிள்ளைகளின் நிகழ்வுகளில் கலந்துகொள்வதற்கு பெற்றோர்களுக்கு பொலிஸ் தலைமையகத்தினால் அழைப்புகள் விடப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும். (ஓ- 68)


நீங்களும் தகவல்தொழில்நுட்ப, வணிக துறையில் சாதனை படைக்கலாம்.




A/L ? Pass / Fail

BIT University of Colombo | CompTIA A+ | Oracle Campus-Java | Government Scholarship. | CIMA-UK 1800/= Per Module

USA, UK பல்கலைக்கழகங்களில் Master Degree

MCS Supported By UNDP/JRRP

Free : BCS-UK, IELTS, Hardware, ICDL

புலமைப் பரிசிலுக்கும் மேலதிக விபரங்களுக்கும் நேரில்,

SMS your name & course to 772 395 895 & Get Schol.

324, Palaly Road, Campus Junction, Jaffna.



## O/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான..

- Diploma in Microsoft Office 2010
- Diploma in PC Application
- Dip. in Pre-Press Desktop Publishing
- Dip. in Video Production & Multimedia
- Dip.in Web Designing & Development
- Diploma in Computerized Accounting

முதலில் பதிவு செய்யும் 200 மாணவர்களுக்கு Internet E-mail or Hard ware Technology Course முற்றிலும் இலவசம் !

Internet E-mail | Hardware Technology

முழுமையானதும் தரமானதுமான கணினிக்கல்வி

ஆசியாவிலேயே முதன்மை நிலை வகிக்கும் veta Experts in English Training An ISO 9001:2000 Company

புதிய பிரிவுகள் ஆரம்பம்.




DMI COMPUTER EDUCATION

NO. 113, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். Tel.: 021-222 4403

M.M.V. வீதி, (மத்திய மகாவித்தியாலயம் முன்பாக) நெல்லியடி. Tel. : 021-226 2470


## மரண அறிவித்தல்

### வேலுப்பிள்ளை சிவசுப்பிரமணியம்

(இளைப்பாறிய ஆசிரியர், சென்.ஜோன்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம்)



தென்மராட்சி, கோயிலாக்கண்டிப் பதியைப் பிறப்பிடமாகவும் யாழ். நாயன்மார்கட்டை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை சிவசுப்பிரமணியம் நேற்று(01.01.2011) சனிக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - சிவக்கொழுந்து தம்பதியரின் ஏக புத்திரனும் காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை - பரிமளம் தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற மனோரஞ்சிதத்தின் அன்புத் துணைவரும் கௌரிதேவி, பாலகேதீஸ்வரன், சாவித்திரிதேவி (உப அதிபர், ஸ்ரீ பார்வதி வித்தியாசாலை, அரியாலை), காலஞ்சென்ற சாந்திநிகேதன் மற்றும் தமயந்திதேவி, நளாயினிதேவி, சந்திரமௌலீசன் (கனிஷ்ட இடைநிலைப் பிரிவு மேற்பார்வையாளர், சென்.ஜோன்ஸ் கல்லூரி), சாயிலக்ஷ்மி (உபஅதிபர், சுண்டுக்குளி மகளிர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் பத்மநாதன் (U.K.), கௌசலாதேவி (Canada), யோகதாசன், கருணானந்தன், சிவபாலன்(Dubai), தயாநிதி, நேசகுமார் (யாழ். குருமுதல்வர் இலங்கைத் திருச்சபை) ஆகியோரின் அன்பு மாமனும் அதிசயசொரூபி (U.K.), ஜெயந்தன் (U.K.), நர்த்தனசொரூபன் (U.K.), சிவகாமி (Canada), சிவசாயீசன் (Canada), யோகவிநாயகன்(U.K.), கார்த்திகா, சத்திநாயகி ( ஸ்ரீ ஜெயவர்த் தனபுரபல்கலைக்கழகம்), நிற்சிந்தன், சிவாஜினி, சிவமைந்தன், சிவானுஜன், கௌரிபாலன், தானியா ஆகியோரின் அன்புப் பேரனும் லெவானா (U.K.), ஹரிஸ் (U.K.) ஆகியோரின் அன்புப் பூட்டனும் திருமதி பொன்னம்பலம் - மனோரஞ்சித சிவமணியின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.01.2011) திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நாயன்மார்கட்டில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
தொ.பே.: 021 2224369, 0718474234

'பூநேசர்',
செம்மணி வீதி,
நாயன்மார்கட்டு,
யாழ்ப்பாணம்.

(108363)

## தாதியியல் விஞ்ஞான இளமாணி கற்கை நெறி

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தில் தாதியியலில் விஞ்ஞான இளமாணிப் பட்டக் கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பிக்க விரும்புபவர்கள் இன்று தொடக்கம் எதிர்வரும் 19 ஆம் திகதி வரை விண்ணப்பப் படிவங்களை யாழ். பிராந்திய நிலையத்தில் பெற்று விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பதாரிகள் தெரிவுப் பரீட்சை மூலம் கற்கை நெறிக்கு தெரிவு செய்யப்படுவர் என இணைப்பாளர் அறிவித்துள்ளார். (ஓ- 10)

## கண்ணீர் அஞ்சலி



தக்ஷா ரேடிங் உரிமையாளர் கஜேந்திரனின் அன்புத் தாயார்

### அமரர் விஜயகுமார் சறோஜினிதேவி

அவர்கள் 01.01.2011 இறைபதம் அடைந்து விட்டார். அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

கே.கே.எஸ். றோட்,
மல்லாகம்.

(108361)

அனோஜன் ரேடர்ஸ்
உரிமையாளர்,
ஊழியர்கள்.

## மரண அறிவித்தல்கள்

### ஜினதாஸ தார்சில்டா (ராசாத்தி)

செம்பியன்பற்று வடக்கைப் பிறப்பிடமாகவும் பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட ஜினதாஸ தார்சில்டா (ராசாத்தி) நேற்று (01.01.2011) சனிக் கிழமை காலமானார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (03.01.2011) திங்கட்கிழமை செம்பியன்பற்று வடக்கு புனித பிலிப்பு நேரியார் ஆலயத்தில் இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும் என்பதனை அறியத் தருகின்றோம்.

செம்பியன்பற்று வடக்கு,
செம்பியன்பற்று.

தகவல்:
சகோதரர்- அ. அன்ரனி வின்சன்,
மகன் - பொனிற்றின் ராஜெய்சி

### திருமதி பொன்னுத்துரை நாகம்மா



மட்டுவில் வடக்கைப் பிறப்பிடமாகவும் ஆர்.டி.எஸ். லேன், ஆவரங்கால் மேற்கை வதிவிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை நாகம்மா நேற்று (01.01.2011) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற க.பொன்னுத்துரை ஆசிரியரின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான க.தங்கம்மா (மட்டுவில்) செ.செல்லத்துரை (வவுனிக்குளம்) மற்றும் செ.இராசதுரை (வவுனியா), தி.நேசம்மா (கிராஞ்சி), ச.நேசத்தினம் (பரந்தன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் பொ.சுந்தரராணி (கொழும்பு), சுந்தரராசன் (ஆவரங்கால்), காலஞ்சென்றவர்களான பாலராணி, புஸ்பராணி, ரவீந்திரன் ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம், துரைராசா, ஜெகதீஸ்வரன் மற்றும் ஆனந்த பாமதி ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.01.2011) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கரதடி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுகொள்ளவும்.

ஆர்.டி.எஸ். லேன்,
ஆவரங்கால் மேற்கு,
புத்தூர்.

தகவல்:
பொ.சுந்தரராசன்
(மகன்).

### செல்வி இராசா மாரிமுத்து

சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி இராசா மாரிமுத்து நேற்று (01.01.2011) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசா - ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற கனகம்மா மற்றும் அன்னம்மா, பொன்னம்மா காலஞ்சென்ற சிவப்பிரகாசம் மற்றும் சரஸ்வதி (மலேசியா), செல்வநாயகம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவர்து சகோதரரான காலஞ்சென்ற சிவப்பிரகாசம் (B.Sc.) வீட்டில் இன்று (02.01.2011) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடிநிலை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுகொள்ளவும்

பூம்புகார்,
சித்தன்கேணி.

தகவல்:
தேவா செல்வராசா
(மருமகன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## சகவாழ்வு சாத்தியமாவது எவ்வாறு?

ஒன்றுபட்ட சகவாழ்வைக் கட்டி எழுப்ப அனைவரும் ஒன்றிணைய வேண்டும். பிறந்துள்ள இந்தப் புது வருடத்தை தேசத்தின் வெற்றி வருடமாக மாற்றி அமைப்பதற்கு அனைவருக்கும் பலமும் தைரியமும் கிடைக்க வேண்டும் என்று பிரார்த்திக்கின்றேன்.

தாய் நாட்டை ஒன்றிணைத்ததில் காணப்பட்ட ஒற்றுமை நாட்டை அபிவிருத்திப் பாதையில் இட்டுச்செல்லும் நடவடிக்கையிலும் அவசியமாகும். அத்தோடு அனைத்து விதமான கசப்புணர்வுகளையும் மறந்து ஒன்றிணைந்து எழும் தருணம் உருவாகி உள்ளது. சகவாழ்வைப் பிளவுபடுத்தும், நாட்டைச் சீர்குலையச் செய்யும் அனைத்துவித சூழ்ச்சிகளையும் நாம் அதனாலேயே வெல்ல முடியும்.

ஒன்றுபட்ட சகவாழ்வைக் கட்டியெழுப்ப அனைவரும் ஒன்றிணைய வேண்டும்.

2011 ஆம் புத்தாண்டுப் பிறப்பையொட்டி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வெளியிட்டுள்ள செய்தியில் மேற்கூறப்பட்ட வசனங்களும், வாசகங்களும் அடங்கும்.

ஒன்றுபட்ட சகவாழ்வைக் கட்டியெழுப்ப அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என்ற ஜனாதிபதியின் விருப்பம் மிகவும் வரவேற்கத்தக்கதும்; அவசியமானதும் ஆகும்.

ஆனால், சகவாழ்வுக்கான சூழமைவை அரசாங்கம் உருவாக்கி விட்டாதா? அதற்கான நடவடிக்கைகள் உகந்த அளவில் உரிய முறையில் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றனவா என்று நோக்குகையில் பதில் மந்தமானதாகவே இருக்கிறது.

ஒன்றுபட்ட சக வாழ்வு சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களிடையே இதுவரை கட்டி எழுப்பப்படவில்லை. அதனை ஜனாதிபதியும் ஏற்றுக்கொண்டிருக்கிறார். ஒன்றுபட்ட சகவாழ்வை கட்டி எழுப்ப அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என்ற கோரிக்கை அதனையே சுட்டுகிறது.

போர் முடிவடைந்து விட்டாலும் அரசாங்கத்தினால் இன்னமும் இனங்களுக்கிடையே சமாதானத்தையும் சமரசத்தையும் கொண்டு வர இயலவில்லை. அரசின் செயற்பாடுகளும் நடவடிக்கைகளும் அவற்றை நாடி இன்னும் அமையவில்லை என்பதே கசப்பான உண்மை.

சமாதானத்தையும் சமரசத்தையும் நாட்டில் வாழும் மூன்று இனங்களிடையும் கொண்டு வருவதற்கு, ஏற்படுத்துவதற்கு உகந்த, உரிய நடவடிக்கை எதிலும் அரசாங்கம் இன்னும் இறங்கவில்லை; மனம் கொள்ளவில்லை. வெறுமனே சமாதானம், அபிவிருத்தி, இன ஒற்றுமை என்ற பதங்களை உச்சரிப்பதாலும் அவற்றில் மிகச் சிறிய பங்கை செயலாக்குவதாலும் அவை கைக்கு எட்டமாட்டா.

மிகக் குறிப்பாக, சமாதானத்துக்கும் அபிவிருத்திக்கும் அத்திவாரமாக அமைய வேண்டிய இன ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கான ஓர் அடி தானும் முன்னோக்கி வைக்கப்படவில்லை. அபிவிருத்தியில் மட்டுமே அரசுத் தலைமையும் அதன் சொற்படிச் செயற்படும் அரசாங்க இயந்திரமும் முன்னோக்கிச் செல்ல முயல்கின்றன.

அதுமட்டுமன்றி, இன ஒன்றுமையை மேன்மேலும் சிதைத்துப் பொசுக்கும் போக்கையே அதி உத்வேகத்துடன் அரசு முன்னெடுத்து வருகிறது. தமிழ், முஸ்லிம் மக்களுக்குரிய உரிமைகளை வழங்குவதில் கிஞ்சித்தும் அக்கறை காட்டாமல் வெறும் வாய்ச்சொற்களோடு அரசு மட்டுப்படுத்தி உள்ளது.

இன ஒற்றமைக்கான முதலாவது தேவை, சிறுபான்மை இன மக்களின் அரசியல் உரிமைகள் வழங்கப்படுவதே ஆகும். அந்தத் திசையில் அரசுத் தலைவரோ அன்றி அவரது அரசாங்கமோ குறிப்பிட்டுச் சொல்லும் அளவுக்கு ஓர் அடிதானும் முன்னெடுத்து வைக்கவில்லை. தான் நினைக்கும், உத்தேசித்துள்ள சில சில்லறை உரிமைகளைக் கிள்ளித் தெளிக்கவே அது உத்தேசித்துள்ளது. இது விடயத்தில் அரசின் உள்நோக்கம் அதுவே.

அரசமைப்புச் சட்டத்தின் பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தின் மூலம் சிறுபான்மை இனமக்களுக்கு வழங்கப்பட்ட குறிப்பிடக் கூடிய அதிகாரங்களை இல்லாது சிதைத்து வருவதில் ஆர்வமும் அக்கறையும் உள்ள அரசு -

உதாரணமாக, இணைக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாணங்களைப் பிரித்தமை, மாகாண சபைகளுக்கு இருந்த பொலிஸ் மற்றும் நிர்வாக அதிகாரங்களைப் பதினெட்டாவது சட்டத் திருத்தத்தின் கீழ் பறித்து எடுத்த அரசு-

தமிழ் மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்கும் சேர வேண்டிய பிரிக்க முடியாத உரிமைகளை வழங்கி நாட்டின் நல்லிணக்கத்தை உருவாக்க நினைக்காத அரசும் அதன் தலைமையும் -

இன ஒற்றுமையை உருவாக்க ஆர்வத்துடனும் அர்ப்பணிப்புடனும் செயற்படும் என்று எதிர்பார்ப்பது எங்ஙனம்? உரிய அரசியல் தீர்வுக்கான பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு விருப்பம் இருப்பதாகக் காட்டிக்கொண்டு, வெறும் வாய்வேதாந்தம் பேசிக்கொண்டு காலத்தை வாங்கி வந்த அரச தலைமைப்பீடம், பிறந்துள்ள புதிய ஆண்டிலாவது விரைந்து செயற்படவேண்டும்.

இனப்பிரச்சினைக்கான நியாயமான தீர்வைக் காண்பதில் போதிய அக்கறை செலுத்தாமல், அதனை அடிப்பெட்டியில் போட்டு விட்டு-

நாட்டில் சகவாழ்வை எவ்வாறு கட்டி எழுப்ப முடியும்? இது தர்க்க சாஸ்திர ஒழுங்கில் ஒரு சிறுபிள்ளையும் எழுப்பக் கூடிய அர்த்தமுள்ள கேள்வி.

அதில் நின்று நோக்குகையில் ஒன்றுபட்ட சக வாழ்வு என்ற இலக்கு எவ்வாறு சாத்தியமாகும்?

சக வாழ்வுக்கான அடிப்படைத் தேவைகளை நிறைவேற்ற அரசுத் தலைமை இந்த வருடத்திலாவது காலம் தாழ்த்தாது செயற்பட மனங்கொள்ளட்டும். முன்னுரிமையும் முதலிடமும் தரப்பட வேண்டிய தேவை அதுவே.

# இந்திய புலமைப்பரிசில் திட்டத்தில் இலங்கை மாணவர்களுக்கு சந்தர்ப்பம்

யாழ்ப்பாணம், ஜன.2

கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயம் இலங்கை மாணவர்கள் 45 பேருக்கு பட்டப்படிப்பு, பட்டப்பின் படிப்பு ஆகிய கற்கை நெறிகளுக்கான புலமைப்பரிசில் திட்டத்தை அறிவித்துள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் இந்தியப் பல்கலைக் கழகங்களில் பட்டப் படிப்பை மேற்கொள்வதற்கு 40 மாணவர்களும், பொதுநலவாய நாடுகள் புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ் பட்ட மேற்படிப்பை மேற்கொள்வதற்கு 05 மாணவர்களும் தெரிவு செய்யப்படுவர்.

இந்திய உயர்ஸ்தானிகராலயம் இலங்கை மாணவர்கள் இந்தியாவிலுள்ள பல்வேறு பல்கலைக் கழகங்களிலும் தமது பட்டப்படிப்பு மற்றும் பட்டமேற்படிப்பு ஆகியவற்றை மேற்கொள்வதற்கு இலங்கை உயர் கல்வியமைச்சின் ஆலோசனையின் பேரில் மாணவர்களைத் தெரிவு செய்து புலமைப் பரிசில்களை வழங்கி வருகின்றது.

இந்தப் புலமைப் பரிசில் திட்டத்தில் தெரிவு செய்யப்படும் மாணவர்களுக்கு கற்கை நெறிக்கான முழுக்காலத்திற்குமான கட்டணம், உணவுக்கான படிகள், தங்குமிடத்திற்கான படிகள் மற்றும் புத்தகங்கள், காகிதாதிகள் என்பனவற்றுக்கான வருடாந்தக் கொடுப்பனவு என்பன வழங்கப்படும். அத்துடன் சுகாதார வசதிகள், முதல் வகுப்பில் புகையிரதப் பயண வசதிகள், இந்திய நாட்டின் பல்வேறு இடங்களுக்கும் கல்விச் சுற்றுலாவை மேற்கொள்வதற்கான கொடுப்பனவுகள் என்பன வழங்கப்படும்.

இலங்கை உயர் கல்வியமைச்சு இதற்காக பொருத்தமான மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோரியுள்ளது. இதற்கான இறுதித் திகதி இந்த மாதம் 17 ஆம் திகதியாகும்.

மேலதிக தகவல்களைப் பெற விரும்பினால் www.mohe.gov.lk என்ற இணையத்தளத்தைப் பார்வையிடுமாறும் யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய துணைத் தூதரகம் தனது செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளது.(க)

# வாசிப்பு ஆர்வத்தை மேம்படுத்துவதற்காக மாணவர்களுக்கு வாசகர் விருதுகள்

கிளிநொச்சி,ஜன.2

பாடசாலை மாணவர்களின் வாசிப்பு ஆர்வத்தை மேம்படுத்தும் நோக்குடன் மாணவர்களுக்கு வாசகர் விருதுகள் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இலங்கை தேசிய நூல் அபிவிருத்திச் சபையானது கல்வி அமைச்சுடன் இணைந்து இந்த வேலைத் திட்டத்தை அமுல் செய்யவுள்ளது.

இதற்காகச் சகல வலயங்களையும் சேர்ந்த பாடசாலைகளில் அமைந்திருக்கும் நூலகங்களைச் சிறந்த முறையில் பயன்படுத்தி வாசிப்புக்கு ஆர்வம் காண்பிக்கும் மாணவர்களின் பெயர்ப் பட்டியல்களைச் சுயவிருப்புடன் சமர்ப்பிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

இது தொடர்பான அறிவுறுத்தல்களும், விண்ணப்பப்படிவங்களும் சகல பாடசாலை அதிபர்களுக்கும், வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் கல்வி அமைச்சின் செயலாளரால் ஒப்பமிடப்பட்டு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. இதன் பிரகாரம் ஒவ்வொரு பாடசாலையிலும் தரம் 7 தொடக்கம் 13 வரையான தரங்களில் கல்வி கற்கும் மாணவர்களிருந்து தெரிவு செய்யப்பட்ட மூன்று மாணவர்களின் பெயர் விவரங்கள் அந்தப் பகுதிக்கான வலயக் கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். வலயக் கல்விப் பணிப்பாளர்கள் தமக்குக் கிடைக்கப் பெற்ற பெயர்ப்பட்டியல்களை ஜனவரி 29ஆம் திகதிக்கு முன்னர் தேசிய நூல் அபிவிருத்திச் சபையின் செயலாளருக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

இவ்வாறு பரிந்துரை செய்யப்பட்ட பெயர்ப்பட்டியல்கள் கிடைத்தவுடன் ஒவ்வொரு வலயத்திலும் வாசகர் விருதுகள் மற்றும் பரிசில்கள் வழங்கும் விழா நடத்தப்படு மெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (சு-405)

## காலதாமதமாகவே எச் 1 என் 1 மருந்துகள் யாழ்.வந்து சேர்ந்தன

யாழ்ப்பாணம்,ஜன.2

யாழ்.மாவட்டத்தில் அண்மைய சில தினங்களாகப் போடப்பட்டு வரும் எச் 1 என்1 நோய்த் தடுப்பு மருந்து காலதாமதமாகவே யாழ்ப்பாணத்துக்குக் கிடைத்தது என்று பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவகலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

"உண்மையில் இத்தடுப்பூசி மருந்துகளின் முதல் தொகுதி கொழும்பு, மத்திய சுகாதார அமைச்சிலிருந்து 12.11.2010 இலும் இரண்டாவது தொகுதி 08.12.2010 இலும் மூன்றாவது தொகுதி 24.12.2010 இலும் எமக்கு கிடைத்தன என்பதனை உறுதிப்படுத்த விரும்புகின்றேன்''- என்று அவரது அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் கர்ப்பிணித் தாய்மாருக்கு இத்தடுப்பூசியை வழங்கும்படி மத்திய சுகாதார அமைச்சின் தொற்று நோய் தடுப்பு பிரிவினால் சுற்றறிக்கை அனுப்பப்பட்டிருந்தது என்றும் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (உ)

# இராணுவத்திலிருந்து தப்பிய 3000 பேர் கடந்த 15 நாள்களில் மட்டும் கைது

கொழும்பு,ஜன.2

இராணுவத்திலிருந்து தப்பியோடிய 3000 பேர் கடந்த நவம்பர் 15 ஆம் திகதியிலிருந்து வியாழக்கிழமை வரை கைது செய்யப்பட்டிருப்பதாக இராணுவப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் உபய மெதவல தெரிவித்துள்ளார்.

தப்பியோடியவர்கள் திரும்பி வருவதற்கு அளிக்கப்பட்ட மன்னிப்புக் காலத்தை பயன்படுத்தத் தவறிய நிலையில் இராணுவ பொலிஸாரால் இவர்கள் தேடிக்கண்டு பிடிக்கப்பட்டு கைது செய்யப்பட்டுள்ளனர். 7 அதிகாரிகளும் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார்.

நாட்டில் நடைபெற்ற பல குற்றச் செயல்களில் தப்பியோடிய படையினர் சம்பந்தப்பட்டிருப்பதாக செய்திகள் வெளியாகியிருந்தன.

இந்தநிலையில், பாதுகாப்பு அமைச்சின் உத்தரவின்பேரில் இராணுவத்தினரும் இராணுவப் பொலிஸாரும் இணைந்து தப்பியோடிய படையினரைக் கண்டுபிடிப்பதற்காக நாடளாவிய ரீதியில் தேடுதல்களை மேற்கொண்டிருந்தனர். (த)

# 60 ஆவது ஆண்டு பூர்த்தியை கொண்டாடும் விமானப் படை

கொழும்பு,ஜன.2

இலங்கை விமானப் படையின் 60 ஆவது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு விசேட இலச்சினை வியாழக்கிழமை வெளியிட்டு வைக்கப்பட்டது. 60 ஆவது ஆண்டு பூர்த்தி விழா எதிர்வரும் மார்ச் மாதம் 2 ஆம் திகதி கொழும்பில் கோலாகலமாக நடை பெறவுள்ளது.

கொழும்பு விமானப்படைத் தலைமையகத்தில் நடைபெற்ற நிகழ்வில் பாதுகாப்புப் படைகளின் பிரதம அதிகாரியும் விமானப் படைத் தளபதியுமான எயார் சீப் மார்ஷல் ரொஷான் குணதிலக்க புதிய இலச்சினையை உத்தியோக பூர்வமாக வெளியிட்டு வைத்தார்.

60 ஆவது ஆண்டு பூர்த்தியின் ஓர் அங்கமாக 12ஆவது தடவையாக நடைபெறவுள்ள விமானப் படையின் சைக்கிள் ஓட்டப் போட்டியை ஜனவரி மாதம் 19 ஆம் திகதி வவுனியாவிலிருந்து ஆரம்பிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் லக்ஷ்மன் ஹுலுகல்லே, விமானப் படையின் பிரதம அதிகாரி எயார் வைஸ் மார்ஷல் பி.பி. பிரேமசந்திர உட்பட முக்கியஸ்தர்கள் பலர் இலச்சினை வெளியிட்டு நிகழ்வில் கலந்துகொண்டனர். (த)

## நாளை

மார்கழி 19 03.01.2011
திங்கட்கிழமை
திதி: : சதுர்த்தசி
பி.ப.03.00 வரை
நட்சத்திரம் : மூலம்
பி.ப.03.30 வரை
[illegible] : 12.30-02.00 வரை
ராகுகாலம் : 08.00-09.30 வரை

## வான்-சைக்கிள் விபத்தில் வடமராட்சியில் ஒருவர் மரணம்

வடமராட்சி, ஜன.2

வடமராட்சி வதிரிச் சந்தியில் நேற்றுக் காலை 6.30 மணியளவில் இடம்பெற்ற வான்-சைக்கிள் விபத்தில் வயோதிபர் ஒருவர் பலியானார்.

வதிரிச் சந்தி ஊடாக நெல்லியடி நோக்கி பயணித்த, பாண் ஏற்றிவந்த வாகனமும் சைக்கிளும் மோதிக் கொண்டதால் இந்த விபத்து இடம் பெற்றது.

காயமடைந்தவர் பருத்தித்துறை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார். அங்கு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

கரவெட்டி, கன்பொல்லை பகுதியைச் சேர்ந்த அம்பலவன் காசியன் (வயது 74) என்பவரே பலியானவர் ஆவார்.

சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். குறித்த வயோதிபர் பயணித்த சைக்கிளும் பலத்த சேதமடைந்தது. (ம-236-319)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அனைத்து மக்கள் வங்கிகளின் 50 ஆவது ஆண்டு பூர்த்தி விழா

தென்மராட்சி,ஜன.2

மக்கள் வங்கியின் ஐம்பதாவது ஆண்டு பூர்த்தி விழா நேற்று நாட்டில் உள்ள அனைத்து மக்கள் வங்கிகளிலும் கொண்டாடப்பட்டது.

சாவகச்சேரி மக்கள் வங்கிக் கிளையில் நீண்டகாலமாக கணக்குகளை வைத்திருந்த வாடிக்கையாளர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

கிளை முகாமையாளர் க.சண்முகலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் வங்கி வாடிக்கையாளர்கள் பலர் கலந்துகொண்டனர்

வங்கியின் பிராந்திய முகாமையாளர் எஸ்.பத்மநாதன் இந் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு நினைவுக் கேடயங்களை வழங்கினார்.

(ஒ-207)

SPOT ADMISSION IN COLOMBO
STUDY @ UK
3rd & 4th Jan 2011
at IBT Head Office
(Infront of E.H. Cooray)
Conducted by college representative
காலை 9.00 மணி முதல்.....
2011 மார்ச் மாதம் அமுலாகவுள்ள UK மாணவர் விசா புதிய சட்ட அமுலாக்கலுக்கு முன்னர் உங்கள் விசாவினை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.....
அடிப்படைத்தகமை GCE (O/L)
IELTS - தேவையில்லை
சிறந்த சட்டவல்லுனர்களின் ஆலோசனை
நம்பகரமான Sponsorship
100% VISA GUARANTEED
IBt 0777113777
INSTITUTE OF BRITISH TECHNOLOGY (PVT) LTD
No:538-3/1, Galle Road, Colombo - 03, Sri Lanka. | Branch: Kalmunai
E-mail: info@ibtedu.lk | academics@ibtedu.lk
Web : www.ibtedu.lk
We raise the limits to your Success.....

UK VISAS
எமது சேவையில் எல்லா விதமானவிசாக்களும் ஒழுங்கு செய்துதரப்படும்.
flex Institute
4, IBC Road, Colombo 6,
Contact: 0774-550747

GENUINE FINANCIAL SPONSORSHIP
From Trusted and Recognised Banks
Reasonabale Interest
UK / CANADA / AUSTRAILIA
100% Visa Guaranteed
Contact Now : 0777113777



STUDY IN UK
VISA பெற்றுக்கொள்ள முன்னர் அல்லது அதன் பின்னர் எந்தவொரு கட்டணமும் அறவிடப்படமாட்டாது.
எமது சேவை முற்றிலும் இலவசம்
O/L உடன் குறைந்த கட்டணத்தில்!
NO NEED IELTS
flex Institute
4, IBC Road, Wellawatte, Colombo 6.
Hotline: 0777-761346
Email: flexinstitute@sltnet.lk
www.flexinstitute.lk
(A Subsidiary of Flex Graphic)

## நன்றி நவிலல்



எமது இல்லத்தில் சென்ற 25.12.2010 ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்ற **திருமதி பூமாதேவி மகாதேவா** அவர்களின் மணி விழாவுக்கு வருகைதந்து சிறப்பித்த அந்தணப் பெருமக்கள், சக லயன்ஸ் கழக உறுப்பினர்கள், தெல்லிப்பழை மேற்கு சி.க.கூ சங்க உறுப்பினர்கள், ஸ்கந்தவரோதயக் கல்லூரி சமூகத்தினர், சுன்னாகம் வாழ்வக சமூகத்தினர் மற்றுமுள்ள உறவினர், நண்பர்களுக்கும், அவர்கள் வழங்கிய ஆசியுரைகள், வாசித்தளித்த வாழ்த்துரைகள், அன்பளிப்புக்களுக்கும், மற்றும் தொலைதூரத்திலிருந்து தொலைபேசி மூலமாகவும், தந்திசெய்திகளாலும் கிடைத்த வாழ்த்துக்களுக்கும் எமது நெஞ்சம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இந்த விழாச்சிறப்புக்கு எம்மோடு உடனிருந்து உதவி ஒத்தாசை புரிந்த அன்புள்ளங்களுக்கும் எமது நன்றிகளைச் செலுத்துகிறோம்.

கூடவே உங்கள் அனைவருக்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்.

அன்புடன்
லயன் செல்லத்துரை மகாதேவா J.P
திருமதி பூமாதேவி மகாதேவா
(தலைவர், லயன்ஸ் கழகம், சுன்னாகம்)
மற்றும் குடும்பத்தினர்.
கல்லூரி வீதி, கந்தரோடை,
சுன்னாகம்.
தொ.பே:021 2240357.

## விசேட அறிவித்தல்

2011ஆம் ஆண்டுக்கான யாழ்ப்பாணம், வண்ணை வைத்தீஸ்வராக் கல்லூரி வருடாந்த ஒன்றுகூடலும் நிர்வாக சபைத் தெரிவும் மதியபோசன விருந்துபசாரமும்

அன்பார்ந்த பழைய மாணவ, மாணவிகளே கல்லூரி ஆசியர்களே! மேற்குறிப்பிட்ட வருடாந்தக் கூட்டத்தை 2011.01.23ஆம் திகதி மு.ப. 10 மணிக்கு நடத்துவதற்கு பழைய மாணவர் மன்ற நிர்வாகக் குழு தீர்மானித்துள்ளது. ஆகவே தாங்கள் யாவரும் தவறாது சமுகமளித்து இந்த ஒன்றுகூடலில் பங்கேற்று மதியபோசன விருந்திலும் கலந்துகொள்ளுமாறு பழைய மாணவர் மன்ற நிர்வாகத்தினர் கேட்டுக் கொள்கின்றனர்.

குறிப்பு: பொதுக்கூட்டத்தில் யாப்பு மாற்றங்கள் மற்றும் புதிதாக யாப்பில் சேர்க்கப்படவேண்டிய விடயங்கள் அனைத்தையும் 15.01.2011 ஆம் திகதி காரியதரிசிக்கு கிடைக்கும் வண்ணம் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

செயலாளர்,
பழைய மாணவர் மன்றம்,
வைத்தீஸ்வராக் கல்லூரி, யாழ்ப்பாணம்.

(108348)

# மரண அறிவித்தல்



## திருமதி
## அன்னலட்சுமி பொன்னுச்சாமி

குமரகோட்டம், கோண்டாவிலைச் சேர்ந்த திருமதி அன்னலட்சுமி பொன்னுச்சாமி நேற்று (01.01.2011) சனிக்கிழமை சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் பொன்னுச்சாமியின் அன்புமனைவியும், காலஞ்சென்றவர்களான மாணிக்கம் - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கந்தையா, அன்னமுத்து, கனகலிங்கம், ஆச்சிமுத்து, இராசலிங்கம் அப்புத்துரை மற்றும் தம்பிப்பிள்ளை, சுந்தரம்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும், இராசமணி, காலஞ்சென்ற சிவசாமி மற்றும் பராசக்தி காலஞ்சென்ற சரஸ்வதி மற்றும் மங்கையர்க்கரசி, மகேஸ்வரி, சுபத்திரை ஆகியோரின் அன்பு மைத்துனியும் காலஞ்சென்றவர்களான ஆறுப்பிள்ளை - கனகம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் பரமேஸ்வரராசா (பிரான்ஸ்), செல்வராசா, செல்வராணி, சந்திரராசா (ஜேர்மனி), புஸ்பராணி (லண்டன்), விமலராணி, இந்திரராசா (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் தனலட்சுமி (பிரான்ஸ்), யோகேஸ்வரி, யோகேஸ்வரராசா, கமலாதேவி (ஜேர்மனி), தர்மலிங்கம் (லண்டன்), புவனேஸ்வரன், ஜெஜீதரா(ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியும் சோபியா, கபில்ராச், றகீபன், மதூசன், ஆதவன், அபிநயா, அருட்சனா, அபிரா, ஆதித்தியா, அர்ச்சயா, அஸ்வினியா, அருணன், அக்சயன், யதுர்சிகா, தக்ஸ்னா, வைஷ்ணவன், அகிசன், ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.01.2011) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

குமரகோட்டம்,கோண்டாவில். தகவல்: குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டில் 5 லட்சம் பனம் விதைகள் நடும் திட்டம் நிறைவடைந்துள்ளது

யாழ்ப்பாணம்,ஜன.2

யாழ்.மாவட்டத்தில் ஐந்து லட்சம் பனம் விதைகளை நடும் திட்டம் நிறைவு பெற்றுள்ளதாகத் தேசிய பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் பசுபதிசீவரத்தினம் தெரிவித்துள்ளார். அதில் இரண்டு லட்சத்து 87ஆயிரத்து 778 பனம் விதைகள் குழிகளிலும் மூன்று லட்சத்து80ஆயிரம் விதைகள் நான்கு பாத்திகளிலும் நடப்பட்டுள்ளன எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு.

கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவில் 6 கிராம அலுவலர் பிரிவுகளில்39ஆயிரம் பனம் விதைகளும்,பருத்தித்துறைப் பிரதேச செயலர் பிரிவில் 4 கிராம அலுவலர் பிரிவுகளில்53 ஆயிரத்து 200 பனம் விதைகளும், மருதங்கேணி உதவி அரசஅதிபர் பிரிவில் 5 கிராம அலுவலர் பிரிவுகளில் 36 ஆயிரத்து 400 விதைகளும் ஊர்காவற்றுறைப் பிரிவில் 2 கிராம அலுவலர் பிரிவுகளில் 49 ஆயிரத்து 228 விதைகளும் நடப்பட்டுள்ளன.

இதேபோல,காரைநகர் பிரதேச செயலர் பிரிவில் 2கிராம அலுவலர் பிரிவுகளில் 25 ஆயிரம் பனம் விதைகளும், கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் கிராம அலுவலர் பிரிவுஒன்றில் 10 ஆயிரம் விதைகளும், சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலர் பிரிவில்கிராம அலுவலர்பிரிவு ஒன்றில் 7 ஆயிரத்து 500 விதைகளும் சங்கானைப் பிரிவில் 3கிராம அலுவலர் பிரிவுகளில் 26 ஆயிரத்து 500 விதைகளும், உடுவில் பிரிவில் 7 கிராம அலுவலர் பிரிவுகளில் 9ஆயிரத்து 250 விதைகளும், சாவகச்சேரி பிரிவுகளில் 26 ஆயிரத்து 500 விதைகளும் நடப்பட்டுள்ளன.

இதேவேளை, குடத்தனையில் அமைக்கப்பட்ட பனம் பாத்தியில் ஒரு லட்சத்து25 ஆயிரம் பனம் விதைகளும் பண்டதரிப்பில் உள்ள பனம் பாத்தியில் 14ஆயிரத்து 500 விதைகளும் நாவற்குழியில் அமைக்கப்பட்ட பனம் பாத்தியில் 67ஆயிரத்து 500 விதைகளும்,மண்கும்பானில் அமைக்கப்பட்டுள்ள பனம் பாத்தியில் ஒருலட்சத்து 73ஆயிரம் பனம் விதைகளுமாக 3லட்சத்து 80 ஆயிரம் பனம் விதைகள் நடப்பட்டுள்ளன-என்றார். (ம-14)

# கிராம அலுவலர்களுக்கான இடமாற்றம் ஒக்ரோபர் வரை தற்காலிகமாக ரத்து

யாழ்ப்பாணம்,ஜன.2

பொது நிர்வாக உள்நாட்டலுவல் அமைச்சினால் இந்தாண்டு ஆரம்பத்தில் நடைமுறைப்படுத்தப்பட இருந்த கிராம அலுவலர்களுக்கானஇடமாற்ற நடவடிக்கை தற்காலிகமாக இடை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகப் பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த பல வருடங்களாகக் கிராம அலுவலர்கள் பலர் இடமாற்றங்களுக்கு உள்ளாகாமல் ஒரே இடத்திலேயே கடமையாற்றி வருகின்றனர்.

இந்த நிலையில் பொது நிர்வாக அமைச்சுக்குத் தொடர்ந்து கிடைத்து வந்த பொது மக்களின் முறைப்பாடுகளின் அடிப்படையில் பொதுவாக இடமாற்றக் கொள்கை ஒன்றின் அடிப்படையில் இடமாற்றத்தை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

இந்த ஆண்டு அரசினால் குடிசன மதிப்பீட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளமையால் மேற்கொள்ளப்பட இருந்த கிராம அலுவலர் இடமாற்றங்களைத் தற்காலிகமாக இடை நிறுத்தி வைக்குமாறு பிரதேச செயலாளர்கள், உதவி அரச அதிபர்களுக்கு சுற்று நிருபம் மூலம் அறிவிக்கப்பட்பட்டுள்ளது.

குடிசன மதிப்பீட்டுப் பணிகள் இந்தாண்டு நடுப்பகுதியில் நடைபெறவுள்ளதனால் இடமாற்றத்தை 01.10.2011 இல் இருந்து நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கும்படியும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (த-86)

# கால் நடைகளை வீதியோரங்களில் கட்டுவதால் பயணிப்போர் சிரமம்

யாழ்ப்பாணம்,ஜன.2

யாழ். இராசாவின் தோட்ட வீதியோரத்தில் கட்டப்படும் கால் நடைகளால் வீதியின் ஊடாகப் பயணிப்போர் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

வீதியோரத்தில் நேற்று முன்தினம் கட்டப்பட்ட மேற்படி கால் நடைகள் வீதியின் குறுக்கே கயிற்றுடன் நின்றபோது மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த ஒருவர் கால்நடையின் கயிற்றில் சிக்கி காயமின்றித் தப்பித்துக் கொண்டுள்ளார்.

எனவே யாழ்.நகரின் போக்குவரத்து நெரிசல்மிக்க இந்த வீதியோரத்தில் கால்நடைகளைக் கட்டுவதால் வீதியால் பயணம் செய்யும் மக்கள் சிரமப்படுவதோடு, விபத்துக்களும் நேரிடுவதாக மக்கள் தெரிவித்துள்ளனர். (201-26)

## எழுத்தின் வெளிப்பாடு



வழங்கல்: கலாநிதி எஸ்.ஜெபநேசன் அடிகளார் எழுதிய 'தொடரும் ஆன்மீக கல்விசார் பயணம்' என்ற சுய சரிதை நூல் வெளியீட்டு நிகழ்வு யாழ்.பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.இந்நிகழ்வில் நூலின் முதற்பிரதியை பேராசிரியர் எஸ்.சண்முகதாஸ், பேராசிரியர் நித்தி கனகரத்தினத்திடம் வழங்கி வெளியிட்டு வைக்கின்றார். (201-14)

# முதியோர் இல்லத்துக்கு விரைவில் பேருந்து

தைதடி அரச முதியோர் இல்லத்தின் பயன்பாட்டுக்கு பஸ் ஒன்று இந்த ஆண்டில் வழங்கப்படும் என்று இல்ல அத்தியட்சகர் என்.இராசலிங்கம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்:

மேற்படி இல்லத்தில் தங்கியிருக்கும் முதியோர்களின் வசதி கருதி பஸ் ஒன்றை வழங்குமாறு ஏற்கனவே வடமாகாண ஆளுநரிடம் கோரிக்கை விடுத்திருந்தோம்.

எனவே இந்த பஸ் கொள்வனவுக்காக இந்த ஆண்டில் நிதி ஒதுக்கப்பட்டு இதைப் பெற்றுத் தருவதற்கு உரிய நட வடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வடமாகாண சமூக சேவைகள் திணைக்களம் உறுதி வழங்கியுள்ளது-என்றார். (201-26)

# தனங்கிளப்பு யாழ்ப்பாணம் ஊடான சிற்றூர்திச் சேவை நேற்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜன.2

சாவகச்சேரியில் இருந்து தனங்கிளப்பு - யாழ்ப்பாணம் ஊடான தனியார் சிற்றூர்திச் சேவை நேற்று முற்பகல் 11.30மணிக்கு ஆரம்பித்து வைக்கப்பட்டது.

523ஆவது படையணியின் கட்டளைத் தளபதி பிரிகேடியர் டி.ஏ.வி.என்.தேமட்டம்பிட்டியவும் தென்மராட்சிப் பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலனும் கொடியசைத்து பஸ் சேவையை ஆரம்பித்து வைத்தனர்.

இந்த நிகழ்வில் 523ஆவது படையணியின் சிவில் நிர்வாக அதிகாரியும் பொதுமக்களும் கலந்து கொண்டனர். இந்தச் சேவை தினமும் சாவகச்சேரியில் இருந்து காலை 6.45, முற்பகல் 10.45, பிற்பகல் 3.45 ஆகிய நேரங்களில் ஆரம்பமாகும்

யாழ்ப்பாணத்தில் இருந்து காலை 8.20, பிற்பகல் 2.10, மாலை 5 மணி ஆகிய நேரங்களில் பஸ் சேவை நடைபெறும். (204-207)

# பாடசாலைக்கு நடமாடும் விஞ்ஞான ஆய்வுகூடம்

கோப்பாய்,ஜன.2

கோப்பாய் சைவத்தமிழ் வித்தியாலயத்தின் கல்விச் செயற்பாட்டுக்கு நடமாடும் விஞ்ஞான ஆய்வுகூடம் அமைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன்மூலம் பாடசாலையின் ஆய்வுகூடத்தேவை ஓரளவு பூர்த்தி செய்யப்படும் என தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை இந்தப் பாடசாலையில் கல்வி பயிலும் 200 மாணவர்களுக்கு காலணிகள் வழங்கப்பட்டுள்ளன. பாடசாலை சமூகத்தினால் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டதைத் தொடர்ந்தே இந்த வசதிகள் ஏற்படுத்தப்பட்டதாகக் கூறப்படுகின்றது.(201-72)

# சிறந்த சனசமூக நிலையமாக வடலியடைப்பு கலைவாணி




வலி.தென்மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட சனசமூக நிலையங்களில் 2010 ஆம் ஆண்டுக்கான மிகத் திறமையாகச் செயற்படும் சனசமூக நிலையத்தின் தெரிவு அண்மையில் இடம்பெற்றது.

இதில் வடலியடைப்பு கலைவாணிசன சமூக நிலையம் சிறந்த சனசமூக நிலையமாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன், அதற்கான பரிசும் வலி. தென்மேற்கு பிரதேசசபையின் செயலாளர் திருமதி. பு.சிவலிங்கத்தினால் கலைவாணி சன சமூக நிலையத் தலைவர் கு.பிரதீபனிடம் வழங்கப்பட்டது.

மேற்படி வலி.தென்மேற்கு பிரதேசசபை எல்லைக்குட்பட்ட 84சனசமூகநிலையங்களில் இச்சனசமூக நிலையம் சிறந்த சன சமூக நிலையமாகத் தெரிவுசெய்யப்பட்டதுடன் கடந்த 2008,2009 ஆகிய ஆண்டுகளிலும் இச்சனசமூக நிலையமே சிறந்ததாகத் தெரிவு செய்யப்பட்டது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். (த-288)

# யாழ்.குடாநாட்டில் சோபையிழந்தது புத்தாண்டுக் கொண்டாட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜன.2

யாழ்.குடாநாட்டில் புத்தாண்டுக் கொண்டாட்டம். சோபையிழந்து காணப்பட்டது. நேற்று நள்ளிரவு தேவாலயங்களில் விசேட புத்தாண்டுத் திருப்பலி பூஜைகள் ஆரம்பமாகி நடைபெற்றன. இந்தப் பூஜைகளில் கூட மக்கள் குறைந்தளவே காணப்பட்டனர். இந்து ஆலயங்களிலும் நேற்றுக் காலையில் விசேட பூஜைகள் மற்றும் வழிபாடுகள் இடம் பெற்றன.

குடாநாட்டில் தற்போது நிலவி வரும் அசாதாரண சூழ்நிலைகளால் மக்கள் பயப் பீதியுடன் வாழ்ந்து வருகின்றனர். இதனால் இம்முறை புத்தாண்டு சோபையிழந்து காணப்பட்டது. பட்டாசுகள் கொளுத்தி புத்தாண்டை கொண்டாடுவதற்கு மக்கள் அச்சமடைந்து காணப்படுகின்றனர். பட்டாசு விற்பனையாளர்கள் இந்த முறை பட்டாசு விற்பனை கூட போதிய அளவு குறைந்துள்ளது என்று தெரிவித்துள்ளனர். (204-14-26)

# மேற்பார்வையாளரைத் தாக்கிய சிற்றூழியருக்கு விசாரணை

யாழ்ப்பாணம், ஜன.2

யாழ்.போதனா வைத்தியசாலை மேற்பார்வையாளர் தாக்கப்பட்ட சம்பவத்தோடு சம்பந்தப்பட்ட சிற்றூழியர் பொலிஸாரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:

கடந்த வெள்ளிக்கிழமை மேற்பார்வையாளரைத் தாக்கிய மேற்படி சிற்றூழியரைப் பொலிஸார் கைது செய்து விசாரணைக்கு உட்படுத்தியுள்ளனர்.

இதேவேளை, வைத்தியசாலையில் உள்ளக இடமாற்றம் மற்றும் விடுமுறை சம்பந்தமானபிரச்சினை அதிகரித்ததைத் தொடர்ந்து சம்பந்தப்பட்ட சிற்றூழியர் மேற்பார்வையாளரை கடுமையாகத் [illegible] குறிப்பிடத்தக்கது. (201-26)

# வலி.தென்மேற்கில் 5 லட்சம் ரூபா செலவில் விரைவில் மூலிகைத் தோட்டம்

சண்டிலிப்பாய்,ஜன.2

வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் 5 லட்சம் ரூபா செலவில் மூலிகைத் தோட்டமொன்று அமைக்கப்படவிருக்கிறது. இதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ள வலி.தென்மேற்குப் பிரதேச சபைச் செயலாளர், இந்த வருட வரவு செலவுத் திட்டத்திலிருந்து இதற்காக 5 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் வளர்ந்து வந்த பெரும்பாலான மூலிகை வகைகள் நாட்டில் ஏற்பட்ட போர்ச்சூழல் காரணமாகவும் மக்களின் கவனயீனம் காரணமாகவும் அருகி வந்ததுடன் அழிந்தும் விட்டன. மூலிகை வகைகளுக்கு ஏற்பட்டுள்ள பற்றாக் குறையினாலும் இலகுவாக வைத்தியத்தை மேற்கொள்வதற்காகவும் அனேகமான ஆயுள்வேத வைத்தியர்கள் ஆங்கில மருந்துகளையே பயன்படுத்தி வருகின்றனர். இதனால் மூலிகை வகைகளை வளர்ப்பதில் மக்களுக்கு இருந்த ஆர்வமும் குன்றிவிட்டது.

இதேவேளை தற்பொழுது ஆயுள்வேத வைத்தியசேவை உள்ளூராட்சி மன்றங்களினால் நடத்தப்படும் வைத்தியசாலை களில் மட்டும் நடைபெறுவதுடன் மிகக் குறைந்த எண்ணிக் கையுடைய ஒரு சில ஆயுள்வேத வைத்தியர்கள் மட்டும் சந்ததி சந்ததியாக, பாரம்பரிய தொழிலாக ஆயுள்வேத வைத்தியத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

எனவே ஆயுள்வேத வைத்தியத்துக்கு மீண்டும் புத்துயிர் அளிக்கும் வகையில் வலி.தென்மேற்குப் பிரதேச சபைச் செயலாளர் மூலிகைத் தோட்டத்தை அமைப்பதற்கு முன்வந்துள்ளார்.

வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் ஆனைக்கோட்டை உப அலுவலகம் இயங்கும் கட்டடத்துக்குப் பின்புறமாக உள்ள காணியில் மூலிகைத் தோட்டம் அமைப்பதற்கான முயற்சிகள் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (201-115)

# கோப்பாய் - இராஜ வீதி ஊடாக பஸ் சேவை ஆரம்பிக்கக் கோரிக்கை

கோப்பாய்,ஜன2

கோப்பாய், இராஜ வீதி ஊடான அச்சுவேலி-யாழ்.சிற்றூர்தி சேவையை ஆரம்பிக்குமாறு அந்தப்பகுதி பொதுமக்கள் சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இந்தச் சேவையை ஆரம்பிப்பதன் மூலம் பாடசாலை மாணவர்கள், தனியார் கல்வி நிறுவன மாணவர்கள், மருத்துவமனையில் நோயாளர்களை பார்வையிடச் செல்வோர் ஆகியோரின் நேர விரயம் குறைக்கப்படுமென பொது மக்கள் தெரிவிக்கின்றனர். இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது, இவ்வாறான சேவையை ஆரம்பிக்குமாறு பல தடவை வேண்டுகோள் விடுத்தும் சேவை ஆரம்பிக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

தற்போது இலங்கை போக்குவரத்து சேவையின் குறிப்பிட்டளவிலான சேவை மட்டுமே நடைபெற்றுவருவதாகவும் அதுவும் பாடசாலை சேவையாக நடைபெறுவதால் ஏனைய பொது மக்கள் இவற்றில் பயணிப்பது சிரமமாக உள்ள தாகவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (201-72)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## திருமதி விஜயகுமார் சறோஜினிதேவி



மண்கும்பான் 5ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், கோப்பாய் மத்தி, பருத்தித்துறை வீதி நாவலடியை(கிறிஸ் தவக் கல்லூரிக்கு அருகில்) வசிப்பிட மாகவும் கொண்ட விஜயகுமார் சறோஜினி தேவி நேற்று(01.01.2011) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற குலசேகரம் பிள்ளை மற்றும் புவனேஸ்வரி (சின்னம்மா) தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர் களான தியாகராசா- சுந்தரலட்சுமி தம்பதியரின் மருமகளும், மயூரன், கஜரூபன், மதனரூபன், கஜிந்தன், லக்ஷிகா(2010 ஆம் வருட கலைப்பிரிவு மாணவி, கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயாரும், ருக்குமணிதேவி, றஞ்சினிதேவி, சகுந்தலாதேவி காலஞ்சென்ற லலிதாதேவி மற்றும் குமாரவதனன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் , பத்மதேவி, சத்தியதேவி, பாலசிங்கம், நிர்மலாதேவி, தர்மலிங்கம், விமலாதேவி, சந்திரகுமார் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.01.2011) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப 2 மணியளவில் கோப்பாய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோப்பாய் மத்தி,
பருத்தித்துறை வீதி,
நாவலடி.
(கிறிஸ்தவக் கல்லூரி அருகில்)

(108350)

தகவல்:
குடும்பத்தினர்.

# கண்ணீர் அஞ்சலி



## திருமதி தவமணி சபாரத்தினம் (குஞ்சக்கா)


அன்பு மச்சாளே
ஆருயிர் மாமியாரே
எங்களை எல்லாம் அனுசரித்து
நடப்பீர் என நம்பியிருந்தோம்
எங்களை எல்லாம் நடுவழியில்
தவிக்கவிட்டு இறைவன் அடி
சேர்ந்தீர்களே உங்களுக்கு
உங்கள் மச்சாள்மார்
மருமக்களின்
கண்ணீர் அஞ்சலி
உங்கள் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திப்போமாக.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தெல்லிப்பழை கிழக்கு,
தெல்லிப்பழை.

(108335)

தகவல்:
மச்சாள்மார், மருமக்கள்.

# அறிவித்தல்



திரு. மில்ரோய் ஆர்னல்ட் பெர்னாண்டோ (தே.அ.அ. 752621896V) தற்போது ஜோண் கீல்ஸ் ஒபிஸ் ஓட்டொமேஷன் (பிறைவேட்) லிமிட்டட் டில் வேலை செய்யவில்லை என்பதையும் அவருடன் மேற்கொள்ளப்படும் கொடுக்கல் வாங்கல்கள் அல்லது அவரால் அளிக்கப்படும் வாக்குறுதிகள் தொடர்பாக நிறுவனம் எவ்வித பொறுப்பையும் ஏற்றுக் கொள்ளாது என்பதையும் ஜோண் கீல்ஸ் ஒபிஸ் ஓட்டொமேஷன் (பிறைவேட்) லிமிட்டட் நிர்வாகம் தனது மதிப்புமிக்க வாடிக்கையாளர்களுக்கும் பொது மக்களுக்கும் அறிவிக்கின்றது.

**நிர்வாகம்**
ஜோண் கீல்ஸ் ஒபிஸ் ஓட்டொமேஷன் (பிறைவேட்) லிமிட்டட்,
320/1, யூனியன் பிளேஸ்,
கொழும்பு 02

(வி.573692)

# தேவை

கொழும்பில் வதியும் யாழ்ப்பாணத்தவரான வைத்தியத் தம்பதியினர் தமது இரு சிறு பெண் குழந்தைகளை அன்புடன் பார்த்துக் கொள்வதற்கு 18-30 வயதில் ஒரு நற்குண முள்ள பெண்ணை எதிர்பார்க்கின்றனர். சம்பளம் பேசித் தீர்மானிக் கலாம். தொ.பே:- 0773819855, 0773456779

# தேவை

கல்வியங்காடு, கொக்குவில், திருநெல் வேலி (யாழ்.மாநகர சபை) போன்ற இடங்களில் வீடு அல்லது காணி வாட கைக்கு அல்லது குத்தகைக்குத் தேவை.
தொடர்பு: 0776532069

# DIPLOMA IN NURSING (2 years)

**HOLY CROSS SCHOOL OF HEALTH SCIENCE**

விண்ணப்ப இறுதித் தினம் 31.01.2011
கற்கை நெறிக் கட்டணம் 750/=

க.பொ.த.உயர்தரத்தில் 3 பாடங்கள் சித்தி அடைந்த வர்கள் விண்ணப்பங்களைத் திருச்சிலுவை சுகநல நிலை யம், 767/4, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவ ரிக்குச் சுய விலாசமிடப்பட்ட முத்திரை ஒட்டப்பட்ட கடித உறையுடன் அனுப்பி வைக் கவும்.

பணிப்பாளர்,
தொ.பே.இ. 021 300 1102 OR 222 2512

(108242)

# காணி தேவை

இந்து கௌரவ குடும்பத்துக்கு வீடு கட்டுவதற்கு உகந்த காணி (2பரப்பள வில்) இருபாலை, கல்வியங்காடு, திருநெல்வேலி, கொக்குவில், கோண்டாவில் போன்ற பகுதிகளில் தேவைப்படுகிறது. தரகர் தேவை யில்லை.
தொடர்பு- 0777834603

# வீடு விற்பனைக்கு

வவுனியா வேப்பங்குளம், 6ஆம் ஒழுங்கையில் சகல வசதிகளையும் கொண்ட உறுதிக்காணி யுடனான வீடு விற்பனைக்குண்டு
தொடர்புகளுக்கு: 0718161471

# விண்ணப்பம் கோரல்

மனித உரிமைகள் பாதுகாவலர் பயிற்சி நெறி 2011 இற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரர்கள் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, திருகோணமலை மற்றும் வவுனியா மாவட்டங்களைச் சேர்ந்தவர்களாக இருத்தல்வேண்டும்.

அத்துடன் 18 தொடக்கம் 40 வயதுக்கு உட்பட்டவர்களாக இருத்தலுடன்பிரதேசம், பால், இனம், சமயம் என்பனவும் கருத்தில் கொள்ளப்படும். இந்தப் பயிற்சி நெறிக்கு இடம்பெயர்ந்த வர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படவுள்ளது.

தகுதியுடைய விண்ணப்பதாரர்கள் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தை எதிர்வரும் 10ஆம் திகதி திங்கட்கிழமைக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு மனித உரிமைகள்ஆணைக் குழுவின் நிகழ்ச் சித்திட்ட [illegible] ளர் கேட்டுக்கொண் டுள்ளார்.(204-14-313)


# SALES REP

- Around 25 years of age
- 2-3 Years experience in selling
- Should be minimum O-Level Qualified
- Ability to converse in Tamil/ English
- Should possess a valid riding licence
- Salary & Sales commission exceed Rs. 50,000 pm
- Company maintained Motorbike
- Medical provided

APPLY TO
E-mail : hrd@tradesmann.com
Fax: 011 5565610
PO Box: 168, Jaffna.

FOR FURTHER DETAILS
Contact: 077 756 7147

Tradesmann is a diversified business model in Manufacturing, Trading & Distribution sectors since 1956

THE TRADESMANN SL (PVT) LTD
40, Borupana Ferry Road, Ratmalana.
www.tradesmann.com


# மரண அறிவித்தல்கள்

## திருமதி சிவநேர்மைக்கரசி பரமேஸ்வரன்

கருங்காலியைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவநேர்மைக்கரசி பரமேஸ்வரன் கனடாவில் (22.12.2010) புதன்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் ரூவான்வெல நாகமுத்து கந்தசாமி- சிவகலை (கனடா) தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற A.T. ஆறுமுகம் விஜயரத்தினம் - மகேஸ்வரி (கனடா) தம்பதியரின் மருமகளும் பரமேஸ்வரனின் (கனடா) அன்பு மனைவியும் அமல் நாத், காயத்திரி ஆகியோரின் அன்புத் தாயுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.01.2011) ஞாயிற்றுக்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தங்கோடை,
காரைநகர்.

தகவல்:
A.T.ஆறுமுகம் விஜயரத்தினம்,
மகேஸ்வரி (கனடா).

## மாரிமுத்து மாசிலாமணி



ஆனந்தாவீதி, மானிப்பாயைப் பிறப்பிடமாவும் வசிப்பிடமாகவும் கொண்ட மாரிமுத்து மாசிலாமணி 30.12.2010 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாரிமுத்து- சின்னப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான 44/1, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இராசா- இராசமணி தம்பதியினரின் அன்பு மருமகனும், இராஜேஸ்வரியின் (பிரான்ஸ்) அன்புக் கணவரும், மதிவதனி (பிரான்ஸ்), வினோதினி (பிரான்ஸ்), ஜெயந்தினி (பிரான்ஸ்),நிலாயினி(பிரான்ஸ்), ஆனந்தராஜ்(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், இராசகாந்தன் (பிரான்ஸ்), பிறேமகாந்தன் (பிரான்ஸ்), ஜெயபாலகுமாரன் (பிரான்ஸ்)ஆகியோரின் மாமனாரும், மேனுகா, சாரங்கன், சாருஜன், பிரவீனன், பிரசவீ, பிரணவி, மதுஜன், அன்ஜா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான சதாசிவம், பூமணி, அற்புதம், இராஜதுரை ஆகியோரின் அன்புச் சகோதரரும், இராசமலர் (பிரான்ஸ்), இராஜசிங்கம் (பிரான்ஸ்), காலஞ்சென்ற இராஜகுலேந்திரன் மற்றும் இராஜசேகரம் (பிரான்ஸ்), இராசலிங்கம் (பிரான்ஸ்), இராசராணி (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரின் சகோதரியின் இல்லத்தில் இன்று (02.01.2011) ஞாயிற்றுக்கிழமை ந.ப. 12 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மானிப்பாய் கிழக்கு,
மானிப்பாய்

(108347)

தகவல்:
ந. ஆனந்தராஜன்
(தர்மராஜன் பல்பொருள் வாணிபம், மருமகன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடிதண்ணீருக்கு அல்லாடிக் கொண்டிருக்கும் மன்னார் மடு தம்பனைக்குள கிராம மக்கள்

மன்னார்,ஜன.02

மடுப்பிரதேச செயலாளர் பிரிவில் குடியமர்ந்துள்ள தம்பனைக்குள கிராம மக்கள் குடிநீர் பெறுவதில் பெரும் சிரமங்களுக்கு ஆளாகி வருகின்றார்கள்.

2007ஆம் ஆண்டு இப்பகுதியில் குடியமர்த்தப்பட்ட இம்மக்கள் குடிதண்ணீருக்கு ஒரு கிணற்றை நம்பியே வாழ்ந்து வருகின்றார்கள்.

சுமார் 380 குடும்பங்கள் இக்குடி தண்ணீக் கிணற்றை நம்பி வாழ்கின்றனர். தற்போது அரசசார்பற்ற நிறுவனம் ஒன்று குறிப்பிட்ட கிணற்றை மேலும் ஆழமாக்கி நீர்தாங்கி அமைத்து குழாய்கள் மூலம் நீர் விநியோகம் மேற்கொள்ள நடவடிக்கை எடுத்தது. ஆனால் இம்முயற்சி வெற்றியளிக்காததுடன் கிணறும் மணல் புகுந்து பழுதடைந்துள்ளமையால் இக்கிராம மக்கள் குடிதண்ணீர் பெறுவதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளார்கள்.

கடற்படையினர் மனிதாபிமான அடிப்படையில் காலையிலும் மாலையிலும் பௌசர் மூலம் வழங்கும் குடிதண்ணீரைப் பெற்றே இந்த மக்கள் தமது குடிதண்ணீர்ப் பாவனையை மட்டுப்படுத்திய அளவில் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. மனிதனின் அன்றாடத் தேவைக்கு அத்தியாவசியமானது தண்ணீர். தண்ணீர் இல்லாமல் எவரும் வாழ முடியாது. இந்த நிலையில் தம்பனைக்குள மக்கள் தண்ணீரின்றி எவ்வாறு வாழ முடியுமென கேள்வி எழுப்புகின்றனர்.

இப்பகுதி மக்களின் குடிதண்ணீர்ப் பிரச்சினையைத் தொடர விடாது மடுப்பிரதேச செயலகமோ, பிரதேச சபையோ அன்றி அரசசார்பற்ற நிறுவனங்களோ தீர்வை எட்ட வேண்டுமென இப்பகுதியில் வாழும் மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-86)

# பலரையும் அவதிக்குள்ளாக்கி வருத்துகின்றது பூநகரி வாடியடிச்சந்தி – மண்ணித்தலை வீதி

பூநகரி,ஜன.02

கிளிநொச்சி மாவட்ட பூநகரி வாடியடிச் சந்தியில் இருந்து மண்ணித்தலை இறங்குதுறை வரையான வீதி மோசமாகச் சேதமடைந்துள்ளதால் பொது மக்கள் அதிக சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்த வீதி குண்டும் குழியுமாகவும், நீர் சூழ்ந்ததாகவும், சேறும் சகதியுமாகவும் காணப்படுகின்றது. இந்த வீதியை பரமன்கிராய், வில்லடி, நெர்புலவு, கௌதாரிமுனை, விநாசியோடை, மண்ணித்தலை போன்ற கிராமங்களைச் சேர்ந்த மக்கள் தினமும் பயன்படுத்தி வருகின்றனர். வில்லடிப் பகுதியில் வீதியை வெள்ளம் முழுமையாக மூடியுள்ளது. இதனால் வாகனப் போக்குவரத்தில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. பூநகரி வைத்தியசாலைக்கு வரும் நோயாளிகள் இதனால் பெரும் அவலங்களை சந்திக்கின்றனர். மேலும் விநாசியோடை அ.த.க. பாடசாலை, கொளதாரிமுனை அ.த.க பாடசாலை, பூநகரி மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளுக்குச் செல்லும் மாணவர்களின் நிலைதான் பரிதாபமாக உள்ளது.

அத்துடன் யாழ்ப்பாணம் - பூநகரி கடல் மார்க்கப் பயணத்திற்கான இறங்கு துறையாக மண்ணித்தலை விளங்குகின்றது. மண்ணித்தலை இறங்குதுறைக்கு வரும் பயணிகளும், இறங்குதுறையில் இருந்து பூநகரிக்குச் செல்லும் பயணிகளும் இந்த வீதியைப் பயன்படுத்துவதால் அவர்களும் பெரும் இடர்களை எதிர்கொள்ளுகின்றனர்.

குறிப்பாகக் கடற்றொழிலாளர்கள் இந்தக் கிராமங்களில் அதிகளவில் வாழ்வதனால் பல்வேறுவகையிலும் இவர்கள் சிரமங்களுக்கு ஆளாகின்றனர்.

எனவே உரிய அதிகாரிகள் விரைந்து செயற்பட்டு இந்த வீதியைப் புனரமைத்து வழங்க வேண்டுமெனப் பாதிக்கப்பட்ட மக்கள் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-406)

# மோசமான வீதி

வவுனியாவிலிருந்து பண்டாரிக்குளம் செல்லும் குளக்கட்டு வீதி அண்மையில் பெய்த மழை காரணமாகப் பலத்த சேதம் அடைந்து மக்களின் போக்குவரத்துக்கு இடையூறாகக் காணப்படுகின்றது. ஏற்கனவே இந்த வீதியில் பெரிய வாகனங்கள் எதுவும் அனுமதிக்கப்படுவதில்லை. இரட்டைச்சில்லு வாகனங்கள் மற்றும் முச்சக்கர வண்டிகள் மட்டுமே அனுமதிக்கப்படுள்ளன. இதனையும் மீறிப் பாரமான வாகனங்கள் உட்செல்வதால் பாதை சேதம்அடைந்து காணப்படுகிறது. (க-501)

வன்னி வலம்

## தலைவிதி மாறுமோ?......



ஒட்டமும் நடையுமாக: அக்கராயன் வீதியில் பாலம் உடைந்ததால் தம்மை இறக்கிவிட்ட பேருந்தை நோக்கி மக்கள் ஓட்டமும் நடையுமாகச் செல்கின்றனர். (21)

# பள்ளிக்குடாவில் 60 வீதமானோர்களே தற்காலிக வீட்டுத் திட்டத்தில் இணைப்பு

பூநகரி,ஜன.02

பூநகரி பள்ளிக்குடா கிராம சேவையாளர் பிரிவில் மீள் குடியமர்ந்த பல குடும்பங்களுக்குத் தற்காலிக வீட்டுத் திட்டம் வழங்கப்படவில்லையெனப் பாதிக்கப்பட்ட மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

பள்ளிக்குடா கிராம சேவையாளர் பிரிவில் பள்ளிக்குடா கிராமம், நாலாங்கட்டைக் கிராமம் ஆகிய மீள்குடியமர்ந்த கிராமங்களிலேயே இந்த நிலை காணப்படுகிறது. இந்தக் கிராமத்தில் மக்கள் மீள்குடியமர்ந்து ஒரு வருடம் கழிந்த நிலையிலும் அறுபது வீதமான மக்களுக்கே தற்காலிக வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. ஏனையோர் தறப்பாள் கூடாரங்களிலும், குறைந்த அளவில் வழங்கப்பட்ட தகரங்களால் அமைக்கப்பட்ட கொட்டில்களிலும் கொட்டும் மழையில் பல இன்னல்களைச் சுமந்த நிலையில் வாழ்ந்து வருகின்றனர்.

இது தொடர்பாக கிராம சேவையாளர், பிரதேச செயலர், அரச சார்பற்ற நிறுவனங்கள் ஆகியோரிடம் பலமுறை முறைப்பாடு செய்துள்ள போதிலும் பயன் கிடைக்கவில்லையெனப் பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவிக்கின்றனர். (க-406)

# கட்டடமில்லாத பஸ் தரிப்பிடத்தால் பயணிகளின் நிலையோ படுமோசம்

முல்லைத்தீவு,ஜன.02

முல்லைத்தீவு பேருந்து தரிப்பிடத்திற்கான கட்டடங்கள் அமைக்கப்படாததால் பயணிகள் தாம் சிரமங்களை எதிர்கொண்டு வருவதாகத் தெரிவிக்கின்றனர்.

கடந்த 1990ஆம் ஆண்டுக்கு முன்னர் மத்திய பேருந்து நிலையம் இயங்கி வந்த இடத்திலேயே தற்பொழுதும் பேருந்து நிலையம் இயங்கி வருகின்றது. ஆனால் கட்டடங்கள் எவையும் அமைக்கபடவில்லை. இந்த நிலையிலேயே போக்குவரத்துச் சபைப் பேருந்துகளும், தனியார் பேருந்துகளும் இந்த இடத்தில் தரித்துச் செல்கின்றன.

தினமும் சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பயணிகள் கொட்டும் மழையிலும், சுட்டெரிக்கும் வெயிலிலும் காத்து நின்று தமது பயணங்களை மேற்கொள்கின்றனர். அத்துடன் 1990இற்கு முன்னர் அமைக்கப்பட்ட கட்டடமொன்று முழுமையாகச் சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றது. அதனுள் பேருந்து நிலைய அலுவலகம் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இந்த நிலையில் முல்லைத்தீவு நகரில் இருந்து வேறு இடங்களுக்குச் செல்லும் பயணிகள் பேருந்து தரிப்பிடத்தில் கட்டடங்கள் இல்லாததால் அந்த இடத்தில் உள்ள வர்த்தக நிலையங்களின் தாழ்வாரங்களிலும் ஏனைய கட்டடங்களின் நிழலிலும் தங்கி நிற்க வேண்டிய அவல நிலையில் உள்ளனர்.

ஆகவே இனியும் தாமதம் செய்யாது பேருந்து தரிப்பிடத்திற்கான கட்டடங்களை அமைத்துத் தமது இன்னல்களைக் களையுமாறு பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (க-6)

# பாடசாலை மாணவர்களுக்கான மதிய உணவுப் பங்கீட்டில் மாற்றம்

கிளிநொச்சி,ஜன.02

கிளிநொச்சி கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் மாணவர்களுக்கு வழங்கப்படும் மதிய உணவுப் பங்கீட்டில் மாற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகக் கிளிநொச்சி வலயக் கல்விப் பணப்பாளர் தெரிவித்துள்ளார். இதன் பிரகாரம் 2011ஆம் ஆண்டில் முதலாவது தவணை தொடக்கம் நாளொன்றுக்கு மாணவனொருவனுக்கு 80 கிராம் அரிசி, 25கிராம் பருப்பு, 15 கிராம் எண்ணெய் ஆகியன ஒதுக்கப்பட்டுள்ளன. இதைவிட வாரத்தில் ஒருநாள் 85 கிராம் தகரத்திலடைக்கப்பட்ட மீனும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

உலக உணவுத்திட்டத்தின் கீழ் தரம்-1 தொடக்கம் தரம்-9 வரையான வகுப்புக்களில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (க-405)

# வேரவிலில் போதியளவு ஆசிரியர்கள் இல்லாததால் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் பாதிப்பு

கிளிநொச்சி,ஜன.02

கிளிநொச்சி வேரவில் இந்து மகா வித்தியாலயத்தில் போதியளவு ஆசிரியர்கள் இல்லாததால் மாணவர்களது கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளதாகப் பாடசாலை அபிவிருத்திச்சங்கத்தினர் கவலை வெளியிட்டுள்ளனர். இந்தப் பாடசாலையில் இடை நிலை மற்றும் உயர்தர வகுப்புகளில் கற்பிப்பதற்குப் போதியளவு ஆசிரியர்கள் இல்லாத நிலை காணப்படுகின்றது. அத்துடன் கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த ஆங்கில, விஞ்ஞான ஆசிரியர்கள் வேறு பாடசாலைகளுக்கு இட மாற்றம் பெற்றுச் சென்றுள்ளனர்.

இதனால் இடைநிலைப் பிரிவில் ஆங்கிலம், விஞ்ஞானம், தமிழ், சமயம், அழகியற் பாடங்களைக் கற்பிப்பதற்கு ஆசிரியர்கள் இல்லாத நிலை காணப்படுகின்றது. அதே போன்று உயர்தரப் பிரிவில் தமிழ், வரலாறு, இந்து நாகரிகம் போன்ற பாடங்களைக் கற்பிப்பதற்கும் ஆசிரியர்கள் இல்லாத தால் மாணவர்களது கற்றல் செயற்பாடுகளில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. எனவே உயர் அதிகாரிகள் போதியளவு ஆசிரியர்களை நியமித்துத் தமது பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்கு உதவுமாறு பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-21)

# கிளிநொச்சியில் இனங்காணப்பட்ட மோட்டார் சைக்கிள்கள் கையளித்தல்

(நேற்றைய தொடர்ச்சி)

| | | | |
|---|---|---|---|
| 111. MR-2459 | 129. 101 - 9282 | 147.MG -6647 | 165.HZ - 6339 |
| 112. HC-3589 | 130. GN - 0261 | 148.JF - 2611 | 166.GF - 4272 |
| 113. 128 - 3497 | 131. 500 -7842 | 149. HS -8058 | 167.MA - 6523 |
| 114. HL - 8762 | 132. 134 - 1547 | 150. HJ -1378 | 168.MD - 3205 |
| 115. 141 - 0577 | 133. 89 - 2679 | 151. JF -8179 | 169. HU - 0768 |
| 116. 148 - 8489 | 134. JH - 4456 | 152.HH - 2501 | 170. HY -7698 |
| 117. 110 - 6459 | 135. JE - 0262 | 153. JA -9236 | 171.HW -3951 |
| 118. 502 - 0074 | 136. JZ - 6703 | 154.140 -6671 | 172. JY - 5673 |
| 119. 154 - 6439 | 137. 133 -9666 | 155.MN -7425 | 173. MG - 9582 |
| 120. 109 - 1125 | 138.GH - 0170 | 156.MS - 6210 | 174. MH -5331 |
| 121. GO - 6073 | 139. HX - 3373 | 157.HV - 7300 | 175. HO - 0489 |
| 122. 500 - 6576 | 140. HD - 7814 | 158.JZ - 6776 | 176. MP - 1286 |
| 123. JA - 6274 | 141. GW - 5674 | 159.HE - 3935 | 177. GV - 4438 |
| 124. HY - 9641 | 142. HJ - 5128 | 160.HQ - 2646 | 178. JV - 6446 |
| 125. HW - 4309 | 143.HM -1006 | 161.JV - 6964 | 179. GK -1637 |
| 126. MR - 4787 | 144. [illegible] - 9380 | 162.HX - 0123 | 180. JP - 8728 |
| 127. [illegible] | 145.JF - 1851 | 163.JV - 6494 | 181. MF -9995 |
| 128. JR - 5248 | 146.HI - 2484 | 164.MC - 5601 | |

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைப் பெண்ணுக்கு சிங்கப்பூரில் 6 மாத சிறை

கொழும்பு, ஜன.2

தனது கடவுச்சீட்டை விற்றுவிட்டு அது காணாமல் போனதாக புகார் செய்த இலங்கைப் பெண்ணொருவருக்கு சிங்கப்பூரில் 6 மாத சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

38 வயதான ஆர்.எஸ். மத்துமகே என அப்பெண் அடையாளம் காணப்பட்டுள்ளார். மற்றொரு இலங்கையருக்கு அவர் தனது கடவுச்சீட்டை 600 டொலர்களுக்கு விற்றுள்ளார்.

6 தினங்களின் பின் கடவுச்சீட்டு தொலைந்துவிட்டதாக சிங்கப்பூர் குடிவரவு அதிகாரிகளிடம் தெரிவித்ததையடுத்து அப்பெண் கைதுசெய்யப்பட்டார்.

தனது கடவுச்சீட்டைப் பயன்படுத்தி மற்றொருவர் பயணம்செய்வதற்கு அனுமதியளித்ததாக அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டது.

நீதிமன்ற விசாரணையின்போது இக் குற்றச்சாட்டை அப்பெண் ஒப்புக்கொண்டதையடுத்து நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை அவருக்கு 6 மாத சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

கடவுச்சீட்டை வாங்கிய பெண் மீதான விசாரணை எதிர்வரும் திங்கட்கிழமை நடைபெறவுள்ளதாக 'ஸ்ரெய்ட் ரைம்ஸ்' செய்தி வெளியிட்டுள்ளது. (த)

## பற்சிகிச்சை முகாம்

யாழ்ப்பாணம்,ஜன.2

யுனிலிவர் நிறுவனத்தின் ஏற்பாட்டில் பற்சிகிச்சை முகாம் எதிர்வரும் 8ஆம் திகதி சனிக்கிழமை காலை 8மணிக்கு யாழ்.பல்கலைக் கழகத்தில் நடைபெறும். இந்நிகழ்வில் பற்சிகிச்சை, வாய் சுகாதாரம் பற்றி கலந்துரையாடப்படவுள்ளதுடன் வீடியோக் கண்காட்சியும் இடம்பெறும். (ற-319)


# வெற்றிடங்கள்

சுகாதார பராமரிப்புத் துறையில் அங்கீகாரம் பெற்ற நிறுவனம் ஒன்று தனது சேவையை யாழ்ப்பாணத்தில் விரிவுபடுத்துகின்றது. இளமையான மற்றும் துடிப்பானவர்களை எமது நிறுவனத்தின் கீழ்க்காணும் வெற்றிடங்களுக்கு நாம் எதிர்பார்க்கின்றோம். தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கிலத்தில் சரளமானவர்கள் மிகவும் விரும்பத்தக்கது.

**கிளை முகாமையாளர் - ஆண் (1)**
குழு நிர்வாகம், மருத்துவத்துறையில் அனுபவம், சிறந்த தொடர்பாடல் மற்றும் நிறுவனசார் தகைமைகள், கணனி அறிவு விரும்பத்தக்கது.

**மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர்கள் (3)**
க.பொ.த. உ/த (G.C.E. A/L) விஞ்ஞான பாடங்கள். அனுபவமுள்ள/பயிலுனர்கள், கணனிஅறிவு விரும்பத்தக்கது.

**சந்தைப்படுத்தல் அதிகாரி - ஆண் (1)**
க.பொ.த. உ/த (G.C.E. A/L), மருத்துவத்துறையில் ஆகக் குறைந்தது 2 வருட அனுபவம், கணனி அறிவு விரும்பத்தக்கது. வயதெல்லை 35.

**தாதிமார் - பெண் (2)**
க.பொ.த. சா/த (G.C.E. O/L), ஆகக் குறைந்தது 1 வருட அனுபவம்.

**வரவேற்பாளர் / காசாளர் (1)**
க.பொ.த. உ/த (G.C.E. A/L), கணனி அறிவு, 30 வயதுக்குட்பட்டவர்கள்.

**உதவியாட்கள் / மோட்டார் சைக்கிள் செலுத்துனர்கள்**
வயதெல்லை 40, செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்

Forward your CV to:
**rajee.ravichandran@hotmail.com,**
**hamindra5@gmail.com**
**Medical Director**
**No.01, Alfred House Avenue, Colombo 03.**



**Want to be a world recognised Engineer?**

Let Srilanka Telecom help you to

# AWARENESS PROGRAMME

நீங்கள் சர்வதேசத்தால் அங்கீகரிக்கப்படுகின்ற பொறியியலாளர் ஆக வேண்டுமா?

உங்கள் கனவு நனவாக சிறீலங்கா ரேலிகோம் நிறுவனம் உதவுகின்றது....

நீங்கள் கௌரவமான சர்வதேச தரம்மிக்க பொறியியலாளராவதற்காக தொலைத்தொடர்பு மற்றும் இலத்திரனியல் துறைகளில் பட்டப்படிப்பினை நியாயமான கட்டணத்தில் மேற்கொள்வதற்கு சிறீலங்கா ரெலிகொம் நிறுவனம் உங்களுக்கு ஒரு சந்தர்ப்பத்தை இப்பொழுது வழங்குகின்றது.

**நாங்கள் உத்தரவாதமளிப்பது......**
- சர்வதேச தரத்தில் பயிற்றுவிக்கப்பட்ட தொழில்சார் தகுதி வாய்ந்த விரிவுரையாளர்கள்
- மாணவர்களுக்கு நட்புடன் கூடிய முன்மாதிரியான பயிற்சி சூழலில் நவீன பயிற்சி வளங்களுடன் கூடிய பயிற்சி
- மிகச்சிறந்த உள்ளகப் பயிற்சி வசதிகள்
- உலகளாவிய பல்கலைக்கழகங்களின் பட்டத்திற்குச் சமனான சர்வதேச தரம்வாய்ந்த பட்டம் மிகக் குறைந்த முதலீட்டில்.

**பிரவேச அனுமதிக்கு:**
க.பொ.த.உயர்தரத்தில் 02 பாடங்களில் சித்தி- கணிதத் துறையில் கலந்துரையாடலின் பின் மாணவர்களைத் தெரிவுசெய்ய நேர்முகப் பரீட்சை நடத்தப்படும்.

இடம்/ காலம்: விரைவில் அறிவிக்கப்படும்.
மேலதிக விவரங்களுக்குத் தொடர்பு கொள்ள:

0715364938 / 0112951571/ btechnd@slt.com.lk

Commencing soon | Registration now on

(சி/574158)

edexcel INTERNATIONAL BTEC HND

www.training.slt.lk

Sri Lanka Telecom

# சர்வதேச தரம் வாய்ந்த BBS பாலர் பாடசாலையின் அனைத்து வளாகங்களிலும் January 2011ற்கான புதிய அனுமதிகள்

மிகக்குறைந்த அனுமதிக் கட்டணம் (Admission Fees) முதலாம் வருடத்திற்கு மட்டுமே

- 10 வருடமாக சர்வதேச தரத்திலான BBS இன் ஆங்கிலக் கற்கை நெறிகளால் யாழ்குடாநாட்டில் ஆயிரக்கணக்கான சிறார்கள் பயன் பெற்றுள்ளார்கள்.
- இது வரை BBS இன் வளாகங்களில் கல்வி கற்ற ஆயிரக்கணக்கான சிறுவர்களில் 95 வீதமானோர் யாழ்குடாநாட்டின் அதி சிறந்த பாடசாலைகளில் கற்பதற்கு அனுமதி பெற்றிருப்பதுடன் 5ஆம் ஆண்டு புலமை பரிசிலிலும் சித்தியடைந்துள்ளார்கள்.
- யுத்த காலத்திலும் யாழ் சிறார்களுக்கென இயங்கிய ஒரே ஆங்கில மொழிமூல தனியார் பாடசாலை.
- அன்றிலிருந்து இன்று வரை அனைவரும் செலுத்தக் கூடிய ஒரே கட்டணம்.
- உங்கள் வசதி கருதி யாழ்குடாநாட்டின் பல்வேறு இடங்களிலும் சர்வதேச தரத்திலான வளாகங்கள்.

**Dr. Maria Montessori & Canadian Early Learning Method ஆங்கில மொழிமூல பாடசாலை செயற்பாடுகள்.**

## பாலர் பிரிவுகள்

**Play Group ( 2+ சிறார்களுக்கு)**
- Sensorial Activities
- விளையாட்டுகளுடன் கூடிய அதிநவீன கற்கை நெறிகள்.
- Song, Poems, Nursery Rhymes, Drama & Dialogue

**Montessori ( 3+ சிறார்களுக்கு)**
- மொழி அறிமுகம் – ஆங்கிலம் (Speech Skills) – தமிழ்
- எழுத்து அறிமுகம் – ஆங்கிலம் (Writing Skills) – தமிழ்
- எண் பயிற்சிகள் (Arithmetical Operations)
- Sensorial Activities
- Song, Poem, Drama, Dialogue

**Pre School ( 4+ சிறார்களுக்கு)**
- எண், எழுத்து கருதுகோள்
- ஆங்கில பேச்சுத்திறன் செயற்பாடுகள் Audio, Visual
- Sensorial Activities
- Song, Poem, Drama, Dialogue
- அடுத்த கல்வியாண்டுக்கான முழுத் தகுதி நிலை

## பாட விதானம்

- பாடசாலை ஆரம்பம் காலை 7.30
- பாடசாலை முடிவு மதியம் 12.30
- வாரத்தின் 25 மணித்தியாலங்களுக்கான கல்விச் செயற்பாடுகள்
  - Language Skils- English - 5 Hrs
  - Language Skils- Tamil - 4 Hrs
  - Maths - 4 Hrs
  - Sensorial Activities - 2 Hrs
- Song, Poem, Drama, Dialog - 2 Hrs
- Art and Craft - 2 Hrs
- Play Activities - 3 Hrs
- Baratha Natyam - 1.5 Hrs
- Computing - 1.5 Hrs

**எம் அனைத்து சிறார்களும் பங்குபெற்றும் கல்விசார் நிகழ்வுகள்**
- English Day & Concert - ஆங்கில தின கலைவிழா
- Sports Day- விளையாட்டு விழா
- Bharatham Festival- பரத நாட்டிய விழா
- Art & Craft Exhibition- சித்திர கைவேலைக் கண்காட்சி
- Muthamilzh Vizhla- முத்தமிழ் விழா
- Pre-School Graduation and Carol Ceremony

## BBS இன் 10 வளாகங்கள்

| | |
|---|---|
| நல்லூர்: | 140, கோயில் வீதி நல்லூர். |
| கோப்பாய்: | பருத்தித்துறை வீதி, கோப்பாய் மத்தி. |
| நீர்வேலி: | 1ம் கட்டை, இராச வீதி, நீர்வேலி. |
| சாவகச்சேரி: | சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை அருகாமை. |
| மானிப்பாய்-1: | 252, ஆலடி சந்தி, யாழ் வீதி, மானிப்பாய். |
| மானிப்பாய்-2: | சங்கரப்பிள்ளை வீதி, மானிப்பாய். |
| சுன்னாகம்: | Lakshmi(புதிய நீதிமன்ற அருகாமை) கே.கே.எஸ் வீதி, மல்லாகம். |
| புலோலி: | ஸ்ரீ பத்மநாதன் இல்லம், மந்திகை. |
| அச்சுவேலி: | அச்சுவேலி அரசினர் வைத்தியசாலை அருகாமை. |
| சங்கானை : | நிகர வைரவர் கோவிலடி, AGA Office அருகாமை |

வெளிநாடுகளில் தேர்ச்சி பெற்ற கல்வியாளர்களால் சர்வதேச தரத்திற்கமைய நடாத்தப்படும் கல்வி நிலையம்.

British BUSINESS SCHOOL
Where Students Come First

# BRITISH BUSINESS SCHOOL

140, கோயில் வீதி, நல்லூர். தொலைபேசி: 021 222 5796, 077 362 7055, 077 408 3656, 077 664 6357


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனாவின் பிடியைத் தளர்த்துவதற்காக இந்தியா - இலங்கை கடற்பாதை ஒப்பந்தம்

கொழும்பு, ஜன.2

இந்திய, இலங்கை பாதுகாப்புச் செயலர்கள் சந்தித்தபோது இணக்கம் காணப்பட்ட பிராந்தியத்தின் கடற்பாதைகளை ஒன்றிணைந்து பாதுகாப்பதற்கான உடன்பாடு இரண்டு காரணங்களுக்காக முக்கியத்துவம் பெறுவதாக அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு இந்திய ஊடகமான 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' தெரிவித்துள்ளது.

எல்லாவற்றுக்கும் முதலில், இந்தியாவுக்கும் இலங்கைக்கும் தெற்காகவுள்ள பிரதான கடற்பாதைகளில் ஏற்படக்கூடிய கடற்கொள்ளை மற்றும் பயங்கரவாத அச்சுறுத்தல் போன்றவற்றை முறியடிப்பதற்கு இரு நாடுகளின் கடற்படையும் இணைந்து செயற்பட வேண்டும் என்பதை அவை உணர்ந்து கொண்டிருப்பதை வெளிப்படுத்துகிறது.

இருதரப்பு பாதுகாப்புக் கட்டமைப்புக்களுக்கு இடையிலான கலந்துரையாடலிலிருந்து கடற்பாதைகளைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியம் உணர்ந்து கொள்ளப்பட்டுள்ளது.

26/11 பம்பாய் தாக்குதல் கடல் சார் பயங்கரவாதம் தொடர்பான விழிப்புணர்வை இந்தியாவுக்கு ஏற்படுத்தியது.

இலங்கையைப் பொறுத்தவரையில், 30 ஆண்டு காலமாக பயங்கரவாதத்திற்கு அதாவது விடுதலைபுலிகளுக்கு எதிராக அது நடத்திய யுத்தம் பலம் வாய்ந்த கடற்படை ஒன்றை உருவாக்கியுள்ளது.

இரண்டாவதாக, கடற்பாதைகளைப் பாதுகாக்கும் பொறுப்பை முழுமையாக சீனாவிடம் விடாது தனது நியாயமான பணியை மேற்கொள்வதற்கான சந்தர்ப்பத்தை இந்தியாவுக்கு வழங்கியுள்ளது.

புவியியல் ரீதியில், மேற்கே கோமுஸ் நீரிணையிலிருந்து கிழக்கே மலாக்கா நீரிணை வரை பரந்திருக்கும் புதிய பட்டுப் பாதையினைக் கண்காணிப்பதற்குப் பொருத்தமான இடத்தில் இந்தியா அமைந்துள்ளது.

இந்துசமுத்திரத்தில் இந்தப் புதிய பட்டுப் பாதையானது லக்ஜ்டீப் தீவுகள், இலங்கை மற்றும் பெரிய நிக்கோபார் தீவுகளுடாகச் செல்கிறது.

இந்தியாவும் இலங்கையும் குறித்த கால இடைவெளியில் கூட்டுக் கடற்படை நடவடிக்கைகளை மேற்கொள்வதாக உறுதி கொண்டிருப்பது குறிப்பிடக் கூடியது.

அடுத்த ஆண்டு முற்பகுதியில் இந்திய விமானப்படைத் தலைமை அதிகாரி இலங்கைக்குப் பயணம் செய்யத் திட்டமிட்டிருப்பதும் இந்தக் கடற்பாதைப் பாதுகாப்பில் இரு நாடுகளினதும் விமானப்படைகளும் சேர்ந்து செயற்படலாம் என்பதை தெளிவுபடுத்துகிறது. (த)

# சீனாவிடமிருந்து விமானங்களை வாங்குகிறது இலங்கை அரசு

கொழும்பு, ஜன.2

போர்ச் சூழல் ஏதும் இல்லாத நிலையிலும் சீனாவிடமிருந்து ஜே.எப்.-17 ரக போர் விமானங்களை வாங்க இலங்கை அரசு தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கையின் ஆயுதக் கொள்முதல் நடவடிக்கைகள் முன்னரை விடத் தீவிரமடைந்திருப்பதாக அந்நாட்டின் பாதுகாப்பு அமைச்சக வட்டாரங்களை மேற்கோள்காட்டிச் செய்திகள் வெளியாகி உள்ளன.

அண்மைக்காலமாக ரஷ்யா, இஸ்ரேல், இந்தியா எனப் பல நாடுகளிலிருந்தும் நவீன ஆயுதங்களை வாங்கிக் குவிப்பதில் இலங்கைப் பாதுகாப்பு அமைச்சகம் தீவிரமாகச் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது.

அந்தவகையில் தற்போது சீனாவிடம் இருந்து ஜே.எப். ரக விமானங்களை வாங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் சீனாவும் அதற்கு இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் அந்தத் தகவல்கள் மேலும் கூறுகின்றன.

அமெரிக்காவின் எப்-16 போர் விமானத்தின் தொழில்நுட்பத்தையொட்டித் தயாரிக்கப்படும் ஜே.எப். -17 ரக போர் விமானங்கள் வல்லரசு நாடுகளின் விமானங்களை விட விலை குறைந்தவையாகும்.

ஆயினும் இவ்வகை விமானங்கள் ராடரால் வழிநடத்தப்படும் ஏவுகணைத் தொழில்நுட்பத்தைக் கொண்டிருப்பதுடன் 3.6 தொன் வெடிபொருள்களைத் தூக்கிக்கொண்டு மணிக்கு இரண்டாயிரம் கிலோமீற்றர் வேகத்தில் பறக்கும் ஆற்றல் கொண்டது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (த)

# அமெ. தூதரகம் பொய் சொல்கிறது அமைச்சர் முரளிதரன் விசனம்

கொழும்பு, ஜன.2

முன்னாள் அதிபர் சந்திரிகா குமாரதுங்கவின் உதவியுடன் 2004ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இலங்கையில் இருந்து வெளியேறி தமிழ்நாட்டில் அகதியாகத்தான் தங்கியிருந்தார் என்று அமெரிக்கத் தூதுவர் அனுப்பிய தகவல் தவறானது என்று மீள்குடியேற்றப் பிரதி அமைச்சர் முரளிதரன் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இருந்து அமெரிக்கத் தூதுவர் றொபேட் ஓ பிளேக் இராஜாங்கத் திணைக்களத்துக்கு அனுப்பியிருந்த தகவல் பரிமாற்றக் குறிப்பை அண்மையில் விக்கிலீக்ஸ் வெளியிட்டிருந்தது.

இதில் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இருந்து பிரிந்து சென்ற கருணா எனப்படும் முரளிதரனை முன்னாள் அதிபர் சந்திரிகா குமாரதுங்க பாதுகாப்பாகத் தமிழ்நாட்டுக்கு அனுப்பி வைத்தார் என்றும்.

அவர் அங்கே 2006 ஜூலை வரை தங்கியிருந்தார் என்றும் கூறப்பட்டிருந்தது.

இதுதொடர்பாகக் கருத்து வெளியிட்டுள்ள பிரதி அமைச்சர் முரளிதரன் றொபேட் ஓ பிளேக்கின் இந்தக் குற்றச்சாட்டு நகைப்பிற்கிடமானது, அவர் பொய் சொல்கிறார் என்று கூறியுள்ளார். (த)

# நல்லிணக்க ஆணைக்குழு அமர்வு ஜனவரி 8 ஆம் திகதி மன்னாரில்

மன்னார், ஜன.2

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழு சாட்சியங்களைப் பதிவு செய்து கொள்வதற்காக எதிர்வரும் 8 ஆம், 9 ஆம் திகதிகளில் மன்னாருக்கு வருகை செய்ய உள்ளதாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் ஏ.நிக்கொலாஸ் பிள்ளை தெரிவித்தார்.

எதிர்வரும் 8 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9-30 மணிமுதல் நண்பகல் 12.30 மணிவரை மன்னார் நகரசபை மண்டபத்தில் ஆணைக்குழுவின் செயற்பாடுகள் இடம்பெறவுள்ளது. இதன்போது மன்னார், நாணாட்டான், முசலி ஆகிய பிரதேசச் செயலகப் பிரிவுகளை சேர்ந்த மக்கள் சாட்சியமளிக்க முடியும்.

அதே தினத்தன்று பிற்பகல் 2-30 மணி முதல் 5 மணிவரை மாந்தை மேற்குப் பிரதேச செயலகத்தில் அதன் அமர்வுகள் இடம்பெறும். இதன்போது அப்பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் சாட்சியமளிக்க முடியும்.

எதிர்வரும் 9ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9-30 மணி முதல் மடுப் பிரதேசச் செயலக கட்டடத்தில் சாட்சியங்கள் பதிவு செய்யப்படும் என்று மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் ஏ.நிக்கொலாஸ் பிள்ளை மேலும் தெரிவித்தார். (த)

# பொலிஸ்மா அதிபர் எழுதியுள்ள விடுதலைப் புலிகள் தொடர்பான நூல்

கொழும்பு, ஜன.2

விடுதலைப் புலிகளின் எழுச்சியும் வீழ்ச்சியும் என்ற தலைப்பிலான நூல் ஒன்றை சிறிலங்காவின் பொலிஸ் மா அதிபர் மஹிந்த பாலசூரிய எழுதி வெளியிட்டுள்ளார்.

விடுதலைப் புலிகள் இயக்கம் தோற்கடிக்கப்பட்ட வரலாற்றைக் கொண்ட இந்த நூலை அவர் நேற்றுமுன்தினம் சிறிலங்கா அதிபர் மஹிந்த ராஜபக்ஷவிடம் அலரி மாளிகையில் வைத்துக் கையளித்தார்.

இந்தநூலில் விடுதலைப் புலிகள் இயக்கத்தை முறியடிப்பதற்கு சிறிலங்கா காவல்துறை தரப்பில் கையாளப்பட்ட உத்திகள் தொடர்பாகவும் அவர் எழுதியுள்ளதாக தெரியவருகிறது.

# மட்டக்களப்பில் எச் 1 என் 1 காய்ச்சல்: 10 மாதக் குழந்தை உட்பட 2 பேர் மரணம்

மட்டக்களப்பு, ஜன.2

மட்டக்களப்பு மாவட்டத்தில் பன்றிக் காய்ச்சல் அபாயம் ஏற்பட்டுள்ளதுடன் பன்றிக் காய்ச்சலினால் இதுவரை 10 மாதக் குழந்தை உட்பட இருவர் மரணமாகியுள்ளதாக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் க.முருகானந்தம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இதுவரை 30 பேர் பன்றிக் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டுள்ளனர். இவர்களின் இரத்த மாதிரிகள் கொழும்புக்கு மேலதிக பரிசோதனைக்காக அனுப்பப்பட்டு அதில் 13 பேருக்கு பன்றிக் காய்ச்சல் என இனம் காணப்பட்டுள்ளது.

இவர்களில் ஆபத்தான நிலையில் உள்ள 5 பேர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் தீவிர கண்காணிப்பு சிகிச்சைப் பிரிவில் வைத்து சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்றனர். தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகளும் மேற்படி வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதே வேளை மாவட்டத்தில் உள்ள சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு உத்தியோகத்தர்களும் தடுப்பூசி போடும் பணிகளில் ஈடுபட்டுள்ளனர். இருப்பினும் இங்கு பெய்துவரும் பலத்த மழையினாலும் வெள்ளத்தினாலும் இப்பணிகள் பாதிக்கப்பட்டுள்ளன. பன்றிக் காய்ச்சல் அபாயம் குறித்து மக்கள் மத்தியில் அச்சமும் பீதியும் ஏற்பட்டுள்ளன. (த)

# எஸ்.பியின் அமைச்சரவைப் பத்திரம் ஜனாதிபதி மஹிந்தாவால் நிராகரிப்பு

கொழும்பு, ஜன.2

பல்கலைக்கழக ஆசிரியர்களின் பிள்ளைகளை முன்னணிப் பாடசாலைகளுக்கு அனுமதிப்பதற்கு அங்கீகாரம் கோரி, உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திசாநாயக்க சமர்ப்பித்த அமைச்சரவைப் பத்திரத்தை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நிராகரித்துள்ளார். கடந்த புதன்கிழமை நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இது தொடர்பாக ஆராயப்பட்டபோது, இவ்வாறு அனுமதி வழங்கினால் ஏனைய அரசாங்க நிறுவனங்களிலுள்ள உயரதிகாரிகளும் இத்தகைய சலுகையைக் கோருவர் என ஜனாதிபதி தெரிவித்தார்.

எனினும் 150 வெளிநாட்டு மாணவர்களுக்கு இலங்கைப் பல்கலைக்கழகங்களில் கல்வி கற்பதற்கான புலமைப்பரிசில் வழங்கும் திட்டத்திற்கு அனுமதிகோரி அமைச்சர் எஸ்.பி. திசாநாயக்க சமர்ப்பித்த அமைச்சரவைப் பத்திரத்தை அமைச்சரவை அங்கீகரித்தது.

இந்தியா, பங்களாதேஷ், பாகிஸ்தான், சீனா, ஜப்பான், அமெரிக்கா, கனடா, கென்யா, நியூஸிலாந்து மற்றும்சில ஆபிரிக்க நாடுகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு இப்புலமைப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. பல்கலைக்கழக கட்டணங்களிலிருந்து இம்மாணவர்களுக்கு விதிவிலக்கு அளிக்கப்படுவதுடன் இலங்கையில் தங்கிருக்கும் காலத்தில் ஏற்படும் செலவுகளுக்காக மாதாந்தக் கொடுப்பனவொன்றும் அவர்களுக்கு வழங்கப்படும்.

இதேவேளை அங்கவீனமுற்ற படையினருக்காக உலக வங்கியின் உதவியுடன் மேற்கொள்ளப்படவுள்ள நலன்புரித் திட்டமொன்றுக்கு அனுமதி கோரி சமூக சேவைகள் அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா சமர்ப்பித்த அமைச்சரவைப் பத்திரமொன்றையும் ஜனாதிபதி நிராகரித்தார்.

சர்வதேச அமைப்புகளின் உதவியுடன் மேற்கொள்ளப்படும் இத்தகைய திட்டங்கள் குறித்து அமைச்சர்கள் ஒரு தடவை சிந்திக்க வேண்டும் என ஜனாதிபதி கூறினார்.

இராணுவம் மற்றும் அதன் திட்டங்கள் குறித்து தகவல்களைச் சேகரிப்பதற்கு இத்தகைய அமைப்புகள் முயற்சிப்பதற்கு சாத்தியமுள்ளது என ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (த)

# பூஸா செல்ல ஊடகவியலாளர்கள் எழுத்துமூல அனுமதி கோரவில்லை

## லக்ஷமன் ஹுலுகல்ல கூறுகிறார்

கொழும்பு, ஜன.2

பூஸா தடுப்பு முகாமில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழு விசாரணையின்போது ஊடகவியலாளர்கள் அங்கு சமுகமளிப்பதற்கு எழுத்து மூலமான கோரிக்கை எதுவும் தேசிய பாதுகாப்பு மத்திய நிலையத்திற்கு அனுப்பப்படவில்லை என்று அந்த நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் லக்ஷமன் ஹுலுகல்ல கூறியுள்ளார்.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவானது ஒரு சுயாதீன அமைப்பாகும்.

எனவே அதன் செயலாளர் எம்மிடம் அனுமதி கோரியிருக்க வேண்டும். ஆனால் இவ்வாணைக்குழு சார்பாகவோ ஊடகவியலாளர்கள் சார்பாகவோ எவரும் அனுமதிக்கான அங்கீகாரம் கோரவில்லை என லக்ஷமன் ஹுலுகல்ல தெரிவித்தார்.

பூஸாவில் கடந்த வியாழக் கிழமை நடைபெற்ற நல்லிணக்க ஆணைக்குழு அமர்வில் செய்தி சேகரிப்பதற்காக ஊடகவியலாளர்கள் பலர் அங்கு சென்றிருந்தனர். எனினும் பாதுகாப்பு அமைச்சின் அல்லது பொலிஸ் மா அதிபரின் அனுமதியிருந்தால் மாத்திரமே ஊடகவியலாளர்களை முகாமுக்குள் அனுமதிக்க முடியுமென அங்குள்ள பாதுகாப்புத்தரப்பினர் தெரிவித்ததால் ஊடகவியலாளர் கள் ஏமாற்றத்துடன் திரும்பி வந்தமை குறிப்பிடத்தக்கது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



செல்வன்
**ஜெகநீதன் சந்துஜன்**
(யா/நெல்லியடி ம.ம.வித்தியாலயம்)

க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் வர்த்தகப்பிரிவில் 2ஏசி சித்திகளைப் பெற்றுள்ள சந்துஜன் அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம். இவர் வட அல்வை குச்சம் ஞான வைரவப் பெருமான் திருவருளால் கல்வியில் மேன்மேலும் உயர்வு பெற்றிட அருள்பாலிக்க வேண்டி நிற்கின்றோம்.

அப்பப்பா முருகேசு,
பெரியப்பா நவநீதன்,
அக்காமார்,
தயாளன் சங்கீதா,
பாஸ்கரன் ஜெயதீபா,
செஸ்ரர் நியூபேட் சுகிர்தா.

''திருத்தணி'',
பிரதான வீதி,
வியாபாரிமூலை,
அல்வாய்.

(108317)

## வாய்மொழித் தேர்வுப் பரீட்சை

யாழ்ப்பாணம், ஜன.2

யாழ்.பல்கலைக்கழகத்தில் முதுகலைமாணிப் பண்பாட்டுக் கற்கைநெறி 2009-2010ஆம் ஆண்டுக்கான இரண்டாம் அரையாண்டு வாய்மொழித் தேர்வுப் பரீட்சை எதிர்வரும் 8ஆம், 9ஆம் திகதிகளில் காலை 9மணிமுதல் பிற்பகல் 2மணி வரை உயர்பட்டப்படிப்புகள் பீடத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கற்கைநெறியின் மாணவர்கள் பண்பாட்டியல் கற்கை நெறியின் இணைப்பாளரைச் சந்தித்து மேலதிக விவரங்களைப் பெற்றுக்கொள்ளுமாறு உயர் பட்டப்படிப்புகள் பீட பீடாதிபதி பேராசிரியர் ச.சத்தியசீலன் தெரிவித்துள்ளார். (ற)

## வீதிபுனரமைக்கும் பணிகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜன.2

நீர்வேலி தெற்கு, பூதர்மடம் வீதியை புனரமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பூதர்மடத்தில் இருந்து வெங்காயச் சங்கம் வரையான வீதிகளில் ஏற்பட்ட சேதங்கள் தார் ஊற்றிப் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

இதனைவிட நீர்வேலி தெற்கு இந்து தமிழ்க் கலவன் பாடசாலைக்குச் செல்லும் வீதி பலத்த சேதமுற்றுக் காணப்படுகின்றது. (201-26)

## கோப்பாய் இராஜ வீதி சேதம்

கோப்பாய் இராஜ வீதி மிக மேசமாக சேதமடைந்துள்ளதாகப் பொதுமக்கள் கவலை தெரிவித்துள்ளனர். கடந்த காலங்களில் பருத்தித்துறை- யாழ்.வீதி செப்பனிடும் பணி நடைபெற்று வருகையில் மேற்படி வீதியின் பயன்பாடு அதிகரித்திருந்தது. இதனால் படிப்படியாக சேதமடையத் தொடங்கிய வீதி அண்மையில் பெய்த பெருமழையைத் தொடர்ந்து பாரிய குழிகளை உடை வாய்க்கால்களாக மாறிவிட்டது. இதன்காரணமாக வலி.கிழக்கு விவசாயிகளின் விவசாய நடவடிக்கைகளுக்குச் சிரமங்கள் ஏற்படுவதாகக் கூறப்பட்டுள்ளது. (201-72)

## திருமண சேவை

பெற்றோர்களின் திருமணத்தை நிறைவேற்றினோம். இப்போது அவர்களது பிள்ளைகளின் திருமணங்களையும் நிறைவேற்றி வருகின்றோம். 48 வருட சேவையில் இரண்டாம் தலைமுறை கண்ட

**''சர்வதேச புலவர் திருமண சேவை''**

உங்கள் சாதி, சமயம் தகுதிக்கு ஏற்றபடி உள்நாட்டு வெளிநாட்டுத் திருமணங்களை நிறைவேற்றித்தரக் காத்திருக்கிறது. நேரில் வாருங்கள்.

**''மதுரகானம்''** 238, அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். தொ.பே:0212227147, 0713352215, 0718285673

*இயக்குனர்: புலவர் செ.து.தெட்சணாமூர்த்தி*

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம் 1978, திருவாதிரை, 7 இல் செவ்வாய், 65 பாவம், B.Sc. பட்டதாரிக்கு, சைவபோசன - அழகிய பட்டதாரி/ ஆசிரியை மணமகள் தேவை.

விவரங்களுக்கு: *0212220343, 0778996281* (108221)

## பளையில் தென்னங்காணி விற்பனைக்கு

A-9 கண்டி வீதியில் புதுக்காட்டுப் பகுதியில் 277 கி.மீ. கல் முன்பாக 600 அடி அகலத்தை வீதியில் கொண்டுள்ள 10 ஏக்கர் உறுதிக்காணி (கிணறுமுள்ளது) உடனடி விற்பனைக்குண்டு. பாடசாலை, வியாபாரம், வீடுகள், பெற்றோல் நிலையம் அமைப்பதற்கு உகந்தது.

**தொடர்பு:**
**0775711273**

## அசோசியேட்டட் மோட்டார்வேய்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்

# அறிவித்தல்

அனைத்து வாடிக்கையாளர்களுக்கும்

இலங்கையில் **Suzuki & Suzuki Maruti** வாகனங்களை விநியோகிப்பதற்கு அதிகாரம் பெற்ற ஒரே நிறுவனம்

**AMW**

SUZUKI Way of Life!

SUZUKI MARUTI
*Count on us*

**MARUTI / SUZUKI SALES DIVISION**
**ASSOCIATED MOTORWAYS (PRIVATE) LIMITED**
185, UNION PLACE, COLOMBO 2
Mobile - 0777271848

Showroom:-
445, Bauddhaloka Mawatha, Colombo 08.
Tel - 0112 690099

## மரண அறிவித்தல்கள்



### திருமதி சிவசுப்பிரமணியம் சுசீலாறஞ்சினி
(கலைவாணி அன்ரி)

கரம்பனைப் பிறப்பிடமாகவும் 136/1, நாவலர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவசுப்பிரமணியம் சுசீலாறஞ்சினி 30.12.2010 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவசுப்பிரமணியத்தின் (உரிமையாளர், கலைவாணி நகைமாளிகை,) அன்பு மனைவியும் கலைவாணி (நோர்வே), பவானி (லண்டன்), ஆனந்தவேல் (லண்டன்), நளினி (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தாயும் தனபாலன் (நோர்வே), ஜெயக்காந்தன் (லண்டன்), Dr.நிரோஸ் (கொழும்பு தேசிய வைத்தியசாலை) ஆகியோரின் அன்பு மாமியும் கோகிலன், குருபரன், வைஸ்ணவன், ஆனந்தராம், பிரவீன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.01.2011) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காகக் கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

136/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.: 0212229224.

சி.ஆனந்தவேல் (மகன்),
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
கலைவாணி நகைமாளிகை.

(108240)

### திருமதி முத்தையா யோகம்மா



கோண்டாவில் மேற்கைப்பிறப்பிடமாகவும் வடலியடைப்பை வசிப்பிடமாகவும் தற்போது ஏழாலை தெற்கு, விழிசிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி முத்தையா யோகம்மா (31.12.2010) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - அன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற முத்தையாவின் மனைவியும், காலஞ்சென்ற தில்லையம்பலம் மற்றும் நடராஜா (நியூஸிலாந்து), கணேசபிள்ளை (இணுவில்), மகேஸ்வரி, பூரணம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், பாரதிநாதன் (நீர்ப்பாசன தொழில்நுட்ப ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்), காலஞ்சென்ற சிவானந்தன் மற்றும் ஜெயந்தினி (லண்டன்), சிறிமகான் (லண்டன்), ஜெயராஜசிங்கம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயும் புனிதவதி, கமலேஸ்வரி, வனஜா (ஆசிரியை - புத்தளம்), ரூபி (ஜேர்மனி) ஆகியோரின் மாமியாரும், துஷ்யந்தி - கணேஷ்குமார், சயந்தி - மயூரதன் (பிரான்ஸ்), தக்ஷன், சங்கவி, சாம்பவி ஆகியோரின் பேர்த்தியும் சஞ்சயின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.01.2011) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைக்காகக் கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

விழிசிட்டி., ஏழாலை தெற்கு.
0213216835

தகவல்:
பாரதிநாதன் (மகன்).

(108331)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொந்தமில்லாத பந்தங்கள்

வெள்ளிவிழா சிறுகதைப் போட்டியில் 3ஆம் பரிசு பெற்ற சிறுகதை

இறைவனை நொந்து நொந்துதான் மீதமுள்ள என் வாழ்நாளையும் கழிக்க வேண்டும் என்ற விதமாக எல்லாம் நடந்து முடிந்துவிட்டது.

யாரை நொந்து என்ன பயன்? எல்லாம் எம் தலை விதி.

தலைவிதி என்றால் அதை ஒட்டுமொத்தமாக எல்லோருக்கும் சேர்த்துத்தான் இறைவன் எழுதுவானோ?

இந்த முட்கம்பி வேலிக்குள் சிறைப்பட்டிருக்கும் எல்லோருக்குமே ஒரே தலைவிதி தானோ?

எங்களோடு சேர்ந்து இந்த நரக வேதனைகளை அனுபவிப்பதற்கு இந்தப் பிஞ்சுகள் என்ன பிழை செய்தார்கள்?

அந்த மூன்று குழந்தைகளையும் வைத்தகண் வாங்காது பார்த்துக் கொண்டிருக்கிறேன். அவர்கள் மூவரும் தங்களுக்குக் கிடைத்த உணவை 'அரக்கப் பரக்க' சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள். பாவம்! இந்த முகாமுக்கு வந்த பின்புதான் இப்படியாவது சாப்பிட முடிகிறது. கடந்த ஒன்றரை வருடங்களாக உயிர்க் குலையையும் கையில் பிடித்துக் கொண்டு அலைந்து திரிந்த பெற்றோரின் பின்னால் இழுபட்டுத் திரிந்த இவர்களுக்குச் சாப்பாடும் தண்ணீரும் அரைவயிறும் கால்வயிறும்தான்.

வேகமாகச் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் அவர்களைப் பார்க்கையில் எனக்கு அவர்கள் மேல் பச்சாத்தாபமே மேலிடுகிறது. அழகான உடல்வாகு கொண்ட அக்குழந்தைகளைப் பார்த்து, எனக்கு அப்படிப் பேரப்பிள்ளைகள் அமையவில்லையே என்று எத்தனை நாள் கவலைப்பட்டிருக்கிறேன். இன்று அந்த அழகெல்லாம் கெட்டு, எலும்புந் தோலுமாய் இருக்கும் இவர்கள் பெற்றோரையும் இழந்து என் அரவணைப்பில்...

'கடவுளே!' என்று முன்பெல்லாம் வழக்கமாகச் சொல்லி வந்த அந்த வார்த்தை இப்போது தொண்டைக் குழிக்குள்ளேயே அமுங்கிப் போய் விடுகிறது.

தெய்வம் என்று ஒன்று இருந்திருந்தால் இவ்வளவு துன்பமும் எங்கள் எல்லோருக்கும் ஏற்பட்டிருக்குமா? குஞ்சு குருமான் முதல் தொண்டு கிழங்கள் வரை எவ்வளவு தூரம் அல்லாடிப் போய் விட்டார்கள்? இந்தக் குழந்தைகளும்தான், குதூகலிப்பும் கும்மாளமுமாய் ஓடித் திரிந்தவர்கள்தானே. இன்று பரட்டைத் தலையும் தடி போன்ற மெலிந்த உடலும் கொண்டவர்களாய் அரையும் குறையுமாய் அழுக்கேறிய துணிகளை உடலில் சுற்றிக் கொண்டு போரின் அடையாளங்களைச் சுமப்பவர்களாய்த் தெரிகின்றனர்.

இவர்கள் என்னிடம் வந்து சேர்ந்த கதையே பெரிய கதை. இவர்கள் எனக்கு உறவோ, இரத்த பந்தம் உள்ளவர்களோ இல்லை. இவர்களின் பெற்றோர்கள் பத்து வருடங்களுக்கு முன்னர் காதல் திருமணம் செய்து கொண்டு யாழ்ப்பாணத்திலிருந்து வந்து கிளிநொச்சியில் குடியேறியவர் கள். என்னுடைய வீட்டுக்குச் சற்றுத் தள்ளியிருந்த காணியொன்றில் குடிசை யொன்றை அமைத்துக் கொண்டு அவர்கள் தமது வாழ்க்கையைத் தொடங்கினர்.

அவர்களின் அறிமுகம் எனக்கு உடனடியாகவே கிடைத் தது. அப் போது நான் என் சீவியத்தை ஓட்டு வதற்காகப் பிட்டு, இடியப்பம்,தோசை எனச் சாப்பாட்டு வகைகளை எல்லாம் செய்து விற்று வந் தேன். என்னோடிருந்த என் ஒரே ஒரு பிள்ளையும் இந்த நாட்டுச் சூழலுக்குப் பயந்து வெளிநாடு சென்றுவிட நான் என் முதுமைக் காலத்தைத் தனியே கழித்துக் கொண்டிருந்தேன்.

என் பிள்ளையை நினைக்கும்போது எனக்கு இப்போதும் கண்ணீர் முட்டிக் கொண்டு வருகிறது. மணம் முடித்து நீண்ட காலத்துக்குப் பிறகு பிறந்த ஏக புத்திரன் அவன். பிறக்கும்போதே தகப்பனைத் தின்று விட்டுப் பிறந்தவன். நிர்க்கதியான நிலையில் அவனை வளர்த்து ஆளாக்குவதற்காகவே நான் பாடு பட்டு வந்தேன்.

அவனை நான் 'பொத்திப் பொத்தி' வளர்த்தேன். விடலைப் பருவத்தையும் கடந்து வளர்ந்த அவனின் வளர்த்தி 'கண்ணுக்குள் குத்துவதாக' இருந்தது. யாரையோ கும்பிட்டு மன்றாடி அவனை அரபு நாடொன்றுக்கு அனுப்பி வைத்த பின்புதான் மனதுக்கு நிம்மதி. ஆனாலும், தகுந்த வேலையுமின்றி, அதிக சம்பளமுமின்றி அங்கும் அலைந்து கொண்டிருந்தான் என்பது மட்டும் தெரிந்தது.

என்னுடைய மகனைப் பிரிந்த சோகத்திலிருந்த எனக்கு அந்தப் புதுத் தம்பதியினரின் தொடர்பு ஒத்தடமாக இருந்தது. என்னிடம் தினமும் காலைச் சாப்பாடு வாங்கிச் செல்ல வந்தவர்கள் என்னுடன் ஒட்டிக் கொண்டார்கள். அவன் முகுந்தன்; அவள் சுமதி. அவர்களுடைய தொடர்பினால் சவூதியிலிருந்த என் பிள்ளையுடனும் இடையிடையே தொடர்பு கொள்ளக் கூடியதாக இருந்தது.

முகுந்தன் முயற்சி உள்ளவன்; சிறந்த உழைப்பாளி. சுமதி சம்பாத்தியக்காரி. கண வனின் உழைப்பிலும் கணிசமான தொகை யைச் சேமிக்கத் தொடங்கினாள். கடவுள் மூன்று குழந்தைகளையும் அவர்களுக்குக் கொடுத்தான். மூன்று குழந்தை களும் செல்லமாகத் தான் வளர்ந்தார்கள்.

விதி யாரைத்தான் விட்டது. யுத்தம் எல்லோரையும் சூன்றயாடியது. லட்சக்கணக்கானோ ரின் வாழ்க்கையுடன் விளையாடிய யுத்தம் இவர் களையும் விட்டு வைக்கவில்லை.

ஒருவேளை சாப்பாட்டுக்காகக் கையிலிருந்த பொருள்கள் எல்லாவற்றையும் 'இழந்தனர். உயிரைப் பாதுகாக்க ஊர் ஊராய் இடம் பெயர்ந்தனர். உடுத்த துணியுடன் நாள்கள், வாரங்கள், மாதங்கள் எனப் பதுங்குகுழி களுக்குள்ளேயே பதுங்கி இருந்தனர். வானில் வட்டமிட்ட 'பருந்துகள்' எப்போது குண்டு மழை பொழியும் எனத் தெரியாமல் வெளியே தலை காட்டவே பயந்தனர்.

அ.விஷ்ணுவர்த்தினி,
வல்வெட்டித்துறை.

(20 ஆம் பக்கம் பார்க்க......)

# கோவலன் கைப்பொருள் இழந்தது எப்படி?

இலக்கியக் காட்சி –71



காவிரிப்பூம் பட்டினத்தில் அரசறிய வீற்றிருந்த குடும்பத்தில் பிறந்தவன் கோவலன்.

அவ்வூரில் இன்னொரு புகழ்பூத்த குடும்பத்தவளான கண்ணகியை மணந்து இல்லறம் என்னும் நல்லறத்தை மேற்கொண்டான் கோவலன்.

*"தாரும் மாலையும் மயங்கிக் கையற்றுத்*
*தீராக் காதலின் திருமுகம் நோக்கிக்*
*கோவலன் கூறும் ஒரு குறியாக் கட்டுரை"* என்பது இளங்கோவடிகள் கூற்று.

திருமகள் போலும் கண்ணகியின் அழகு நோக்கி, தாரும் மாலையும் கலந்தது போன்ற தீராக் காதலால் இதுவரை எண்ணிப் பார்க்காத பொருள் பொதிந்த சொற்களால் கோவலன் கண்ணகியைப் புகழ்ந்தான் என்கிறார்.

ஆயினும் மாதவியின் தொடர்பு ஏற்பட்ட பின்னர் கோவலனுடைய மனநிலை மாறுபட்டுவிட்டது. மாதவியை அவன் தேடிப் போனானில்லை. பொருள் வயிற் பிரிந்து சென்ற இடத்தில் கலையரசியான மாதவியைக் கலையார்வமுடைய கோவலன் கண்டு

*"விடுதல் அறியா விருப்பினன் ஆயினன்*
*வடு நீங்கு சிறப்பின் மனையறம் மறந்தென்"* எனத் தன் செல்வ நிலையால் சேர்ந்து கொள்ளமுடிந்தது. அன்று வேறொரு பெண்ணிடம் தொடர்பு வைத்திருப்பது தவறாக எண்ணப்படுவதில்லை. ஆனால் கண்ணகியோடு இருந்த இல்லற வாழ்வை மறந்து போனான்; அவளை வெறுத்தல்ல.

இதற்கு கண்ணகியின் ஊழ்வினை காரணம் என்கிறது சிலப்பதிகாரம். கணவனுக்கான ஒரு நோன்பை அவள் செய்ய மறந்து போனாளாம்.

*'.....கணவற்கு ஒரு நோன்பு*
*பொய்த்தாள் பழம் பிறப்பில்"* என்கிறார் இளங்கோ. *''தெய்வந்தொழாது கணவற்றொழுதாள்''* எனச் சிறப்புப் பெற்ற கண்ணகி, தான் கணவனுக்காகச் செய்யும் ஒரு நோன்பை மறந்த குற்றத்தால் கோவலன் அவளை மறந்தால்!, எப்படி இருக்கிறது அவளது உயரிய கற்புநிலை? இதனை நாம் உணரவேண்டும்.

இந்திரவிழாக் காணச்சென்ற கோவலனும் மாதவியும் ஆடலிலும் பாடலிலும் பொழுது போக்கினர். விழா இறுதி நாளில் மாதவி தன்னை அழகுபடுத்திக் கொண்டு கலைஞனான கோவலன் கண்ணெதிரில் வந்து நின்றாள். மாதவியின் உடல் அழகிலும் கலையழகிலும் தன்னிலை மறந்து மாதவியும் வியப்புறும் வண்ணம் அகச்சுவை ததும்பக் கானல்வரிப் பாடல்களை இசைத்தான் கோவலன்.

அப்பாடல்கள் கோவலன் வேறொரு பெண்ணிடம் காதல் கொண்டதாகப் பொருள் கொள்ளும் வகையிலும் அமைந்துவிட்டன!

மாதவியும் அதனைத் தவறாகப் பொருள் கொள்ளாமலே ஏட்டிக்குப் போட்டியாகத் தானும் வேறொரு ஆடவனை விரும்புவது போலப் பாட்டிசைத்தாள்!

இந்த விளையாட்டு வினையாய் முடிந்தது!

மாதவியின் உண்மை நிலை தெரியாமல் அவளிடம் எதுவுமே பேசாமல் அவளை அக்கணமே விட்டு விலகினான் கோவலன்.

அவசரமாக அவள் தாழையின் வெண்டு மடலில் தன் கருத்தை அவனுக்கு எழுதி ஒரு காதல் மடலைத் தன் தோழி வசந்தமாலையிடம் கொடுத்து அனுப்பினாள்.

*"ஆடல் மகளே ஆதலின் ஆயிழை*
*பாடு பெற்றன அப் பைந்தொடி தனக்கு என..."*

மதித்து அந்த மடலை வாங்க மறுத்தான். பிரிவுக்காகக் கோவலன் மனம் வருந்தவில்லை; ஆடல் மகள் தானே இவளது குணமும் மாறுபடுந்தானே என்று வெறுத்தான்.

பின்னர் கண்ணகியிடம் போய்ச் சேர்ந்த பொழுது கோவலன்

*"சலம்புணர் கொள்கைச் சலதியொ டாடிக்*
*குலந்தரு வான் பொருட் குன்றந் தொலைந்த*
*இலம்பாடு நாணுத் தரும் எனக்கு என்ன"*

மாதவி அடிக்கடி மாறும் கொள்கையுடையவள் என்று அவளை இழிவாகக் காட்டுதல் காணலாம். மாதவியிடம் அன்றே நேரில் கேட்டிருக்கலாந் தானே? அன்று அதைக் கூறாமல் இன்று கூறுவது அவனது புறங்கூறும் தன்மையைக் காட்டுகிறது அல்லவா? இவ்விடத்தில் கோவலன் கூறுவது போல மாதவியிடம் அவன் செல்வம் தொலையவில்லை. உண்மையில் கோவலனே கைப்பொருள் இழப்புக்குக் காரணமாகிறான்.

மாதவியின் குழந்தை மணிமேகலைக்குப் பெயர் சூட்டும் விழா மிக்க ஆடம்பரமாக நடைபெற்றது. அன்று தானம் பெற இவனிடம் வந்தவர்களில் ஒருவரான வயோதிபரை யானை ஒன்று தாக்க முற்பட்டது. கோவலன் அந்த மத யானையோடு போராடி அதனை அடக்கினான். அத்தகைய அஞ்சாமையும் வீரமும் படைத்தவன். மேலும் எத்தனையோ திக்கற்றவர்களுக்குப் பொன்னும் பொருளும் கொடுத்து உதவி செய்தவன்.

இவனது முன்னோர் தேடிய செல்வத்தை இவ்வாறு வற்றச் செய்தானே யன்றித் தனது வாணிபத்தைத் தொடர்ந்து சரிவரச் செய்யாமல் விட்டுச் செல்வம் பேணப்படாதமைக்கு மாதவி காரணமாக இருக்க வில்லை. மாதவியின் கலை நுணுக்கத்தில் மயங்கினானேயன்றிக் காமத்தால் மயங்கினான் அல்லன்.

நா.நல்லதம்பி, மட்டுவில்

(22 ஆம் பக்கம் பார்க்க......)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# PATRICIAN INSTITUTES

## பற்றீசியன் தொழிற் பயிற்சி நிறுவனங்கள்

ஆரம்பம்: 03.01.2011

**மாணவர்களுக்கு மகிழ்ச்சியான ஓர் நற்செய்தி!**

எமது நிறுவனம் மூன்றாம் நிலைக்கல்வி,தொலைக்கல்வி ஆணைக்குழுவில் பதியப்பட்டு பயிற்சிகளுக்கு அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன என்பதை அறியத்தருகின்றோம்.

**01.COMPUTER COURSES** TVEC REG - NO- P 25\0021

| | |
|---|---|
| A. ADVANCED IN COMPUTER PROGRAMMING | DURATION 8 MONTHS |
| B. DIPLOMA IN MICROSOFT OFFICE | DURATION 4 MONTHS |
| C. DIPLOMA IN DESK TOP PUBLISHING | DURATION 4 MONTHS |
| D. DIPLOMA IN VIDEO EDITING | DURATION 4 MONTHS |
| E. DIPLOMA IN TYPE SETTING | DURATION 3 MONTHS |
| F. DIPLOMA IN COMPUTERIZED ACCOUNTING | DURATION 4 MONTHS |
| G.. DIPLOMA IN SOFTWARE ENGINEERING | DURATION 6 MONTHS |
| H. DIPLOMA IN MICRO MEDIA | DURATION 4 MONTHS |
| I. DIPLOMA IN WEB MULTIMEDIA | DURATION 4 MONTHS |
| J. PROFESSIONAL DIPLOMA IN GRAPHIC DESIGN | DURATION 6 MONTHS |
| K. COMPUTER HARDWARE TECHNOLOGY | DURATION 4 MONTHS |
| L. INTERNET & E-MAIL | DURATION 1 MONTH |
| M. GENERAL INFORMATION TECHNOLOGY (GIT) | DURATION 4 MONTHS |
| N. INFORMATION & COMMUNICATION TECHNOLOGY (ICT) | DURATION 4 MONTHS |
| O. CHILDREN'S KIDS | DURATION 4 MONTHS |

| | |
|---|---|
| ii. SHORT HAND AND TYPING (ENGLISH) சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும் [ஆங்கிலம்] கணினி மூலமும் தட்டெழுத்துப் பயிற்சி அளிக்கப்படும். | DURATION 6 MONTHS |
| iii. SHORT HAND AND TYPING (TAMIL) சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும் [தமிழ்] கணினி மூலமும் தட்டெழுத்துப் பயிற்சி அளிக்கப்படும் | DURATION 6 MONTHS |
| iv. GENERAL MOTOR MECHANISM (Petrol & Diesel வாகனங்கள்) மோட்டார் வாகனம் திருத்துதல் | DURATION 6 MONTHS |
| v. GENERAL ELECTRICIAN (Wiring & Re Winding) ஜெனரல் எலக்ரிஷன் [மின்சார இணைப்பு, மோட்டார் றிவைண்டிங்] | DURATION 6 MONTHS |
| vi. RADIO & T.V. REPAIRING வானொலி, தொலைக்காட்சிப் பெட்டி திருத்துதல் | DURATION 6 MONTHS |
| vii. LATHE MACHINE OPERATION கடைச்சல் இயந்திரப் பயிற்சி (on the job training வழங்கல்) | DURATION 6 MONTHS |
| viii. ARC WELDING மின்ஒட்டுனர் பயிற்சி (on the job training வழங்கல்) | DURATION 6 MONTHS |
| ix. CARPENTRY (With use of machinery) மரவேலை (on the job training வழங்கல்) | DURATION 6 MONTHS |
| x. REFRIGERATION AND AIRCONDITIONING குளிர்சாதனப் பெட்டி திருத்துதல் | DURATION 6 MONTHS |

## VACANCY

**தமிழ்- சுருக்கெழுத்து, தட்டெழுத்துப் போதனாசிரியர்**

**(TAMIL SHORT - HAND TYPING INSTRUCTOR)**

மேற்படி பதவிக்கு தகைமை உள்ளவர்கள் (03.01.2011- 07.01.2011) திகதிக்கு முன்னராகத் தங்களின் சுயவிவரக் கோவையை நேரிலோ அல்லது பதிவுத் தபாலிலோ அனுப்பி வைக்கவும். யாழ்.நகரப் பகுதிக்கு உட்பட்டவருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

எமது நிறுவனத்தினால் ஓடருக்கு மிகவும் திறமையாகவும், சிறந்த கட்டமைப்பாகவும் பின்வரும் மரஉருக்கு சார் பொருள்கள் செய்து வழங்கப்படும்.

1.பாடசாலை விளையாட்டு உபகரணங்கள் Swing,See-Saw, Slider,Climber,Merry go round.
2.பாடசாலைக் கதிரை/மேசைகள்
3.கட்டடங்களுக்காக Trues,Gate,Grils போன்ற உபகரணங்கள் எம்மால் செய்து வழங்கப்படும்.

**வாகனத் தகுதிச் சான்றிதழ்- 2011**

2011 ஆம் ஆண்டுக்கான வாகனத் தகுதிச் சான்றிதழ் மார்கழி மாதம் 27 ஆம் திகதியிலிருந்து (திங்கட்கிழமை) வழங்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன என்பதை வாகன உரிமையாளர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**குறிப்பு:**

1. பயிற்சிக் கட்டணங்களைத் தவணை முறையில் செலுத்தலாம்.
2. வன்செயலால் பாதிக்கப்பட்ட அல்லது வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மாணவர்கள் பயிற்சிக் கட்டணத்தில் சலுகைகள் பெறலாம்.
3. பயிற்சிநெறிகள் சம்பந்தமான சகல விபரங்களையும் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**மேலதிக விவரங்களுக்கு**

REGISTRAR, PATRICIAN INSTITUTE,
61 (59),St.PATRICK'S ROAD. JAFFNA.
T.P.NO: 021 222 6148 FAX : 021 222 6148 E.Mail: [illegible]

(/5737772)

### தடுப்பூசி வழங்கல்

வேகமாகப் பரவி வரும் பன்றிக்காய்ச்சலைக் கட்டுப்படுத்துவதற்கான தடுப்பூசி ஏற்றும் நிகழ்வு கைதடியில் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

கைதடி அரச மத்திய மருந்தகத்தில் குடும்பநல உத்தியோகத்தர் திருமதி ஜெ.குமுதினி தலைமையிலும், கைதடி வடக்கு அம்பிகா மாதர் சங்கத்தில் குடும்பநல உத்தியோகத்தர் திருமதி நா. தேவகி தலைமையிலும் இத்தடுப்பூசி ஏற்றப்படுகின்றது.

இந்த நிகழ்வில் கர்ப்பவதிகள் உட்பட எழுநூற்றைம்பதுக்கும் மேற்பட்ட மக்கள் கலந்துகொண்டு தடுப்பூசியை ஏற்றிக் கொண்டனர். (204-288)

### அதிபர் பதவிக்கு விண்ணப்பம் கோரல்

வலிகாமம் கல்வி வலயத்துக்குட்பட்ட யா/பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரிக்கு அதிபர் பதவி வெற்றிடமாகவுள்ளதால் இலங்கை அதிபர் சேவை தரம் 1, 2-1 ஐச் சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மேற்படி பதவிக்கு வலிகாமம் கல்வி வலயத்தைச் சேர்ந்தவர்களே விண்ணப்பிக்க முடியும் எனவும் அதற்கான மாதிரி விண்ணப்பப்படிவத்தை வலயக் கல்வி அலுவலகத்தில் பெற்று எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன்னர் கல்வி அலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ற)

**கூறுவிலை கோரல்**

எமது நிறுவனத்துக்கு ஆற்றுமணல் (கண்டாவளை அல்லது கிளிநொச்சி), கருங்கல் சல்லி என்பன விநியோகிக்கக் கூடிய வழங்குநர்கள் தேவை. ஆர்வமுடையோர் விலை, வழங்கக் கூடிய அளவு, வாகன விவரம் என்பனவற்றினை எமது முகவரிக்கு அனுப்பி வைக்கவும். முடிவுத் திகதி: 08.01.2011 .

**Tokyo Supper Mix,**
எழுதுமட்டுவாள் தெற்கு, மிருசுவில்.
தொ.பே.: 0773466262.

(அ/574129)

STUDY& WORK IN

**LONDON | NEW ZEALAND**

**USA CANADA | IRELAND | SINGAPORE | FRANCE**
**SWEDEN | MALAYSIA | INDIA | NORWAY | ITALY**



1. மேற்கூறிய நாடுகளில் கல்வியைத் தொடர Visa க்கள் உறுதிப்படுத்தப்படும்.
2. IELTS தகைமை இல்லாமல் சில பாடநெறிகளுக்கு Visa பெற்றுத்தரப்படும். (No Need IELTS for Level 6 & 7 program)
3. Courses:- Business Management, Computer Science, Engineering, Travel & Tourism, Beauty Culture and over 200 Courses
4. Expert free guidance for sponsorship
5. எதிர்பார்க்கப்படும் குறைந்த தகைமை (G.C.E. O/L)
6. Part time job guaranteed

**MILLENNIUM BUSINESS ACADEMY (MBA)**
# 286, R. A. De Mel Mawatha, Colombo 03.
(Near the Liberty Plaza, Next to Don Karolis)
Hotline: Hasan - 0773507663
E-mail: hasan_abdul10@yahoo.com
Web: www.milimba.com

## இரண்டாம் ஆண்டு நினைவு தினம்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 23 . 11 . 1959 |  | 24 . 12 . 2008 |

**கிருஷ்ணர் வேல்முருகு**

திதி: 02.01.2011

விதி முடிந்து திதி இரண்டு சந்நிதியில் நீங்கள் நிம்மதி.
எம்கதி நிர்க்கதி எப்போது இனி உங்களைக் காண்பது?
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

நீலியம்பனை,
மல்லாகம். (108165)

மனைவி
(சிவானி).

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்

செல்வி

**நவரத்தினம் அர்ச்சனா**



தோற்றம்: 06.02.1984 மறைவு: 03.12.2010

கடந்த 03.12.2010 அன்று சிவபதமடைந்த எமது செல்வத்தின் மரணச் செய்திகேட்டு ஓடோடி வந்து உதவியவர்களுக்கும், ஆறுதல் கூறியவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், இறுதிச்சடங்கில் கலந்துகொண்டவர்களுக்கும், ஆறுதல் கூறி ஆகாரம் அளித்தவர்களுக்கும், தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியவர்களுக்கும், மற்றும் பல வழிகளிலும் உதவிசெய்தவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று (02.01.2010) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் இடம்பெறும் மதியபோசன நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்).

ந.மகாலிங்கம் குடும்பம் (மாமா).
மருதங்குளம் வீதி, மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி. (108171)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அநாவசியமாக செலவு செய்யக் கூடாதென்பது அம்மாவின் கொள்கை

## வேர் பெயர்ந்த பூமியின் நூலறா நினைவுகள்- 4

ந.பரமேஸ்வரன்

''வேர்பெயர்ந்த பூமியில் நூலறா நினைவுகள்'' என்ற தலைப்பின் கீழ் வலிகாமம் வடக்கின் பசுமையான நினைவுகளை இரை மீட்டுவரும் கட்டுரையாளரின் மூன்றாவது நடைச்சித்திரம் இது. பலாலி விமான நிலையத்தில், தனது சிறுவயதில் பெற்ற அனுபவங்களை இக்கட்டுரையில் அவர் விவரிக்கிறார்.

(சென்றவாரத் தொடர்ச்சி...)

''இது சின்னக்கூடை தானே காண்ட்லக்கேஜா கொண்டு போங்கோவன்'' என்றார் அதிகாரி. இல்லையில்லை லக்கேஜிலை போடுங்கோ'' என்றார் அப்பா. சொல்லிவிட்டு என்னிடம் திரும்பி ''நீ போறதெண்டால் போவன்'' என்றார். ஃபிளைற் வெளிக்கிட்ட பிறகு போகிறேன் என நான் பதிலளித்தேன். அப்பா விமானத்தினுள் ஏறி ஜன்னல் பக்கமாக அமர்ந்து கொண்டார். நான் பல்கனியில் ஏறினேன். விமானம் புறப்பட்டது. அப்பா கையசைத்தார். பழைய நினைவுகள் என் மனக்கண் முன் னால் விரிந்தன. நான் ஏற்கனவே இரண்டு தடவைகள் பலாலி விமான நிலையத்துக்கு வந்துள்ளேன். நாங்கள் கதிர்காமம் போன போதும் இதேபோல்தான் மூன்று வாரண்டுகளைக் கொடுத்து விமானத்தில் கொழும்பு சென்று கதிர்காமம் போனோம். பின்னர் சிவம் அத்தான் ஜேர்மனிக்குப் போனபோதும் அவரை வழியனுப்ப நாங்களெல்லாரும் வந்தோம்..

கதிர்காமம் போனபோது தம்பி சூட்டி, ஃபிளைற்றுக்குள் சத்தி எடுத்து விட்டார். விமானப் பணிப்பெண் சத்தி எடுப்பதற்கு பாக் கொண்டு வந்து தந்தார். சத்தி எடுத்த பின் பாக்கை என்ன செய்வது என்று அப்பாவைக் கேட்க, அப்பா முன்னாலுள்ள நெற்றுக்குள் வையுங்கள் என்றார். நாங்கள் கொழும்புக்குச் சென்ற போது அம்பிகா சாய்மனைக் கதிரையில் படுத்தவாறு வானொலி கேட்டுக் கொண்டிருந்தாள். மாமா அம்பிகாவை ஏசிக்கொண்டிருந்தார். உனக்கு இருபத்திநாலு மணி நேரமும் ரேடியோதான் என்று. இரவு பொன்னம்பலவாணேஸ்வரர் கோயிலுக்குப் போனோம். கோயிலிருந்து திரும்பி வரும் போது அம்மா அப்பாவை ஏசிக் கொண்டே வந்தார். கோயில் வாசலில் நின்ற பிச்சைக்காரனுக்கு இருபத்தைந்து சதம் கொடுத்ததற்கும் ரக்சிக்காரனுக்கு இரண்டு ரூபா கொடுத்ததற்கும் சேர்த்து. நாரஹேன் பிட்டியிலிருந்து பொன்னம்பலவாணேஸ்வரர் கோயிலுக்கு ஒன்றரை ரூபாய்தான் ரக்சிக் கட்டணம். அப்பா வழமையாக ரக்சிக்காரரிடம் மிச்சக்காசு வாங்குவதில்லை.

பிச்சைக்காரனுக்கும் ஐந்து அல்லது பத்துச்சதம் கொடுத்தால் போதாதா? ஏன் இருபத்தைந்து சதம் கொடுத்தீர்கள் என இரண்டிற்குமாகச் சேர்த்து அப்பாவை அம்மா ஏசிக் கொண்டே வந்தார். மறுநாள் மாத்தறைக்குச் சென்று மாத்தறையிலிருந்து மாட்டு வண்டியில் கதிர்காமம் போனோம். மாட்டு வண்டிக்காரன் ஒரு வயோதிபன். ஏன் வேறு இளம் ஆள்களுடைய மாட்டுவண்டி கிடைக்கவில்லையா? என அதற்கும் அம்மா ஏசிக் கொண்டே வந்தார்.

கதிர்காமத்தில் மாணிக்கங்கையில் நீராடித் தரிசனம் முடித்த பின் எம்மைக் கதிர்காமத்தில் விட்டுவிட்டு அப்பாவும், அம்மாவும் மலையுச்சிக்குச் சென்று வழிபட்டு வந்தனர். சிவம் அத்தான் ஜேர்மனிக்குப் போனபோது பலாலியிருந்து விமானம் மூலம் திருச்சி சென்று அங்கிருந்து தரைவழியாக ஜேர்மனிக்குச் சென்றார். சிவம் அத்தானை வழியனுப்புவதற்கு நாங்களெல்லாரும் காரில் வந்திருந்தோம். அப்போது சிறிமாவின் ஆட்சிக்காலம். பவுண் எடுத்துச் செல்வதற்கு அரசு தடை விதித்திருந்தது. பணமும் பெரிதாக எடுத்துச் செல்லமுடியாது. எப்படி சிவம் அத்தானுக்குப் பணம் கொடுத்து விடுவது என அத்தையும் மாமாவும் யோசித்துக் கொண்டிருந்தனர்.

அப்பா ''கொஞ்சம்பொறு வாறன்'' என்று அத்தையிடம் சொல்லிவிட்டுப் போனார். திரும்பி வந்து ''இண்டைக்குச் சண்முகநாதன்தான் பைலட் நீ சங்கிலியைத்தா நான் சிகரெட் பெட்டிக்குள் போட்டு அவர் ஃபிளைற் ஏறப் போகேக்கை குடுத்துவிடுகிறன். அங்கை போய் இறங்கினவுடனை சிவத்தை வேண்டச் சொல்லு'' என்றார். அத்தை சங்கிலியைக் கழற்றிக் கொடுத்தார். அப்பா பிறிஸ்றல் பைக் கற்றினுள் போட்டு சேர்ட் பொக்கற்றில் வைத்திருந்தார்.

பிரயாணிகள் அனைவரும் ஏறி விட்டனர். பைலட்மார் இருவரும் விமானத்தில் ஏறுவதற்காக வந்தனர். சண்முகநாதன் அப்போதுதான் அப்பா வைக் கண்டது போல் ''ஹலோ சிவம்'' என்று சொல்லிக் கொண்டு வந்தார். அப்பா பொக்கற்றில் உள்ளிருந்த பிறிஸ்ரல் பைக்கற்றை எடுத்து நீட்டினார். சண்முகநாதன் ஒரு சிகரெட்டை எடுத்துப்பற்ற வைத்துக் விட்டுப் பைக்கறைத் தனது சேர்ட் பொக்கற்றினுள் வைத்துக் கொண்டு சிறிது நேரம் உரையாடி விட்டுக் கையசைத்தவாறு சென்றார்.

சண்முகநாதனும் அப்பாவும் மகாஜனாவில் ஒன்றாகப் படித்தவர்கள். அம்பனைச் சந்தியிலிருந்து கொல்லங் கலட்டிக்குச் செல்லும் பாதையில் முதலாவது ஒழுங்கைக்குப் பெயர் களனை ஒழுங்கை. மாரிகாலத்தில் வெள்ளம் நிற்கும் களனை ஒழுங்கையில் முதலாவது வீடு சண்முகநாதனின் வீடு.

சண்முகநாதனின் பிள்ளைகள் எல்லோரும் மகாஜனாவில்தான் படிக்கிறார்கள். எல்லாருக்கும் செந்தில் என்று தொடங்கும் விதத்தில்தான் பெயர் வைத்துள்ளார் சண்முகநாதன். மகள் செந்தில் வாணி 3A எடுத்து மெடிசின் என்ரபண்ணிவிட்டார். மகன் செந்தில் மோகனும் இந்தமுறை 3A எடுப்பான் என்று மகாஜனாவில் எல்லாரும் நம்பிக் கொண்டிருக்கிறார்கள்.(எதிர்பார்த்தது போலவே அவரும் 3A எடுத்து மருத்துவக்கல்லூரியில் நுழைந்தார்) எழுபதுகளின் நடுப்பகுதியில் யாழ். மாவட்டத்திலேயே ஓரிரண்டுபேர் தான் 3A எடுப்பார்கள். கடைசி மகன் செந்தில் யோகன் போன முறை 9 A எடுத்து இப்போது A/L படிக்கிறான். தெல்லிப்பழை நூலகத்தில் சஞ்சிகைகள் ஏலம் விடப்படும் போது செந்தில் யோகன் ரைம், நியூஸ்வீக் சஞ்சிகைகளை ஏலத்தில் வாங்கிச் செல்வதைத் தான் பார்த்திருக்கிறேன். (செந்தில் யோகன் முள்ளிவாய்க்காலில் இறந்து விட்டதாகக் கூறப்படுகிறது) சண்முகநாதன் மாவிட்டபுரம் கந்தசாமி கோயில் தேர்த்திருவிழாவின் போது ஹெலியில் கொண்டு வந்து பூப்போடுகிறவர். விமானம் புறப்பட்டுவிட்டது. நான் இறங்கிப் பலாலிச் சந்தியை நோக்கி நடக்கத் தொடங்கினேன். சந்திக்குச் சென்றால் 763 பருத்தித் துறை- கீரிமலை பஸ்ஸிலும் போகலாம். பிரதான வீதியில் ஏறியதும் இராணுவ முகாம் உள்ளது.

இதுதான் பலாலி இராணுவ முகாம். மேலே பெரிதாக 'நீதி விரோதச் செயல்களைத் தடுக்கும் தலைமைச் செயலகம்' என எழுதப்பட்டிருந்தது. இரண்டு வாள்கள் குறுக்காகப் போடப்பட்டிருந்தன. மூன்று இராணுவச் சிப்பாய்கள் வாசலுக்கும் முகாமுக்குமாக மாறி மாறி அணி நடையிலீடுபட்டிருந்தனர். இருவர் ஒரு பக்கமாகவும் ஒரு சிப்பாய் அவர்களுக்கு எதிர்ப்புறமாகவும் அணி நடையிலீடுபட்டிருந்தனர். பலாலிச் சந்தியிலிருந்த தேநீர்க் கடையில் பிளேன்ரீ குடித்துவிட்டு நின்றேன். 764 தான் வந்தது. பஸ்ஸில் ஏறி வீடு நோக்கிப் புறப்பட்டேன்.

# கடவுளின் வங்கியில் சேமிக்கப்படும் சேவையும் நற்செயலும்

வையத்துள் வாழ்வாங்கு வாழ்தல் 4



உலகில் நாம் வாழ்வாங்கு வாழ்தலில் முக்கியமானவற்றுள் எல்லோருடனும் நேசமாக இருங்கள், எல்லோருக்கும் சேவை செய்திடுங்கள் (Love All, Serve All) எப்பொழுதும் உதவி செய்திடுங்கள், ஒருபோதும் துன்பம் விளைவிக்காதீர்கள் (Help ever, Hurt Never) என்பவை அடங்கும். இவற்றுள் எல்லோரிடமும் அன்பாக இருங்கள், ஒருபோதும் துன்பம் விளைவிக்காதீர்கள் என்பனவற்றைப் பற்றி சத்திய சாயிபாபா கூறிய சிலவற்றைக் கடந்தவாரம் பார்த்தோம். தொடர்ச்சியாக எல்லோருக்கும் சேவை செய்திடுங்கள்,எப்பொழுதும் உதவி செய்திடுங்கள் என்பவற்றைப்பற்றி பகவான் கூறியதை இவ்வாரம் பார்ப்போம்.

**கர்மத்தின் நிமித்தமே உடலைப் பெற்றோம்**

உடலை மனிதன் அடைந்திருப்பது கர்மம் செய்வதற்காகத்தான். மனிதத்துவம் என்பது கர்மத்(செயல்)தில் கட்டுண்டது. அதனால் இவ்வுடலைக் கொண்டு செயலில் ஈடுபடவேண்டும். இறைவனுக்கு மகிழ்ச்சி தரக்கூடிய செயல்களில் இறங்க வேண்டும். கூடிய வரையில் எது இறைவனுக்கு மகிழ்ச்சி தரக்கூடியது என்ற ஆலோசனையில் ஈடுபட்டு அதைச் செய்ய வேண்டும்.

**முடியுமான அளவு பயனுள்ள சேவை**

எப்பொழுதும் மற்றவர்களுக்கு உதவிபுரிய முனைந்திருங்கள். உங்களால் இயன்ற அளவில் சேவை செய்திடுங்கள். உங்களது திறனுக்கு அப்பாற்பட்ட எதனையும் செய்ய வேண்டியது இல்லை. உங்களால் மிகச்சிறிய அளவில் செய்ய இயன்றாலும் அதனை அதிகபட்ச விளைவுகளைத் தருகின்ற வகையில் புரிந்திடுங்கள். உனது உட் திறமைகளை பயனற்ற வழிகளில் விரயம் செய்யாதே.

**நேசம் கொண்டு சேவை செய்திடு**

வாழ்வில் நல்ல விடயங்களை ஒருவர் அனுபவிக்க விரும்பினால் முதலில் நீங்கள் மற்றவர்களுக்கு நன்மை செய்திடவேண்டும். எவர் ஒருவர் அனைவரையும் நேசித்துச் சேவை செய்கிறாரோ இறைவன் அவரை நேசித்துக் கௌரவிக்கிறார். இறைவனுக்கு செய்யும் சேவை என்பதனை விட மனிதனுக்குச் செய்யும் சேவை மேலும் மதிப்பு வாய்ந்தது.

**கல்வி சமூகத்திற்கு பயன்படட்டும்**

ஒருவனுடைய கல்வி சமூகத்தின் நலனுக்குப் பயன்பட வேண்டும். ஒருவனது திறமைகள் அனைத்தையும் சமூகத்திற்கு நலன்புரிய உபயோகிக்க வேண்டும். படித்தவர்கள் தங்களது கல்வியறிவை சமுதாயத்தின் முன்னேற்றத்திற்காக உபயோகப்படுத்தி மற்றவர்களை நல்வழிகளில் நடக்க - நடத்திச் செல்ல வேண்டும்.

**சமுதாயத்தில் எமக்குப் பொறுப்பு உள்ளது**

நீங்கள் உங்கள் தொழிலில் ஈடுபடும் போது சமுதாய நலனை நோக்கியே உங்கள் நோக்கம் இருக்க வேண்டும். நீங்கள் இந்த சமுதாயத்தின் ஓர் உறுப்பினராவீர்கள். ஆகவே உங்களுக்கும் சமுதாயப் பொறுப்பு உள்ளது. நீங்கள் இந்த சமுதாயத்தினால் வாழ்கிறீர்கள். நீங்களும் சமுதாயமும் ஒன்றையொன்று சார்ந்தவை. இந்தச் சமுதாயத்திலுள்ள சக மனிதர்கள் வளர்ச்சி பெற்றால் மட்டுமே உங்களால் வளர்ச்சி அடைந்திட இயலும்.

மற்றவர்களுக்குச் சேவை செய்வதன் வாயிலாக மட்டுமே உங்களால் வளர்ச்சி அடைந்திட இயலும். மனிதன் மற்றவர்களுக்குச் சேவை செய்வதன் வாயிலாகவே தன்னை நிறைவு செய்து கொள்ள முடியும். எவரேனும் துன்பத்திலிருந்தால் உங்களது சுயமான பணியினையும் விட்டுக்கொடுத்தாவது எவ்வகையிலேனும் உதவி புரியுங்கள். இதுவே மனிதனுக்கான முதன்மையான பணி.

**சேவை எமது கடமை**

சமூக சேவையில் பங்கு கொள்ளுங்கள்! சமூக சேவை என்றால் என்ன? எந்த வேலையை மேற்கொண்டாலும் உங்கள் மனச்சாட்சிக்கு மணநிறைவு தரும் வகையில் செய்வதே சமூக சேவையாகும். ஒரு வேளை நீங்கள் தொழில் செய்பவராக இருந்தால் பணம் சம்பாதிப்பதற்காக அறநீதியாக; அதர்மமாக நடக்காதீர்கள். தொழில் தர்மத்திலிருந்து விலகிவிடாதீர்கள். சிரத்தையுடன் உங்கள் பொறுப்பைச் செய்து மேன்மையாக உழைத்தால் அதுதான் உங்கள் சேவை. அதுதான் உங்கள் கடமை. ஒரே குடும்பத்தைச் சேர்ந்த குழந்தைகள் போல் இசைவுடன் நாம் வாழ வேண்டும். முழு ஒற்றுமையுடன் உழைக்க வேண்டும். வாழ்க்கையின் ஒரு கணத்தைக் கூட கேவலப்படுத்தாதீர்கள். உங்களுக்கு மகிழ்ச்சியும் பிறருக்கு களங்கமற்ற மகிழ்ச்சியும் தருமாறு மிகப்பயனுள்ள முறையில் நேரத்தைச் செலவிடுங்கள்.

**அன்பு சேவையின் வாயிலாக வெளிப்பட வேண்டும்**

சேவை செய்வதற்கான வாய்ப்புக்களைத் தேடிப் பாருங்கள்; பிறருக்கு மகிழ்ச்சியுடன் சேவை புரியுங்கள். ஒருவரது வலியினையும் அவரது துயரத்தை உங்களுடையதாகக் கொள்ளுங்கள். ஏழை எளியவர்களிடம் காருண்யத்தை வளர்த்துக் கொண்டு அவர்களைப் பாதுகாக்க முயலுங்கள். அவர்களுக்கு உணவு, உடைகளை அளியுங்கள் சமயமறிந்து சேவை செய்யப் படல் வேண்டும். சேவை தேவைப்படும் போதெல்லாம் தயாராகவும், ஆர்வத்துடனுமிருந்து சேவைக்கு இணையான வேகத்துடன் செயற்பட வேண்டும்.

*நன்கு செயற்படுத்தப்பட்ட ஒவ்வொரு கடமையும் இறைவனது வங்கியில் உள்ள உங்களது கணக்கின் இருப்பு நீதியாகும்.*

**தாய்நாட்டுச் சேவை**

பிறந்தமண் சொர்க்கத்திற்கு இணையானது. பெற்ற தாய்நாட்டை அனைவரும் போற்றி வணங்க வேண்டும். எல்லாத் தேசத்தவரும் அவரவர் தேசத்தை மதித்து தாய்நாட்டிற்கே சேவை செய்திடல் வேண்டும்.

**தொடர்வேலை, சேவை**

செய்யும் வேலையை மாற்றிக் கொள்வதே ஓய்வு ஆகும். ஏதும் வேலை செய்யாமல் சோம்பலுடன் உட்கார்ந்திருப்பது ஓய்வு அல்ல. சோம்பல்படுவது கூடாது. எப்பொழுதும் வேலையே ஓய்வும் நன்றும் ஆகும். ஒருவேலை செய்து சலிப்பு ஏற்படும் போது அதைவிட்டு வேறு வேலை செய்யுங்கள். அதுதான் உண்மையான ஓய்வு.

**வாழ்வின் நோக்கத்தில் கவனம்**

சமுதாயத்தில் வியர்வைசிந்திப் பாடுபட்டு உழைத்து வாழ வேண்டும். சேவை செய்ய வேண்டும். அதேநேரத்தில் உனது நோக்கம், குறிக்கோள் இறைவனிடத்தில் இருக்கவேண்டும். தெய்வ உணர்வில் தான் ஓய்வுகிடைக்கும். உலகியல் வாழ்வில் எவ்வளவு மும்முரமாக ஈடுபட்டிருந்தாலும் நோக்கமும் கவனமும் இறைவன் மீதே இருக்க வேண்டும்.

டாக்டர் இ.சிவசங்கர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடவுள் கேட்ட வரம்

அப்பாவும் அம்மாவும்
தராத அரவணைப்பை
பொம்மைக்குத் தந்தபடி
உறங்கிக் கொண்டிருந்தது குழந்தை
கனவில் தோன்றிய கடவுள்கள்
அச்சிறு குழந்தையின் அரவணைப்பை
வரமாய் கேட்டனர்
வரிசையில் நின்றிருந்த
கடவுளர்களுக்கு ஊக்கப் புன்னகையைத்
தந்துவிட்டுப் பொம்மையை
இறுக்கி அணைத்துக் கொண்டது
பொம்மையாதலின் வழிமுறைகள்
அறியாமல் விழித்தபடி நின்றனர்
கடவுள்கள்

# உள்ளிருந்து ஒரு குரல்

கனவாகிப் போன
தொலைந்து விட்ட
வாழ்க்கை தன்னை
முட்கம்பிச் சுருள்களுள்
இன்னமும் தேடுகிறோம்
விடிவுக்காய் ஏங்கினோம்
இருளுக்குள் அகப்பட்டோம்
நாளை நாளையென்று
நாள்களின் மடங்குகள்
வருடங்களால் நகர்கின்றன
மீட்பார் யாருமற்று
கேட்பார் எவருமின்றி
வா(வீ)ழ்கின்றன ஜீவன்கள்
வாழ்வில் பற்றுதலால்
இழக்கப்பட்டவை ஏராளம்
- உயிரைத் தவிர
உயிரைத் தட்டாக்கி - அதில்
வாழ்க்கை போடும்படி
பிச்சை கேட்கின்றோம்
இளமை இழக்கும் முன்
பிச்சை போடுங்கள்
- இல்லையேல்
உயிரையும் சேர்த்து
எடுத்துக் கொள்ளுங்கள்!

சி.வினோபரன்,
புளியங்கூடல்

# சாண்டுக் கிளிகள்

அவர்களும் மனிதர்களே,
கண்ணீரின் கனவுகளை
காற்றில் பறக்கவிட்டு
கால்கள் கட்டுண்டு கிடக்கும்
அவர்களும் மனிதர்களே!

இழப்பு ஒன்றைத் தவிர
இழப்பதற்கு ஏதுமின்றி
உயிரின் கடைசிச் சொட்டுடன்
உயிர்வாழ வந்தவர்க்கு
முட்கம்பி வேலிகளோ
முகவுரை எழுதுவது

உள்ளங் குமுறாதீர் உறவுகளே!
காலனின் கட்டளையால்
காயப்பட்டாலும்
கடவுளின் கட்டளையில்
உங்கள் களிம்புகள் ஆறும்.

தி.திலவன், மட்டுவில்

# உதட்டில் புன்னகை தொலைத்தோம்

இருள் கவிழ்ந்து கொட்டி
கனன்று கொண்டிருக்கும்
இந்த இரவுகளில்
தொடரும் இன்னல்களாய்
நாளுக்கு நாள்
அரங்கேறிடும் அரங்கேற்றங்களை
பார்த்த படியே
பயணித்துக் கொண்டிருக்கின்றோம்.

தூக்கங்களுக்காக
மடல்களைக் கூட
மூடிவிட முடியாமல் விழிகள்
சஞ்சலமுற்றுக் கொள்கின்றன.
கால நதியின் ஓட்டத்தினோடு
இறந்தகாலத்தை
சம காலத்தினோடு
ஒப்பீடு செய்துகொள்கின்றது
மனித நெஞ்சம்.

எதை எதை எழுதுவது
எதற்கெதற்கு அழுவது
என்று புரிந்திடாத
ஜடங்களாய்
நாழிகைகளை நகர்த்தியபடியே
நகர்ந்து கொண்டிருக்கின்றோம்.
அநித்தியமாகிப் போன - எம்
இருப்புகளுக்கிடையே
இழப்புகளைத்தான்
பல்வேறு கோணங்களாய்
நாளுக்கு நாள்
சந்தித்துக்கொண்டிருக்கின்றோம்.

எம் மழலைச் செல்வங்களின்
உதடுகளில் கூட
புன்னகைப் பூக்கள்
இன்னமும் வாடியபடியே தான்.
இழப்பு இழப்பு என்று
இருந்திருந்த அத்தனையையும்
இழந்தோம்
உதடுகளில் புன்னகையை
இழந்தோம்
அத்தனையையும் இழந்திருந்தும்
நம்பிக்கைச் சுவர்களின்
பலங்களினால்
வாழ்ந்திருந்தோம்
ஆனால் இப்போது........

வெற்றி-துஷ்யந்தன்

# இலக்கிய முகம் : யாழ்ப்பாணக் காவியம்

ஈழத்துத்தமிழ் இலக்கியக் களத்தினுள் என்றும் இல்லாதவாறு அண்மையில் பொங்கிப் பிரவகித்து வந்திருக்கிறது ஒரு புதுப்புனல், ''யாழ்ப்பாணக் காவியம்'' என்னும் நறுந்தமிழ் வெள்ளம் ஒரு பெருங்காவியம். 2050 கவிதைகளால் ஆக்கப்பட்ட ஒரு நெடுங்கதை. இது ஒரு வரலாற்றுக் காவியம்.

இந்தக் காவியத்தைத் தமிழுக்குத் தந்த கவிஞர் மாவிட்டபுரம் க.சச்சிதானந்தன். மதுரைப்பண்டிதரான சச்சிதானந்தன் ஆங்கிலத்திலே B.A(Hons)Lond.,M.Phil.Lond., ஆகிய பட்டங்களைப் பெற்றவர். வானியல் வல்லுநர். அவர் படைத்த இக்காவியம் 1998 ஆம் ஆண்டு நூல்வடிவம் பெற்றிருக்கிறது.

விருத்தப்பாக்களால் யாக்கப்பட்ட இக்காவியத்திலிருந்து சில காட்சிகள்:

ஆட்சியாளர்களின் கையிலே அகப்பட்டுக்கொண்ட பரராச சேகரனை கோம்பையன் மணல் திடலுக்குக் கொண்டு வந்து, கொல்லுவதற்காக அவன்மேல் காளையை ஏவிவிடுகிறார்கள். பரராசசேகரன் அந்தக் காளையின் முதுகின்மேல் ஏறி அதனை மடக்க, அந்தக் காளை திணறுவதை கவிஞர் காட்டுகிறார் இப்படி:

*''துள்ளி எழும்! மூசி விழும்!*
*தூக்கி முதுகிருப்பானைத்*
*தள்ளிவிட இருகாலில்*
*தாவி விழும்! முக்கரிக்கும்!*
*வெள்ளிநுரைகக்க இடை*
*விரைந்தோடும்! விழி பிதுங்கும்!*
*கொள்ளி எனக் கொம்பசைக்கக்*
*கூடாமற் குமுறுமன்றோ''*

இந்த வெறிகொண்ட கூட்டத்திலே மக்கள் படையொன்று திடீரெனப் புகுந்து தாக்குகிறது. சனக்கூட்டத்தில் பெரும் குழப்பம்! எங்கும் பதற்றம்! இதனைச் சித்திரிக்க வந்த ஆசிரியர் நடைபாதை வியாபாரிகளின் அவலத்தைக் காட்டுகிறார்:

*''கடலைப் பொரியும்*
*கதலிப் பழமும்*
*வடையும் சுளகும்*
*வரகின் அடையும்*
*உடையச் சிதற*
*உயிரைக் கொண்டு*
*கடையை விடுத்திட்[டு]*
*ஓடினர் காதம்!*

பனிச்சவனத்துக்காடு.. மரங்களின் தாழ்ந்த கிளைகளில் குரங்குகள் வாலைத்தொங்கவிட்டுக் கொண்டு குந்தியிருக்கின்றன. கீழேயுள்ள வெள்ளத்தில் வால்தொடுகிறது, கவிஞர் இதனை எப்படிச் சித்திரிக்கிறார்!

*''தாழ்ந்துவரும் கிளைகளிலே சாய்ந்திருக்கும் மந்திகளின்*
*வீழ்ந்த நெடுவால்கள் கீழ் வெள்ள[ம்]நனைந்திருப்ப வரால்*
*சூழ்ந்து வரும் இரையென்று கடிக்க அவை தூக்குவன*
*ஆழ்ந்த கடல் தூண்டிவிடும்*
*மீனவராய் ஆகுமாமே.?*

பரராசசேகரன் பனிச்சங்குளக் காட்டில் மறைந்திருக்கின்றான். அந்தக் காட்டை விவரிக்கிறார் பலப்பல கோணங்களில்... இதோ அங்குள்ள பறவைகளின் ஆரவாரம்:

*''குக்கிடும் புள்ளும் கூவிடும்*
*புள்ளும்*
*கொக்கிடும் குரல் மாறிடக்*
*கூப்பிடும்*
*சிக்கொலிப் புள்ளும் சீழ்க்கை செய்*
*புள்ளுமாய்*
*திக்குகட்[கு] ஒரு தேனிசை கேட்குமே!''*

கவிஞர் சயங்கொண்டாருடைய கலிங்கத்துப்பரணிப் பாடல்கள் எவ்வாறு நமது உள்ளங்களைப் பிணிக்கின்றனவோ அவ்வாறு கவிஞர் சச்சியின் போர்க்கள வருணனைப் பாடல்களும் எங்களைக் கவருகின்றன. இவற்றின் மிடுக்கு, துடிப்பு எல்லாம் படித்து நயக்க வேண்டியவை.

இதோ 450 ஆண்டுகளுக்கு முந்திய படையணி ஒன்று நகர்கிறது:

*''கொம்பினொடு சங்குபறை*
*கொண்டிட மொலிக்க*
*பம்புதடி பொங்கும் ஒலி*
*பாசறை நிரப்ப*
*தம்புயம் எழுந்தவலி*
*சற்றும் அணை இன்றி*
*அம்பொடு துடிப்பன*
*அவற்[கு] எதிரி நாடி''*

இவை தொட்ட இடம் எல்லாம் சுகம் தரும் கவிதைகள்! சொட்டுச் சொட்டாகச் சுவைக்க வேண்டிய கவிதைகள்! வாய்விட்டுப் படித்து, மனம் முட்ட நயந்து வியக்க வேண்டிய கவிதைகள்!

சுவைத்தவர்: மூ.க.பாத்திமா றிஸ்லியா
பலாலி ஆசிரியர் கலாசாலை, திருநெல்வேலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலைந்து திரிந்து அழியும் இலங்கைத் தமிழர்

இலங்கை அரசியலில் தமிழர் அரசியல் சார்ந்த பிரச்சினைகள் சுதந்திரம் பெற்ற பின்னர் தீர்க்கப்படாமல் இன்றுவரை இழுத்தடிக்கப்படுகின்றன.

இலங்கை பல்லின மக்கள் வாழும் நாடு. ஒவ்வொரு இனத்திற்கும் தனித்துவமான சமூக பொருளாதார மதப் பின்னணி உண்டு. எனினும் இவர்கள் மொழி அடிப்படையில் தமிழ் பேசும் மக்கள் எனவும் சிங்களம் பேசும் மக்கள் எனவும் பாகுபடுத்தப்படுகின்றனர். தமிழ் பேசும் மக்கள் இலங்கைத் தமிழர், இந்தியத்தமிழர், இலங்கைச் சோனகர், இந்தியச் சோனகர் என நான்காக வகைப்படுத்தப்பட்டு வருகின்றனர்.

இலங்கையில் 1981ஆம் ஆண்டு பெறப்பட்ட கணிப்பீடே இன்றுவரை இறுதியாக இடம்பெற்ற உத்தியோக பூர்வமான முழு இலங்கைக்குமான குடித்தொகைக் கணிப்பீடாகும். 1991 இல் இடம்பெற்றிருக்க வேண்டிய கணிப்பீடு யுத்த சூழ்நிலைகளால் நாடு முழுவதும் இடம்பெறவில்லை. 2011 ஆம் ஆண்டு நாடு முழுவதற்குமான கணிப்பீடுகள் இடம்பெறவுள்ளன. 2001 ஆம் ஆண்டு சில தேவைகளுக்காக நாட்டின் சில பகுதிகளில் கணிப்பீடுகளும், மதிப்பீடுகளும் இடம்பெற்றிருந்தன.

### குடித்தொகைப் பரம்பல்

அதிகாரபூர்வமாக இலங்கையில் 1981 மார்ச் இல் இடம்பெற்ற குடித்தெகை கணிப்பீட்டின்படி இலங்கையின் மொத்தக் குடித்தொகை 14.85 மில்லியன் ஆகும். இதில் சிங்கள மக்கள் 11.98 மில்லியனாகும். இது மொத்தக் குடித்தொகையில் 74 வீதமாகும். தமிழ்பேசும் மக்கள் 3.75 மில்லியன் ஆகும். இது மொத்தக் குடித்தொகையில் 25.3 வீதமாக அமைகிறது.

1911 ஆம் ஆண்டு குடித்தொகைத் தரவுகளின்படி இலங்கையில் சிங்களம் பேசும் மக்களின் தொகை 66 வீதமாகவும், தமிழ் பேசும் மக்களின் தொகை 32.2 வீதமாகவும் காணப்பட்டது. இந்த இரு தரவுகளையும் ஒப்பிடும் போது நூறுவீத அடிப்படையில் தமிழ் மக்கள் குறைவடைந்து செல்கிறார்கள் என்பது புலனாகின்றது. இதற்குச் சில காரணங்கள் உள.

சிறிமா-சாஸ்திரி உடன்படிக்கையின்படி 1964 இல் மலையகத் தமிழர் களில் 6லட்சம் பேர் இந்தியாவிற்குத் திருப்பி அனுப்பிவைக்கப்பட்டனர். இலங்கையில் மலையகத்தில் பிறந்த இவர்களது விருப்பம் பெறப்படாம லேயே இந்த நிகழ்வு இடம்பெற்றது. இந்நிகழ்வானது அகன்ற பாரதம் தமிழ் பேசும் மக்களைப் பண்டப் பொருளாகவே பார்த்ததென்றும், இதுவே தமிழனுக்கு இழைக்கப்பட்ட முதல் மாபெரும் துரோகம் எனவும் மனிதஉரிமை அமைப்புகள் விமர்சித்தன.

வடகீழ் மாகாணம் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே தமிழர்கள் வாழ்ந்த பாரம்பரியப் பிரதேசமாக விளங்குகின்றது. வடக்கு, கிழக்கு மாகாணத்தின் மொத்தக் குடித்தெகை 20.9 மில்லியன் ஆகும். இலங்கையின் மொத்தக் குடித்தெகையில் இது14.1 ஆக அமைகிறது. வடகீழ்ப் பகுதியின் மொத்தக் குடித்தொகையில் வடமாகாணம் 53.2 வீதத்தினையும், கிழக்கு மாகாணம் 46.8 வீதத்தினையும் கொண்டுள்ளது.

வடமாகாணத்தின் மொத்தக் குடித்தொகையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் 75வீதத்தினர் காணப்படுகின்றனர். நிலப்பரப்பில் 6வீதமே கொண்ட யாழ்.குடாநாட்டில் மொத்த வடகீழ் மாகாணக் குடித்தொகையில் 36வீதத்தினரும், வடமாகாண குடித்தொகையில் 75வீதத்தினரும் வாழ்கின்றனர். வடமாகாணத்தின் 72வீத நிலப்பரப்பைக் கொண்ட வன்னிப்பிரதேசத்தில் 25வீதமான குடித்தொகையே காணப்படுகின்றது. எனவே வடமாகாணத்தை அபிவிருத்தி செய்வதாயின் வன்னிப் பிரதேசமே அபிவிருத்தி செய்யப்பட வேண்டும் என்பது இதன் மூலம் புலப்படும்.

### தமிழர் குடித்தொகை மாற்றங்கள்

தமிழர் பாரம்பரியப் பிரதேசமான வடக்கு, கிழக்கிலிருந்து பெருமளவிலான குடித்தொகை மாற்றங்களும் பெயர்ச்சிகளும் சுதந்திரத்துக்குப் பின்னர் குறைந்தளவில் இடம்பெற்று வந்து, 1990 ஆம் ஆண்டுக்குப் பின்னதாகப் பெரியளவில் இடம்பெற்றது. இதில் முக்கியமாக திட்டமிட்ட சிங்கள மக்களது குடியேற்றத்தால் ஆரம்ப காலங்களில் இப்பிரதேசத்தின் பல பகுதிகள் ஆக்கிரமிக்கப்பட்டன. 1981 இல் வடகீழ் மாகாணத்தின் மொத்தக் குடித்தொகையில் தமிழ்பேசும் மக்கள் 86.3வீதமாகவும், சிங்களம் பேசுவோர் 13.2 வீதமாகவும் காணப்பட்டனர். மாவட்டத்திற்கு மாவட் டம் இதில் வேறுபாடுகள் காணப்படுகின்றன, யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, மட்டக்களப்பு மாவட்டங்களில் மொத்தக் குடித்தொகையில் தமிழர் 90.99 வீதத்தினராக இருந்தனர். வவுனியாவில் 86.3வீதத்தினரும் தமிழ் பேசும் மக்களாவர். வடக்கே வவுனியா மாவட்டத்திலும் கிழக்கே திருகோண மலை, அம்பாறை மாவட்டங்களிலும் சிங்கள மக்கள் திட்டமிட்ட அடிப்படையில் குடியேற்றப்பட்டதால் தமிழர்கள் குடிநகர்ந்து அப்பகுதிகளில் தமிழர் குடித்தொகை வீதம் குறைவடைந்துள் ளது. 1981இல் அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களில் மொத்தக் குடித்தொகையில் 34 முதல் 38 வீதத்தினர் சிங்கள மக்களாக இருந்தனர்.

அதற்கு குடியேற்றத் திட்டங்கள் உருவாக்கப்பட்டு சிங்கள மக்கள் பெருமளவில் குடியேற்றப்பட்டமையே காரணமாக அமைகிறது. வவுனியா மாவட்டத்தில் மாமடுவ, மடுகந்த, ஈரப்பெரிய குளம், உளுக்குளம் ஆகிய கிராமசேவகர் பிரிவுகளும் திருகோணமலை மாவட்டத்தில் அக்கோபுர, சோமபுர, கந்தளாய், பரண, மதவாச்சி, கோமரன் கடவல ஆகிய கிராமசேவகர் பிரிவுகளிலும் சிங்கள மக்கள் பெரும்பான்மையாகக் குடியேற்றப்பட்டனர். அம்பாறை மாவட்டத்தில் வேவகம்பற்று வடக்கு, வேவகம் பற்று தெற்கு, லாமகுலகல, மாயஓயா, படியத் தலவ ஆகிய உதவி அரச அதிபர் பிரிவுகளிலும் சிங்களக் குடியேற்றங்கள் இடம்பெற்றன. அதனால் தமிழ் மக்கள் குடிபெயர்ந்தனர்.

பொதுவாக அம்பாறை, திருகோணமலை, வவுனியா மாவட்டங்களில் குறிப்பிடத்தக்க பகுதிகளில் சிங்களக் குடியேற்றத்தால் தமிழர் விகிதாசாரம் குறைவடைந்து செல்வதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

### அரசியற் காரணம்

இலங்கை அரசியலில் தமிழர் அரசியல் சார்ந்த பிரச்சினைகள் சுதந்திரம் பெற்ற பின்னர் தீர்க்கப்படாமல் இன்றுவரை இழுத்தடிக்கப்படுகின்றன. தனித் தேசிய இனமாக இருக்கக்கூடிய சகல வரையறைகளையும் கொண்ட தமிழ்இனம், சிங்கள ஆட்சியாளர்களின் தவறான அணுகுமுறையினால் உரிமை பெறமுடியாமல் போராட்டத்தில் ஈடுபட வேண்டியதாயிற்று.

ஐரோப்பியரின் ஆட்சிக் காலத்துக்கு முன்பு தமிழ்ப் பாரம்பரியப் பிரதேசம் சுய இராட்சியமாக இருந்ததற்கான சான்றுகள் உள்ளன. வன்னியை இணைத்த யாழ்ப்பாண இராச்சியம் இருந்தமைக்கான சான்றுகள் உறுதியாக உள்ளன. சுதந்திரத்துக்குப் பின்னர் தமிழர் தம் உரிமைகளை வென்றெடுக்க 1948ஆம் ஆண்டு முதல் ஏறத்தாழ 30ஆண்டுகள் அமைதியான முறையில் ஜனநாயக ரீதியில் போராட்டம் நடத்தினர். பின்னர் 1980களில் இது ஆயுதப் போராட்டமாக உருவெடுத்தது. 2009 மேமாதம் ஆயுதங்கள் மௌனிக்கப்பட்டதென்ற அறிவித்தலுடன் போராட்டம் முடிவுக்கு வந்துள்ளதாக அரசு கூறுகின்றது.

சம உரிமை, சமஷ்டி, தனிநாடு என போராட்டக் கோரிக்கைகள் அமைந்திருந்தன. ஆயுதப் போராட்ட காலத்தில் முக்கியமாக 1983இற்குப் பின்னர் வெளிநாட்டு இடப்பெயர்வுகள் பெருமளவு இடம்பெற்றன. வடக்கு, கிழக்கு மாகாணத்தில் உள்ள அனைத்துப் பிரதேசங்களும் போர்ச் சூழ்நிலைகளால் பாதிக்கப்பட்டன. இதனால் பெருமளவு மக்கள் உள்ளூர் இடப்பெயர்வாளர்களாகவும், வெளிநாட்டுப் புலம் பெயர்வாளர்களாகவும் மாற்றப்பட்டனர். (வெளிநாட்டில் பத்துலட்சம் தமிழ் மக்கள் அகதிகளாக சென்று வாழ்வதாக கணிப்பிடப்பட்டுள்ளது) இதனால் தமிழர் பாரம் பரியப் பிரதேசத்தின் பொருளாதார, சமூக, கலாசார நிலைகளில் பெரிதும் பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

அரசியல் அலசல்

### இடப்பெயர்வுகள்

பொதுவாக தமிழர்களது வாழ்வாதாரங்கள் வேரோடும் வேரடி மண்ணோடும் பெயர்க்கப்பட்டன என்ற நிலை தோன்றியுள்ளது. ஆயுதப் போராட்ட காலத்தில் நிகழ்ந்த இடப்பெயர்வுகள் யாழ்ப்பாணம், மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு, வவுனியா போன்ற அனைத்து இடங்களிலும் இடம்பெற்றன. இதற்கான காரணங்களை அரசசார்பற்ற அமைப்புகள் பின்வருமாறு வரிசைப்படுத்தியுள்ளன.

* யுத்தத்துக்குள் அகப்படுவோம் என்ற பயம் மக்களைப் பீடித்தமை.
* குடும்ப அங்கத்தவர்களது இறப்பு.
* இராணுவத்தின் துன்புறுத்தல்/ பயமுறுத்தல்/அடக்குமுறை.
* ஆயுதம் தரித்த அரசு, ஆதரவு பெற்ற குழுக்களின் துன்புறுத்தல்.
* வாழ்வாதாரங்கள் இழக்கப்பட்டதால் ஏற்பட்ட வறுமை, நோய், கல்வித் தாக்கம், வேலையற்ற நிலைமை, மீன்பிடி போன்ற தொழில்கள் பாதிக்கப்பட்டமை.
* மக்கள் வாழ்ந்த பகுதிகளில் பல உயர்பாதுகாப்பு வலயமாக மாற்றப்பட்டமை போன்றன.

ஒரு தேசிய இனத்தைத் திட்டமிட்ட முறையில் சிங்கள மேலாதிக்க அரசு பலி வாங்கிய நடவடிக்கையே இதுவெனப் பலரால் இவை விமர்சிக்கப்படுகின்றன. அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய பிரதேசங்களிலிருந்து ஆரம்பத்தில் விடுதலைப் புலிகளுக்கும், அரச படைகளுக்கும் இடையில் இடம்பெற்ற சண்டைகள் காரணமாகப் பெருமளவு மக்கள் வாழ்வாதாரங்களை இழந்து வெளியேறினார்கள். அவர்களது குடிமனைகள் முற்றாக அழிக்கப்பட்டன. அகதி முகாம்களில் அவர்கள் தஞ்சம் புகுந்தனர். யாழ்ப்பாணக் குடாநாட்டில் 1990 ஆண்டைத் தொடர்ந்து வடமராட்சி, தீவுப்பகுதி, வலிகாமம் உயர் பாதுகாப்பு வலயப்பிரதேசம் போன்ற இடங்களில் ஏற்பட்ட மோதல்களினால் மக்கள் இடம் பெயர்ந்தனர். 1995 இல் வலிகாம மக்கள் அனைவரும் தென்மராட்சிக்கும், வடமராட்சிக்கும் இடம்பெயர நேர்ந்தது. பின்னர் தென்மராட்சி மக்கள் யாழ்ப்பாணம் இடம்பெயர நேர்ந்தது. ஒரு சில நாளில் யாழ்ப்பாணத்தி லிருந்து தென்மராட்சிக்கு 8லட்சம் மக்கள் இடம் பெயர்ந்த வரலாறு கறை படிந்த சம்பவமாகப் பதியப்பட்டுள்ளது. 1990 ஒக்ரோபரில் யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய இடங்களில் இருந்து பலவந்தமாக முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டமை தமிழ் மக்கள் வரலாற்றில் கறை படிந்தமை அத்தியாயமாகும். இதன் போது மக்களது பொருளாதார, சமூக, மதக் கட்டமைப்புகள் அனைத்தும் சிதைவுற்றன. இதைத் தொடர்ந்தும் பலர் உள்ளூர் இடப்பெயர்வையும் வெளியூருக்கான புலப்பெயர்வையும் மேற்கொண்டனர்.

### முள்ளிவாய்க்கால் அவலம்

வன்னியில் முள்ளிவாய்க்காலில் மே மாதம் 2009இல் இடம்பெற்ற பெரும் மனிதப் படுகொலைச் சம்பவத்துடன் மூன்றரை லட்சம் மக்கள் இடம் பெயர்ந்தனர். இன்றும் இவர்கள் நாட்டின் பல பகுதிகளில் அகதிகளாக வாழ்கின்றனர். சர்வதேச ரீதியாக மிகவும் மோசமான இடப்பெயர்வு என வர்ணிக்கப்படும் இது தமிழ் மக்களது இருப்பைக் கேள்விக்குள்ளாக்கியுள்ளது. ஆயுதப் போராட்டத்தை முறியடிக்கவெனப் பெருந்தொகையாக இராணுவத்தினரை தொடர்ந்தும் அரசு வைத்திருப்பது மக்கள் மத்தியில் நம்பிக்கையீனத்தை ஏற்படுத்தியுள்ளது. மேலும் அரசு திட்டமிட்ட அடிப்படையில் இராணுவத்தை இப் பிரதேசத்தில் குடியேற்றுவதும் தொடர்ந்து பாதுகாப்புக் கெடுபிடியை மேற்கொள்வதும் தமிழ் மக்களிடம் தொடர்ந்தும் அச்சத்தை தோற்றுவித்துள்ளது. ஒரு தேசியம், ஒரு நாடு என்ற அரசின் கோசம் ஒரு மதம், ஒரு மொழி எனவும் விரிவடையுமெனச் சந்தேகம் எழுப்பப்படுகின்றது.

### தயார்ப்படுத்தாத தமிழர்கள்

அண்மைக் காலங்களில் யாழ்ப்பாணக் குடாநாட்டில் நிலவும் ஆள்கடத்தல், கொலை, கொள்ளை போன்ற சட்ட விரோத நடவடிக்கைகள் மக்களை அச்சுறுத்தி வருகின்றன. இவற்றை முடிவுக்கு கொண்டுவருவதற்கான வழிமுறைகள் மக்களுக்குத் தெரியாதுள்ளது. அரசு திட்டமிடுவது போன்ற அளவுக்கு அரசால் பாதிக்கப்படும் தமிழர்கள் தம்மைப் பாதுகாப்பதற்காகத் திட்டமிடுவதாக தெரியவில்லை. எமக்கிடையேயுள்ள கருத்து முரண்பாடுகள் இதை மேலும் சிக்கலாக்குகின்றன,

பேராசிரியர்
**இரா.சிவசந்திரன்**

இலங்கைத் தமிழர்களின் இன்றைய காலகட்டம் மிகவும் சிக்கலானதும் அவதானமாகப் பல்வேறு ஆதரவுச் சக்திகளை ஒருங்கிணைத்து அபிவிருத்தி பாதைக்குச் செல்ல வேண்டிய நிலையில் உள்ளது. அது தவறுமாயின் இலங்கைத் தமிழரின் தேசிய அடையாளங்கள், பொருளாதார, சமூக, கலாசார விழுமியங்கள் அற்றுப்போய்விடும் அபாயம் உள்ளது. தமிழரின் இருப்புப் பற்றிய அக்கறையுள்ள அனைவரும் - முக்கியமாகப் புலம்பெயர்ந்தோரிடையேயும் தமிழ் மக்களிடையேயுமுள்ள கல்வியாளர்கள் அனைவரும் ஒன்றிணைந்து பணியாற்ற வேண்டும். இவை முறையான திட்டமிடல் மூலமும் முறையான அரசியல் தலைமைத்துவத்தை உருவாக்குவதன் மூலமும் எய்தப்பட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**German, Swiss மொழிகள்**
German, Swiss மொழி வகுப்புகள் தமிழ் மொழி பெயர்ப்புடன் நடைபெறுகிறது.
German Institute, 10, Palaly Road, Jaffna.
T.P-0771604823 Miss. Kajenthini

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 25 ✱ 08 ✱ 1935



உதிர்வு 18 ✱ 12 ✱ 2006

### அமரர் தம்பு கோபாலபிள்ளை
(நயினாதீவு) திதி: திரயோதசி (02.01.2011

சீரோங்கும் நயினையம் பதியினிலே நன்றே!
பேரோங்கும் குடும்ப கலசமாய் திகழ்ந்தே
தக்க குணம் நிறை சான்றோர்களாய் எமை
மிக்க அன்புடன் வாழ வழி செய்தீர்களே!
தங்கள் பிரிவை எம்மால் தாங்க இயலவில்லையே!
உங்கள் ஆத்மா சாந்தியடைய நாகபூஷணி
அம்மனைப் பிரார்த்திக்கின்றோம்.

5ஆம்வட்டாரம்,
நயினாதீவு. (சி/573795)

மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சுற்றத்தார்.

## Hatton National Bank

### அடகுப் பொருள்கள் ஏல விற்பனைக்கான அறிவித்தல்

ஹற்றன் நஷனல் வங்கி யாழ்ப்பாணம், சுன்னாகம், நெல்லியடி, ஸ்ரான்லி வீதி, மானிப்பாய் ஆகிய கிளைகளில் 31.10.2009 இற்கு முன்னர் அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத, காலாவதித் திகதியை நீடிக்க ஆவன செய்யாத வாடிக்கையாளர்களின் அடகு நகைகள் 08.01.2011 சனிக்கிழமை காலை 9 மணிக்கு இல.212, 214, ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள யாழ். கிளையில் ஏலத்தில் விடப்படும் என்பதை அறியத் தருகின்றோம்.

உங்களின் பெறுமதிமிக்க பொருள்களை உடனே மீட்க முடியாவிட்டால்.....

★ கடனுக்குரிய வட்டியையும் கடனின் ஒரு பகுதியையும் (ரூபா.500) செலுத்தி

அல்லது

★ தற்போதைய சந்தைப் பெறுமதிக்கும் அதிகரித்த கடன் தொகைக்கும் ஏற்ப உங்கள் அடகுப் பொருள்களை மீள அடகு வைத்து காலாவதித் திகதியை நீடித்துக் கொள்ளலாம்.

ஏல விற்பனைத் திகதியினைப் பிற்போடும் மற்றும் ஏலத்தினை இரத்துச் செய்யும் உரிமை வங்கிக்கு உண்டு.

-ஹற்றன் நஷனல் வங்கி. (சி/574126)

## VACANCIES

இலங்கை அரசினாலும் சர்வதேசத்தினாலும் அங்கிகரிக்கப்பட்ட நாம். எமது தகவல் தொழில்நுட்ப சேவையில் எம்முடன் உங்கள் சேவையையும் இணைத்துக்கொள்ள விரும்புகின்றோம்.
கீழ் தரப்பட்ட பதவிகளுக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

**1. Branch Coordinators**
* Chavakachcheri * Kilinochchi * Mannar * Vavuniya
Degree holders with one year experience or Professional Qualifications 03 years work experience is preferable.

**2.Lecturers-ICT**
Degree holders with one year teaching experience or Professional Qualifications with 03 years Teaching experience is preferable.

**3. Instructors**
Higher National Diploma or Diploma holders with one year experience.

**Salary - Negotiable.**

Please forward your application with name of two non related referees. within 07 days to:
**Human Resource Director**
**ESOFT Computer Studies (Pvt) Ltd.**
**Regional Head office**
**114, Navalar Road, Jaffna.**

ESOFT
Tp: 0212224142

## மஹாஜன சம்பத சீட்டிழுப்பு முடிவுகள்

கொழும்பு, ஜன.02

தேசிய லொத்தர் சபையின் மஹாஜன சம்பத 2338ஆம் இலக்க நேற்றைய சீட்டிழுப்பில் "U" என்ற ஆங்கில எழுத்தும் 8/3/6/3/1/0 என்ற இலக்கங்களும் அதிர்ஷ்டத்துக்குரியனவாகத் தெரிவாகின. இதன் பிரகாரம் வலமிருந்து இடமான அமைப்பில் சுப்பர் பரிசு வெல்லப்படவில்லை.

8/3/6/3/1/0 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் ஒருவருக்கு முதலாம் பரிசாக தலா இருபது இலட்சம் ரூபா கிடைக்கவுள்ளது.

3/6/3/1/0 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 13 பேருக்கு இரண்டாம் பரிசாகத் தலா ஒரு இலட்சம் ரூபா கிடைக்கவுள்ளது.

6/3/1/0 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 137 பேருக்கு மூன்றாம் பரிசாகத் தலா பத்தாயிரம் ரூபா கிடைக்கவுள்ளது.

3/1/0 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 1,401 பேருக்கு 4ஆம் பரிசாகத் தலா ஆயிரம் ரூபா கிடைக்கும்.

1/0 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 13,852 பேருக்கு 5ஆம் பரிசாகத் தலா நூறு ரூபா கிடைக்கவுள்ளது.

0 என்ற இலக்கத்தை மட்டும் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 1,38,185 பேருக்கு 6ஆம் பரிசாகத் தலா இருபது ரூபா கிடைக்கும்.

இடமிருந்து வலமான அமைப்பில் 8/3/6/3/1 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 13 பேருக்கு ஏழாம் பரிசாகத் தலா பத்தாயிரம் ரூபா கிடைக்கவுள்ளது.

8/3/6/3 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 140 பேருக்கு 8ஆம் பரிசாகத் தலா ஆயிரம் ரூபா கிடைக்கும்.

8/3/6 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 1,389 பேருக்கு 9ஆம் பரிசாகத் தலா நூறு ரூபா கிடைக்கவுள்ளது.

8/3 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 13,871 பேருக்கு பத்தாம் பரிசாகத் தலா ஐம்பது ரூபா கிடைக்கும்.

"U" என்ற ஆங்கில எழுத்தை மட்டும் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 55,365 பேருக்கு பதினோராம் பரிசாகத் தலா இருபது ரூபா கிடைக்கவுள்ளது. (ஐ)

### காணி விற்பனைக்கு உண்டு
அச்சுவேலி அரசினர் வைத்தியசாலைக்கு முன்பாக இரு கடைகளுடன் கூடிய 2 பரப்பு 06 குளிக்காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு:- 0776053998

### காணி விற்பனைக்கு
பலாலி வீதியில் கோண்டாவில் கிழக்கு சந்திக்கு அண்மையாக உதயன் சேவீஸ் ஸ்ரேசன் ஒழுங்கையில் இரு துண்டுக் காணிகள் மொத்தம் நிலப் பரப்பு 8¼ விஸ்தீரணம் கொண்ட காணி விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு:
0214591180, 0750398900

### கோழிக்குஞ்சு விநியோகம்
தரமான No. 1 பிறிமா புறொயிலர் கோழிக் குஞ்சுகள் நியாயமான விலையில் (100 ரூபா) 06.01.2011 காலை விநியோகிக்கப்படும். முன்பதிவு செய்யவும்.
(பின்பு 100 வீதம் இறைச்சிக் கோழிகள் திருப்பி வாங்கப்படும்)
நல்லூர் பாம் சென்ரர்
19, முருகேசர் லேன், நல்லூர்,

## வலி.வடக்கு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம்
### பணிநிலை வேண்டுகை

பதவி : முகாமையாளர்
வயதெல்லை :- 18-40 வரை
வேதனம் :- 8000 ரூபா

தகைமை:-

01) க.பொ.த (சாதாரண தரம்)வில் கணிதம், தமிழ் ஆகிய பாடங்களில் திறமைச் சித்திகளுடன் இரு அமர்வுகளுக்கு மேற்படாது ஆறு பாடங்களில் சித்தி.
02) கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியில் சாதாரணதரம் பயிற்சி பெற்று இருத்தல்
03) கணக்குப் பதிதல் அல்லது கணக்கு வைப்பு முறைகளிலான அனுபவத் தகைமை
04) சங்க எல்லைப் பரப்பினுள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை

விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய இறுதித் திகதி 14.01.2011

விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:
தலைவர்,
வலி.வடக்கு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம்,
7ஆம் கட்டை, மல்லாகம்.
(108330)

## 20ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
### முருகுப்பிள்ளை தர்மதாசன்
(கிராம சேவையாளர்-தரம் I)
திதி: 02.01.2011
தோற்றம் 05.04.1938
மறைவு 14.01.1991

பொங்கல் திருநாளில் எம்மை விட்டுப் பிரிந்து
ஆண்டுகள் இருபது ஆனாலும்
உங்கள் நினைவலைகளுடன்
வாழும் எம் நெஞ்சங்கள் ஆறவில்லை.

தங்களின் நினைவோடு வாழும்:
குடும்பத்தினர்.

வட்டு.வடக்கு,
சித்தன்கேணி. (சி/574154)

## 5ஆம் ஆண்டு நினைவலைகள்



அமரர்
### முனியையாபிள்ளை செல்லத்துரை
திதி: மார்கழி இருள் சேர் சதுர்த்தசி
தோற்றம் 28★09★1928
மறைவு 29★12★2005

அன்பின் உருவமாக ஆருயிர் தெய்வமாக
எல்லோர் வாழ்விற்கும் ஜோதியாக
ஒளி ஊட்டிய எம் ஐயாவே
எம்மைவிட்டு நீங்கி ஐந்து ஆண்டுகள் ஆகியும் ஐயா!
நீங்கவில்லை உம் நினைவு எம் மனதைவிட்டு
உங்கள் ஆத்மா சாந்தியடைய
ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள் பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

இல.57/37, திருமகள் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.
(108194)

With Your O/L
**Study Work in Live UK**

isbs
International School of business studies
www.isbs.org.uk
We are coming to see the future generations On
JAFFNA - 04th January 2011 Yarl Pardy Hotel, Amman Road
VAVUNIYA - 05th January 2011 SLRCS Conference Hall, Off Park Road
TRINCOMALEE - 06th January 2011 Sunshine Hotel, Green Road
BATTICALOA - 7th January 2011 Green Garden Hotel, Kallady
COLOMBO - 08th & 9th January 2011 Milestone Holdings, Col 4

Spot Admission for Level 6
No IELTS
Minimum Qualification
O/L, A/L with 2 passes & 2 years work experience

Next Intake February & May 2011

Spot Admission for Level 4 & 5
Minimum Qualification
O/L & IELTS 4 Band



Hot Line 0777 704242
Consultation and Services by
UK Office A&P Global Consultants
Sri Lanka Office Milestone Holdings
No 256, Galle Road,
abe CTH edexcel
Professionals in STUDENT & FAMILY VISA Consultants WITH OVER 8 YEARS EXPERIENCE

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண அரும்பொருள் காட்சியகத்துக்கு வித்திட்ட சேர் வில்லியம்ஸ் துவைனம்

**ஆவணப் பெட்டகம் 24**

**யாழ்ப்பாணக் கச்சேரியின் வரலாற்றை அறிந்து கொள்வோம்**

**1919.05.30**

சகல மாவட்டங்களிலும் கடமையாற்றும் அரச அதிபர்கள் உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரிகளாகவும் உதவி அரச அதிபர்கள், உதவி உணவுக்கட்டுப்பாட்டு அதிகாரிகளாகவும் கடமையாற்றுவர் என அரசு அறிவித்தது.

**25.10.1919**

கொன்ஸ்ரன்ரைன் விடுமுறையில் செல்ல எச்.டபிள்யூ கொட்றிங்டன் (H.W.Codrington) அரச அதிபராக நியமிக்கப்பட்டார். இவர் (A Short History of Ceylon) நூலையும் எழுதியுள்ளார்.

**15.02.1920**

பங்கீட்டுக்கு அரிசி விநியோகிக்கும் திட்டம் யாழ்ப்பாணத்தில் அறிமுகம் செய்யப்பட்டது. இந்தப் பங்கீட்டு அரிசி, கூப்பன்அரிசி என மக்களால் அழைக்கப்பட்டது.

**27.02.1920**

கொன்ஸ்ரன்ரைன் இங்கிலாந்திலிருந்து திரும்பி மீண்டும் அரச அதிபராகப் பதவியேற்றார். 29.02.1920 அன்று இவர் தனது கடமைகளைப் பொறுப்பேற்றார்.

**09.11.1921**

அன்று எல்.டபிள்யூ. சி.ஸ்கிறேடர் (L.W.C. Schrader) அரச அதிபராக நியமிக்கப்பட்டார்.

**ஒக்ரோபர் 1922**

கொன்ஸ்ரன்ரைன் மீண்டும் அரச அதிபராகப் பதவியேற்றார்.

**நவம்பர் 1922**

ஆர்.வை.டானியல் (R.Y.Daniel) அலுவலக உதவியாளராக (O.A) நியமிக்கப்பட்டார்.

**மார்ச் 1923**

பி.சி.நிக்கொலஸ் (P.C. Nicholas) அலுவலக உதவியாளராக நியமிக்கப்பட்டார்.

**09.06.1923**

அன்று ஆளுநர் மனிங் பாரியார் சகிதம் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தார். யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்திலும் றிட்ஜ்வே மண்டபத்திலும் ஆளுநருக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது. முற்றவெளியில் நடைபெற்ற கூட்டத்திலும் ஆளுநர் கலந்துகொண்டார்.

இலங்கைக் கல்வி முறையில் சீர்திருத்தம் செய்தவர் ஆளுநர் மனிங். இவரது கல்விச் சீர்திருத்தம் மன்னிங் சீர்திருத்தம் என அழைக்கப்படுகிறது.

23.07.1923 ஆம் திகதி முதல் ஸ்கிறேடர் அரச அதிபராக நியமிக்கப்பட்டார். 25.07.23 முதல் இவர் தனது கடமையைப் பொறுப்பேற்றார். ஸ்கிறேடர் அரச அதிபராகப் பதவியேற்க முன்னர் எச்.ஏ.பேர்டன் என்பவரும் சிறிதுகாலம் அரச அதிபராகக் கடமையாற்றியதாக இந்துசாதனம் பத்திரிகை கூறுகிறது.

**28.04.1924**

அன்று கொன்ஸ்ரன்ரைன் அரச சேவையிலிருந்து ஓய்வுபெற்றார். ஓய்வுபெறும் போது இவருக்கு மூன்றுமாத முழுச் சம்பளம் வழங்கப்பட்டது.

23.10.1868 அன்று பிறந்த கொன்ஸ்ரன்ரைன் 09.10.1891 அன்று கொழும்புக் கச்சேரியில் கடேற் உத்தியோகத்தராக இணைந்து கொண்டார். வடமத்திய மாகாணம், சப்ரகமுவ மாகாணம் ஆகிய மாகாணங்களில் அரச அதிபராகவும் பொலிஸ் நீதவானாகவும் கடமையாற்றிய கொன்ஸ்ரன்ரைன் யாழ்ப்பாணத்திலிருந்து திருவாங்கூருக்குச் சென்ற புகையிலைத் தூதுக் குழுவுக்குத் தலைமை வகித்துச் சென்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.



அரச அதிபர் ஹோர்ஸ்பேர்க் (Horsburg)

யாழ்ப்பாணப் புகையிலை திருவாங்கூருக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது பற்றி ஆரம்பத்திலேயே பார்த்துள்ளோம். திருவாங்கூரில் யாழ்ப்பாணம் ஒரு புகையிலைக்கு (ஒரு கண்டி புகையிலைக்கு 900 ரூபா வரி விதிக்கப்பட்டது. இந்த வரியை 90 ரூபாவாகக் குறைக்க வழிச் செய்தவர் அரச அதிபர் கொன்ஸ்ரன்ரைனே. சேர்.கனகசபை, சாம்சபாபதி ஆகியோரும் இந்தத் தூதுக்குழுவில் இடம்பெற்றிருந்தனர்.

**31.07.1924**

அன்று எப்.ஜே. ஸ்மித் (F.J. Smith) அரச அதிபராக நியமிக்கப்பட்டார். ஸ்கிறேடர் அரசஅதிபராகப் பதவியேற்ற போது முதலில் ஸ்மித்தின் பெயரே சிபார்சு செய்யப்பட்டது. என்ன காரணமோ தெரியவில்லை பின்னர் ஸ்மித்தின் நியமனம் இரத்துச் செய்யப்பட்டு ஸ்கிறேடர் அரச அதிபராக நியமிக்கப்பட்டார்.

**தாண்டவன்**

(வளரும்...)

---

# உணவுத் தேவையில் பல்பயன்தரும் தென்னையும் பனையும் மருத்துவத்துக்கும் பெருமளவில் பயன்படுத்தப்படுபவை

**நலம்தரும் தெய்வீக மூலிகைகள்**

**பனை**

வேறுபெயர் - தாலம்,தாளி, ஏடகம், போந்தை, பெண்ணை, புற்பதி, புற்றாளி.
தாவரவியற் பெயர்- Borassus Flabelifer (பேரேசஸ்ஃ பிளபேல்லிஃபேர்)
குடும்பம்- Palmae (பாமே)
சிங்களப் பெயர் - தல்
சமஸ்கிருதப்பெயர்- தால
ஆங்கிலப் பெயர்- Palmyrah Palm

பூலோகக் கற்பகதருவான பனைமரம் விஸ்வாமித்திர மகாமுனிவரால் சிருஷ்டிக்கப்பட்டதென்பர். பனை மரம் என்று அழைக்கப்படுகின்ற போதிலும் இது புல் வகுப்பைச் சேர்ந்தது என்றும் புற்களுக்கு அரசன் போன்றது (புற்பதி) என்றும் பழந்தமிழ் நூல்கள் கூறுகின்றன. இத்தகு சிறப்பு வாய்ந்த பனையின் பயன்பாடு இந்து வழிபாட்டிலும், கிரியைகளிலும் அதிகம் இல்லை என்று பலரும் கூறுவர். அது தவறு. கார்த்திகை விளக்கீட்டின் போது ஆலயங்களில் 'சொக்கப்பனை' கொளுத்துவது வழக்கமல்லவா? பனை மரமொன்றை நடுவில் நாட்டி, அதைச் சுற்றி பனையோலைகள் கட்டித் தீ மூட்டப்படுவதே 'சொக்கப்பனை'யாகும். சொக்கநாதனான சிவபெருமானின் தீ வடிவத் தோற்றமாகவே சொக்கப்பனை காட்சியளிக்கிறது.



அதுமட்டுமல்ல இந்துக்களின் புனிதமான மங்கல நாணான தாலிக்கும் தாலி என்ற பெயரைத் தந்தது பனையேதான் என்று கூறியுள்ளார் காஞ்சிப் பெரியவர். அதாவது முற்காலத்தில் காதணி, கழுத்தணிகள் என்பன பனை ஓலையால் செய்யப்பட்டு அணியப்பட்டன. பனைக்குத் தால என்றும் ஒரு பெயருண்டு. தால என்பதிலிருந்தே தாலி என்ற சொல் ஏற்பட்டிருக்க வேண்டும் என்பது சான்றோர் கருத்தாக உள்ளது.

பனையில் ஆண்,பெண் என்ற வேறுபாடுகள் உள்ளது. பல அடிகள் வரை உயர்ந்து வளரும். பெரும்பாலும் காய்க்கத் தொடங்கும் போதுதான் ஆண் மரமா?, பெண் மரமா? என அடையாளங் காணமுடியும்.

இதன் ஓலை, பூ, நுங்கு, பழம், கிழங்கு என்பன மருத்துவத்தில் பயன்படுகின்றன. காய்ந்த பனையோலையின் அடியில் காணப்படும் மண்ணிறமான பொடியை (குருகு) எடுத்து வெட்டுக் காயங்களில் தூவினால் குருதிப் பெருக்கு உடன் நிற்கும். பூவைச் சுட்ட சாம்பலை புண்களில் தூவினால் அவை மாறும். நுங்கைச் சாப்பிட்டுவரத் தாகம் தணியும். வேர்க்குருவுக்கு நுங்கைப் பூசக் குணமாகும். பனம்பழத்தைச் சுட்டுச் சாப்பிட்டு வர மலச்சிக்கல், மூலக் கடுப்பு நீங்கும்.

ஒடியல் மாவில் பிட்டு, கூழ் செய்து சாப்பிட்டு வர மலச்சிக்கல், வயிற்றுப் பொருமல் என்பன நீங்கும்.

பனையிலிருந்து எடுக்கப்படும் பதநீரை 30-60 மிலீ. அளவில் தினமும் பருகிவர பித்த வெட்டை, வெள்ளை சாய்தல் என்பன நீங்கி தாதுவிருத்தியும் ஏற்படும். தாகமும் தணியும். பனை வெல்லம், பனங்கட்டி தமிழ் மருத்துவத்தில் முக்கிய அனுமான மருந்தாகும். இது முத்தோடங்களால் ஏற்படும் பிணிகள், நாச்சுவையின்மை, குன்மம் என்பவற்றைப் போக்க வல்லது.

சுக்கு, நிலக்குமிழ், பனை வெல்லம் என்பவற்றைச் சேர்த்துக் குடிநீர் செய்து தினமும் காலையில் குடித்து வர மாந்தம், தோடம், சோகை முதலியன தீரும்.

பனங் கற்கண்டு/ கல்லாக்காரம் குழந்தை மருத்துவத்தில் பெரிதும் பயன்படுகிறது. இதைத் தனித்தாவது பிற மருந்துகளுக்கு அனுமானமாகவாவது கொடுத்துவர மலச்சிக்கல், வயிற்றுப் பொருமல், நீர்ச்சுருக்கு, தாகம் என்பன நீங்கும்.

புழுக் கொடியலை மாவாக்கி தேங்காய்ப்பூ, சீனி சேர்த்துச் சாப்பிட்டு வர உடல் பருமனடையும் வன்மை பெறும். பனை மரத்தில் இடையிடையே வெண்ணிறமாகத் தேமல் படர்ந்தது போலிருக்கும். அவ்விடத்தில் கல்லால் குத்தினால் சாறு/பால் வடியும். அதை எடுத்து படர் தாமரை என்னும் சரும நோய்க்குப் பூசி வர மாறும்.

**தென்னை**

வேறுபெயர்: தெங்கு, நாளிகேரம், முக்கண்ணன்,புல்மரம்.
தாவரவியற் பெயர் - கொக்கசு நியூசிபெரா (Cocos nucifera)
குடும்பம் - பாமே (Palmae)
சிங்களப் பெயர் - பொல்
சமஸ்கிருதப் பெயர் - நாளிகேரம்
ஆங்கிலப் பெயர் - Coconut

இது சிவபெருமானிடம் இருந்து உண்டானதாகவும் அதனாற்றான் தேங்காயில் மூன்று கண்கள் உள்ளதாகவும் கூறப்படுகிறது. இந்துக் கிரியைகள் பெரும்பாலும் தேங்காய் உடைத்தே ஆரம்பிக்கப்படுகின்றன. தென்னையில் பல இனங்களுண்டு. இதன் இலை, குருத்து, பூ, காய், இளநீர், கள், சிரட்டை, கொப்பரா முதலியன மருத்துவத்தில் பயன்படுகின்றன.

இளந்தென்னங் குருத்தைச் சாப்பிட்டு வந்தால் சளி, இரத்த மூலம் என்பன நீங்கும். மடல் விரியாத தென்னம் பூம்பாளையை எடுத்து உள்ளே முத்துப் போன்றிருக்கும் மொக்குகளை எடுத்து, ஊற வைத்த அரிசியுடன் சேர்த்திடித்து மாவாக எடுத்து பிட்டு செய்து சாப்பிட்டு வர பெண்களுக்கு ஏற்படும் பெரும்பாடு என்னும் அதிக இரத்தப்போக்கு நீங்கும். கழிச்சல், வயிற்றுக்கடுப்பு, சீதபேதி என்பனவும் நீங்கும். இளந்தேங்காய் மட்டையை இடித்துப் பிழிந்த நீரை/ சாற்றை 60-100 மி.லீ வரை காலையில் பருகிவர மிகையாகச் சிறுநீர் கழிதல், மதுமேகம், வயிற்றுக் கடுப்பு என்பன தணியும். தேங்காய்ப்பால், வெங்காயம், கற்கண்டு சேர்த்துக் குழம்பாகக் காய்ச்சி அருந்தி வர வரட்டிருமல், தொண்டை கரகரத்தல் என்பன குணமாகும்.

தினமும் மதிய உணவுக்கு மேல் செவ்விள நீர், பருகிவர நீர்க்கட்டு, நீரெரிவு, தாகம், உடல் வெப்பு என்பன நீங்கும்.

உடல் வன்மை பெறும். குளிர்ச்சியுண்டாகும். தேங்காய் எண்ணெயைத் தனித்தாவது, பிற மூலிகைகள் சேர்த்துக் காய்ச்சியாவது எடுத்து தலைக்கு வைத்து வர பொடுகு நீங்கும். தலை மயிரும் நன்கு வளரும்.

தேங்காய்ச் சிரட்டையிலிருந்து தயாரிக்கப்படும் தைலத்துக்குச் சிரட்டைத் தைலம் என்று பெயர். இது வாத வீக்கங்கள், பிடிப்புகள், சுளுக்கு முதலியவற்றுக்குப் பூச அவை மாறும்.

தென்னையில் இருந்து பெறப்படும் உடன் கள் காலையில் 60-100 மிலீ அளவில் பருகிவர வாயவியல் மாறும். கொப்பரா, வேப்பம் வித்து, இலுப்பைக் கொட்டை என்பவற்றை எடுத்துத் துவைத்து ஒரு துணியில் பொட்டளியாகக் கட்டித் தோசைக் கல்லில் வைத்துச் சூடு காட்டி வாதநோய்கள், மூட்டு வாதம், தசைப்பிடிப்பு என்பவற்றுக்கு ஒத்தடம் கொடுத்துவர வேதனை, வலி குறையும்.




(தொடரும்...)

Dr. சே.சிவசண்முகராஜா M.D (S),
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்தமருத்துவத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொற்சிலம்பம் - போட்டி இல: 144



அனுப்புபவர் பெயர்:............................................

விலாசம்:............................................

............................................

கையொப்பம்:............................................

### இடமிருந்து வலம்

1.உலக வாழ்க்கை ஆரம்பம் இதனுடன்.
4. ரக.
6. பர்வதம்.
7.ஒரு பூ மரம்.
8.பெண்கள்.
10. மரவேலை செய்பவர்கள்.
11. மோட்டார் சைக்கிள் ஓட்டிக்குத் தேவை.
13.கத்தி அழும்.
15. திருட்டு.
16.அரிசியைத் தீட்டிப் பெறுவது.
17.புண்ணியம் அல்ல.
18. அப்பாவி அல்லன்.
19. கொத்தாகக் காய்த்திருப்பது.
20.காலப் போக்கால்/நிரம்பலால்/மூப்பால் வருவது

### மேலிருந்து கீழ்

1.சிறப்பு/அதிவிசேடம் என்பதைக் குறிக்கும்.
2.யுத்த பூமி.
3.பிடிப்பதற்கு விரிப்பது
4.சகிக்க முடியாத வக்கிரமானது.
5.முளைவிடும் இலை.
7.பயம் நீக்கு.
9. முண்டத்துக்கு மேல் உள்ளது.
10. பிழை.
12.வாசலில் இருப்பது.
14.நள்ளிரவு.
15: துன்பம், துயரத்தைத் தருவது.
17.தின்மத்துக்கும் திரவத்துக்கும் இடைப்பட்ட நிலை.
18. அரைவாசி.

★ வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 142 இற்கான சரியான விடைகள் வருமாறு:

### இடமிருந்து வலம்

(1)செண்பகம். (4)அக.(6)தடு. (7)கத்தி.(8)தகர்ப்பு. (11)தரை. (12)மிடி. (13)புத்தர்.(16) திரு. (18)கத்தரி. (20)காடு. (21)மந்திரி. (22) அரம். (23)காதை. (24)சுண்ணாம்பு.

### மேலிருந்து கீழ்

(1)செந்தமிழ். (2)பதர். (3)கடுப்பு. (4)அத்தர். (5)கதிரை (9)கடி. (10)புத்திரி. (14)தரு. (15) உத்தி. (17)உடும்பு. (18)கந்தை. (19)தரிசு. (20)காரம். (21)மகா.(22)அணா

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 142 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல்மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

1 ஆம் பரிசு — **செ.சந்துனராசா,** இல.33 பொலிஸ் நிலைய வீதி, நுணாவில் கிழக்கு சாவகச்சேரி.

2 ஆம் பரிசு — **இ.ரதப்பிரியா,** இல.165 அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

3 ஆம் பரிசு — **செல்வி.ர. சர்வசாளினி,** யாழ்ப்பாணக் கல்லூரி, தரம்-10B, வட்டுக்கோட்டை.

4 ஆம் பரிசு — **இ.கேதாரணி,** நெல்லியோடை அம்மன் வீதி, அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.

5 ஆம் பரிசு — **திருமதி ச.இராஜேஸ்வரி,** பாரதிலேன், சங்கானை.

### பாராட்டுப் பெறுவோர்

(1) **சி.இளங்கோராசன்,** சம்மட்டியோலை, உடுவில் வீதி, மானிப்பாய்.

(2) **ந.ஜெயகணேசன்,** பண்டித்தாழ்வு, காரைநகர்.

(3) **செல்வி ரா.உஷாநந்தினி,** 'சாருஜா' சிவன் கோயில் வீதி, புத்தூர்.

பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.
யாழ். மாவட்டத்தைத் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களிலிருந்து பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்பட்டோருக்கான பணப் பரிசில்கள் காசோலை மூலம் காலக்கிரமத்தில் அவர்களது விலாசத்துக்குப் பதிவுத் தபால்மூலம் அனுப்பிவைக்கப்படும்.

### போட்டி விதிகள்

*1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.*
*2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்*
*3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.*
*4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவான தாகும்.*
*5. வெற்றி பெறும் முதல் ஐந்து பேர்களுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200/=, ரூபா150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.*
*6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,*

**சொற்சிலம்பம் போட்டி இல. 144**

*நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்)லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், 12.01.2011 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படவேண்டும்.*

*7. சொற்சிலம்பம் போட்டி இல.143இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 16.01.2011 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.*

# சொந்தமில்லாத.....

*(13 பக்கம் தொடர்ச்சி...)*

இந்த விதி எல்லோருக்கும் பொதுவானது. பாதுகாப்புத் தேடி ஊர் ஊராய் அலைதல்; பதுங்கு குழி வாழ்க்கை ; உணவும் நீரும் அருந்தலாகிப் போன பட்டினி வாழ்வு; எங்கே போய் முடியும் என்ற ஏம்பலிப்பு.

உணவுக்காகவும் உடலியற் தேவைகளுக்காகவும் வெளியே தலை காட்டியவர்கள் குண்டு மழையில் நனைந்து உடல் சிதறிப் பலியாகினர். எங்கும் ஓலம்; எங்கும் அவலம்; எங்கும் பிணக் குவியல்கள்; எங்கும் இரத்தவாடை.

முகுந்தனும் சுமதியும் கூட குழந்தைகளையும் சுமந்தபடி விதியின் பாதையில் எற்றுண்டு அலைந்தனர். எத்தனை எத்தனை கொடுமை நிறைந்த சம்பவங்கள், காட்சிகள்.

குடும்பமாகவே ஒரு கணத்தில் உடல் சிதறி மடிந்தவர்கள்,குழந்தை பிறந்து இரத்த வாடையும் ஈரமும் காயும் முன்னரே 'ஷெல்' பட்டு மடிந்த தாயும் குழந்தையும், நடக்க முடியாமல் பின் தங்கியதனால் குண்டு மழையில் சிக்கி மடிந்த முதியவர்கள், யாரையும் எவரும் காப்பாற்ற முடியாத அவலம், தங்கள் தங்கள் உயிரே பெரிதென எண்ணி ஒவ்வொருவரும் ஓடிக் கொண்டிருக்கும் அவலம், மனிதம் செத்துக் கொண்டிருந்தது. காயம் பட்டுத் துடித்துக் கொண்டிருந்த ஒரு பெண்ணைக் காப்பாற்ற வேண்டி அவளிடம் ஓடிச் சென்ற வேளை மீண்டும் அவ்விடத்தில் வந்து வீழ்ந்து வெடித்த ஷெல்லில் சுமதி அந்த இடத்திலேயே சிதறிப் போனாள். முகுந்தன் கால்களை இழந்து முனகிக் கொண்டிருந்தான்.

தெய்வாதீனமாகத்தான் அவ்விடத்துக்கு வந்தேன். மூன்று குழந்தைகளும் முகுந்தனை நெருங்கி நின்று அழுது கொண்டிருந்தார்கள். அருகில் உருத் தெரியாமல் சுமதியின் உடல். என்ன கொடுமை!

என்னைக் கண்டதும் அந்த வேளையிலும் முகுந்தனின் கண்களில் சிறு ஒளி. குழந்தைகள் என்னைச் சுற்றி என் கால்களைக் கட்டிப் பிடித்துக் கொண்டு 'அம்மம்மா' என்று அழுதார்கள்.

முகுந்தன் களைக்கக் களைக்க, அந்த வேளையிலும் தன் அவலங்களையெல்லாம் சொல்லிக் கொண்டிருந்தான். எனக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. இரத்தம் பெருகிக் கொண்டிருந்தது. சொற்ப நேரத்திலேயே அவனின் உயிரும் பிரிந்தது. ஒரு கணம்தான் அந்த வேதனை. உடனடியாகவே உயிர் பற்றிய பயம் தலை தூக்க, பிள்ளைகளையும் இழுத்துக் கொண்டு ஓடினேன். கடைசிக் குழந்தை கைக்குழந்தை; தன் கைகளால் என் இடுப்பைச் சுற்றிக் கொண்டது. மற்றைய இரு பிஞ்சுகளும் என்னோடு இழுபட்டார்கள்.

அந்தப் பிரதேசத்தைவிட்டு எல்லோரும் கட்டாயமாக வெளியேறிவிட வேண்டும் என்ற அறிவிப்பு வந்ததுமே சனத்தோடு சனமாக நானும் குழந்தைகளை அழைத்துக் கொண்டு சென்றேன்.

முட்கம்பியால் சுற்றிவர வேலி அடித்த கூடாரமொன்றுள் முகாம் வாழ்க்கை. வெயில், மழை,குளிர் எல்லாம் சர்வசாதாரணமாகிப் போக குழந்தைகளையும் அணைத்துக் கொண்டு கடந்த கால நினைவுகளில் மூழ்கிப் போய்க் கண்ணீரும் கம்பலையுமாக என் வாழ்வு இந்த ஒன்றரை வருடங்களாகக் கழிந்து போய்க் கொண்டிருக்கின்றது.

சவூதியில் இருக்கும் என் பிள்ளையின் நினைவு அடிக்கடி தலை தூக்கினாலும் இந்த மூன்று பிள்ளைகளினதும் அவலம் என்னை வாட்டி வதைக்க இவர்களை எப்படிக் காப்பாற்றுவது என்ற யோசனையில் இவர்களைச் சுற்றியே என் நினைவுகள் வட்டமிடுகின்றன.

இன்று காலையில்தான் சில அதிகாரிகள் வந்து சொந்த இடத்திலேயே என்னை மீண்டும் குடியேற்ற அழைத்துப் போக வருவதாகச் சொல்லியிருந்தார்கள். அப்போது முதல் இந்தக்கணம் வரை இக்குழந்தைகளைப் பற்றிய யோசனையே என்னை அரித்துக் கொண்டிருக்கிறது.

இவர்கள் மூவரையும் என்னால் காப்பாற்ற முடியுமா?

மனித சஞ்சாரமே குறைந்த மண்ணில் என் முன்னைய தொழிலைப் பார்க்க முடியுமா? இந்த மூன்று குழந்தைகளையும் அழைத்துச் சென்ற வேளையில் எனக்கு ஏதாவது நடந்துவிட்டால் இக்குழந்தைகளின் கதி?

ஒரு தீர்மானத்துக்கு வந்தவளாய் கைக் குழந்தையைத் தூக்கிக் கொள்கிறேன். ஏனைய இரு குழந்தைகளையும் அணைத்து முத்தமிடுகிறேன். அவர்களுக்கு என்ன விளங்கப் போகிறது? அலங்க மலங்க என்னை விழித்துப் பார்க்கிறார்கள்.

''மீனாட்சி, மீனாட்சி...''

என்னைப் பெயர் சொல்லி அதிகாரிகள் அழைக்கிறார்கள்.

கைக்குழந்தையுடன் நான் மெல்ல நகருகிறேன்.

என்னைச் சுற்றி என் கால்களைப் பிடித்துக் கொண்டு நிற்கும் இரு குழந்தைகளினதும் கைகளை மெல்ல எடுத்து விடுகிறேன்.

''அம்மம்மா இப்ப வருவன், இங்கை நில்லுங்கோ குஞ்சுகள்..'

என்னை அறியாமலே பீறிட்டுக் கொண்டு வரும் கண்ணீரை அடக்க மாட்டாதவளாய் அவர்களைக் கலங்கிய கண்களோடு நோக்குகிறேன்.

இந்த உலகத்தின் சூது, வாது தெரியாதவர்களாய் அக்குழந்தைகள் என்னையே 'குத்திட்டு' பார்த்துக் கொண்டு நிற்கிறார்கள்.

எனக்கு என்ன செய்வதென்றே தெரியாதிருக்கிறது.

இந்தக் குழந்தையை வளர்த்து, எனக்கு ஒன்றென்றால் யாரிடமாவது கையளிக்கலாம். இக்குழந்தைக்கு விதியிருந்தால் என் பிள்ளையிடமே சேர்ப்பிக்கலாம். இக் குழந்தையை நான் தத்தெடுத்தது போல மற்றப் பிள்ளைகளுக்கும் யாராவது வாழ்வு கொடுக்க முன்வருவார்கள்.

என் நடையைச் சற்று விரைவாக்கிக் கொண்டு, காத்திருக்கும் பஸ்ஸை நோக்கிச் செல்கின்றேன்.

தூரத்தில் அந்த இரு குழந்தைகளும் என்னைப் பார்த்துக் கொண்டே நிற்பது தெரிகிறது.

மீண்டும் என்னிடத்தில் இறை நம்பிக்கை தொற்றிக் கொள்கிறது.

'கடவுளே, இவர்களைக் காப்பாற்றும்!'

என் அந்தராத்மா மன்றாட்டமாய் அவனிடம் இறைஞ்சுகிறது.

*(முற்றும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் கதிர்

## பெற்றோர்

அப்பாவும் அம்மாவும்
காலை எழுந்தவுடன் அன்புடனே
அரவணைத்து பள்ளி செல்லவிட்டிடுவீர்!

மாலைதனில் என்னுடன் விளையாடி
இரவுதனில் பண்புடனே பாடம் சொல்லித் தந்திடுவீர்!
அன்புள்ள அம்மா அப்பாவே!

செல்வரஞ்சன் யட்சனா,
2பி,
யா/ மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்.

## விடுகதைகள்

1.ஊருக்கு நாட்டாண்மைக்காரன் சாப்பிட்ட இலையை எடுக்க மாட்டான் அவன் யார்?
நாய்

2.ஊசி போட்ட வைத்தியர் ஊமை போலப் போகிறார் அவர் யார்?
தேள்

3.என்னிடம் நாடு உண்டு,ஆனால் வீடு இல்லை, கடல் உண்டு ஆனால் மீன் இல்லை, மலை உண்டு ஆனால் பறவைகள் இல்லை, காடு உண்டு ஆனால் மரம் இல்லை. அது என்ன?
உலகப்படம்

4.என்னைப் பார்த்தால் உன்னைக் காட்டுவேன் அது என்ன?
கண்ணாடி

5.ஒற்றைக் கால் மனிதனுக்கு ஒன்பது தலை அது என்ன?
மரம்

6.எங்கிருப்பான் தெரியாது, எப்படியிருப்பான் புரியாது, என்ன சொன்னாலும் திருப்பிச் சொல்லுவான் அது என்ன?
எதிரொலி

தி.உமைபாலா,
தரம் 3அ,
யா/ யாழ்ப்பாணக் கல்லூரி.

## அரசனும் துறவியும்

கிரேக்க நாட்டுச் சிறந்த மன்னனாகிய மகா அலெக்சாண்டர் என்பவன் ஒருநாள் இந்தியத் துறவியைக் காணச்சென்றான். அந்தத் துறவி மண், பொன், பெண் மூவாசைகளையும் துறந்து தூயவாழ்வை நடத்தி வந்தார். அவருடைய எளிய வாழ்க் கையைக் கண்ட அரசன் அடிகளாரை விளித்து நான் உலகை வென்ற மகா அலெக்சாண்டர். உமக்கு வேண்டியதைக் கேளும் தருகிறேன் என்றார். நீர் எவராக இருந்தால் என்ன. அந்தச் சூரிய ஒளியை அழிக்க உம்மால் முடியுமா? எனக்கும் சூரியனுக்கும் இடையில் ஒளி மறையும்படி நில்லாமல் ஒதுங்கி நில்லும் என்று துறவி கூறினார். அதனைக் கேட்ட அலெக்சாண்டர் அதிர்ச்சியும் வியப்பும் பெற்றார். நான் அலெக்சாண்டராகப் பிறந்திராவிட்டால் இந்தத் துறவியாரைப் போல் உலகை நீத்துத் துறவு பூண்டு உன்னத பதவியைப் பெற்றிருப்பேன் என்று அருகில் நின்றவர்களிடம் கூறினார்.

செ.ஜெரோசன்,
தரம்6 ஏ,
சென்.சாள்ஸ் மகாவித்தியாலயம்.

## உன்னதமான குணம்

அன்று சனிக்கிழமை கண்ணன் நண்பர்கள் இருக்கும் இடத் துக்குச் சென்றான். நண்பர்கள் அவன் வருகைக்காகக் காத்தி ருந்தனர். பின் நண்பர்களும் கண்ணனும் மைதானத்திற்குச் சென்றனர். நண்பர்களில் ஒருவன் ''இன்று கிரிக்கெட் விளை யாடுவோம்'' என்று கூறினான். அதற்கு அனைவரும் சம்மதித்த னர். முகுந்தன் துடுப்பையும் பந்தையும் எடுத்து வந்தான். ராஜா பந்தை வீசினான். குமரன் துடுப்பால் பந்தை அடித்தான். அது உருண்டு கயிற்றுக்கு வெளியே சென்றது. குமரனின் அணி நான்கு ஓட்டங்களைப் பெற்றது. அதற்காக அவனின் குழு வீரர்கள் அவனைப் பாராட்டினார்கள்.இவ்வாறு விளையாட்டு வீரர்கள் அனைவரும் ஆட்டம் இழந்த பின்னர் மற்றைய அணி துடுப்பெடுத்தாடியது. குழுத்தலைவனான கண்ணன் பந்தை அடித்தான். அது மேலெழுந்து சென்று கொண்டிருக்கையில் கண்ணன் ஓட்டங்களை ஓடத் தொடங்கி அரைவாசியில் நின்றான். அதைக் கண்ட எல்லோரும் அங்கு வந்தனர். ''ஏன் நிற்கின்றாய்'' என்று கேட்டனர். அவன் நிலத்திலிருந்த ஓர் மோதிரத்தை எடுத்தான். நண்பர்களில் ஒருவன் ''அடிச்சுதடா லக்'' என்று கூறினான். ''நண்பர்கள் அனைவரும் மோதிரத்தை என்னிடம் தா, என்னிடம் தா'' என்று கேட்டனர். அதற்கு கண்ணன் இச்செயல் பிழையானதாகும் என்று கூறினான். ஆனால் நண்பர்களோ அதற்கு மறுப்புத் தெரிவித்தனர். நீ என்ன பேய்க்கதை கதைக்கின்றாய் என்று கேட்டனர்.அதற்கு கண்ணன் ''இது யாருடையதோ தெரியவில்லை. நாம் இதை எவ்வாறு எடுப்பது? பொலிஸ் நிலையத்தில் ஒப்படைப் போம்'' என்று கூறினான். நண்பர்களாலும் அவன் பேச்சை மீற முடியவில்லை. அதற்கு ஒப்புக் கொண்டனர். அனைவரும் பொலிஸ் நிலையத்துக்குச் சென்று அதை ஒப்படைத்தனர். அவர்களின் செயலைப் பார்த்த பொலிஸ் அதிகாரி அவர் களைப் பாராட்டினார். அப்பொழுது பொலிஸ் நிலையத்துக்கு ஒருவர் வந்தார். தனது மோதிரத்தைக் காணவில்லை என்று கூறினார். அதைக்கேட்டு அவரின் அடையாளங்களின்படி அவரி டம் பொலிஸ் அதிகாரி மோதிரத்தை ஒப்படைததார். அவர் கண்ணனுக்கும் நண்பர்களுக்கும் நன்றி கூறிச் சென்றார்.

'நேர்மையே வெற்றியின் அடித்தளம்'

க.ரேணுஜன்,
தரம் 5ஏ,
யா/மகாஜனக் கல்லூரி.

## பொதுஅறிவு

1. ஆமையின் ஆயுட் காலம் எவ்வளவு?
   120 ஆண்டுகள்
2. உலகின் மிகப்பெரிய புத்தகம் உள்ள நாடு?
   ஸ்கொட்லாந்து
3. இலங்கைத் தேயிலையை வாங்கும் ஒரு நாடு எது?
   இங்கிலாந்து
4. பக்கிங்ஹாம் அரண்மனை எங்குள்ளது?
   இலண்டன்
5. குளோனிங் முறையின் மூலம் முதன் முதலில் உருவாக்கப்பட்ட உயிரினம் எது?
   டொலி எனும் செம்மறி ஆடு
7. இந்திய கிரிக்கெட் அணியிலிருந்து நீக்கப்பட்ட முன்னாள் கப்டன் யார்?
   சௌரவ் கங்குலி.

ஜெய்க்குமரன் வைஸ்ணவன்,
தரம் 9சி,
யா/ மானிப்பாய் இந்துக் கல்லூரி.

## விடை தெரியுமா? 88

1. உலகில் நான்கு வரிகளில் தேசிய கீதத்தைக் கொண்ட நாடு?
2. இலங்கையில் முதல் தோன்றிய பத்திரிகை?
3. இலவசக் கல்வி ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு?
4. பித்தப்பை இல்லாத விலங்கு எது?
5. அதிகநீர் அருந்தும் பறவை எது?

**விடை தெரியுமா?**

தெரிந்தால் 08.01.2011 இற்கு முன்னர் சரியான விடைகள் அனுப்பும் 6 மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் ரூபா100 வீதமும் ஏனைய மூவருக்கும் தலா ரூபா 75 வீதமும் பரிசுகள் நூல்களாக வழங்கப்படும்.

## உங்களுக்கும் பரிசில்கள்


**விடை 86**

1. எஸ்.ஹாஸ்பீன்
2. 55 இலட்சம்
3. நோர்வே
4. லேரி திலிமென்
5. பெல்ஜியம்

**வெற்றிபெற்றோர் விவரம்**

1. க.புவந்தா,
   யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.
2. து.புவித்தா,
   தரம் 8ஏ,
   யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை.
3. சூ.பிரியதக்ஷி,
   தரம் 6ஏ,
   யா/தம்பசிட்டி மெ.மி.த.க.பாடசாலை.
4. சா.பபிதா,
   தரம் 8ஏ,
   யா/கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தியாலயம்.
5. சி.லதாங்கி,
   தரம் 2,
   யா/ துன்னாலை காசிநாதர் வித்தியாலயம்.

## மாணவத் தாரகை



ப.லஜீபன்,
தரம் 7,
யா/நயினாதீவு சிறீகணேச கனிஷ்ட வித்தியாலயம்.

தயாபரன் டினோஜன்,
தரம்5,
யா/சுதிரிப்பாய் சுப்பிரமணிய வித்தி.






ஜெ.மாதவன்,
தரம் 4ஏ,
யா/கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை.

கி.ஷாமிளா,
தரம் 8 எப்,
யா/இந்து மகளிர் கல்லூரி.



சி.விதுசன்,
தரம் 7,
யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கணிதம் (பிரத்தியேக வகுப்பு)**

தரம் 6 முதல் O/L வரை கணிதம் பல வருட அனுபவமிக்க ஆசிரியரால் வீடு வந்து தனி / குழு வகுப்புகள் சிறந்த முறையில் கற்பிக்கப்படும்.

(108244) T.P: 0779370228

**தேவை**

யாழ். நகரில் உள்ள தளபாட ஸ்தாபனத்துக்கு விற்பனையாளர்கள் தேவை. (ஆண்)

ஜமுனா பார்னிச்சர்,
181, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
T.P 2221092, 0777422604

**இறைச்சிக் கோழி விற்பனை**

புறொயிலர் கல்பேட் சுத்தம் செய்து (புறொயிலர் சுத்தம் செய்தது 1 Kg 450 ரூபா) காலை 6 மணி தொடக்கம் இரவு 8 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.

நல்லூர் பாம் சென்ரர்
(108303) 19, முருகேசர் லேன், நல்லூர்.


## வயாவிளான் கிராம அபிவிருத்திச் சங்கம், மின்மீன் மன்றம் என்பவற்றை மீள ஆரம்பித்தல்

21வருடங்களின்பின் வயாவிளான் கிராம அபி விருத்திச் சங்கம், மின்மீன் மன்றம் போன்றவை மீண்டும் முன்னெடுப்பதற்கான நிர்வாக தெரிவுப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 16.01.2011 காலை 8.30 மணியளவில் யா/வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தில் இடம்பெற உள்ளது. வயாவிளான் மக்கள் அனைவரும் கலந்துகொள்ளுமாறு வேண்டுகிறோம்.

ச.கணேசகுமாரன்
செயலாளர்,
(108250) வயாவிளான் மீளக்குடியமர்வோர் நலன்புரிச் சங்கம்.

## நடமாடும் பல் வைத்தியசாலை

யாழ்ப்பாணம்,ஜன.2

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் ஏற்பாட்டில் நடமாடும் பல் வைத்தியசேவை நாளை திங்கட்கிழமை தொடக்கம் எதிர்வரும் சனிக்கிழமை வரை பல்வேறு வைத்தியசாலைகளில் இடம்பெறவுள்ளன.

வைத்தியசாலையின் விவரங்கள் வருமாறு:-

நாளை புங்குடுதீவு வைத்தியசாலை, செவ்வாய்க்கிழமை- குடத்தனை கிராமிய சுகாதார நிலையம், புதன்கிழமை- அல் லைப்பிட்டி சுகாதார வைத்திய நிலையம், வியாழக்கிழமை- மருதங்கேணி பிரதேச வைத்தியசாலை, வெள்ளிக்கிழமை- பிரதேச வைத்தியசாலைகளான கொடிகாமம்(காலை), வரணி (நண்பகல்), சனிக்கிழமை-பண்டத்தரிப்பு பிரதேச வைத்திய சாலை ஆகிய வைத்தியசாலைகளில் நடமாடும் சேவை இடம் பெறவுள்ளது. (201)

## ஒன்றுகூடல்

யாழ்.லிஸ்வின் இன்வெஸ்ற்மன்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் வாடிக்கையாளர் ஒன்றுகூடல் நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு மேற்படி நிறுவனத்தில் இடம்பெறவுள்ளது.

## மதகு சேதம்

யாழ்.வேம்படி வீதியில் அமைந்துள்ள இரண்டாம் குறுக்குச் சந்திக்கு அருகாமையில் உள்ள மதகு சேதமடைந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.இரவுநேரங்களில் இவ்வீதியால் போக்குவரத்தை மேற்கொள்ளும் வாகனங்களும் பொது மக்களும் குழியில் வீழ்ந்து உயிராபத்துக்கு உள்ளாகும் நிலை தோன்றியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## மரண அறிவித்தல்

### திருமதி தவமணி சபாரத்தினம் (குஞ்சக்கா)



முதலியார் கோயிலடி, அளவெட்டி வடக்கைச் சேர்ந்த திருமதி தவமணி சபாரத்தினம் (31.12.2010) வெள்ளிக்கிழமை மாலை காலமாகி விட்டார்.

அன்னார் அளவெட்டி வடக்கைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சபாபதி - கண்ணகை தம்பதியரின் அருமை மகளும் தெல்லிப்பழை கிழக்கு, விராங்கொடையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - தங்கம்மா தம்பதியரின் அருமை மருமகளும் சபாரத்தினத்தின் (இளைப்பாறிய நுணுக்குக்காட்டியியலாளர் மலேரியாத்தடைப் பகுதி) அன்பு மனைவியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.01.2011) ஞாயிற்றுக்கிழமை பி.ப.2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மல்லாகம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவி னர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
நா.சபாரத்தினம்
(கணவர்)

முதலியார் கோயிலடி,
அளவெட்டி வடக்கு. (108331) தொ.பே: 0779907064

## மரண அறிவித்தல்

### ஜெயரட்ணம் சாமுவேல் ஜெயமோகன்

(A.C.I LTD-PLANT SUPERINTENDENT, RATMALANA)



சின்னப்பா வீதி, நவாலி கிழக்கைப் பிறப்பிடமாகவும் இரத்மலானையை வதிவிடமாகவும் கொண்ட ஜெயரட்ணம் சாமுவேல் ஜெயமோகன் 30.12.2010 வியாழக்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் கர்த்தருக்குள் நித்திரையடைந்த Dr. ஜெயரட்ணம் தம்பதியரின் அன்பு மகனும் திருமதி சுதர்சினியின் அன்புக் கணவரும் ஜெயந்தனின் அன்புத் தந்தையும் திருமதி ஜெயதேவி-வீரக்கோன் (நியூசிலாந்து), J.ஜெயச் சந்திரன் (யாழ்.மாவட்ட முகாமையாளர், வீடமைப்பு அதிகாரசபை), J.ஜெயமனோகரன் (TATA COMPANY), Dr.J.ஜெயதேவன் (சிரேஷ்ட விரிவுரையாளர், இரசாயனத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், திரு.திருமதி சுப்பிரமணியம் தம்பதியரின் அன்பு மருமகனும் டேவிற் வீரக்கோன் (நியூசிலாந்து), திருமதி J.ராஜினி, திருமதி J.ஜெயப்பிரியா, திருமதி J.விஜயவாணி ஆகியோரின் மைத்துனரும் டேவிற், சேபா ஆகியோரின் சித்தப்பாவும், சப்திகா, சமித், ஆர்த்தி, ஆர்வின் ஆகியோரின் பெரியப்பாவுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை (03.01.2011) திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு Dr.J.P. ஜெயதேவனுடைய இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சின்னப்பா வீதி,
நவாலி கிழக்கு, மானிப்பாய்.
0217255017

தகவல்:
குடும்பத்தினர்.

## கோவலன்.....

(13ஆம் பக்கத் தொடர்ச்சி)

அம்மடலைப் படித்துவிட்டு அதிலே வேறு காதல் விவகாரம் பற்றி இல்லாமையால், பெற்றோரிடம் சேர்க்கும் படி அந்த அந்தணீனிடமே அதனைக் கொடுத்து விட்டான். தனது தவறை உணர்ந்த கோவலன்

*"இருமுது குரவர் ஏவலும் பிழைத்தேன்*
*சிறுமுதுக் குறைவிக்கு ஏவலும்*
*பிழைத்தேன்*
*வழு எனும் பாரேன்...."*

எனத் தனது மனத்துயரை வெளியிடுவதாகச் சிலப்பதிகாரம் கூறுகிறது. கோவலனது கொலைக்கு அவனது முற்பிறப்பில் செய்த ஊழ்வினையே காரணம் என்கிறது சிலப்பதிகாரம்.

முற்பிறப்பில் சங்கமன் என்பவன் தனது மனைவி நீலியோடு நகை விற்பதற்கு நகரத்துக்கு வந்தபோது அவனை ஒற்றன் என மன்னனுக்குக் கூறி அவன் கொல்லப்படுவதற்குக் கோவலன் உடந்தையாக இருந்தான். நீலி பதினான்காம் நாள் மலைமீதேறி விழுந்து இறந்தாள். அப்பொழுது "நான்பட்ட துன்பத்தை எனக்குத் துன்பம் விளைவித்த வரும் படுக" எனச் சபித்து இறந்தாள்.

அதுபோல கோவலன் கொலையுண்ட பின் பதினான்காம் நாள் கண்ணகி அவ னது உடலைத் தழுவிய போது அவன் உயிர்பெற்று எழுந்து, கண்ணகியின் கண்ணீரைத் துடைத்து அன்பு வார்த்தை கூறினான். கண்ணகி இதுநாள் வரை கணவனைத் தொழும் வாய்ப்பு வரவில் லையென ஏங்கி அவனை வணங்கி நிற்க, கோவலன் அவளையும் அணைத்துக் கொண்டு விண்ணுலகஞ்சென்றான்.

*"தீத்தொழி லாட்டியேன் யானென்று ஏங்கி*
*ஏழுநாளிரட்டி எல்லை சென்றபின்*
*தொழுநாள் இதுவெனத் தோன்ற வாழ்த்திப்*
*பீடுகெழு நங்கை பெரும் பெயர் ஏத்தி*
*வாடா மாமலர் மாரி பெய்தாங்கு*
*அமரர்க் கரசன் தமர்வந் தேத்தக்*
*கோநகர் பிழைத்த கோவலன் தன்னொடு*
*வானவூர்தி ஏறினள் மாதோ*
*கானமர் புரிகுழல் கண்ணகி தானென்"*
*(சிலப்பதிகாரம்)*

ஊழ்வினையும் விதியும் காரணமாக இருக்க கோவலனது நிலையில்லாக் கொள்கையும், மனஉறுதியின்மையும், செல்வ நிலையும், கலை ஆர்வமும், அன்றைய சமுதாய நிலையும் துணைக் காரணமாக கோவலனது வாழ்க்கை நிலை அமைந்துவிட்டமையைக் காண்போமாக.


இலங்கை அரசினாலும் சர்வதேசத்தினாலும் அங்கீகரிக்கப்பட்ட கணனிக் கல்லூரி

PcHW Personal Computer Hard Ware
ICDL International Computer Driving Licence
**For a GREAT Start after your O Levels**
CiGD Certificate in Graphic Design
CIT Certificate in Information Technology

O/L பரீட்சை தோற்றிய மாணவர்களுக்காக புதிய வகுப்புக்கள்
ஆரம்பம் - 03.01.2011

ESOFT The Leader in Professional ICT Education

**Esoft Computer Studies**
# No.114, Navalar Road, Jaffna. 021 222 4142, H.Line 077 3099308.
# No.151, Jaffna Road, Nelliyaddy, Karaveddy. 021 226 4940.
# Periya Arasady, Chavakachcheri. 021 227 0333.
# No.1, Kanagapuram Road, Kilinochchi. 021 228 5444.
# Main Street, Valvetty, Valvettythuri. 077 2487144. (Near Jegu Motors)


## துணுக்காய் பிரதேசசபை
## மல்லாவி பொதுச்சந்தையை குத்தகைக்கு வழங்கல்
# கேள்வி அறிவித்தல்

துணுக்காய் பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட கீழ்க்காணும் பொதுச்சந்தையினை 2011 ஆம் ஆண்டு தைமாதம் 15ஆம் திகதி தொடக்கம மார்கழி மாதம் 31ஆம் திகதி வரைக்கும் குத்தகைக்கு விடுவதற்கான கேள்விகள் என்னால் கோரப்படுகின்றன.

*கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி : 03.01.2011 நண்பகல் 12 மணி வரை.*
*கேள்விப்பத்திரம் ஏற்கப்படும் திகதி : 10.01.2011 முற்பகல் 10 மணி வரை.*
*கேள்விப்பத்திரம் திறக்கும் திகதி :11.01.2011 பிற்பகல் 2 மணி.*

01 .கேள்விப் பத்திரங்கள் 3 பிரதிகள் தயாரிக்கப்பட்டு மூலப் பிரதியுடன் 2 பிரதிகளை ***செயலாளர், துணுக்காய் பிரதேச சபை, துணுக்காய்*** என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக எழுதப்பட்டு பதிவுத்தபால் மூலமோ அல்லது தலைமையலுவலகத்தில் வைக்கப்பட்ட கேள்விப்பெட்டியிலோ குறித்த நேரத்திற்குமுன் இடுதல் வேண்டும். மூன்றாவது பிரதியை ***பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், முல்லைத்தீவு*** என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

02.கேள்விப் பத்திரங்களைப் பெறுபவர்கள் தமது அடையாள அட்டையைக் கொண்டு வருதல் வேண்டும்.

03. உள்ளூராட்சி மன்றங்களினால் தவறாகக் கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப் பத்திரம் வழங்கப்படமாட்டாது. படிவம் வழங்கப்பட்டபின் தெரியவரும் பட்சத்தில் அவரின் கேள்வி நிராகரிக்கப்படும்.

04.கேள்விப்பத்திரங்களை கீழ்க்குறிப்பிட்ட மீளளிக்கப்படாத படிவக்கட்டணமும் மீளளிக்கக்கூடிய வைப்புப்பணமும் செலுத்தி பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

05.எந்தவொரு கேள்வியையும் காரணம் தெரிவிக்காது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ செயலாளருக்கு பூரண அதிகாரம் உண்டு. கேட்கப்பட்ட குறைந்த தொகையிலும் குறைவான கேள்வி கேட்பவர்களின் கேள்வி வைப்புப் பணம் மீளளிக்கப்பட மாட்டாது. தெரிவுசெய்யப்பட்டுள்ள கேள்விகாரர் கேள்வித் தொகையின் 1/3 பகுதியினை 14.01.2011 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி சபையுடன் ஒப்பந்தமொன்றை செய்துகொள்ள வேண்டும்.

06.கேள்விப் பத்திரப் பணம், கேள்வித் தொகை, மாத வாடகை ஆகியவற்றுக்குப் பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (VAT), தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி (NBT) யும் மேலதிகமாகச் செலுத்தப்பட வேண்டும்.

| இல. | விடயம் | கேள்விப் பத்திரக் கட்டணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் | ஆகக் குறைந்த கேள்வித் தொகை |
|---|---|---|---|---|
| | மல்லாவி பொதுச்சந்தையும் அதற்குட்பட்ட விற்பனை நிலையமும் துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையமும் | 500.00 | 2,000.00 | 250,000.00 |

மேலதிக விவரங்களைத் தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

திரு.மு.கிருஸ்ணநவரத்தினராஜா
செயலாளர், பிரதேச சபை,
துணுக்காய்.

துணுக்காய்
[illegible]ப. (சி/574156)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர் குருதியமுக்கமும் அதனைத் தடுக்கும் வழிமுறைகளும் 2

**உயர் குருதியமுக்கம் என்றால் என்ன?**


* சாதாரணமாக எம்மில் இரத்தக்குழாய்களினூடாகக் குருதி பாய்கையில் நாடிகளின் சுவர்களில் அமுக்கமொன்று ஏற்படுத்தப்படுகிறது.
* இது இதயம் சுருங்கும் போது 120mmHg இலும் குறைவாகவும் இதயம் தளரும் போது 80mmHg இலும் குறைவாகவும் சாதாரணமானவர்களில் இருக்கும்.
* இதனையே வைத்தியர் 120/80 mmHg எனக் குறிப்பார்.
* சில சந்தர்ப்பங்களில் இந்த அமுக்கமானது 140/90mmHg இனை விட அதிகரிக்கும் போது அதனையே உயர் குருதியமுக்கம் என்கிறோம்.

**உயர் குருதியமுக்கம் ஏற்படும் போது என்னென்ன அறிகுறிகள் ஏற்படும்?**

* ஆரம்பத்தில் அறிகுறி எதுவும் தென்படாது. ஆனால் நீண்ட காலமாகக் கவனிக்கப்படாவிடின் பின்வரும் அறிகுறிகள் ஏற்படும்.
* அதிகரித்த வியர்வை வெளியேற்றம்.
* தலையிடி
* தலைச்சுற்று
* நெஞ்சுப் படபடப்பு
* மூச்சு விடுவதில் சிரமம் அல்லது மூச்சுத் திணறல்.
* களைப்பு
* மூக்கிலிருந்து இரத்தம் வடிதல்
* வாந்தி, குமட்டல்

**உயர் குருதியமுக்கமானது ஏற்படுவதற்குரிய சாத்தியக்கூறுகள்**

* உயர்குருதியமுக்கமானது பெரும்பாலும் 55 வயதிலும் கூடிய ஆண்களிலும் 65 வயதிலும் கூடிய பெண்களிலும் ஏற்ப்டுகிறது.
* கூடிய உடற் பருமன் (உடற் திணிவுச் சுட்டி 30 இலும் கூடியோர்)
* புகைப்பழக்கம்
* குறைவான உடற்பயிற்சி
* ஏற்கனவே நீரிழிவு நோயை கொண்டிருப்பவர்கள்
* குருதியில் அளவுக்கு மீறிய கொலஸ்ரோலின் அளவு
* குடிப்பழக்கம்
* அதிகளவு உணர்ச்சி வசப்படுதல்
* கர்ப்பகாலம்
* உயர்குருதியமுக்கமானது இரத்த சம்பந்தப்பட்ட உறவுகளிடையே காணப்படுதல்
* சில மருந்துகளின் பாவனை (உ+ம் - கருத்தடை மாத்திரைகள், மூக்கினுள்ளே விடப்படும் சில துளி மருந்துகள், சல்பியூட்டமோல் தியோபைலீன், பிறிட்னிசலோன், ஏர்கோரமைன், பிறிட்டோன்) மருந்துப் பாவனைக்குப் பிறகு குருதியமுக்கம் சாதாரண நிலையை அடையும்
* சில நோய்களின் தாக்கம் (அதிரீனற் சுரப்பிகளில் ஏற்படும் கட்டி, சிறுநீரகங்களில் ஏற்படும் கட்டிகள்)



**உயர்குருதியமுக்கத்தால் எப்படிப்பட்ட பாதகமான விளைவுகள் ஏற்படும்?**

* மாரடைப்பு
* பாரிசவாதம்
* கண்பார்வை அற்றுப் போதல்
* சிறுநீரகம் பழுதடைதல்
* பிரசவ காலங்களில் இது ஏற்பட்டால் தாய்க்கும் சேய்க்கும் பாதிப்பு ஏற்படலாம்.
* இறப்பு

**உயர்குருதியமுக்கத்தை எவ்வாறு தடுக்கலாம்?**

மருத்துவசிகிச்சை பெறுதல்

* குளோர்ரலிடோன், நிவிடிப்பின், லொசார்ரன், பைசோபிறோலோல், அஸ்பிறின்

உடலுக்கு ஏற்ற உடற்பயிற்சிகளை நாளாந்தம் மேற்கொள்ளுதல்.

* உதாரணமாக 30 நிமிட நடைப்பயிற்சி, கை மற்றும் கால்களை உயர்த்தி மடித்தல், மூச்சை நன்றாக உள்ளெடுத்து வெளியே விடுதல்.
* குடிப்பழக்கத்தைக் குறைத்தல் அல்லது தவிர்த்தல், அத்தோடு புகைப்பழக்கத்தையும் கைவிடுதல்.

உணவு முறைகளில் மாற்றங்களைக் கொண்டு வருதல். உப்பைக் குறைத்தல் (<6g NaCl/day)

* கூடுதலாக மரக்கறிகளையும் பழங்களையும் நார்ச்சத்துள்ள உணவுகளையும் சேர்த்தல்
* சிறிய மீன் வகைகளை அதிகளவில் உண்ணுதல்.

**இ.கோகுல்நாத்**
*யாழ்.மருத்துவ பீட 30 ஆம் அணி மாணவன்.*

"இரத்த உறவுகளிடையே உயர் குருதியமுக்க நோய் உள்ளவர்கள் தமது குருதியமுக்கத்தை இரு வருடங்களுக்கு ஒரு முறை சோதித்துக் கொள்ளுதல் சிறந்தது." *

# ஆரோக்கியமானவர்கள் கல்சிய குளிகைகளை பாவிப்பது பாதுகாப்பானது அல்ல

மேலைத்தேச நாடுகளிலே கல்சியக்குறைபாடு ஒரு பெரும் பிரச்சினையாக இருந்துவருகிறது. அதன் காரணமாகப் பல நோய்களும் ஏற்படுகின்றன. இதனால் அந்த நாடுகளிலே கல்சியக் குளிகைகள் பெருமளவில் பாவிக்கப்பட்டு வருகின்றன. மேலைத் தேசங்களிலே வசிக்கும் எமது உறவினர்கள் நல்ல நோக்கத்துடன் இந்த கல்சியம் கொண்ட சத்துக் குளிகைகள் நிரம்பிய போத்தல்களை இங்கு இருக்கும் தமது உறவினர்களுக்கு அனுப்பி வைக்கின்றனர். அந்தக் குளிகைகளை யாழ்ப்பாணத்தில் வசிக்கும் எமது மக்களும் பெருமளவில் பாவித்து வருகின்றனர்.



யாழ்ப்பாணத்திலே எமது குடி தண்ணீரில் பெருமளவு கல்சியம் இருக்கின்றது. இந்த அதிகரித்த கல்சியத்தின் அளவால் ஏதாவது பிரச்சினைகள் தோன்றிவிடுமோ என்ற ஏக்கமும் இருக்கிறது. அத்துடன் யாழ்ப்பாண உணவிலும் போதியளவு கல்சியம் இருக்கிறது. இந்த நிலையில் எமக்கு மேலதிக கல்சியக் குளிகைகள் தேவைதானா என்ற கேள்வி எழுகிறது.

கண்களை மூடிக்கொண்டு மேலைத்தேசத்தவர்களின் கலாசாரத்தையும் உணவையும் நடவடிக்கைகளையும் கடைப்பிடிக்க முயல்கின்றோம். சொந்தமாக சிந்திப்பதற்கு எமக்கு நேரமில்லை. எமக்கு எது பொருத்தம் என்று சிந்திப்பதற்கு எமது சொந்த மூளையை ஏன் பாவிக்கக்கூடாது?

நீரைக் கொதிக்க வைப்பதன் மூலம் நீரிலுள்ள கல்சியத்தை அகற்றி விடமுடியும் என்ற ஒரு தப்பான கருத்தும் நிலவுகிறது. கொதித்து ஆறிய நீரிலும் கொதிக்க வைக்காத கிணற்று நீரிலும் ஏறத்தாள ஒரே அளவு கல்சியமே இருக்கிறது. கிணற்று நீரைக் கொதிக்க வைக்கும் பொழுது ஆவியாகும் நீரில் இருந்த கல்சியமே பாத்திரங்களில் படிகிறது.

எமது நீரிலும் அன்றாட உணவிலும் இருக்கும் கல்சியம் எமக்கு போது மானதாகவே இருக்கின்றது. இதற்கும் மேலதிகமாக கல்சியக் குளிகைகளை உட்கொண்டால் பல சுகாதாரப் பிரச்சினைகள் ஏற்படுவதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன.

சில நோய் நிலைகளில் எமக்கு மேலதிகமான கல்சியக் குளிகைகள் பாவிக்க வேண்டிய தேவை இருக்கிறது. உதாரணமாக எலும்பு சம்பந்தமான சில நோய்கள், சிறுநீரகத் தொழிற்பாடு குறைவடைந்த நிலை, சில குடல் சம்பந்தமான நோய்கள் சிலவகை மூட்டு நோய்கள் போன்ற நோய் நிலைகளில் வைத்தியரின் ஆலோசனைக்கு அமைய இந்த கல்சியக்குளிகைகளைப் பாவிக்க முடியும். வைத்திய ஆலோசனை இன்றி கல்சியக்குளிகைகள் பாவிப்பதை தவிர்த்துக் கொள்வது நல்லது.

எமது மண்ணுக்கும் சூழலுக்கும் கலாசாரத்திற்கும் ஏற்றவாறு எமது வாழ்க்கை முறையை அமைத்துக்கொள்வோம். *

**Dr.சி.சிவன்சுதன்**
**வைத்திய நிபுணர் யாழ்.போதனா வைத்தியசாலை.**

சுகதேகியாக வாழ்வதற்கான புதிய உணவு வகைகளைத் தயாரிக்கும்

**மாபெரும் சமையல் போட்டி**

நாள் :- 06.01.2011 வியாழக்கிழமை
நேரம் :- காலை 8 மணி
இடம் :- தாதியர் பயிற்சிப் பாடசாலை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

★சமையல் செய்வதற்குத் தேவையான உணவுப் பொருள்களையும் சமையல் உபகரணங்களையும் போட்டியாளர்களே கொண்டு வர வேண்டும்.

★சமையல் போட்டிக்குத் தபால் மூலம் விண்ணப்பித்தவர்கள் ஜனவரி 4ஆம் திகதிக்கு முன் நீரிழிவு சிகிச்சை நிலையத்திற்கு நேரில் வருகை தரவும். அல்லது 221 222 0179 என்ற தொலைபேசி எண்ணுடன் உடனடியாகத் தொடர்புகொள்ளவும்.

தொடர்பு கொள்ளாதவிடத்து அவர்கள் போட்டியிலிருந்து விலகிக் கொண்டதாகக் கருதப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓய்வுநிலை அதிபர் உயர்திரு.அ.பஞ்சலிங்கம் அவர்களின் பவளவிழா



காலம் - 08.01.2011
சனிக்கிழமை
பிற்பகல் 3 மணி
இடம் - கொக்குவில்
இந்துக் கல்லூரி
கொக்குவில் இந்துவின்,
யாழ். இந்துவின்
கல்வியில் வரலாறு
படைத்த கல்வியின்
தந்தையை உளமார
வாழ்த்துகின்றோம்.

103, பொற்பதி றோட், கொக்குவில். (சி/574133)

விக்கினேஸ்வரா கல்வி நிலையம்.


# இறுதிக் கட்ட யுத்தத்தின்போது இலங்கை கடந்து வந்த சவால்களை மறக்கமுடியாது

## இலங்கைக்கான அமெரிக்க தூதர் தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 02

இறுதிக் கட்ட யுத்தத்தின்போது இலங்கை கடந்து வந்த சவால்களை எவராலும் மறக்க முடியாது என இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் பட்ரிசியா பூட்டனிஸ் தெரிவித்துள்ளார்.

அவசர உணவு நிவாரணப் பொதிகளை பொருளாதார அபிவிருத்தி அமைச்சரிடம் கையளிக்கும் நிகழ்வின்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இடம்பெற்று வரும் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் குறித்தும் தாம் பெருமையடைகிறோம் எனவும் நிவாரண ரீதியாக இலங்கைக்கு ஒத்துழைப்புக்களை வழங்குவதில் அமெரிக்கா பெருமையடைகிறது எனவும் அவர் கூறியுள்ளார்.

இந்த நிகழ்வின்போது 3 லட்சம் பேருக்கான அவசர நிவாரணப் பொதிகள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சி)


## தேவை

யாழ்ப்பாணத்தில் விரைவில் திறக்க இருக்கும் உணவகத்துக்கு சைவ, அசைவ காலை சிற்றுண்டி, மதிய, இரவு உணவுகள் தயாரிப்பதில் கைதேர்ந்த சமையல், உதவியாளர்கள் தேவை. அதிக சம்பளம்,வசதிகள் தரத்திற்கேற்ப வழங்கப்படும்.
மேலதிக விவரங்களுக்கு:
137, (தபால் பெட்டிச்சந்தி) பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். 0771331784, 0212227661

## ஒத்துமாறல்

புத்தளம் நகரப் பாடசாலை ஒன்றில் கடமைபுரியும் ஆசிரியர் ஒருவர் வடமாகாண பாடசாலைக்கு ஒத்துமாற விரும்புகிறார். ஒத்துமாற விரும்புவோர் தொடர்பு கொள்ளவும்.
தொ.பே.: 0772208236.

## தவறிவிட்டது

தொல்புரம் கிழக்கு, சுழிபுரம் எனும் முகவரியில் வசிக்கும் கனகரத்தினம் தங்கராசா என்பவரது தேசிய அடையாள அட்டை (672021944V) மற்றும் முக்கிய ஆவணங்கள் அடங்கிய பேஸ் (30.12.2010) அதிகாலை புத்தளத்திற்கும் அனுராதபுரத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரிக்குத் தொடர்பு கொள்ளவும்.
(தகுந்த சன்மானம் வழங்கப்படும்).
0773086721, 0213219181. சங்கரத்தை, வட்டுக்கோட்டை.


# யா/கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை

# புலமைப் பரிசில் பரீட்சை 2010

## சித்திபெற்ற மாணவ மணிகள்

கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலையில் 2010ஆம் ஆண்டு நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து சாதனை படைத்த 37 மாணவர்களையும் 80 புள்ளிகளுக்குமேல் பெற்ற மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம். இவர்களின் வெற்றிக்குத்தம்மை அர்ப்பணித்து சேவை ஆற்றிய அதிபர்,ஆசிரியர்கள் மற்றும் உதவிபுரிந்த கல்விசாரா ஊழியர்கள், பாடசாலைச் சமூகத்தினர் அனைவரையும் அகமகிழ்ந்து பாராட்டி வாழ்த்துவதுடன் எமது மனமார்ந்த நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.


நிஷாரி சுகுமார் 168


விஜயராஜ் ஜீவராஜ் 167


ஷம்சப்பிரியா பிரேமரத்தினம் 166

ஈஸ்வரன் டிலான் 164


சுகிரா பாலராஜன் 164


ரியூரிக்கா சஞ்சீவன் 162


பிரதீபன் துஸ்யந் 162


சதுர்ஷிகா சதீஸ் 160


தர்மராஸ் பிரியங்கன் 160


சங்கவி இராசநாயகம் 160


பவித்திரா ஞானேந்திரன் 159


விக்கினராஜா லக்ஷன் 159


ஸ்ரீஸ்கந்தராஜா விஸ்ணுயன் 158


உதயகரன் பவனிதன் 157


வதனமோகன் உமாவேந்தன் 157


நிரந்தரி மோகன்ராஜ்குமார் 153


லாவண்யா சுரேஸ்குமார் 153


தபோதினி வாசகன் 153


அபிஷேக்கா சுந்தரலிங்கம் 153


விக்னேஸ்வரன் துளசிகன் 153

கீர்த்தனா பாஸ்கரன் 153


கீர்த்தனா மகேஸ்வரன் 152


யதுஷா விக்னேஸ்வரநாதன் 152


கமஷா தேவராஜா 151


தனுஜா ஜெகதீஸ்வரன் 149


சதீஸ் அஜயந் 149


கௌசிகா மகேஸ்வரன் 149


தீரலிபன் தசாயனன் 148


சாந்தசற்குணநாதன் ஸ்ரீரங்கன் 147


சதீஸ் விஜயந் 147


பாஸ்கரன் நித்திலன் 145


சங்கவி உதயகுமார் 145


சிவந்தினி நந்தகுமார் 144


ஸ்ரீகாந்தன் கீதப்பிரியன் 144


பவதாரணி இராஜகுரு 144


வசுதரன் கிதுர்ஷன் 143


அமரன் சாருஜன் 142

**இம் மாணவர்களைக் கௌரவிக்கும் பாராட்டுவிழா நிகழ்ச்சி இன்று (02.01.2011) ஞாயிற்றுக்கிழமை பாடசாலை சுப்பிரமணியம் மாலதி மண்டபத்தில் காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.**

பிரதம விருந்தினர்:- **கௌரவ உயர் திரு ஈ.சரவணபவன்**
(யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்)

சிறப்பு விருந்தினர்:- செல்வி சி... 
(பழைய ...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பாடசாலைச் சமூகம், கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை.**

# உங்களுக்கு இந்த வாரம் எப்படி...... இராசிபலன்

## 02.01.2011 முதல் 08.01.2011 வரை

தருபவர் - வித்யா

### மேடம்

குழப்பங்கள், தடுமாற்றங்களுக்கு ஆள்படலாம். பிள்ளைகள் வழியிலோ மற்றவர்கள் வழியிலோ எதிர்பாராத திடீர்ச் செலவுகளைச் சந்திக்கலாம். வெளியூர்ப் பயணங்கள் செல்லப் போட்ட திட்டம் நிறைவேறும். உடல் உபாதைகளால் உற்சாகம் குறையலாம். எதிர்பார்த்த அல்லது எதிர்பாராத பணவரவுகளைப் பெறலாம். உதவிகள் கிடைத்து உற்சாகம் பெறுவீர்கள். தேக ஆரோக்கிய விடயங்களில் அக்கறை காட்டுவீர்கள். நீங்கள் எதிர்பாராத ஒருவர் உங்களைத் தொடர்புகொண்டு பேசலாம். போட்டிகள், எதிர்ப்புகள் மறைந்து நினைத்ததைச் சாதிப்பீர்கள். கடந்த காலங்களில் காலைவாரி விட்டவர்கள் எல்லாம் இப்போது கைகொடுத்து உதவுவர். வழக்கு விவகாரங்களில் சாதகமான நிலைமை காணப்படும். நிகழ்ச்சிகளுக்காகவோ, வேறு வேலையாகவோ அடிக்கடி வெளியூர்ப் பயணங்கள் செல்லும் சூழ்நிலை உருவாகலாம். பிள்ளைகள் வழியில் திடீர்ச் செலவுகள், அலைச்சல்கள் உண்டாகலாம். அரசியல், மருத்துவம், அரசாங்கம், அதிகாரிகள் தொடர்பான விடயங்களும் சாதகமாக இருக்காது. உடன் பிறப்புக்களாலும் நிம்மதி பாதிக்கப்படலாம். ஊக்கம், உற்சாகமாகச் செயற்படுவீர்கள். கூட்டு முயற்சிகளில் வெற்றியுண்டு. கவனம் அவசியம்.

### இடபம்

தேவையற்ற அலைச்சல்களுக்கு ஆள்படலாம். உறவினர்களை உபசரிக்கவோ அல்லது அவர்கள் தொடர்பான காரியங்களுக்கு அலைவதாலோ சிரமங்கள் உண்டாகலாம். சக ஊழியர்கள் சிலருடன் வாக்குவாதங்களில் ஈடுபடலாம் அல்லது சண்டை போடலாம். கடும்வேலை நெருக்கடிகளைச் சந்திக்கலாம். மற்றவர்கள் பெருமையாக நினைக்க வேண்டும் என்பதற்காகச் சில காரியங்களைச் செய்வீர்கள். அடிக்கடி மந்தம், மறதிக்கு ஆளாகலாம். தன்னம்பிக்கை குறைந்து அவநம்பிக்கை அதிகரிக்கும். பல நேரங்களில் தவறான முடிவெடுத்து விட்டு பின்னர் ஏன்டா செய்தோம் என, வருத்தம் அடைவீர்கள். எப்படியும் நடந்து விடும் என நினைத்த காரியங்கள் எல்லாம் அடிக்கடி மாறி விடும். இப்பிரச்னைகளில் இருந்து மீளும் வகையில் அவ்வப்போது ஆறுதலான அனுபவங்களையும் எதிர்கொள்ளலாம். பிள்ளைகளின் தேவைகளைக் குறைவின்றி நிறைவேற்றி வைப்பீர்கள். பொன், பொருள் வாங்கப் போட்ட திட்டம் நிறைவேறும். பெற்றோர் உடல் நலன் தொடர்பான விடயங்களில் கவனம் அவசியம். உறவினர்கள் சிலருடன் மனஸ்தாபம் ஏற்படலாம். அரசியல்வாதிகள் வீண்சர்ச்சைகளுக்கு ஆளாகலாம் என்பதால் கவனம் அவசியம். பெண்களாலும் தொல்லைகள் உண்டு. பணவரவுகளை, பொருள் வரவுகளைப் பெறலாம். உறவினர்கள், நண்பர்கள் மத்தியில் உங்களின் செல்வாக்கு அதிகரிக்கும். பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும்.

### மிதுனம்

புதிய முயற்சிகளில் வெற்றி உண்டு. எந்த வேலையையும் பொறுப்பாகச் செய்து மற்றவர்களின் பாராட்டுக்களைப் பெறுவீர்கள். கடன் மிகுதிகளைத் திருப்பிக் கொடுப்பீர்கள். உதிரி வருமானங்களைப் பெறலாம். கடும் வேலை நெருக்கடிகளைச் சந்திக்கலாம். வெறுப்பு, விரக்தி ஆள்கொள்ளும். நீண்ட தூரப் பயணங்கள் செல்லலாம். நண்பர்களுக்குத் தெரிந்த சிலர் உங்களுக்கும் அறிமுகமாகலாம். கணவன், மனைவி ஒற்றுமையில் சிறு பாதிப்புகள் ஏற்படலாம். வீண்சச்சரவுகள் வராமல் இருக்க விட்டுக் கொடுத்துச் செல்வது நன்மை தரும். கூட்டுத் தொழில் விவகாரங்களிலும் கவனம் தேவை. அவசரப்பட்டு எந்த முடிவுகளும் எடுக்க வேண்டாம். வாகனங்களில் செல்லும் போது கவனம் அவசியம். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள் உதவிகரமாக இருப்பர். எதிர்பார்த்த நல்ல செய்திகள் வந்து சேரலாம். வியாபாரிகளுக்குக் கடன் மிகுதிகள் வசூலாகும். அதேநேரத்தில் தாயார் உடல் நலன் தொடர்பான விடயங்களில் கவனம் அவசியம். அரசியல்வாதிகள், அதிகாரிகள், தந்தை, சகோதரர்கள் வகையிலும் சிரமங்கள், தொல்லைகள் தொடரும். ஆடை, ஆபரணங்கள், பொன், பொருள்கள் சேரும். விலை உயர்ந்த பொருள்கள் வாங்கலாம்.

### கடகம்

சிலரைப் பரிகாசம் செய்து பேசி அவர்களின் அதிருப்திக்கு ஆளாகலாம். மனைவி, குழந்தைகளின் விருப்பங்களை நிறைவேற்றக் கணிசமான பணத்தைச் செலவு செய்வீர்கள். கடன் மிகுதிகள், கட்டண மிகுதிகளைச் செலுத்துவீர்கள். எதிர்பாராத பணவரவுகளைப் பெறலாம். எண்ணிய காரியங்கள் எண்ணம் போல நிறைவேறும். புதிய சில காரியங்களைச் செய்ய முற்படுவீர்கள். பெரிய மனிதர்களின் உதவி கிடைக்கும். தாமதித்துக் கிடந்த வேலைகள் எல்லாம் சுறுசுறுப்பாக முடியும். தைரியம், தன்னம்பிக்கையுடன் எந்தக் காரியத்தையும் செய்வீர்கள். உழைப்பிற்கு ஏற்ற பலன் மற்றும் மரியாதை கிடைக்கும். உறவினர்களுடன் ஏற்பட்ட மனக்கசப்புகள் விலகி பாசம் அதிகரிக்கும். சுபகாரிய விடயங்களை நடத்த மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. பெரிய மனிதர்கள், கல்வியாளர்களின் நட்புக் கிடைக்கும். பிள்ளைகளின் நீண்டநாள் கோரிக்கைகளை நிறைவேற்றி வைப்பீர்கள். பெண்கள், பயணங்கள், பொழுது போக்கு விடயங்கள் போன்றவற்றால் சந்தோசம் உண்டு. நிலம், பூமி வாங்கப் போட்ட திட்டங்களில் முன்னேற்றம் உண்டு. அரசியல்வாதிகளுக்குச் செல்வாக்குக் கூடும். அலைச்சல், திரிச்சல் உண்டு. கடன் மிகுதிகள் வசூலாகும். மற்றவர்களுக்காகச் செலவிடலாம். குழப்பம், தடுமாற்றம் நேரும்.

### சிங்கம்

ஊக்கம், உற்சாகமாகச் செயற்படுவீர்கள். சிலருடன் பிரச்சினைகள் உருவாகலாம். ஆபத்தான பொருள்களை எச்சரிக்கையாகக் கையாள வேண்டும். எதிர்பார்த்த நல்ல செய்திகள் வந்து சேரலாம். பெண்களால் சந்தோஷமான அனுபவம் பெறலாம். வீட்டுக்குத் தேவையான பொருள்கள் வாங்க கணிசமான பணத்தைச் செலவிடலாம். சிலரிடம் கடன் வாங்கலாம் அல்லது சிலருக்குக் கடன் கொடுக்கலாம். திட்டமிட்ட வேலைகளைச் செய்ய முடியாமல் தடை, தாமதங்களைச் சந்திக்கலாம். பெண்கள் பயணங்கள், பொழுது போக்கு விடயங்கள் போன்றவற்றால் சந்தோசம் அடைவீர்கள். விருந்து, உபசரிப்புகளாலும் மகிழ்ச்சி பெறலாம். சகோதரிகள் உறவுப் பெண்கள் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். எந்த விடயத்திலும் மற்றவர்கள் பாராட்டும் வகையில் சாமர்த்தியமாக நடந்து கொள்வீர்கள். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்களுக்காகச் சில உதவிகளைச் செய்வீர்கள். பால்ய நண்பர் ஒருவரைச் சந்திக்கும் சூழ்நிலை உருவாகும். உடல் ரீதியான சிறு உபாதைகளால் அவதிப்படலாம். பிள்ளைகள் வழியிலும் திடீர்ச் செலவுகள், சிரமங்கள் உண்டாகலாம். அவர்களை முன்னிட்ட காரியங்களுக்காக அலையலாம். திட்டமிட்டபடி சில வேலைகளை செய்ய முடியாமல் தள்ளி வைக்கலாம். தேவையான பணத்தை புரட்டிக் கொள்ளலாம். ஊக்கம், உற்சாகமாகச் செயற்படுவீர்கள். பணவரவு உண்டு. உறவால் தொல்லையுண்டு.

### கன்னி

சிறிய வேலைகளுக்கும் பலமுறை அலையலாம். புதியவர்கள் சிலரின் சந்திப்புக்கள் நிகழும். தொழில் ரீதியாகச் சிலர் உங்களின் உதவி நாடலாம். மறைமுக போட்டிகளைச் சந்திக்கலாம். மனதில் இனம்புரியாத சந்தோஷம், உற்சாகம் குடிகொள்ளும். எதிர்பாராத பணவரவுகளைப் பெறலாம். எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். நீண்ட நாளாக இழுபறியாக இருந்த சில விடயங்கள் நடக்கலாம். திட்டமிட்ட காரியங்களை எப்படியாவது முடிக்கும் வாய்ப்பு உருவாகும். பொன், பொருள்கள், ஆடை, ஆபரணங்கள் சேரும். சுபகாரிய விடயங்களில் முன்னேற்றம் உண்டு. நீண்ட தூரப் பயணங்கள் செல்லப் போட்ட திட்டம் நிறைவேறும். பணிபுரிவோருக்கு விரும்பிய இடமாற்றம் கிடைக்கலாம். கூட்டு முயற்சிகளிலும் முன்னேற்றம் உண்டு. கையில் பணப்புழக்கம் அதிகரிக்கும். கொடுத்த வாக்கைக் காப்பாற்றி மகிழ்வீர்கள். பெண்கள் பிறந்த வீட்டின் உதவிகளைப் பெறலாம். தாயார் உடல் நலனில் கவனம் அவசியம். வீண் அலைச்சல்கள் நேரும். குடும்பச் செலவு கூடும். மறதியால் அவதியுண்டு. பணவரவுகளைப் பெறலாம்.

### துலாம்

ஆதாயகரமான பணவரவுகளை, பொருள் வரவுகளைப் பெறலாம். உறவினர்கள் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள். அவர்களால் சில நன்மைகளையும் அடையலாம். விருப்பமான உணவு வகைகளைச் சாப்பிடுவதில் நாட்டம் செல்லும். ஆதாயமில்லாத அலைச்சல் உண்டு. மருத்துவச் செலவுகளை எதிர்கொள்ளலாம். மற்றவர்களை நம்பி ஒப்படைத்த வேலைகள் முடிவடையாமல் அவற்றை நீங்களே செய்யலாம். நீண்ட நாள்களாகச் செல்லாத சிலரின் வீடுகளுக்குச் செல்லலாம். எந்த வகையிலாவது செலவுகள் ஏற்பட்டுக் கொண்டே இருக்கும். ஒரு செலவு முடிந்து விட்டதே எனச் சந்தோசப்படும் நேரத்தில் அடுத்த செலவு உருவாகும். உறவினர்களின் சுபகாரிய நிகழ்ச்சிகளில், துக்க நிகழ்ச்சிகளில் பங்கேற்பது போன்ற வகையில் அடிக்கடி பயணங்களையும் மேற்கொள்ளலாம். உங்களின் மதிப்பு, மரியாதை மேம்படும். மற்றவர்கள் மத்தியில் பளிச்சென தோற்றம் அளிக்கும் வகையில் ஆடை, ஆபரணங்கள் அணிவீர்கள். விருந்து, விசேடங்களால் சந்தோசம் அடைவீர்கள். வியாபாரிகளுக்கு பணப்புழக்கம் கூடும். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள் உதவிகரமாக இருப்பர். ஊக்கம், உற்சாகம் அதிகரிக்கும். சிலரிடம் கோபம், வேகமாகப் பேசலாம். தடை, தாமதங்கள் நேரும்.

### விருச்சிகம்

உறவினர்கள் வருகையால் வீட்டில் கலகலப்பு உண்டாகும். அடுக்கடுக்காகக் குவியும் வேலைகளை அசராமல் செய்து முடிப்பீர்கள். அடுத்து நடைபெற உள்ள சில காரியங்களுக்காக முன்னேற்பாடு செய்வீர்கள். பெரிய மனிதர்களின் சந்திப்பு நிகழும். அலைச்சல் இல்லாமல் சுலபமாகச் சில வேலைகளை முடிப்பீர்கள். அடமானமாக வைத்த பொன், பொருள்களை மீட்கலாம். நண்பர்கள் கேட்ட உதவிகளை மறுக்காமல் செய்வீர்கள். பிள்ளைகளைப் பற்றிக் கவலைகள் தீர்ந்து, அவர்களுக்கு நல்ல வேலை கிடைக்கும் அல்லது அவர்களின் சுபகாரியங்கள் முடிவுக்கு வரும். பொன், பொருள்கள் வாங்கிச் சேர்ப்பீர்கள். புதிய வீடு, மனை கட்டி குடியேற மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. தொழில், உத்தியோகம், விவசாயம் போன்ற விடயங்களில் முன்னேற்றம் உண்டு. இழுபறியாக இருந்த சில காரியங்கள் முடிவுக்கு வரும். பெரிய மனிதர்களின் நட்பைப் பெறலாம். உடன் பிறந்த சகோதரர்கள், பங்காளிகள், தந்தை, மாற்று மதத்தினர் தொடர்பான விடயங்களில் கவனமாக நடந்து கொள்ள வேண்டும். அவர்களுடன் வாக்குவாதங்களைத் தவிர்ப்பது நன்மை தரும். மற்றவர்களைக் குத்தலாக பேசுவதையும், உத்தரவாதம் இல்லாத விடயங்களில் சிலருக்கு வாக்குக் கொடுப்பதையும் தவிர்க்க வேண்டும். செலவு, அலைச்சல் உண்டு.

### தனுசு

புதியவர்கள் சிலரின் சந்திப்பு நிகழும். சிறிய பிரச்சினை ஒன்றை நினைத்துப் பெரிய அளவில் கவலைப்படுவீர்கள். நீங்கள் செல்லும் இடத்தில் உங்களுக்கு பிடிக்காத ஒருவரைச் சந்திக்கலாம். உடல் ரீதியான உபாதைகளைச் சந்திக்கலாம். திட்டமிட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். கணவன் மனைவி இடையே அன்னியோன்யம் கூடும். பொறுப்பாக எந்த வேலையையும் செய்து மற்றவர்களின் பாராட்டுக்களைப் பெறுவீர்கள். தொழில் ரீதியான பணவரவுகளைப் பெறலாம். எந்த விடயத்திலும் பொறுமை இல்லாமல் பதட்டம், படபடப்புடன் செயற்படுவீர்கள். தனது வேகத்திற்கு செயற்படாததால் அடிக்கடி மற்றவர்கள் மீது எரிந்து விழலாம். எந்த விடயத்திலும் தெளிவான, தீர்க்கமான முடிவுக்கு வர முடியாமல் தவிக்கலாம். ஒன்றுக்கு மேற்பட்டவர்களிடம் ஆலோசனை கேட்கலாம். அரசியல் வாதிகளை நம்பி எந்தக் காரியத்திலும் இறங்க வேண்டாம். தாயார் உடல் நலன் தொடர்பில் கவனம் அவசியம். சொந்த பந்தங்கள் தொடர்பான வகையிலும் பட்டும் படாமல் நடந்து கொள்ள வேண்டும். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள் வழியில் செலவுகள் உருவாகலாம். பொன், பொருள்கள் சேரும். விருந்து, உபசரிப்புகளால் சந்தோஷம் அடைவீர்கள். பயணங்கள் சில முக்கிய காரியங்கள் முடிவடையலாம். கடன் மிகுதிகள் வசூலாகும். உறவினர், நண்பர் உதவி கிட்டும். அலைச்சல், திரிச்சல் உண்டு.

### மகரம்

எதிலும் பொறுமை, நிதானமாகச் செயற்பட வேண்டும். பயணங்களில் தடை, தாமதங்களைச் சந்திக்கலாம். திட்டமிட்ட வேலைகளை முழுமையாக முடிக்க முடியாமல் குளறுபடிகள் உண்டாகலாம். கடும் வேலை நெருக்கடிகளுக்கு ஆள்படலாம். கலகலப்பான அனுபவங்கள் உண்டு. சோர்வு, சோம்பல் ஆள்கொள்ளும். சிலர் தரப்பில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்காமல் ஏமாற்றம் அடையலாம். இறை வழிபாடுகளில் நாட்டம் செல்லும். சகோதரர்கள், பங்காளிகள், சகலைகள், தந்தையார், அரசியல்வாதிகள், மருத்துவம் தொடர்பான வகையில் அலைச்சல், சிரமங்கள் நேரும். உடன் பிறப்புக்கள் ஏட்டிக்குப் போட்டியாக நடந்து எரிச்சல் உண்டாக்கலாம். அரசியல்வாதிகளை நம்பி எந்தக் காரியத்திலும் இறங்க வேண்டாம். தோட்டத் தொழில் புரிவோருக்கு அலைச்சல் இருக்குமே அன்றி ஆதாயம் இருக்காது. மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள் உதவிகரமாக இருப்பர். எதிர்பார்த்த நல்ல செய்திகள் வந்து சேரும். வியாபாரிகள் கடன் மிகுதிகள் வசூலாகி திருப்தி காண்பர். முகவர் தொழில் புரிவோர் ஆதாயம் பெறுவர். மனைவி, குழந்தைகளின் விருப்பங்களை நிறைவேற்றுவதைத் தள்ளி வைக்கலாம்.

### கும்பம்


தடை, தாமதம் இல்லாமல் சில காரியங்களை முடிப்பீர்கள். பிரியமான உறவினர்கள், நண்பர்கள் சந்திப்பு நிகழும். உங்களுக்காகவோ, மற்றவர்களுக்காகவோ ஆடை, அலங்காரப் பொருள்கள் வாங்கலாம். எந்த வேலையையும் திட்டமிட்டபடி முடிக்க முடியாமல் தடை, தாமதங்களைச் சந்திக்கலாம். சிலர் உங்களின் மனம் நோகும் வகையில் பேசலாம். சகஊழியர்கள், நண்பர்களுடன் ஈகோ பிரச்சினைகள் உருவாகலாம். தண்டச் செலவு நேரும். புதிய முயற்சிகளில் வெற்றி கிட்டும். சுபகாரியங்களை நடத்தும் சூழ்நிலை உருவாகலாம். குடும்பத்தில் உள்ளவர்களுடன் ஏற்பட்ட மனஸ்தாபம் விலகி பாசம் அதிகரிக்கும். பிள்ளைகளின் நீண்ட நாள் கோரிக்கைகளை நிறைவேற்றி வைப்பீர்கள். தெய்வ காரியப் பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள். பெரிய மனிதர்களின் நட்புக் கிடைக்கும். பெண்கள், பயணங்கள், பொழுது போக்கு விடயங்கள் போன்றவற்றால் சந்தோசம் அடைவீர்கள். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். வெளிவட்டாரத்தில் உங்களின் கௌரவம் மேம்படும். தொழிலில் மேன்மையான நிலைமை காணப்படும். வெளியூர்ப் பயணம் செல்லலாம். சோர்வு, சோம்பல் ஆள்கொள்ளும். காரிய வெற்றி உண்டு.

### மீனம்

அடுக்கடுக்காகப் பல வேலைகளைத் திட்டமிட்டு செய்வீர்கள். நீண்ட நாள்களாக உங்களுடன் பேசாத ஒருவர் திடீரென தொலைபேசியில் பேசலாம் அல்லது நேரில் சந்திக்கலாம். தம்பதியர் இடையே அன்னியோன்யம் கூடும். மற்றவர்கள் பெருமையாக நினைக்க வேண்டும் என்பதற்காகச் சில காரியங்களைச் செய்வீர்கள். மனைவி வழியில் உதவிகள் கிடைக்கலாம். கலகலப்பான அனுபவங்களால் கவலைகளை மறப்பீர்கள். ஊக்கம், தன்னம்பிக்கை குறைந்து அடிக்கடி, அவநம்பிக்கை ஆள்கொள்ளும். சில பிரச்சினைகளை நினைத்து அடிக்கடி பயம் கொள்வீர்கள். உடல் ரீதியான உபாதைகளாலும் சிரமங்களுக்கு ஆளாகலாம். பிள்ளைகள் பொறுப்போடு நடந்து பெருமை சேர்ப்பர். கணவன் மனைவி உறவிலும் அன்னியோன்யம் கூடும். பெண்கள், பயணங்கள், பொழுது போக்கு விடயங்கள் போன்றவற்றால் சந்தோஷம் அடைவீர்கள். வீட்டுக்குத் தேவையான ஆடம்பரப் பொருள்களை வாங்கிச் சேர்ப்பீர்கள். கடன் பிரச்சினைகளைச் சமாளிப்பீர்கள். பொலிஸ் தொடர்பான விடயங்களில் அனுகூலம் உண்டு. தொழில் ரீதியான நெருக்கடிகள் அதிகரிக்கும். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள் தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ளவும். எதிலும் கவனம் அவசியம். கலகலப்பான அனுபவம் உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# LONDON SOUTH BANK UNIVERSITY



# SCHOLARSHIPS

## for ALL SRI LANKAN STUDENTS for 2011 INTAKE

## SPOT ADMISSIONS

### AT THE U.K. BRITISH COUNCIL EDUCATION FAIR

**L.S.B.U. IS PLEASED TO OFFER THE FOLLOWING TO SRI LANKAN STUDENTS FOR 2011:**

* All Sri Lankan Students will automatically get a SCHOLARSHIP STP 1000 discount.
* 5% discount if one year's full course fees is paid in advance (i.e. before enrolment)
* If applicants are ALUMNI of LSBU, they are entitled to a further discount.
* Offers will be made within 7 days from the date of receipt of the application form.
* Relaxation in IELTS requirements -See entry requirement below
* If a student had completed HND or other approved courses, in English Medium, IELTS may possibly be waived at the discretion of the Course Director
* **For Engineering Faculty students –** If a student has completed HND/NDT/ATDC or other approved courses then they will be considered for exemptions & IELTS also possibly be waived.
* **For Law students –** 1st year entry and transfer opportunities for LLB London External Students – Direct entry to year 2 and 3.

**ENTRY REQUIREMENTS:**

UG: Minimum 2 'C' in 'A'- Levels and 'C grade in English at G.C.E. 'O' Level or minimum IELTS score of 6.0.

PG: Good First degree and a minimum 'C' grade in English at G.C.E. 'A' Level or a 'B' grade in English at G.C.E. 'O' level or IELTS score of 6.5.

MBA: Good first degree + IELTS 6.5 plus 3 years work experience. No minimum age limit.

***Each student application is assessed on its own merit***

**For further details and to make appointments for interview, please contact:**
Mr. Jeya on 0777 318582, 2360063 or Ms. Zeena on 2364266, weekdays 9:30 a.m. to 4:30 p.m. or email us anytime on jeyacosl@yahoo.com.

***LSBU Representative Office***
Lotus Grove, 248/186Hill Street (off Captain Sumuthu Rajapakse Mawathe), Dehiwela, Sri Lanka
Please visit us on the web ***at:*** www.lsbu.ac.uk



**COURSES OFFERED**
Accounting, Computing, Business

### உடன் விற்பனைக்கு

ஒஸ்ரின் கேம்பிறிஜ் - A.50 EN-9080 கார் உடன் விற்பனைக்கு.
தொடர்பு: 0775925085

### வீடுகள் விற்பனைக்குண்டு

சுண்டிக்குளிப் பகுதியில் (பழைய பூங்கா வீதியிலும், சுவாமியார் வீதியிலும்) வீடுகள் விற்பனைக்குண்டு. தொடர்பு - 077 6146434

### மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம் 77இல் பிறந்த திருவாதிரை 2ஆம் பாதம் 17 ½ பாவம், பட்டதாரி பிரபல வங்கியில் உயர் பதவியில் கடமை புரியும் மணமகனுக்கு நல்ல பண்புள்ள படித்த உயரிய தொழில் புரியும் மணமகளைப் பெற்றோர் தேடுகின்றார்கள்.
தொடர்பு:-விளம்பர இல.4103, C/O உதயன், இல. 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

### இறைச்சிக் கோழி விற்பனை

புறொய்லர் இறைச்சிக் கோழிகள் மிகக் குறைந்த விலையில் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். சுத்தம் செய்யப்பட்டது 1Kg 450/= மட்டும். கூடுதல் கொள்வனவு செய்வோருக்கு விசேட விலைக் கழிவு வழங்கப்படும்.
விஜயகுமார்
குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை.

### GOOD INCOME OPPORTUNITY

Well reputed No.1 training company needs buildings in main towns in Noth and East to start computer and language training labs on income sharing basis. We will establish the center and give you attractive income share
Call 0776263770, 0777488470
E-mail: vacan2011@yahoo.com

## வீட்டுக்கிருத்திய, ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும் நன்றி நவிலலும்



### அமரர் தம்பிராசா சுந்தரலிங்கம்

தோற்றம் 22.03.1950
மறைவு 03.12.2010

கடந்த 03.12.2010 வெள்ளிக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் மறைவுச் செய்திகேட்டு நேரில் வந்து அனுதாபங்கள் தெரிவித்தோருக்கும், கண்ணீர் அஞ்சலி துண்டுப் பிரசுரங்கள் வெளியிட்டோருக்கும், தந்திமூலம் அனுதாபச் செய்தி அனுப்பியோருக்கும், இறுதி நிகழ்வின்போது பல்வேறு உதவிகளைப் புரிந்த சகலருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இன்று (02.01.2011) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய, ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்.

பங்களா வீதி,
மீசாலை தெற்கு, மீசாலை.
021 321 3307, 0778245560 (108351)

குடும்பத்தினர்.

## நீங்கா நினைவில்

இருபதாம் ஆண்டு நினைவு — முதலாம் ஆண்டு நினைவு



**அமரர் மருதப்பு கைலாயபிள்ளை**
(பழக்கடை இரத்தினம்)
அபரபக்க ஏகாதசி 31.12.2010
துளிராய் 19.04.1925
விதையாய் 11.01.1991



**அமரர் கைலாயபிள்ளை கண்ணம்மா**
அபரபக்க திரயோதசி 02.01.2011
துளிராய் 14.04.1932
விதையாய் 13.01.2010

கருத்துக்களை சொல்லக் கிடைத்த சாதனம் தான் மொழியாம்
இங்கே வறிதாக்கல் படலம் தொடர்கிறது வார்த்தைகளில்
மௌனமே எங்கள் மொழியாய்
கண்ணீரே எங்கள் பதிலாய்

வாழ்க்கை வினாக்களே புரியாத பட்சத்தில்
விடைகளை எங்கு போய் தேடுவது
வழிகாட்டியாய் நீங்கள் இருவரும் தான் இருந்தீர்கள் கடைசிவரை
வழிபோக்கனாயிருக்கவாவது எமக்கு அனுமதி தந்திருக்கக் கூடாதா?

அன்று வலித்தது... வலிக்கான களிம்போடு நீங்கள்
இன்றும் வலிக்கிறது... வருவாய் நீங்கள்
ஓராண்டு ஆகிவிட்டதாம்... ஒன்றுமே புரியவில்லை
எம் ஒவ்வொரு அணுவிலும் உங்கள் அன்புச் சிந்தனையே
இது தொடர்கையில்
ஓராண்டு என்ன? ஓராயிரம் ஆண்டுகள் கழிந்தாலும்
உங்களையன்றி வேறுலகம் எங்களைச் சாராதே.

37/23, ... ஒழுங்கை,
... வீதி, யாழ்ப்பாணம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டி.

(இ/574159)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஞாயிறு காரம்

### இனவாத அரசியலின் இன்னொரு எதிர்விளைவு

# தேங்காய் தட்டுப்பாடும் வெங்காயப் பற்றாக்குறையும்



**சந்திரசேகர ஆசாத்**

முன்னாள் பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்க உலகின் முதல் பெண் பிரதமராகப் பதவியேற்று ஐம்பது ஆண்டுகள் நிறைவடைந்ததைக் கொண்டாடும் வகையில் அண்மையில் கொழும்பில் ஒரு பெரும் விழா இடம் பெற்றது. இதில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, முன்னாள் ஜனாதிபதி திருமதி சந்திரிகா விஜயகுமாரணதுங்க உட்படப் பல பிரமுகர்கள் கலந்து கொண்டு உரையாற்றினார்கள்.

சிறிமா உலகின் முதற் பெண் பிரதமர் எனவும் மூன்றாம் உலக நாடுகளின் தலைவியாகச் சிறப்புடன் பணியாற்றினார் எனவும் அவருக்குப் புகழாரம் சூட்டப்பட்டது. அந்த வகையில் அவரின் பெருமைகளை எவருமே மறுத்துவிட முடியாது. ஆனால் அவரின் பின்னால் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்றவர்களோ, ஆட்சி அதிகாரத்தில் அமர்ந்தவர்களோ அவரின் கொள்கைகளைப் பின்பற்றினார்களா என்ற கேள்வி எழும்போது இல்லை என்ற பதிலே கிடைக்கும்.

இனப்பிரச்சினை தொடர்பான விவகாரங்களில் எல்லாப் பெரும்பான்மையின அரசியல்வாதிகளையும் போன்றே இவரும் ஒரு தவறான அணுகுமுறையையே பின்பற்றினார். அதிலும் 1972 ஆம் ஆண்டில் புதிய அரசமைப்புச் சட்டத்தை உருவாக்கியதன் மூலம் தமிழ் மக்களை இரண்டாம் தரப்பிரஜைகள் என்ற நிலைக்குத் தள்ளி இனப்பிரச்சினை தீவிரமடைவதற்கான ஒரு தளத்தை உருவாக்கினார்.

ஆனால் அவர் இலங்கையின் தேசிய அரசியலில் மிகவும் முற்போக்கான பாத்திரத்தை வகித்தார் என்பதும் பல துணிச்சலான நடவடிக்கைகளை மேற்கொண்டார் என்பதும் இலங்கை அரசியல் வரலாற்றில் சாதனைகள் என்றே குறிப்பிடப்படவேண்டும்.

இவரின் ஏகாதிபத்திய எதிர்ப்பு நடவடிக்கைகளின் ஓர் அம்சமே இலங்கையை உணவு உற்பத்தியில் தன்னிறைவு கொள்ளச் செய்வது என்ற கொள்கை. இதன் மூலம் விவசாயிகளின் வாழ்வு வளம் பெற்றது. மேற்கு நாடுகள் எவ்வளவோ நெருக்கடிகளைக் கொடுத்த போதிலும் அவர் அந்தக் கொள்கையில் விடாப்பிடியாக நின்று உணவில் தன்னிறைவு என்ற இலக்கில் ஏறக்குறைய எழுபது வீதம் வெற்றிபெற்றார்.

இந்த அடிப்படையில் செத்தல் மிளகாய், வெங்காயம் என்பவற்றின் இறக்குமதிகள் நிறுத்தப்பட்டன. இதன் பலனாக வடபகுதி விவசாயிகளின் பிரதான உற்பத்திப் பொருள்களுக்குக் கூடிய சந்தை விலை கிடைத்தது. விவசாயம் செய்பவர்களும் செல்வந்தர்களாக முடியும் என்ற ஒரு நிலை வடபகுதியில் தோன்றியது. இளைஞர்கள் கூட ஆர்வமுடன் விவசாயத்தில் ஈடுபடும் நிலைமை தோன்றியது. வடபகுதி விவசாயிகள் கல் வீடுகள் கட்டுதல், வாகனம் வாங்குதல் எனத் தமிழ் மக்கள் மத்தியில் பொருளாதாரத்தில் ஒரு வளர்ச்சி நிலைமை ஏற்பட்டது.

1977 ஆம் ஆண்டில் திருமதி சிறிமாவோவின் ஆட்சி கவிழ்க்கப்பட்டு ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிபீடமேறியது. இனவாதம் மற்றும் தமிழ் மக்கள் மீதான இன ஒடுக்குமுறை நடவடிக்கைகளில் முக்கிய பாத்திரம் வகித்தவரான லலித் அத்துலத் முதலி வர்த்தக அமைச்சராகப் பதவியேற்றார். அவர் பதவியேற்றதும் உடனடியாகவே மிளகாய், வெங்காயம் என்பனவற்றை இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்ததுடன் பசளை விலையையும் உயர்த்தினார். இதன் காரணமாக வடபகுதி விவசாயிகள் பெரும் நஷ்டத்தை எதிர்கொண்டனர்.

அத்துலத் முதலியின் நடவடிக்கையால் வடபகுதியில் மிளகாய், வெங்காயம் என்பவற்றின் உற்பத்தி கணிசமான அளவு வீழ்ச்சியடைந்தது. எனவே மேலும் இறக்குமதியை அதிகரிக்க வேண்டிய தேவை எழுந்தது.

அவர் அன்று இனவாத நோக்குடன் மேற்கொண்ட நடவடிக்கை, இலங்கை வெங்காயத்துக்காக இந்திய இறக்குமதியை நிரந்தரமாகவே நம்பியிருக்க வேண்டிய நிலையை ஏற்படுத்தியது.


பின்பு திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் அரசியல் வாரிசுகள் எனத் தம்மைக் கூறிக்கொள்ளும் திருமதி சந்திரிகா விஜயகுமாரணதுங்கவோ அல்லது மஹிந்த ராஜபக்ஷவோ கூட இந்த நிலையை மாற்ற முன்வரவில்லை.

ஏனெனில் இவர்களின் இனவாதப் பார்வை தேசிய நலன்களை விட மேம்பட்டதாவே ஆதிக்கம் வகித்தது. இதன் பலனை இன்று இலங்கை மக்கள் அனுபவிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இந்தியா தனது வெங்காய ஏற்றுமதியை நிறுத்தியவுடன் இலங்கை வெங்காயத் தட்டுப்பாட்டால் அவதியுறுகிறது. அது மட்டுமன்றி பண்டிகைக் காலத் தேவைகளுக்குக் கூட வெங்காயம் தேடி சீனாவுக்கும் பாகிஸ்தானுக்கும் ஓட வேண்டிய தேவை ஏற்பட்டுவிட்டது. எனினும் அவை கூட உரிய நேரத் தில் வந்து சேரவில்லை. அன்று தமிழ் மக்கள் மீது ஏவப்பட்ட இனவாத அம்பு இன்று சிங்கள மக்களையே தாக்கும் நிலை உருவாகிவிட்டது.

அடுத்த தட்டுப்பாடு தேங்காய். கேரளாவிலிருந்து இலங்கைக்கு அவசர அவசரமாகத் தேங்காய் இறக்குமதி செய்யப்படுகிறது. இந்தத் தேங்காய்களுடன் தென்னைகளைப் பாதிக்கும், நோய்களும் இறக்குமதி செய் யப்பட்டு விடுமோ என்ற அச்சமும் கூடவே ஏற்பட்டுள்ளது.

ஆனால் சில வருடங்களுக்கு முன்பு இலங்கைக்கு அந்நியச் செலவாணியை ஈட்டித் தருவதில் தெங்கு உற்பத்திப் பொருள்கள் கணிசமான பங்கை வகித்தன. இன்று தேங்காய்க்கே தட்டுப்பாடு ஏற்படுமளவுக்கு நிலைமை மாறிவிட்டது. இதற்குத் தேசிய உற்பத்திகள் பற்றிய அக்கறையீனமே காரணம். இதில் வடபகுதியில் போரினால் தென்னைகளுக்குப் பேரழிவு ஏற்பட்டது ஒரு புறமென்றால் மறுபுறத்தில் பொறுப்பற்ற முறையில் தென்னைகள் படையினரால் தறிக்கப்பட்டமையும் ஒரு காரணமாகும்.

வடக்கில் பளையில் பெரும் தென்னம் தோட்டங்கள் அமைந்திருந்தன. இவை போரின் போதும் போரின் பின்னரும் பெருமளவில் அழிக்கப்பட்டன. இன்றும் ஏ-9 வீதியால் பயணம் செய்யும் போது பெரும் தொகையான தலையற்ற தென்னைகளைக் காணலாம். எஞ்சியிருந்தவற்றில் ஏராளமானவை படையினரால் காவலரண்களுக்காகத் தறிக்கப்பட்டன.



வன்னியில் அளம்பில், செம்மலை, தேவிபுரம், சுதந்திரபுரம், ஆயிரம் ஏக்கர் என்பவை பெரும் தென்னந் தோட்டங்களைக் கொண்ட பகுதிகளாகும். மேலும் வட்டக்கச்சி, இராமநாதபுரம், உருத்திரபுரம் போன்ற குடியேற்றங்களில் கூடச் சராசரியாக வீட்டுக்கு 50 தென்னை என்றளவில் பயன் தந்து கொண்டிருந்தன.

போர், இடப்பெயர்வு என்பன காரணமாக அவற்றில் ஒரு பகுதி அழிக்கப்பட்டது. இன்னொரு பகுதி இடப்பெயர்வு காரணமாக ஏற்பட்ட பராமரிப்பு இன்மையால் உற்பத்தித் திறன் வீழ்ச்சியடைந்தது. போர் முடிந்த பின்பும்கூட அடிக்கடி நடத்தும் விழாக்களுக் காகத் தென்னங் குருத்துகள் வெட்டப்படுகின்றன. இது தென்னைகளின் காய்க்கும் திறனை படுமோசமாக வீழ்ச்சியடைய வைக்கிறது.

அதாவது வடக்கின் தென்னை வளம் இனவாத நோக்குடன் பொறுப்பற்ற முறையில் அழிக்கப்பட்டது. இது இலங்கையின் மொத்த தேங்காய் உற்பத்தியிலும் பாதிப்பை ஏற்படுத்துவது தவிர்க்க முடியாதது.

இவை மட்டுமல்ல- இப்போதும் இனியும் மேற்கொள்ளப்படும் இனவாத ஒடுக்குமுறை நடவடிக்கைகள் வடக்கின் பிரதான உற்பத்திகளான மிளகாய், புகையிலை, வாழை என்பனவற்றின் உற்பத்தியிலும் வீழ்ச்சியை ஏற்படுத்தி அவற்றையும் இறக்குமதி செய்யும் நிலையை ஏற்படுத்தி விடலாம்.

வலிகாமம் வடக்கு ஒரு காலத்தில் உப உணவுப் பொருள்களினதும் கடல் உணவுப் பொருள்களினதும் முக்கிய மையமாக விளங்கியது. குறிப்பாக வெற்றிலை, முந்திரிகை என்பன நல்ல அறுவடை தரும் பயிர்களாக விளங்கின. நாளாந்தம் பல லொறிகளில் ஏற்றிச் செல்லப்படும் முந்திரிகைகள் இலங்கையின் அந்நியச் செலவாணியை மீதம் பிடிப்பதில் முக்கிய பங்கை வகித்தன. இவ்வாறே மயிலிட்டி மீன் வகைக்குக் கொழும்புச் சந்தையில் தனி மதிப்பு இருந்தது.

1990 ஆம் ஆண்டை அடுத்த காலப் பகுதியில் இராணுவ நடவடிக்கைகள் மூலம் அப்பகுதி மக்கள் வெளியேற்றப் பட்டனர். அந்த நிலங்கள் தரிசாகின. இன்றுவரை உயர் பாதுகாப்பு வலயம் என்ற பேரில் அங்கு மக்கள் மீள்குடியேறுவது அனுமதிக்கப்படவில்லை. இதன் காரணமாக முந்திரிகை, தகரத்தில் அடைக்கப்பட்ட மீன் என்பவற்றின் இறக்குமதிக்குப் பெரும் தொகையான அந்நியச் செலவாணி விரயமாகிறது.

அதாவது உணவில் தன்னிறைவு என்ற திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் கொள்கை இனவாதச் சேற்றில் அமுக்கப்பட்டு காணாமலே போய் விட்டது.

இனவாத அரசியலின் மூலம் தங்கள் அரசியல் அதிகாரங்களைத் தக்க வைக்கும் இலக்குடன் செயற்படும் இன்றைய பெரும்பான்மை இனக்கட்சிகள் ஒட்டுமொத்தமாகவே இலங்கைப் பொருளாதாரத்தைப் படுபாதாளத்தை நோக்கித் தள்ளுகின்றன. இதைச் சிங்கள மக்கள் புரிந்து கொண்டு விழிப்படையும் நிலை ஏற்பட்டும் போது காலம் கடந்து நிலைமை கட்டுமீறிப் போய்விடும் என்பதுதான் கருத்தில் கொள்ளவேண்டிய முக்கிய விடயமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2010ஆம் ஆண்டு கிரிக்கெட்டில் நிகழ்ந்த அபூர்வ சாதனைகள்!





டெஸ்ட் போட்டியில் முதல் 5 இடங்களைப் பிடித்த துடுப்பாட்ட வீரர்கள்

| வீரர் | நாடு | ஆட்டம் | ஓட்டம் | சதம் |
|---|---|---|---|---|
| டெண்டுல்கர் | இந். | 14 | 1,562 | 7 |
| ஷேவாக் | இந். | 14 | 1,422 | 5 |
| டிராட் | இங். | 14 | 1,325 | 4 |
| குக் | இங். | 14 | 1,287 | 5 |
| அம்லா | தெ.ஆ. | 11 | 1,249 | 5 |

டெஸ்ட் போட்டியில் முதல் 5 இடங்களைப் பிடித்த பந்துவீச்சாளர்கள்

| வீரர் | நாடு | ஆட்டம் | விக்கெட் |
|---|---|---|---|
| ஸ்வான் | இங். | 14 | 64 |
| ஸ்ரெய்ன் | தெ.ஆ. | 11 | 60 |
| அன்டர்சன் | இங். | 12 | 57 |

ஒரு நாள் போட்டியில் முதல் 5 இடங்களைப் பிடித்த துடுப்பாட்ட வீரர்கள்

| வீரர் | நாடு | ஆட்டம் | ஓட்டம் | சதம் |
|---|---|---|---|---|
| அம்லா | தெ.ஆ. | 15 | 1,058 | 05 |
| கொஹ்லி | இந். | 25 | 995 | 03 |
| டிவில்லியர்ஸ் | தெ.ஆ. | 16 | 964 | 05 |
| டில்ஷான் | இல. | 20 | 921 | 03 |
| இம்ருல் கயஸ் | பங். | 27 | 867 | 01 |

ஒரு நாள் போட்டியில் முதல் 5 இடங்களைப் பிடித்த பந்து வீச்சாளர்கள்

| வீரர் | நாடு | ஆட்டம் | விக்கெட் |
|---|---|---|---|
| சஹிப் அல்-ஹசன் | பங். | 27 | 46 |
| | ஆஸி. | 16 | 40 |
| ஹரிஸ் இஸ்லாம் | பங். | 23 | 32 |

சென்னை, ஜன. 02

2010ஆம் ஆண்டு முடிந்து 2011இல் இன்று காலடி எடுத்து வைக்கும் வேளையில், சர்வதேசக் கிரிக்கெட் வரலாற்றில் 2010ஆம் ஆண்டில் நிகழ்த்தப்பட்ட குறிப்பிடத்தக்க சாதனைகள் குறித்த ஓர் மீள்பார்வையை இங்கு பார்க்கலாம்.

**டெஸ்ட் போட்டிகள்**

டெஸ்ட் போட்டிகளைப் பொறுத்த வரையில் 2010ஆம் ஆண்டில் மொத்தம் 43 டெஸ்ட் போட்டிகள் நடந்துள்ளன.

அதேவேளை 98 சதங்கள் விளாசப்பட்டுள்ளன. இவற்றில் 37 வயதான இந்தியாவின் சச்சின் டெண்டுல்கர் அதிகபட்சமாக 1,562 ஓட்டங்களைக் குவித்திருக்கிறார். அதிக சதங்களை (7) அடித்த சிறப்பையும் அவரே பெற்றுள்ளார்.

அத்துடன் 50ஆவது டெஸ்ட் சதம் என்ற மைல்கல்லையும் எட்டி உலக சாதனை படைத்தார்.

பந்துவீச்சில் இலங்கை சுழற்பந்து வீச்சாளரான முரளிதரன் டெஸ்ட் வரலாற்றில் 800 விக்கெட்டுகளை வீழ்த்திய முதலாவது வீரர் என்ற சாதனையை நிகழ்த்தி உலகத்தையே பிரமிப்பில் ஆழ்த்தினார்.

கடந்த ஆண்டு டெஸ்டில் ஓர் அணி பெற்ற அதிகபட்ச ஓட்ட எண்ணிக்கையாக, இந்தியா இலங்கைக்கு எதிரான 707 ஓட்டங்களைக் குவித்திருந்தமையைக் குறிப்பிடலாம். அதேவேளை குறைந்தபட்ச ஓட்ட எண்ணிக்கையாக இங்கிலாந்துக்கு எதிரான ஆட்டத்தில் பாகிஸ்தான் 72 ஓட்டங்களைச் சேர்த்திருந்தது.

துடுப்பாட்ட வீரர்களில் தனி ஆளாக அதிகபட்ச ஓட்டங்களைச் சேர்த்த வீரர் என்ற பெருமையை மேற்கிந்தியத் தீவுகள் வீரரான கிறிஸ் கெய்ல் பெற்றார். அவர் இலங்கைக்கு எதிரான ஆட்டத்தில் 333 ஓட்டங்களைக் குவித்திருந்தார்.

அதிக சிக்ஸர்கள் அடித்த வீரர் என்ற பெருமையை தென்னாபிரிக்க அணி வீரரான டிவில்லியர்ஸ் பெற்றார். அவர் 11 ஆட்டங்களில் ஆடி 18 சிக்ஸர்களை விளாசியுள்ளார்.



**ஒரு நாள் போட்டி**

ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளைப் பொறுத்தவரையில் கடந்த ஆண்டு மொத்தம் 141 ஒருநாள் போட்டிகள் நடந்துள்ளன.65 சதங்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

தென்னாபிரிக்காவுக்கு எதிராக இந்திய வீரர் சச்சின் டெண்டுல்கர் 200 ஓட்டங்களைக் குவித்து ஒருநாள்ப் போட்டி வரலாற்றில் எட்டாக்கனியாக இருந்துவந்த இரட்டைச் சதம் என்ற இலக்கை அடைந்த முதல் வீரர் என்ற அபூர்வ சாதனையைப் படைத்தார்.

ஒருநாள் கிரிக்கெட்டில் இந்திய அணி தென்னாபிரிக்காவுக்கு எதிரான ஆட்டத்தில் அதிகபட்ச ஓட்டங்களைப் பெற்றது. அந்த அணி 401 ஓட்டங்களைச் சேர்த்திருந்தது.

அதேவேளை குறைந்தபட்ச ஓட்ட எண்ணிக்கையும் இந்திய அணியே பெற்றது. நியூஸிலாந்துக்கு எதிரான ஆட்டத்தில் 88 ஓட்டங்களைச் சேர்த்திருந்தது.

அதிக சிக்ஸர்களைப் பாகிஸ்தான் வீரரான அப்ரிடி விளாசியுள்ளார். அவர் 27 சிக்ஸர்களை அடித்துள்ளார்.

**'இருபது - 20' கிரிக்கெட்**

'இருபது - 20' கிரிக்கெட்டைப் பொறுத்தவரையில் கடந்த ஆண்டு உலகக் கிண்ணத்தை முதல் முறையாக இங்கிலாந்து அணி வென்றிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

பிரண்டன் மக்கலம் (நியூஸிலாந்து), சுரேஷ் ரெய்னா (இந்தியா), மஹல ஜெயவர்த்தன (இலங்கை) ஆகியோர் சதம் அடித்ததும் கடந்த ஆண்டில் குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

மற்றப்படி டேவிட் வோர்னர் (ஆஸ்திரேலியா) அதிக சிக்ஸர்கள் (22) விரட்டியவர்கள் பட்டியலில் முதலிடம் வகிக்கிறார்.

## ஆஸ்திரேலியாவின் அணித்தலைவராக தொடர விரும்புகிறேன் – பொண்டிங்

ஆஸ்திரேலிய அணியில் விளையாட நான் விரும்புகிறேன். அணியின் தலைவராகத் தொடர்ந்தும் நீடிக்க ஆசைப்படுகிறேன்.

- இவ்வாறு ஆஸ்திரேலிய அணியின் தலைவரான ரிக்கி பொண்டிங் கூறியுள்ளார்.

இங்கிலாந்துக்கு எதிரான 4 ஆவது டெஸ்டில் அடைந்த தோல்வி குறித்துக் கருத்துக் கூறும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியவை வருமாறு:-

இங்கிலாந்துக்கு எதிரான இந்த ஆஷஸ் தொடர் எனக்கு மோசமான தொடர் என்பதில் மாற்றுக் கருத்து இருக்க முடியாது.



ஆஸ்திரேலியா வெற்றி பெற வேண்டும் என்றால் நான் சிறப்பாக ஆட வேண்டியது அவசியம். அதனை நான் செய்யவில்லை. தோல்விக்கான முழுப்பொறுப்பையும் நான் ஏற்றுக்கொள்கிறேன்.

நான் எந்த முடிவு எடுத்தாலும் அது ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் நலனுக்காகவே இருக்கும். தொடர்ந்து விளையாட நான் விரும்புகிறேன். அணியின் தலைவராகத் தொடர்ந்தும் நீடிக்க ஆசைப்படுகிறேன்.

ஒரு துடுப்பாட்ட வீரராகவும், ஓர் அணித்தலை வராகவும் அணிக்கு இன்னும் நிறையப் பங்களிப்புகளை வழங்கவேண்டும் என்று நினைக்கிறேன். தற்போதைய தொடரில் ஆஷஸ் கிண்ணத்தை வெல்ல முடியாது என்றாலும் தொடரை சமன் செய்ய வாய்ப்புள்ளது. கடைசி டெஸ்டில் வெற்றி பெறுவோம் என்று நம்புகிறேன்'' - என்றார்.



பிரிமியர் லீக் கால்பந்துப் போட்டியில் மான்செஸ்டர் யுனைட்டெட் அணி, சுவிஸ்லாந்து அணியை வீழ்த்தியது. அந்தரத்தில் பறந்து வந்த பந்தைத் தட்டிச் செல்லப் போராடிய இரு அணி வீரர்கள்

## டெண்டுல்கரை மட்டும் நம்பி இந்தியா இல்லை -அக்ரம்

புதுடில்லி, ஜன.2

டெண்டுல்கர் சரியாக ஆடாவிட்டாலும் மற்ற வீரர்கள் சிறப்பாக ஆடி இந்திய அணியை வெற்றிப்பாதைக்கு அழைத்துச் செல்வர். டெண்டுல்கரை மட்டும் நம்பி இந்திய அணி இல்லை என்பதே தற்போதைய நிலைமை. - இவ்வாறு பாகிஸ்தான் அணியின் முன்னாள் தலைவரான வசிம் அக்ரம் கூறியுள்ளார். இது குறித்து மேலும் தெரிவிக்கையில்:

டர்பன் மைதானம் இந்திய அணிக்குச் சிறப்பாக அமைந்தது. முன்பெல்லாம் இந்திய அணி தனிப்பட்ட வீரர்களை நம்பியே இருந்தது. கடந்த காலங்களில் டெண்டுல்கரை மட்டும் தான் இந்திய அணி நம்பியிருந்தது. 10 ஆண்டுகளுக்கு முன்பு டெண்டுல்கர் ஆட்டமிழந்துவிட்டால் எல்லாமே முடிந்துவிடும் ஆனால் தற்போது அந்த நிலை இல்லை - என்றார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆட்டம் போட்டவர்கள் ஆடிப்போயுள்ளார்கள்

**உலகக் கிண்ணப்போட்டிகள் நெருங்கிவரும் வேளையில் அவுஸ்திரேலிய அணி ஆட்டம் காணத் தொடங்கியுள்ளது. அந்த அணி வகித்த ஜாம்பவான் பட்டத்தை இனியார் வெல்லப் போகிறார்கள் என்பதைப்பற்றி எதிர்வு கூறும் கட்டுரையாக இது அமைகிறது.**




உலக ஜாம்பவான்களாக வெற்றியில் வீறுநடை போட்டுக் கொண்டிருந்த அவுஸ்திரேலிய அணி இப்போது ஆட்டம் காண ஆரம்பித்துள்ளது.

1999ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டிகளில் ஆரம்பித்த அவுஸ்திரேலியாவின் வெற்றிப்பயணம் கிட்டத்தட்ட 10ஆண்டுகளாக அதாவது 2009ஆம் ஆண்டுவரை நீடித்தது.

இதற்குப்பெரும் பங்கு வகித்தது ரிக்கி பொண்டிங் தலைமையில் அமைந்த மிகச் சிறந்த கூட்டணியே. 1999 ஆம் ஆண்டு உலகக்கிண்ணத்துக்குப் பின்னர் ஸ்ரீவ்வோ ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து அந்தத் தலைமைப் பதவிக்கு நியமிக்கப்பட்ட பொண்டிங் தனது தலைக்கு ஆப்பு வராத வண்ணம் பார்த்துக் கொண்டார்.

பொண்டிங், கில்கிறிஸ்ட், சைமன்ட்ஸ், மெக்ராத், ஷேன்வோர்ன் - இந்தக் கூட்டணியைக்கண்டு பயப்படாத எதிரணியே இல்லை என்று சொல்லும் அளவுக்கு கிரிக்கெட் உலகை ஆக்கிரமித்திருந்தது இந்தக் கூட்டணி.

இந்தக் கூட்டணியிலிருந்து ஒவ்வொருவராகக் கழன்று ஓய்வுபெற்ற போதும் பொண்டிங் தலைமையிலான புதிய கூட்டணி சிறப்பாகச் செயற்பட்டு முன்னரைப் போல இல்லாவிடினும் ஓரளவேனும் கிரிக்கெட்டின் ஜாம்பவான்கள் என்ற பெயரைத் தக்க வைத்திருந்தது.

இருப்பினும் உலகக் கிண்ணப் போட்டிகள் நெருங்கி வருகின்ற இந்தத் தருணத்தில் கிரிக்கெட் ஜாம்பவானான அவுஸ்திரேலியாவின் ஆட்டம் அதன் அத்திபாரத்துடன் ஆட்டம் காண ஆரம்பித்திருக்கிறது.

அவுஸ்திரேலியா அணி தனது சொந்த மண்ணில் இலங்கை அணிக்கு எதிராகத்தான் விளையாடிய ஒரு நாள் போட்டிகள் மற்றும் 'ருவென்ரி-20' போட்டி என்பவற்றில் தொடரை இழந்து தோல்வியடைந்தது. அதனைத்தொடர்ந்து இங்கிலாந்து - அவுஸ்திரேலியாவின் பலப் பரீட்சையின் உச்சமான ஆஷஷ் தொடரில் அவுஸ்திரேலிய அணி பின்னிலை வகிக்கின்றது.

எந்த நாட்டு மண்ணில் இடம்பெற்றாலும் சரி அதிலும் தனது சொந்த மண்ணில் இடம்பெற்றால் எதிரணியைத் துவசம் செய்யாமல் அவுஸ்திரேலிய அணி அடங்காது.

இந்த அவுஸ்திரேலிய அணி தற்போது தனது சொந்த மண்ணில் எதிரணியினைச் சமாளிக்க முடியாமல் மண்டியிடுகின்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

எதிரணியின் பலத்தைக் குறைத்து மதிப்பிடுவதும் எப்போதுமே நாங்கள் தான் ஜாம்பவான்கள் என்று சொல்லித் திமிர் காட்டுவதும் அவுஸ்திரேலியாவின் கை வந்த கலை. இது இன்று இவர்களைக் கையறு நிலையில் கொண்டு சென்று விட்டுள்ளது.

இதற்கு முன்னரும் இவர்களைப் போன்றே கிரிக்கெட் உலகில் ராஜாதி ராஜாக்களாக - முடிசூடா மன்னர்களாக வலம் வந்தவர்கள் மேற்கிந்திய தீவுகள் அணியினர்.

1975ஆம் ஆண்டு, 1979ஆம் ஆண்டு காலப்பகுதியில் தொடர்ச்சியாக இரு முறை உலகக் கிண்ணத்தினை வென்று - கிரிக்கெட் உலகத்தினையே தம்வசம் கைவசப்படுத்தியிருந்தனர்.

கிளைவ்லொயிட் முதல் கொட்னி வோல்ஸ்வரை கிரிக்கெட் உலகின் பிரபலங்களாக அன்றைய காலப்பகுதியில் மிளிர்ந்தது மட்டுமல்லாமல் எதிரணியைப் போட்டுத்தாக்கினர். மேற்கிந்தியத் தீவுகள் அணியினரின் ஆட்டமும் 1983ஆம் ஆண்டு இந்திய அணியுடன் உலகக்கிண்ண இறுதிப் போட்டியில் தோற்றதனை தொடர்ந்து அடங்கியது.

இதைப்போன்றே காலத்துக்குக் காலம் ஒவ்வொரு அணியும் ஹீரோக்களாவதும் பின்னர் சீரோக்களாவதும் இடம்பெற்று வருகின்றது. அந்தவகையில் தற்போது சீரோவாகியுள்ள அவுஸ்திரேலிய அணிக்குப்பதிலாக புதிய ஹீரோவாக இன்னும் சில ஆண்டுகளுக்கு வலம் வரப் போவது யார்?

இந்தக் கேள்விக்கான பதிலாக சில அணிகள் இப்போது உருவெடுக்கின்றன. இவை அவுஸ்திரேலியா, மேற்கிந்திய தீவுகள் போன்று ஆகக் குறைந்தது 10ஆண்டுகளுக்காவது தொடர்ச்சியாக ஜாம்பவான்களாக இருப்பார்களா? இல்லை. பருவத்துக்கு ஏற்றவாறு வெற்றி நடை போடுவார்களா என்பதும் கேள்விக் குரியதே.

இந்தியா, தென்னாபிரிக்கா, இலங்கை, இங்கிலாந்து இந்த நான்கு அணிகளில் ஒன்றே இந்தப் புதிய இடத்தை நிரப்பப்போகின்றன. இவை ஒவ்வொன்றினதும் பலம், பலவீனத்தை ஆராய்ந்தால் எந்த அணி ஹீரோவாகும் என்பது தெரியவரும்.

### இந்தியா

இளம் வீரர்களைக் கொண்டமைந்த இந்திய அணிக்கு மிகச் சிறந்த அணித் தலைவராக டோனி செயற்பட்டு வருகிறார். டோனி, சேவாக், கம்பீர், சச்சின், டிராவிட், லக்ஷ்மன், ரெய்னா, ஹோலி, சகீர், பிரவீன்குமார், ஹர்பஜன் என முன்னணி வீரர்களைப் பெயரிட்டுக் கொண்டே செல்லலாம்.

துடுப்பாட்ட வரிசை, பந்துவீச்சு என்பவற்றில் மிகச் சிறந்த தரமான வீரர்களை கொண்ட மைந்திருக்கிறது. இதற்கு மேலாக சொந்த மண்ணில் மிகச் சிறப்பாகச் செயற்பட்டு வருகின்றது. இருப்பினும் சொந்த மண்ணல்லாத - ஆசியத்துணைக் கண்டத்துக்கு அப்பால் உள்ள நாடுகளில் விளையாடும்போது அது மண் கவ்வுகிறது.

### தென்னாபிரிக்கா

அனுபவீரர்கள் பலரைக் கொண்டிருப்பினும் அவர்களை இளமையாகக் கொண்டுள்ளது. ஸ்மித் முதல் ஸ்ரெய்ன் வரை சகல துறைகளிலுமே அவர்கள் கலக்கி வருகிறார்கள்.

இலக்குகளை இழந்தாலும் நிலைத்து நின்று ஓட்டங்களைச் சேர்க்கும் நிதானமான - அதிரடியான துடுப்பாட்ட வரிசையும் பந்து வீச்சும் சிறப்பானதுதான். இவை எல்லாம் ஒருங்கே கலந்த சிறந்த அணி.

இருப்பினும் துரதிஷ்டத்தின் மறுவடிவமாக முக்கிய தருணங்களில் எல்லோருமே சேர்ந்து காலை வாருவதும் ஆசியத்துணைக்கண்டத்தில் வைத்து சுழல் பந்துவீச்சுக்குத் தடுமாறுவதும் பலவீனம் தான்.

### இலங்கை

சகல துறைவீரர்கள் தொடர்ச்சியாக உள்நாட்டிலும்சரி வெளிநாட்டிலும்சரி கலக்கி வருகிறார்கள். அவுஸ்திரேலியாவை அதன் சொந்த மண்ணில் வைத்துப் புரட்டி எடுத்திருக்கிறார்கள்.

சிறப்பான தலைமைத்துவமும் சிறந்த சகலதுறை ஆட்டமும் எப்போதுமே பலம்தான். அதிரடித் துடுப்பாட்டம் டில்சான் முதல் நிதான ஆட்டம் மஹேல வரை சங்கக்கார உட்பட யாவருமே 'ரொப்'தான்.

### டிலீப்

சுழல் பந்து வீச்சுக்கு இணையாக வேகப் பந்து வீச்சு கைகொடுக்கிறது. சொந்த மண்ணிலும்சரி எந்த மண்ணிலும்சரி இறுதிவரை போராடுவது சிறப் பியல்பு.

இருப்பினும் எது திறமையான கூட்டணியாக அமையும் அதில் எவரைத் தேர்வுசெய்வது என்ற குழப்பம் தீரும் வரை இறுதிவரை போராடத்தான் வேண்டும்.

### இங்கிலாந்து

இளம் வீரர்களும் அனுபவ வீரர்களும் கலந்து புதிய பிறப்பாகிய அணி. அணித் தலைவர் ஸ்ரோஸ் முதல் அண்டர்சன் வரை யாவருமே சிறப்பானவர்கள்.

சொந்த மண்ணிலும்சரி, ஏனைய நாட்டு மைதானங்களிலும்சரி தற்போதைய கூட்டணியினர் கலக்கி வருகிறார்கள்.

குக், ரொரர், பீர்ரர்சன் எனத் தொடரும் துடுப்பாட்ட வரிசையில் ஒருவர் மாறி ஒருவர் கலக்கி வருகிறார்கள். அதே போன்று பிரெஸ்னன், ரெம்லெர், அண்டர்சன், சுவான் எனப் பந்துவீச்சுக் கூட்டணியும் சிறப்பாக அமைந்துள்ளது.

கிரிக்கெட்டின் தாயகமாக இருந்த போதும் இதுவரை உலகக் கிண்ணத்தை வெல்லவில்லை என்பது பலவீனமே.

ஆக மொத்தத்தில் இவர்களில் எவர் ஹீரேவாக வலம் வரப்போகிறார்கள் என்பதை நீங்களே தீர்மானித்துக் கொண்டிருப்பீர்கள்.

## அவுஸ்திரேலியா



- ★ 1975 ஆம் ஆண்டு உலகக் கிண்ணம் முதல் ஆடி வரும் அணி.
- ★ பிரட்மன் போன்ற கிரிக்கெட் ஜாம்பவான்களை கொண்டமைந்த நாடு.
- ★ உலகக் கிண்ணத்தை மூன்று தடவைகளுக்கு மேல் கைப்பற்றிய நாடு.

- பங்கேற்பு: டெஸ்ட் போட்டிகள்728, சர்வதேச ஒருநாள் போட்டிகள் 748, சர்வதேச ரி-20 போட்டிகள் 39.
- வெற்றிகள்: டெஸ்ட் போட்டிகள் - 340, ஒருநாள் போட்டிகள் - 461, சர்வதேச ரி-20 போட்டிகள் - 21.
- தோல்விகள்: டெஸ்ட் போட்டிகள் - 191, ஒருநாள் போட்டிகள் 256, சர்வதேச ரி-20 போட்டிகள் - 16
- சமநிலை: டெஸ்ட் போட்டிகள் - 197, ஒருநாள் போட்டிகள் - 31, சர்வதேச ரி-20 போட்டிகள் - 2.

## மேற்கிந்தியத் தீவுகள்




- ★ 1975 ஆம் ஆண்டு உலகக் கிண்ணம் முதல் ஆடிவரும் அணி.
- ★ கொட்னிவோல்ஸ் போன்ற கிரிக்கெட் ஜாம்பவான்களை கொண்டமைந்த நாடு.
- ★ உலகக் கிண்ணத்தை இரண்டு தடவைகள் தொடர்ச்சியாக கைப்பற்றிய நாடு.

- பங்கேற்பு: டெஸ்ட் போட்டிகள் - 468, சர்வதேச ஒருநாள் போட்டிகள் 637, சர்வதேச ரி-20 போட்டிகள் 28.
- வெற்றிகள்: டெஸ்ட் போட்டிகள் - 152, ஒருநாள் போட்டிகள் - 355, சர்வதேச ரி-20 போட்டிகள் - 11.
- தோல்விகள்: டெஸ்ட் போட்டிகள் - 154, ஒருநாள் போட்டிகள் 274, சர்வதேச ரி-20 போட்டிகள் - 14
- சமநிலை: டெஸ்ட் போட்டிகள் - 112, ஒருநாள்போட்டிகள் - 28, சர்வதேச ரி-20 போட்டிகள் - 3.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## டேடன்ஸ் ஆய்வுகூடம்
**Durdans Lab - Jaffna**

பின்வரும் பதவிகளுக்கு ஆள்கள் தேவைப்படுகின்றனர்.

1. Marketing Representative (Fluency in English)
2. MLT Trainee (A/L Science)
3. ஆய்வு கூட உதவியாளர்கள் (பெண்கள் மட்டும்)
4. தொழிலாளி (Labourer)


## வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 03.12.2010 வெள்ளிக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வம்

அமரர் **கந்தையா நாகராசா**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 31.12.2010 வெள்ளிக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெற்றன. அன்னாரின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (02.01.2011) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடை பெறவுள்ளதால் தாங்களும் வருகை தந்து அவரின் ஆத்மசாந்திக் காகப் பிரார்த்திப்பதோடு தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பினைத் தனிப்பட்ட அழைப் பாக ஏற்றுக்கொள்ளவும்.

103/1, கோயில் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

இங்ஙனம்,
குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி



AMT வவுனியா முகாமையாளர் மயூரனின் அன்புத் தாய்

திருமதி **விஜயகுமார் சறோஜினிதேவி**

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!

AMT உரிமையாளரும்,
ஊழியர்களும்

## மரண அறிவித்தல்



**சதாசிவம் சிவநேசராசா** (அம்பாள்)

(விஜயா கூல்பார்)

கோவளத்தைப் பிறப்பிடமாகவும், புதுறோட்டை வசிப்பிடமாகவும் கொண்ட சதாசிவம் சிவநேசராசா 30.12.2010 வியாழக்கிழமை அகால மரணமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சதாசிவம் மற்றும் நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும் களபூமியைச் சேர்ந்த காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் மற்றும் தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் கனகேஸ்வரியின் அன்புக் கணவரும் பவிந்தினி (A/L, தியாகராஜா ம.ம.வி), காலஞ்சென்ற சிவந்தினி ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற செல்வராசா மற்றும் நிர்மலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும் மனோன்மணி, எல்வினஸ் (யாழ். மாநகர சபைச் சாரதி), நாகராசா, கனகராசா, சற்குணராசா, விக்கினேஸ்வரன், காலஞ்சென்ற புஸ்பராணி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.01.2011) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் காரைநகர் சாம்பலோடை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புதுறோட்,
காரைநகர்.

தகவல்:
குடும்பத்தினர்.

## கொக்குவிலில் இன்று கௌரவிக்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜன.2

கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலையின் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு இன்று காலை 9.30 மணிக்குப் பாடசாலை சுப்பிரமணியம மாலதி மண்டபத்தில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனும் சிறப்பு விருந்தினராக சட்டத்தரணி செல்வி சி.ஞானலோஜினியும் கலந்து கொள்வர்.


### VISA சேவை

UK Student Visa வில் செல்வதற்கான Spot Admission மற்றும் ஆவணங்கள் யாவும் செய்து கொடுக்கப்படும்.

தொடர்பு: 0214910959, 0779218444

### ஈசன் திருமண சேவை

(உள்நாடு, வெளிநாடு) மணமக்கள் உண்டு. ஆசிரியர், டாக்டர், இன்ஜினியர் மற்றும் வர்த்தகர் உட்பட மணமக்களின் சாதகங்கள் உண்டு. நேரடியாகவும், தபால் மூலமும் தொடர்பு கொள்ளவும். புளியடிச் சந்தி, வட்டு வடக்கு, வட்டுக் கோட்டை.
T.P.: 0773618507, 0760422104 Home : 0217900316 Fax: 0212223734
E-mail: easanthirumanaservice@hotmail.com


### தொலைந்துவிட்டது

எனது மோட்டார் சைக்கிள் திறப்புக் கோர்வை சாவகச்சேரிக்கும் கொடிகாமத்துக்கும் இடையில் ஏ9 வீதியில் நேற்றுமுன்தினம் தொலைந்துவிட்டது. கண்டெடுத்தவர்கள் தானையாம்பதி வீதி, நுணாவில் மத்தி, சாவகச்சேரி எனும் முகவரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும். தகவல்: ச.சிவரூபன், சட்டத்தரணி.

### தவறிவிட்டது

இல.109, கலைமகள் வீதி, நல்லூர் வடக்கில் வசிக்கும் பாலேந்திரன் சாரங்கி என்பவரது தேசிய அடையாள அட்டை (878431146 V) உள்ளடங்கிய கைப்பை ஒன்று பருத்தித்துறையில் இருந்து கல்வியங்காடு வரும்போது பஸ்ஸில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் தொ.இ. உடன் தொடர்பு கொள்ளவும். (சன்மானம் வழங்கப்படும்.)

தொடர்பு: 0779571139


### விற்பனைக்கு

Internet Dongles With 2GB Memory card உடன் 5250/= மட்டும்.

தொடர்பு: 0756935453

### வீடு விற்பனைக்கு

சாவகச்சேரி, நுணாவில் மத்தி வேலாயுதம் வீதி. இல.58 இல் அண்ணளவாக நிலப்பரப்பு எட்டில் அமைந்துள்ள வீடு. கிணறு உள்ளடங்கலாக ஆதனம் விற்பனைக்குண்டு. விலை 50 இலட்சம். எனினும் விலை பேசி தீர் மானிக்கப்படும்.

தொடர்பு: 0775354376

### முகாமையாளர் தேவையா?

அழையுங்கள் தொலைபேசி : 0777556244

மும் மொழிகளிலும் தேர்ச்சியுடைய, இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தருக்கு அலுவலக முகாமைத்துவ பதவி தேவை. ஹோட்டல் நிர்வாக அனுபவமும் உண்டு.

அணுகுங்கள்...

### காணி விற்பனை

யாழ்.மாநகர எல்லைப் பிரதேசத்துக்குள் கே.கே.எஸ். வீதிக்கருகில் வீடு கட்டுவதற்குத் தேவையான பொருள்களுடன் (பொருள்கள் இல்லாமலும் வழங்கப்படும்) கிணறு, தண்ணீர் தாங்கி, மலசலகூடம், போக்குவரத்துப் பாதைகளுடன் 02 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. விலை பொருள்கள் இடம் பார்வையிட்டுத் தீர்மானிக்கலாம். தரகர்கள் தேவையில்லை. நேரடியாகத் தொடர்பு கொள்ளவும். தொ.பே.: 0770555760

### வீடு விற்பனைக்கு

பருத்தித்துறை வீதி, புத்தூர்ச் சந்தியில் சேச் அருகில் அமைந்துள்ள நில. பரப்பு 7½, கொண்ட காணியும், ஆறு அறைகள் கொண்ட வீடும் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:- ந. கலாரூபன்,
சுன்னாகம் றோட்,
புத்தூர் வடக்கு.

தொ.பே. இல.
0779563255,
0777112076,
0770723998.

### யாழ்ப்பாணம் - சர்வதேச வர்த்தகக் கண்காட்சி ஜனவரி 2011

*செயற்பாட்டு உதவியாளர் தேவை*

சுறுசுறுப்பும், வசீகரமுடைய 35 வயதிற்குக் குறைந்த ஆண் /பெண் இருபாலாரும் சுயவிவரக் கோவையுடன் கீழ்வரும் இணையத்தளத்தினூடாக தொடர்பு கொள்ளவும்.

E-mail:
futurejob@[illegible].lk

### தேவை

யாழ். நகரை அண்டிய பகுதியில் ரெஸ்ரோரண்ட் ஒன்றுக்கு வீடு, கடை அல்லது நிலம் வாடகைக்குத் தேவை. இதற்கு அண்மையில் பாடசாலைகளோ, வழிபாட்டுத் தலங்களோ அமைந்திருக்கக் கூடாது.

தொ.பே.: 0771566661

### மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ அவுஸ்திரேலியா மெல்போர்னில் வசிக்கும் 28 வயதுடைய 5' 5" உயரமுள்ள (மிருகசீரிடம் 1ஆம் பாதம்) PR உள்ள மணமகனுக்குப் படித்த, அழகிய சைவபோசனம் அருந்தும் மணமகள் தேவை. Accountant / Chartered Accountant படித்துக் கொண்டு இருந்து மேற்படிப்பை அவுஸ்திரேலியாவில் தொடர விரும்புவராயினும் விரும்பத்தக்கது. தொடர்பு: 0774598867


## கண்ணீர் அஞ்சலி



கோப்பாய் மத்தியை வசிப்பிடமாகக் கொண்ட

திருமதி **விஜயகுமார் சறோஜினிதேவி**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

கோப்பாய் மத்தி
நட்பு உறவுகள்

## கண்ணீர் அஞ்சலி



கோப்பாய் மத்தியை வசிப்பிடமாகக் கொண்ட எமது சிறிய தாயாரான

திருமதி **விஜயகுமார் சறோஜினிதேவி**

அவர்களின் திடீர் மறைவால் ஆழ்ந்த துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

அம்பிகை ஜுவலர்ஸ்,
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்



*பொன்னுச்சாமி நாகலிங்கம்*

கெருடாவில் தெற்கு, தொண்டைமானாற்றைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட பொன்னுச்சாமி நாகலிங்கம் 29.12.2010 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுச்சாமி- நாகம்மா தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்- இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், கண்மணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற இராமலிங்கம், மற்றும் சுந்தரலிங்கம், குணலிங்கம், ஆனந்தலிங்கம், இராமச்சந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், ரகு, வதனி, றஞ்சி, பாஸ்கரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், யோகமாலினி, குமரன், சதீஸ் ஆகியோரின் அன்பு மாமனாரும், கோகுலன், தீபிகா, மௌலிகா, சமீரா, லகீரா, திசான் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (02.01.2011) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் காட்டுப்புலம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
021-3210241.

(405485)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சித் தேர்தல்கள் இம்முறை பழைய நடைமுறைப்படியேதான் நடக்கும்

கொழும்பு, ஜன.02

உள்ளூராட்சிச் சபைகள் தேர்தல்கள் திருத்தச்சட்ட மூலம் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டாலும், பழைய நடைமுறைப்படியே இம்முறை உள்ளூராட்சித் தேர்தல்கள் இடம்பெறும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சட்டமூலம் நாளை மறுதினம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு விவாதிக்கப்பட்டு நிறைவேற்றப்படவிருக்கிறன்றது.

இந்தச் சட்ட மூலத் திருத்தப்படி உள்ளூராட்சிச் சபைகளுக்கான எல்லைகள் நிர்ணயம் செய்யப்பட வேண்டும். அதற்கு காலதாமதம் ஏற்படும் என்பதால், பழைய சட்டங்களின் பிரகாரமே தேர்தல்களை நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது என்றும் -

எதிர்வரும் காலங்களில் புதிய சட்டத் திருத்தத்தின்படி தேர்தலை நடத்துவது என்றும் - அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை -

உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவது தொடர்பான அரசின் உத்தியோக பூர்வ வர்த்தமானி அறிவித்தல் நாளை மறுதினம் வெளியிடப் படக்கூடும் என அரசின் தகவல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மேற்படி வர்த்தகமானி அறிவித்தல் வெளியிடப்பெற்று 14 முதல் 21 தினங்களுக்கு இடையில் வேட்பு மனுக்கள் கோரப்படவேண்டியுள்ளது. அதற்கமைய உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான வேட்புமனுக்கள் ஜனவரி 18 ஆம் திகதிக்கும் 25 ஆம் திகதிக்கும் இடையில் ஏற்றுக்கொள்ளப்படவுள்ளதாகவும் தகவலறிய முடிகிறது.

அத்தோடு உள்ளூராட்சித் தேர்தல் எதிர்வரும் மார்ச் 13 ஆம் திகதிக்கு முன்னர் நடத்தப்படவுள்ளதாகவும் அரச தகவல் வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன. (ஒ-ஐ-22)

# போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக அமெரிக்கா 5.5 மில்லியன் உடனடி உதவி

கொழும்பு, ஜன. 2

வடக்கில் போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்குவதற்காக அமெரிக்கா 5.5 மில்லியன் டொலர் பெறுமதியான அவசர உணவு உதவிகளை வழங்கியுள்ளது.

அமெரிக்காவின் சர்வதேச அபிவிருத்திக்கான முகவர் ஊடாக இந்த உதவி வழங்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் இந்த உதவிகளை இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் பற்றிசியா புட்டினன்ஸ் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவிடம் வழங்கினார்.

6740 மெட்றிக் தொன் கோதுமை மா, பருப்பு மற்றும் மரக்கறி எண்ணெய் ஆகியவற்றை அமெரிக்கா அன்பளிப்பாக வழங்கியுள்ளது. வடக்கில் மனிதாபிமான உணவு உதவிகளை வழங்கி வரும் உலக உணவுத் திட்டத்துக்கு உதவும் வகையிலேயே இந்த உதவியை அமெரிக்கா வழங்கியுள்ளது.

இதுதொடர்பாக கருத்து வெளியிட்ட உலக உணவுத் திட்டத்தின் இலங்கைக்கான பிரதிநிதி அட்னான் கான் மீளக் குடியேறியுள்ளவர்கள் நெருக்கடியான நிலையில் உள்ள போது அமெரிக்காவின் இந்த உதவி கிடைத்துள்ளது என்றார்.

மீளக் குடியேறிய மக்களின் உணவுப் பாதுகாப்புக்காக வழங்கப்படும் உணவு உதவியை உலக உணவுத் திட்டம் தொடர்வதற்கு இது வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளது. ''தற்போதைய நெருக்கடிகளைச் சமாளிக்க எமக்கு 40 மில்லியன் டொலர் உதவி தேவைப்படுகிறது. கொடையாளர்களிடம் இருந்து உதவிகள் கிடைக்கும் என்றும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தொடர்ந்து உதவ முடியும் என்றும் நாம் நம்புகிறோம்'' என்று தெரிவித்தார் அட்னான் கான்.

# வயாவிளான் பகுதி மக்களுக்கு விரைவில் விழவுகாலம் வருமா?

## தம்மை மீள்குடியேற்றுமாறு அவர்கள் கோரிக்கை

வலி.வடக்கு, ஜன.02

வயாவிளான் பகுதியில் இடம் பெயர்ந்து குடாநாட்டின் பல பகுதிகளிலும் வாழும் மக்களை விரைவில் குடியேற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்று யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்ட அரசாங்க அதிபருக்கும் வயாவிளான் மீளக்குடியமர்வோர் நலன் புரி சங்கப் பிரதிநிதிகளுக்கும் இடையிலான மீள் குடியேற்றம் சம்பந்தமான கலந்துரையாடல் யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் அரசாங்க அதிபரிடம் வயாவிளான் மகாவித்தியாலயம் இயங்குகின்ற போதிலும் மாணவர்கள் கல்வி கற்கச் செல்வதில் போக்குவரத்துக் கஷ்டங்களை எதிர்நோக்குகின்றார்கள்.

பெற்றோர்களாகிய நாங்களும் தொழில் வாய்ப்புகள் இன்றி பெரும் கஷ்டமான நிலையில் வாழ்ந்துகொண்டு இருக்கின்றோம்.

இந்த வகையில் ஏனைய இடங்களில் மீளக்குடியேற அனுமதிக்கப்படுவது போன்று எம்மையும் எமது சொந்த இடங்களில் மீள்குடியேற அனுமதிக்கப்படுவதன் மூலம் நாம் எமது வாழ்க்கையை அமைத்துக்கொள்வதுடன் எமது பிள்ளைகளின் கல்விச் செயற்பாட்டிலும் கூட மாற்றங்கள் ஏற்பட முடியும் எனவும் தெரி வித்துள்ளார்கள்.

யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் யாழ். மாவட்ட படைகளின் கட்டளைத் தளபதி மற்றும் மீள்குடியேற்றத்துடன் தொடர்புடையவர்களுடன் பேச்சு நடத்தி விரைவில் மீள்குடியேற்றத்துக்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்வதாக தம்மைச் சந்தித்தவர்களிடம் தெரிவித்துள்ளார். (ஒ-86)

---

### யாழ்ப்பாணத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

மக்களைப் பாதுகாக்க படையினர் இரவு ரோந்து நட வடிக்கைகளை ஆரம்பித்து பாதுகாப்பு நடவடிக்கைகளை விரிவுபடுத்தியுள்ளனர். மக்கள் அச்சமடையத் தேவையில்லை - என்றார் தளபதி ஹத்துருசிங்க. (உ-ஐ)

---

### பரவும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்.மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் தினமும் நேரத்துக்கு நேரம் நபர் ஒருவர் கடத்தப்பட்டார் அல்லது சுட்டுக் கொல்லப்பட்டார் என்ற செய்தி மக்கள் மத்தியில் பரவுகிறது. இதனால் அந்தப் பகுதியில் பதற்றம் ஏற்படுகிறது.

கிடைக்கும் தகவல் உண்மையானதா பொய்யானதா என்று ஆராய்ந்தறியாமல் தமது உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் அதனைத் தொலைபேசி மூலமாகவோ குறுந்தகவல் சேவை மூலமாகவோ தெரியப்படுத்தி விடுகிறார்கள். இதனால் வதந்தித்தீ காட்டுத் தீயைப் போல் பரவுகிறது.

கொலை, கடத்தல் சம்பவங்கள் அதிகரித்துள்ள நிலையில் எங்கேயும் எப்போதும் எதுவும் நிகழலாம் என அச்சம் மக்கள் மத்தியில் இருப்பதே இத்தகைய வதந்திகள் பரவுவதற்குக் காரணம் என்று சுட்டிக்காட்டப்படுகிறது.

---

### தீர்வு குறித்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தப் பேச்சுக்களில் காணப்பட்ட சாதகத்தைத் தொடர்ந்தே அரசியல் தீர்வு குறித்த பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு அரசு முன்முயற்சிகளை எடுத்து வருவதாக சிங்களப் பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

இனப் பிரச்சினைக்கு இந்த ஆண்டுக்குள் ஒரு தீர்வை எட்டுவதற்கான முயற்சியாகவே கூட்மைப்புடன் அரசு பேச்சு நடத்தத் தயாராகிறது என்று அந்தப் பத்திரிகை கூறுகிறது. அப்படி எட்டப்படும் தீர்வை தெற்கில் உள்ள மக்களையும் ஏற்க வைக்க வேண்டி இருப்பதால் அதற்கான தயார்ப்படுத்தல்களையும் அரசு மேற்கொள்வதாகத் தெரிகிறது.

இது குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரனிடம் கேட்டபோது, அரசிடம் இருந்து சாதகமான சமிக்ஞைகள் கிடைக்கப் பெற்றுள்ளன என்று தெரிவித்தார். அரசின் முயற்சி இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வை எட்டுவதற்கானதுதான் என்பதை உறுதிப்படுத்த முடியாத போதும் இந்த மாதமளவில் இரு தரப்புக்களுக்கும் இடையிலான பேச்சுக்கள் ஆரம்பிக்கும் என்று எதிர்பார்க்கிறோம் - என்றார். (உ-ஐ-22)

---

### கூட்டமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனினும் -

அத்திருத்தங்கள் ஏற்கப்பட் டனவா? அல்லது நிராகரிக்கப் பட்டனவா? என்பது குறித்து உத்தியோகபூர்வமாக நாளை கூட்டமைப்புக்கு அறிவிக்கப்படும். நாளை கிடைக்கும் அரசின் பதிலைத் தொடர்ந்தே கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழு கூடி ஆராய்ந்து சட்ட மூலத்தை ஆதரிப்பதா இல்லையா என்பது குறித்து முடிவு செய்யும் என்று கூட்டமைப்பினர் தெரிவித்தனர். (ஒ-ஐ)

---

### கிளிநொச்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வானில் வந்த 10 பேர் அடங்கிய குழுவினர் பலவந்தமாக வானில் ஏற்றி வவுனியாவுக்குக் கொண்டு சென்றுள்ளனர்.

சம்பவத்தைப் பிரஸ்தாப மாணவன் தனது குடும்பத்தினருக்குத் தொலைபேசி மூலம் தெரியப்படுத்திய நிலையில் இவரை வவுனியாவில் இறக்கிவிட்டு அந்தக் குழுவினர் தப்பிச் சென்றுள்ளனர்.

வவுனியாவில் இருந்து மீட்கப்பட்ட மாணவனைக் கிளிநொச்சி பொலிஸார் பெற்றோர்களிடம் ஒப்படைப்பதற்காகப் பாதுகாப்பாக வைத்திருப்பதாகத் தெரிவித்தனர்.

மீட்கப்பட்ட மாணவன் சம்பவம் பற்றி விவரிக்கும்போது ''இனந்தெரியாத குழுவினர், தன்னை முகாமில் இருந்து தப்பி வந்தவன் என்றும் கணினிப் பரிசோதனை செய்வதற்காக வவுனியாவுக்குக் கூட்டிச் செல்கிறோம் என்றும் தெரிவித்தனர்'' - என்றான். (ஒ-10-319-301)

---

### அனைத்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிவித்துள்ளது.

அரசாங்க சேவையின் உறுதி மொழியானது வருமாறு-

''2011ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 03ஆம் திகதியாகிய இன்றைய தினம் (நாளை) இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் இலங்கை மக்களை சுபீட்சமான காலத்துக்கு இட்டுச் செல்லும் புதியதோர் ஆண்டினை குறிப்பிடுகின்றது.

30 ஆண்டுகளுக்கு கிட்டிய காலமாக வடக்கு கிழக்கு மட்டுமல்லாது நாடு முழுவதும் ஆட்கொண்டிருந்த மிலேச்சத்தனம் மிக்க பயங்கரவாதத்தை அடியோடு இல்லாதொழித்து ஒரு குடையின் கீழ் கொண்டுவரப்பட்டு இலங்கை அபிவிருத்திப் பாதையை அணுகியுள்ளது.

இன்று ஆரம்பமாகும் புத்தாண்டினுள் ஒரே நாட்டின் ஒரே இனத்தின் ஒரே கொடியின் நிழலில் ஐக்கியமாகவும் ஒரே மனப்பான்மையுடனும் மலர்ச்சி அடைகின்ற தாய்நாட்டை அபிவிருத்தி செய்யும் பெரும் சவாலை வெற்றிகொள்வதற்காகப் பொதுமக்களின் பணத்தில் சம்பளம் பெறும் அரசாங்க ஊழியரான நான் -

அரச கொள்கைகள் மற்றும் நோக்கம் என்பவற்றை நடைமுறைப்படுத்தும் பொருட்டு என்னிடம் கையளிக்கப்படுகின்ற கடமைகள், பொறுப்புக்களை வினைத்திறமையாகவும் பயன்மிக்கதாவும் திடசங்கற்பத்துடனும் உச்ச அளவிலான அர்ப்பணிப்புடனும் நேர்மையோடும் மக்களுக்காகக் கடமைகளை நிறைவேற்றுவேன் என்று உறுதி கூறுகிறேன்'' மேற்கூறப்பட்ட உறுதிமொழியை அனைத்து அரச அலுவலர்களும் எடுத்த பின்னரே கடமையாற்ற வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-86)

---

### அச்சுவேலி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அச்சுவேலி தெற்கு சிவசக்தி கோயிலடியைச் சேர்ந்த இராசையா சிவகுமார் (குயின்ஸ் சாத்திரியார், வயது - 67) என்பவரே மாடு மேய்க்கச் சென்ற சமயம் காணாமல் போய் சடலமாக மீட் கப்பட்டிருந்தார்.

இவரது சடலத்தில் மாடு குத்தியதற்கான எவ்வித அடையாளங்களும் காணப்படவில்லை என்றும் நெஞ்சில் பெரிய அடிகாயம் காணப்படுகின்றது என்றும் கழுத்தில் கண்டல் காயங்கள் காணப்படுகின்றன என்றும் கூறப்படுகிறது. இந்த மரண விசாரணைகள் நீண்ட நேரம் நடந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை காரைநகரில் இருந்து நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை சடலமாக மீட்கப்பட்ட எஸ்.சிவனேஸ்வரராஜா (வயது-55) என்பவரது மரணம் தொடர்பில் உறவினர்கள் பலத்த சந்தேகங்களை வெளியிட்டுள்ளனர்.

இவர் இறக்கும் முன்னர் கிணற்றில் போடப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகின்றது. அத்துடன் உடம்பில் கடும் காயங்களும் காணப்படுகின்றன. மேலும் சிறுசிறு காயங்கள் உள்ளன. இவரது சடலத்துடன் இவர் கடையில் வாங்கியதாகக் கூறப்படும் பொருள்களும் காணப்படுகின்றன.

மேற்குறித்த இரு மரணங்களும் பலத்த சந்தேகங்களைத் தோற்றுவித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ஒ-15)


**கட்டட வேலைகள் செய்து கொடுக்கப்படும்**

கட்டடங்கள் கட்டுதல், வீடு கட்டுதல்,
வீட்டு வரைபடம், மாபிள் பதித்தல், வயரிங்,
பைப் லைனிங், பெயின்ரிங், தச்சுவேலைகள்
அனைத்தும் சிறந்த முறையில்
செய்து கொடுக்கப்படும்.
தொடர்பு: 0750468200

**Grade way & Achievement**

இளைஞர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு சாவகச்சேரியில் அமைந்துள்ள Innovage (Multinational) கம்பனிக்கும் அதன் கிளைகளுக்கும் முகாமைத்துவத்துக்கான ஆள்சேர்ப்புக்கள் இடம்பெறுகின்றன. இதற்கான தேசிய, சர்வதேச பயிற்சி வழங்கப்படுவதுடன் உயர்வான சம்பளம் வழங்கப்படும். தாங்களும் O/L, A/L சித்தி பெற்றவராயின் தொடர்பு கொள்ளலாம்.

தொடர்புகொள்ள வேண்டிய இலக்கம்-
Mr. Udaya 0717494735, 0214915550, 0770771377


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Deutsch - (டொச்)**
Deutsch - (டொச்)
Dutch - (டச்) **Dutch - (டச்)**

எம்பஸி பரீட்சைகளுக்கான Deutsch மற்றும் Nederland - Dutch, French, Italian மொழி வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
Vivekananda Academy
No.3, 2nd Lane, palay Road.
Tel:- 0213216928, 0779927117, 0774842464

## CHEMISTRY COURT
**80, ARASADY ROAD, JAFFNA**

இரசாயனவியல்
2013 A/L

**English Medium Classes.**
Mon, Wed, Fri (3.30 - 4.30) pm

**தமிழ் மொழி மூல வகுப்புகள்.**
Mon, Wed (4.30 - 5.30) pm

By - RAJAH [B.Sc. (Chem. Spl.)]




**கடையும் வீடும் விற்பனைக்கு**

யாழ். ஆஸ்பத்திரி வீதியில் மாநகர சபை பிரதேச எல்லைக்குள் அமைந்துள்ள கடையுடன் சேர்ந்த வீடும் காணியும் உடனடியாக விற்பனைக்குண்டு.
தொடர்பு:- Te. No - 0718454025

## CHEMISTRY CENTRE
**300, பலாலி வீதி, கந்தர்மடம்.**

**A/L 2013**

| English Medium | Tamil Medium |
| --- | --- |
| Inaugurate on 03.01.2011 Mon. 6.00 p.m. | ஆரம்பம் 03.01.2011 Mon. 5 - 6 |

By: அன்பு

*விக்னா* கல்வி நிறுவனம்
52,ஸ்ரான்லி வீதி, யாழ்.
36ஆவது வருட கல்விச் சேவையில்
தூர இடத்து மாணவர்களின் வசதி கருதி
O/L சனி, ஞாயிறு வகுப்பு (மட்டும்)
புத்தாண்டு குதூகல ஆரம்பம்.
01.01.2011, 8.30 am - 2.30 pm
சலுகை:- புதுவருடத்தன்றும், மறுநாளும் அனுமதி எடுப்பவர்களுக்கு அனுமதிக் கட்டணம் இலவசம்.

*புதிய பிரிவுகள் ஆரம்பம்*
- Advanced Dip. in Video mixing
- Auto CAD
- ICT(O/L) (தரம் 10 & 11)
- ICT(A/L) (தரம் 12 & 13)
- GIT(A/L) (தரம் 12 & 13)
- Ms Office2007 & DTP
- Internet & Email
- BIT, AAT, ACBF
- Accounting Package
- Computer Hardware
- Programming Languages
- Kids Programme (தரம் 01→09வரை)
- Group Classes

CBCA
**50% கட்டணச் சலுகை**
கே.கே.எஸ் வீதி உப்புமடம் சந்தி அருகாமையில்
CB Computer Academy Station Road Kondavil. T.P: 021-3217903

36 ஆவது வருட கல்விச் சேவையில்
அதே இடம்... அதே நிர்வாகம்... அதே ஆசிரியர்கள்...
**விக்னா**
கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி வீதி, யாழ்.
தரம் 6, 7, 8, 9, 10, பிரிவு 2 **O/L** EVENING CLASS

| | |
| --- | --- |
| SCI. N. தேவா வைகுந்தன் ஜெயவதனன் | MATHS S. விக்கி ரூபன் |
| ENG. S. விஸ்வநாதன் செல்வரட்ணம் | TAM J. தயாபரன் விஜய் திருமதி பிரபாவதி |
| SOCI. மா.பார்த்திபன் சதீஷ் | RELI. N.T. தரன் திருமதி பிரபாவதி |
| COM. நிஷாந்தன் | GEO. சர்வேஸ்வரன் |

ஆரம்பம் 03.01.2011 மாலை 3.30 P.M.

**வயல்க் காணி உடனடி விற்பனைக்கு**


22 பரப்பு வயல் காணி
சாவகச்சேரி தனங்கிளப்பில்
உடனடி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:- 0725305782, 0783088249

**வீடு வாடகைக்கு**

இல. 25, பொன்னப்பா லேன் (Banker வளவு), வண்ணார் பண்ணையில், 5 அறைகள், சுற்றுமதில் கொண்ட வீடு வாடகைக்குண்டு. முதல் வருபவர்களுக்கும் முதல் உள்ளவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும். பெப்ரவரி 1ம் திகதி முதல் வீடு திருத்தப்பட்டு கொடுக்கப்படும்.
தொடர்பு:- அர்ச்சா குமார், 0718246941, 0715213888.

## அன்று போல் இன்றும் நாம் உங்கள் மண்ணில்

## Agrotech



அன்று வன்னி மண்ணில் இரவு பகலாக உழைத்து உங்கள் நம்பிக்கையை வென்ற Agrotech ஒருங்கிணைந்த நெல் அறுவடை இயந்திரங்கள் இன்றும் உங்கள் வெற்றிக்காக புத்தாண்டில் புதிய வடிவில்

- நம்பகரமான உத்தரவாதம்
- விரைவான உதிரிப்பாக சேவை.
- சிறப்பான விற்பனைக்குப் பிந்திய சேவை

**உங்கள் Agrotech இயந்திரங்களை இலவச சேவையின் மூலம் திருத்தம் செய்து தருவதற்கு தொடர்பு கொள்ளவும்.**

**பிரதாபன் ~ 077 3143089**

The World Of Hayleys Since 1878 — ஹேலீஸ் காட்சியறை, 47, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 2221292

HAYLEYS AGRO — ஹேலீஸ் அக்ரோ காட்சியறை, 72, ராஜா பிளாஸா, கோண்டாவில். 0777 288337

**நாம் என்றும் உங்களுடன்**

## A/L CHEMISTRY
*மீள் பரீட்சார்த்திகளுக்குரியது*
THEORY வகுப்புக்கள்

1. **Physical**
   Sat, Sun 3.45 -5.00 pm
2. **Inorganic**
   Sat, Sun 5.00 - 6.00 pm
3. **Organic**
   Tue, Thur 12.00 - 1.15 pm

★ General, Basic, Past Paper
Tue, Thur 1.15 - 2.15 pm

மாதிரி வினா, விடை
Fri 12.00 - 1.15 pm

**க. சிவத்திரன் B. Sc (Hons)**

NEW SCIENCE HALL
2013 ➡ 05 - 01 - 2011

**Spoken English & Grammar**

By: Mr.B.Ruban
(A/L Eng. Teacher & BBA)
SMS Your address for Course Details
ஆரம்பம்:
09-01-2011(9 am)
(வீடுகளுக்குவந்தும் கற்பிக்கப்படும்)
JTI 45, Clock Tower Road, Jaffna
More Details: 0779785749

**A/L - 2013**
(கலை, வர்த்தகப் பிரிவுகள்)
ஆரம்பம்
ஜனவரி - 8
காலை - 8
DMI Jaffna

# NEW SCIENCE HALL
KANNATHIDDY JAFFNA

## 2013 A/L கணித, உயிரியல் பிரிவு

| **PHYSICS** | **CHEMISTRY** |
| --- | --- |
| ★MR. S. SOTHILINGAM<br>★MR. R .KUMARAN<br>★MR. R .KUGAN | ★MR.N. MAHESWARAN<br>★MR.K. SIVATHIRAN |
| **BIOLOGY** | **COM. MATHS** |
| ★MR. T. THAMBI RAJAH<br>★MR. T. GENGATHARAN<br>★MR.M. ALPHONS<br>★ வழமையான ஆசிரியர் | ★MR.S. SENTHIL RAJ<br>★MR.P. SENTHIL NANTHAN. |

**ஆரம்பம்: 05.01.2011 - TIME: 8.30 a.m**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 02.01.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.












# எலிபன்ட் ஹவுஸ் மீள்நிர்மாணிக்கும் யாழ்ப்பாணம் சிறுவர் பூங்கா

டிசெம்பர் 15ம் திகதி யாழ்ப்பாணம் நகர சபையின் ஒத்துழைப்புடன் சுப்ரமணியம் சிறுவர் பூங்காவை எலிபன்ட் ஹவுஸ் மீளத் திறந்து வைத்துள்ளது. பூங்காவை மீள்நிர்மாணித்தது மட்டுமல்லாது எதிர்காலத்தில் நிறுவனம் அதனை பராமரிக்கவுமுள்ளது.

அமைதியற்ற சூழ்நிலை நிலவிய போதிலும் நாட்டின் வடபகுதியில் எலிபன்ட் ஹவுஸ் சின்னம் செயற்பாட்டிலேயே இருந்து வந்தது. எனவே சமாதானத்தில் அக்கறை கொண்டுள்ள வகையில் எல்லையற்ற நன்மைகளை வழங்கும் இந் நிறுவனம் போர் காரணமாய் அல்லலுற்ற மக்களுக்கு சிறந்த தருணங்களை வழங்குவதில் என்றென்றும் முன்னணியில் நிற்கிறது.

குளிர்பானம், ஐஸ்கிறீம் எதுவாயினும், எங்கள் உற்பத்திகளினூடாக சிறந்த குணநலன்களை நாள் அடிப்படையில் சேர்த்துக் கொள்வதில் மில்லியன் கணக்கான இலங்கையர்களின் வாழ்வைத் தொட்டுள்ளது. சமூகத்திற்குப் பங்களிப்பு வழங்குவதில் நிறுவனத்தின் இத்தகைய செயற்பாடு சிறந்ததோர் முயற்சியாகும்.

எலிபன்ட் ஹவுசின் புறோசன் தொழிற்சாலை தலைமையதிகாரி திரு. நீல் சமரசிங்ஹ மற்றும் யாழ்ப்பாணம் நகர சபை மேயர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா அவர்களினால் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

Elephant House

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தொடர்ச்சியாக இணையத்தளம் பார்த்தால் இதயத்துக்கு ஆபத்து



தொடர்ச்சியாக 23-மணிநேரம் இணையத்தளத்தைப் பார்ப்பவரா? அப்படியானால் இதயம் சம்மந்தமான நோய் வரும் என அமெரிக்க ஆராய்ச்சியில் தெரியவந் துள்ளது. அமெரிக்காவின் டெய்லி மெயில் எனும் மருத்துவ இதழின் ஆசிரியர் டேவிட் டஸ்டன் இதுபற்றிக் கூறுகையில்-

நாம் ஏதேனும் ஒரு நிறுவனத்தில் கணினியில் பணி செய்வதன் காரணமாக நீண்டநேரம் நாற்காலியில் அமர்ந்து இணையத்தளத்தில் மூழ்கி விடுவோம். அவ்வாறு நாள் ஒன்றுக்கு 23 மணிநேரமும் இணையத்தளம் சபார்ப்பவர்களுக்கு 65 சதவீத இருதய நோய் வருவதற்கான வாய்ப்பு உண்டு. இது சாதாரணமாக 11 மணித்தியாலங்கள் தளத்தைப் பார்ப்பவர்களைவிட அதிகம் என ஆராய்ச்சியில் தெரியவந்துள்ளது.

சாதாரணமாக நாம் நடக்கும் போது, நிற்கும்போது கால்களின் தசைகளில் வேலை செய்கின்றன. இதன் மூலம் உடலில் நம் இதயத்திற்கும் செல்லக்கூடிய ரத்தத்தில் சர்க்கரை, கொழுப்பு சீராக உள்ளது. ஆனால் ஒரே இடத்தில் அமர்ந்து பணியாற்றும் போது தான் உடல் ஆக்கச் சிதைவு ஏற்பட்டு மன அழுத்தம் ஏற்படுகிறது. இதனால் இதயம் பலவீனமடைவதாக ஆராய்ச்சியில் தெரியவந்துள்ளது. இது போன்று ஒரே இடத்தில் அமர்ந்து ரி.வி. பார்ப்பதும் அதற்குக் காரணமாகும். ஆகவே சிறிது நேரம் எழுந்து நிற்பதுதான் சிறந்தது எனவும் அறிவுறுத்துகின்றனர்.- என்றார்.

பெண்களில் ஆறு மணித்தியாலங்களுக்கு மேல் பணியாற்றினால் 37 சதவீதமும், ஆண்களுக்கு 18 சதவீதமும் அதிகரிக்கும் என அமெரிக்காவின் மயோ மருத்து வமனையின் மருத்து பேராசிரியர் ஜேம்ஸ் லேவின் தெரிவித்துள்ளார்.







நாடெங்கிலுமுள்ள சுப்பர் மார்கட்களிலும் பார்மசிகளிலும் பெற்றுக் கொள்ளலாம் ... 1869ஆம் ஆண்டிலிருந்து இறக்குமதி செய்து விநியோகித்து வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதய நோயாளிகளுக்கு பப்பாளி இலைக் கசாயம்

கடுமையான காய்ச்சலைக் குணப்படுத்த உதவும் பப்பாளி இலை கஷாயம் இதய நோயாளிகளுக்கும் நல்லது. முக்கியமாக அடிக்கடி இதயத் துடிப்பு அதிகரிப்பதால் அவதிப்படும் நோயாளிகளுக்கு பப்பாளி இலை கஷாயம் சிறந்த பலனளிக்கும்.



பப்பாளி இலை கஷாயம் நோயாளியை அமைதிப்படுத்தி, இதயத்துடிப் பைக் குறைத்து நிவாரணம் அளிக்கிறது. இதய நோயாளிகளுக்கு நன்றாக முற்றிப் பழுத்த பப்பாளிப் பழம் மிகச் சிறந்த உணவாகும்.

பப்பாளிப் பழம் ரத்தத்தில் கொலஸ்ரோலின் அளவைக் குறைத்து, ரத்தக் குழாய்களை நெகிழக் கூடியவையாக ஆக்குவதால், இதய நோயாளிகள் பப்பாளிப் பழத்தைத் தவறாமல் கட்டாயமாக அவர்களுடைய உணவில் சேர்த்துக் கொள்வது நல்லது.

காலை உணவாக பப்பாளிப் பழத்தை மட்டுமே சாப்பிடலாம். மாலையில் தேநீர் வேளையிலும் பப்பாளிப் பழம் சாப்பிடலாம். ஆனால் இரவில் பப்பாளிப்பழம் சாப்பிடக் கூடாது.

பப்பாளிப்பழ கஷாயம் தயாரிப்பது எப்படி?

நிழலில் உலர்த்தப்பட்ட பப்பாளி இலையில் சுமார் 5 - 10 கிராம் வரை எடுத்துக் கொள்ளவும். அதை ஒரு கோப்பை வெந்நீரில் போட்டு 5 நிமிடங்களுக்கு நன்றாக ஊற விடவும். பின்னர் வடிகட்டி அந்த கஷாயத்தை நோயாளிகளுக்குக் குடிக்க கொடுக்கவும். இந்தச் சிகிச்சையினால் நோயாளியின் உடல் வெப்ப நிலை தணியும். நாடித் துடிப்பின் வேகமும் குறையும்.


03 மாத நிலையான வைப்புக்கு
ஆண்டு ஒன்றிற்கான வட்டி வீதம்



14%
AER 14.75%
(சிரேஸ்ட பிரஜைகளுக்கு)

பணம் வைப்பிலிடுவோருக்கு பெறுமதி வாய்ந்த பரிசுகள் காத்திருக்கின்றன

தொடர்புகளுக்கு :077 22 68 723

பணிப்பாளர் சபை உறுப்பினர்கள்:

கலாநிதி சோமா எதிரிசிங்க (அவைத்தலைவி) ஜே.எச். எதிரிசிங்க (பிரதி அவைத்தலைவர்) ஏ.டி. எதிரிசிங்க (பணிப்பாளர்) என்.பி. எதிரிசிங்க (பணிப்பாளர்) ஏ.எஸ்.எதிரிசிங்க (பணிப்பாளர்) சுனில் அபேரட்ன (பணிப்பாளர்) FCA (SL), FSCMA (UK), FCMA (SL), CMA (AUS) மஹேந்திர டி சில்வா (பணிப்பாளர்) MBA, FCA, FSCMA (AUS) சமீர கனேகொட (பணிப்பாளர், நிறைவேற்று அதிகாரி) ACA, B.B.Mgt. (Acc), ASCMA.

*Conditions Apply

SWARNAMAHAL FINANCIAL SERVICES LTD.
சுவர்ணமஹால் பினான்ஸியல் சேர்விஸஸ் லிமிடட்
இல.338, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி/தொலைநகல் : 021 2220245
Registered by the Monetary Board of the Central Bank of Sri Lanka under the Finance Companies Act No. 78 of 1988
இலங்கை மத்திய வங்கியின் நாணய சபையினால் 1988ம் ஆண்டின் 78ம் இலக்க நிதி கம்பனிகள் சட்டத்திற்கமைவாக நிதிக்கம்பனியாக பதிவு செய்யப்பட்டுள்ளது. பதிவு இல : PB 594
SFS

சமாதானம் மலர்ந்துள்ளது.
எங்களது சகல செயற்பாடுகளும் அபிவிருத்தியடைய ஆரம்பித்துள்ளன. எங்களது வாழ்க்கை மீண்டும் மலர ஆரம்பித்துள்ளது. புத்தாக்கங்களை அறிமுகப்படுத்தியதன் மூலம் எங்களது கைவினைத்திறன் கைத்தொழிலை நவீனமயப்படுத்தி எமது வாழ்க்கையை வளம்படுத்திக் கொள்ள தேசிய வடிவமைப்பு நிலையம் இங்கு வந்து சிரமம் பாராது எங்களுக்கு உதவி செய்தது. அவ்வாறு நாங்கள் உற்பத்தி செய்த எமது புத்தாக்கங்களை ஒன்று சேர்த்து நாங்கள் ஒரு கண்காட்சியை நடத்துகிறோம்.


Hon. President Mahinda Rajapaksa
Hon. Minister Douglas Devananda
Hon. Deputy Minister Weerakumara Dissanayake
Secretary to the Ministry Mr. V. Sivagnanasothy

நவீன கைப்பணிப் பொருட்கள் கண்காட்சி மற்றும் விற்பனைச் சந்தை
yugayatanimawum
காலத்திற்கேற்ற உற்பத்திகள் 2010 யாழ்ப்பாணம்

ஜனவரி 10-11-12
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில்
மு.ப.10.00 மணியிலிருந்து பி.ப.8.00 மணி வரை
Media sponsor

YOUNG DESIGNERS' exhibition 2010 JAFFNA
காலத்திற்கேற்ற உற்பத்திகள் கண்காட்சிக்கு சமாந்தரமாக நடைபெறும் இளம் வடிவமைப்பாளர்கள் கண்காட்சி

ஒத்துழைப்பு வழங்கியோர்
இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபை (யாழ்ப்பாணக் கிளை)
பனை அபிவிருத்தி சபை
மீளெழுச்சி கருத்திட்டம்

ජාතික මෝස්තර මධ්‍යස්ථානය
தேசிய வடிவமைப்பு நிலையம்
NATIONAL DESIGN CENTRE
பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சு
MINISTRY OF TRADITIONAL INDUSTRIES AND SMALL ENTERPRISE DEVELOPMENT




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிழ்ச்சியான BROADBAND புத்தாண்டு!

**எங்கள் அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் புதுவருட நல்வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறோம்!**

மலர்ந்துள்ள 2011ஆம் ஆண்டைக் கொண்டாட நாம் உங்களுக்கு அதிக சந்தர்ப்பங்களை வழங்குகிறோம். 2011 ஜனவரி 1ஆம் திகதி தொடக்கம் பெருந்திரளான விநோதமான நன்மைகளையும் சலுகைகளையும் ஸ்ரீலங்கா ரெலிகொம் புரோட்பான்ட் வாடிக்கையாளர்களுக்கு வழங்குகிறது.

## Entrée பெக்கேஜ்

- **100%** அதிகரித்துள்ள அதிவிரைவான Download வேகம் (512 Kbps இலிருந்து 1 Mbps)
- **50%** அதிகரித்துள்ள இலவச பாவனை (1 GB இலிருந்து 1.5 GB)
- **30%** குறைந்துள்ள ஒவ்வொரு 1MB க்குமான மேலதிக பாவனை (50 சதத்திலிருந்து 35 சதங்கள்)

## Home Plus பெக்கேஜ்

- **25%** குறைந்துள்ள மாதாந்தக் கட்டணம் (ரூ. 2,000/- இலிருந்து ரூ. 1,500/-)
- **14%** அதிகரித்துள்ள இலவச பாவனை (7 GB இலிருந்து 8 GB)
- **30%** குறைந்துள்ள ஒவ்வொரு 1MB க்குமான மேலதிக பாவனை (50 சதத்திலிருந்து 35 சதங்கள்)

## Office Plus பெக்கேஜ்

- **30%** குறைந்துள்ள மாதாந்தக் கட்டணம் (ரூ. 5,000/- இலிருந்து ரூ. 3,500/-)
- **33%** அதிகரித்துள்ள இலவச பாவனை (15 GB இலிருந்து 20 GB)
- **30%** குறைந்துள்ள ஒவ்வொரு 1MB க்குமான மேலதிக பாவனை (50 சதத்திலிருந்து 35 சதங்கள்)

## Xcel Plus பெக்கேஜ்

- **90%** அதிகரித்துள்ள இலவச பாவனை (21 GB இலிருந்து 40 GB)
- **30%** குறைந்துள்ள ஒவ்வொரு 1MB க்குமான மேலதிக பாவனை (50 சதத்திலிருந்து 35 சதங்கள்)

* அனைத்து கட்டணங்களும் அரசாங்க வரி விதிகளுக்கு உட்பட்டவை
* நிபந்தனைகளுக்கு உட்பட்டது

Sri Lanka Telecom

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள் 011 2 555 555,
பிராந்திய காரியாலயம் அல்லது டெலிஷொப்பிற்கு விரையுங்கள்
அல்லது www.slt.lk இணையத்தளத்தில்

SLT BROADBAND

TRC NO: TRC/SLT/10/25-26(P)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org